உ

*சிவமயம்*

*திருச்சிற்றம்பலம்*

# பதினொன்றாம் திருமுறை

## (நான்காம் தொகுதி)


*பதிப்பாசிரியர்*

**டாக்டர் இராச. வசந்தகுமார்**

வேந்தர்

கற்பகம் பல்கலைக்கழகம்



Enable | Enlighten | Enrich

KARPAGAM UNIVERSITY

(Under Section 3 of UGC Act 1956)

பன்னிரு திருமுறை ஆய்வு மையம்

**கற்பகம் பல்கலைக்கழகம்**

**ஈச்சநாரி, கோவை-21.**

## நூற்குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | **பதினொன்றாம் திருமுறை (நான்காம் தொகுதி)** |
| ஆசிரியர்கள் | : | **பட்டினத்து அடிகள், நம்பியாண்டார் நம்பிகள்** |
| நூல் வகை | : | செய்யுள் நூல் |
| வெளியீடு | : | **பன்னிரு திருமுறை ஆய்வு மையம்**<br>**கற்பகம் பல்கலைக்கழகம்** |
| வெளியீட்டு எண் | : | **55** |
| முதற்பதிப்பு | : | **ஜூன் 2017** |
| பக்கங்கள் | : | **496** |
| தாள் | : | மேப்லித்தோ **80** gsm |
| அளவு | : | டெமி 1/8 |
| அச்சகம் | : | செஞ்சுடர் அச்சகம்<br>கோ.வா.பாளையம்,<br>போத்தனூர், கோவை **– 23.**<br>அலைபேசி **: 98431 74238** |




# பதினொன்றாம் திருமுறை
## (நான்காம் தொகுதி)

### பொருளடக்கம்



| வ. எண் | 11-ஆம் திருமுறை நூல் வ. எண் | தலைப்பு | பாடல் எண்கள் | பக்க எண் |
|---|---|---|---|---|
| I. | | பதிப்புரை (வழிபாட்டுக் கருத்தரங்க அழைப்பிதழுடன்) | | 5 |
| II. | 30 | பட்டினத்து அடிகள் அருளிய திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது | 992-1001 | 29 |
| III. | | நம்பியாண்டார் நம்பிகள் அருளிய | | |
| | 31 | அ) திருநாரையூர் விநாயகர் திருஇரட்டை மணிமாலை | 1002-1021 | 57 |
| | 32 | ஆ) கோயில் திருப்பண்ணியர் விருத்தம் | 1022-1091 | 82 |
| | 33 | இ) திருத்தொண்டர் திருவந்தாதி | 1092-1181 | 120 |
| | 34 | ஈ) ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி | 1182-1282 | 296 |
| | 35 | உ) ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம் | 1283-1293 | 350 |
| | 36 | ஊ) ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக் கோவை | 1294-1323 | 356 |
| | 37 | எ) ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை | 1324 | 387 |

| வ. எண் | 11-ஆம் திருமுறை நூல் வ. எண் | தலைப்பு | பாடல் எண்கள் | பக்க எண் |
|---|---|---|---|---|
| | 38 | ஏ) ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் | 1325-1373 | 420 |
| | 39 | ஐ) ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை | 1374 | 463 |
| | 40 | ஒ) திருநாவுக்கரசு தேவர் திருஏகாதச மாலை | 1375-1385 | 472 |
| IV. | | பாட்டு முதற் குறிப்பகராதி | | 488 |

உ
*சிவமயம்*
*திருச்சிற்றம்பலம்*

# பதினொன்றாம் திருமுறை (நான்காம் தொகுதி)

## வழிபாட்டுக் கருத்தரங்கம்

## (24.06.2017, 25.06.2017 சனி, ஞாயிறு)

1220 அணங்கமர் யாழ்முரித்து ஆண்பனை பெண்பனை யாக்கி, அமண்
கணங்கமு வேற்றிக் கடுவிடந் தீர்த்துக் கதவடைத்துப்
பிணங்கலை நீரெதி ரோடஞ் செலுத்தின, வெண்பிறையோடு
இணங்கிய மாடச் சிரபுரத் தான்தன் இருந்தமிழே.

**– நம்பியாண்டார் நம்பிகள்**

## பதிப்புரை

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன்அடி சேரா தார். – திருக்குறள் (10)

**1. உயிரின் நோக்கம் / இலட்சியம்** - வீடுபேறு, முத்தி, மோட்சம். (சொர்க்க நரகங்கள் அல்ல)

**2. எடுத்துக்கொண்ட கொள்கைகள்**

அ) எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும் மன்னியசீர்ச் சங்கரன் தாள் மறவாமை.

ஆ) யாதொரு தெய்வங் கொண்டீர்; அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகர் தாம் வருவார் எனத் தெளிதலும்/ உறுதிபட நிற்றலும்.

இ) பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும், மாதொரு பாகர் மலர்த்தாள் மறப்பிலாமை.

ஈ) சிவத்தைத் தவிர மற்றொரு தெய்வத்தைக் கனவிலும் நினையாதிருத்தல்.

உ) "ஞாலம் நின் புகழே மிக வேண்டும் தென் ஆலவாயில் உறையும் எம் ஆதியே" என்றபடி தம் புகழ் பாடாமல் எப்போதும் சிவன் புகழே பாடுதல்.

ஊ) தம்மைத் தாம் முற்றிலும் மறத்தல்.

**3. வகுத்துக்கொண்ட நெறிகள்**

1) சிவபூசை – விசேட தீக்கை பெற்றுத் தினமும் சூரிய உதயத்தில் ஆன்மார்த்த படிகலிங்க மூர்த்திக்கு ஆனைந்துத் திருமஞ்சனத்துடன் 1008 போற்றி மலர் வழிபாடு.

2) எழில் ஞானபூசை – திருமுறைகளையும், சாத்திரங்களையும் ஓதுதல், ஓதுவித்தல்.

3) சிவாலயத் திருப்பணிகள் – அன்றாட, வாராந்தர, மாதந்தர, வருடாந்தர பெருஞ்சாந்தி பெருவிழாக்கள் நடத்த உதவி செய்தல் – நல்விழாப் பொலிவு காணுதல் – காண்பித்தல்.

பதினொன்றாம் திருமுறை நான்காம் தொகுதி

அன்புடையீர் வணக்கம்.

உலக வாழ்க்கையில் உளவாகும் ஆக்கங்களை எண்ணிக் களிப்படைதலும், கேடுகளை நினைந்து அவலமுறுதலும் எல்லோரிடத்தும் பொதுவாகக் காணப்படும் மனவியல்பாகும். இவ்வாறு செல்வக் களிப்பால் மையலுறாமலும், அல்லல் மிகுதியால் சோர்வடையாமலும் இன்பதுன்பம் இரண்டினையும் ஒப்பக் கருதும் நல்லறிவுடையவர்களை "கேடும் ஆக்கமுங் கெட்ட திருவினர்" எனப் போற்றுவர் சேக்கிழாரடிகள்.

திருவுடைப் பெரியோராகிய இவர்கள், எத்தகைய பேரிடர்கள் அடுக்கி வந்தாலும் அவற்றைக் கண்டு ஒரு சிறிதுங் கலங்காத மனவுறுதியுடையவர்கள். இவர்களுக்கு இவ்வுறுதியை வழங்கவல்ல பேரருளாளன், முழுமுதற் பொருளாகிய இறைவனொருவனே யாவன். திருவாளனாகிய அப்பெருமான் தோன்றாத் துணையாய் நின்று தன் அடியார்களுக்கு வழங்கும் துளக்கமிலா மனச்செம்மையாகிய இத்தெளிவினையே திருநின்ற செம்மை யெனப் போற்றுவர் சான்றோர். (திருத்தொண்டத்தொகை, **4–**ஆம் திருப்பாடல்).

சென்றடையாத திருவுடையானாகிய முழுமுதற் கடவுளை வழிபட்டு, அப்பெருமானது திருவருள் வழியொழுகும் மெய்யடியார்கள், **"நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்"** **(**திருமந்திரம் **85–**ஆம் திருப்பாட்டு**)** என்னும் அருள் நோக்கத்துடன் இறைவனது திருவருளையே கண்ணாகக் கொண்டு தம் அனுபவத்தாற் கண்டுணர்ந்த நல்லொழுக்க நெறியினை எல்லா மக்களுக்கும் அறிவுறுத்தி உலகத்தை நல்வழிப்படுத்துவர். "பொறி வாயில் ஐந்து அவித்தானாகிய இறைவன்" அருளிய மெய்யான ஒழுக்கநெறியில் நிலைபெற்றொழுகுதல் இப்பெரியோரது இயல்பாகும். இவ்வாறு இறைவன் திருவருளையே பற்றுக்கோடாகக் கொண்டொழுகும் இப்பெரியோரது வாழ்க்கைமுறை, சிந்தையின் நிறைவாகிய பெருஞ்செல்வத்தை எல்லோர்க்கும் வழங்குஞ் சிறப்புடையதாதலின், இதனைத் திருநெறியென வழங்குவர் பெரியோர்.

தமிழ் மக்களது தவப்பயனாகத் தமிழ் நாட்டிலே தோன்றி எல்லாம்வல்ல இறைவனது திருவருளால் இத்தகைய திருநெறியினை வகுத்தருளிய சான்றோர்; திருமூலர், காரைக்காலம்மையார், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், நம்பியாரூரர், சேரமான் பெருமாள், ஐயடிகள் காடவர்கோன், திருவாதவூரடிகள், திருவெண்காட்டடிகள், நம்பியாண்டார் நம்பி, திருமாளிகைத்தேவர் முதலிய திருவிசைப்பா ஆசிரியர்கள், சேக்கிழார் நாயனார் ஆகிய பெருமக்களாவர். இப்பெரியோர்கள் எல்லாம்வல்ல சிவபெருமானது திருவருளின்பத்துள் திளைத்து மகிழும் நிலையில் தாம் துய்த்துணர்ந்த பெருநலங்களையெல்லாம் உலக மக்களனைவரும் பெற்று இன்புறும்படி தெளிவும், இனிமையும் பொருந்திய செந்தமிழ்ப் பாடல்களால் விரித்தருளிச் செய்துள்ளார்கள். அருளாசிரியராகிய இவர்கள் திருவாய்மலர்ந்தருளிய தெய்வத் தமிழ்ப்பாடல்களே திருநெறியத் தமிழ் எனவும் திருமுறையெனவும் வழங்கப்பெறுகின்றன.

'முறை' என்ற சொல் நூல், பழமை, ஊழ், கூட்டு, கட்டு, முறைமை எனப் பல பொருள்களில் வழங்குவது என்பது, "கோசமும் பழமையும் ஊழுங் கூட்டும் ஆர்ப்பும் முறைமையும் முறையெனலாகும்" என வரும் பிங்கலந்தையால் உணரப்படும். இச்சொல் மேற்குறித்த பொருள்களோடு நியமம், தடவை, உறவு, நூற்பகுப்பு முதலிய பொருள்களில் வழங்குதலை உலக வழக்காலும் நூல் வழக்காலும் நன்கறியலாம். திருமுறையென்ற தொடரிலுள்ள முறையென்பது மேற்காட்டிய பல பொருள்களுள் நூலையும் அதன் உட்பிரிவுகளையும் குறித்து வழங்குவதாகும். முறைப்பட இயற்றப்பெற்றமையின் முறையென்பது நூற்குப் பெயராயிற்று.

ஏடங்கை நங்கை இறையெங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும்வெண்டாமரை
பாடுந்திருமுறை பார்ப்பதி பாதங்கள்
சூடுமின் சென்னி வாய்த்தோத்திரஞ் சொல்லுமே, **(1050)**

என வரும் திருமந்திரப்பாடலிலும்,

இறைநிலம் எழுதுமுன் இளைய பாலகன்
முறைவரை வேனென முயல்வ தொக்குமால்
அறுமுக முடையவோர் அமலன் மாக்கதை
சிறியதோ ரறிவினேன் செப்ப நின்றதே.

எனவரும் கந்தபுராண அவையடக்கச் செய்யுளிலும் முறையென்ற சொல், நூலென்ற பொருளில் வழங்கக் காண்கின்றோம். "முக்காற் கேட்பின் முறையறிந்துரைக்கும்" என வரும் பழஞ்சூத்திரத்திலும் முறையென்பது நூலென்ற பொருளில் வழங்கியதாகவே கொள்ளலாம்.

மக்கள் அறியவேண்டிய பொருள்களை அறிவுறுத்தி மனக்கோணலைத் தீர்த்துத் தீமையினை விலக்கி நன்றின்பாற் செலுத்தும் மாண்புடைய சொற்களால் முறைப்பட இயற்றப்பெற்றனவே நூலெனச் சிறப்பித்துப் போற்றப்படுவன. மக்களை விலங்கினின்றும் வேறுபிரித்து நன்றுந்தீதும் பகுத்துணரும் மனவுணர்வுடையராக்கி மேம்படுத்துவன அறிவு விளக்கந்தரும் நூல்களாதலின், அந்நூல்களை 'இலங்கு நூல்' எனச் சிறப்பித்தார் திருவள்ளுவர். "விலங்கொடு மக்களனையர் இலங்கு நூல் கற்றாரோ டேனையவர்" **(**திருக்குறள் **410).** உலக நூல், அறிவனூல் என நூல்களை இருவகையாகப் பகுத்துரைப்பர் பேராசிரியர். (திருக்கோவையார், பேராசிரியர் உரை, முதற்செய்யுள்) உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத நிலமும் பொழுதுமாகிய முதற்பொருளைக் குறித்தும் அம்முதற்பொருளின் கண்ணே கருக்கொண்டு தோன்றும் தாவரம், விலங்கு, பறவை முதலிய கருப்பொருள்களைக் குறித்தும், இப்பொருள்களின் இயல்பினை நன்குணர்ந்து பயன்கொள்ளுதற்கேற்ற மனவுணர்வுபெற்ற மக்கட் குலத்தார் பிறவுயிர்க்குத் தீங்கின்றி இவ்வுலக நலங்களை நுகர்ந்து இன்புறும் ஒழுகலராகியருகிய உரிப்பொருளைக்குறித்தும் விளங்கக்கூறுவன உலக நூல்களாகும். இந்நூல்களை இயற்றுதற்குரியோர் வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து இவ்வுலகப்

பொருளின் நலந் தீங்குகளை உள்ளவாறு நுனித்துணரும் பேரறிஞராவர். இத்தகைய சான்றோர்களால் இயற்றப்படும் உலக நூல்கள் மக்களது வாழ்க்கை முறையினை மேன்மேல் உயர்த்துவன. உடம்பையும், கருவி கரணங்களையும் நன்முறையிற் பயிற்றி இம்மை வாழ்விற்குப் பெரிதும் துணைசெய்வன.

காலம் இடம் முதலியவற்றில் கட்டுண்டு கிடக்கும் மக்களதறிவு, ஐம்பொறியளவிற்பட்ட ஒரொரு பொருளையே உய்த்துணர்ந்து அறிவது. இவ்வுலகிலுள்ள எல்லாப் பொருள்களையும் உள்ளவாறறியும் ஆற்றல் அதற்கில்லை. நாம் வாழும் இவ்வண்டப்பகுதியினையும் இதற்கு அப்பாற்பட்ட பேரண்டங்களையும் இவையெல்லாவற்றிற்கும் ஆதாரமாய் எங்கும் நீக்கமற நிறைந்து உயிர்க்குயிராய் இயக்கி நிற்கும் முழுமுதற் பொருளாகிய இறைவனையும் மக்கள் தமது அறிவொன்றையே துணையாகக் கொண்டு அறிதலென்பது இயலாத செயலாம். இவ்வுலகத்தியல்பினையும் எவ்வுயிர்க்கும் உயிராக எங்கும் நீக்கமற விளங்கும் இறைநிலையையும் உள்ளவாறுணர்த்தும் பேரறிவு, பொருள் தோறும் கலந்து விளங்கும் இறைவனொருவனுக்கே உரியதாகும். முற்றறிவுடைய இறைவன், அருளே திருமேனியாகக் கொண்டு தோன்றி அன்பர்க்கு அருளிச் செய்தனவும், தனது திருவருள் துணையால் ஐம்புலன்களை வென்று முனைப்பின்றித் தன்னை வழிபாடு செய்யும் செம்புலச் செல்வர்களாகிய பெரியோர்களின் உள்ளத்து எழுந்தருளியிருந்து அவர்கள் வாயிலாக வெளிப்படுத்தியருளினவும் ஆகிய மெய் நூல்களே அறிவனூல்களாம். உடலுக்கு உறுதிதரும் உலக நூல்களைக் காட்டிலும் உயிர்க்குறுதி தரும் இம்மெய் நூல்கள் மிகவும் சிறந்தனவாகும். சைவ சமயத்தவராற் போற்றிப் பயிலப்பெறும் பன்னிரு திருமுறைகளும் மேற்குறித்தவாறு இறைவன் திருவருளால் வெளிப்படுத்தப்பெற்ற சிறப்புடைய மெய்நூல்களாதலின், இவற்றை அறிவனூல் எனக்கொண்டு போற்றுதல் பொருத்தமுடையதாகும்.

''உயிராவணமிருந்து உற்று நோக்கி உள்ளக் கிழியின் உருவெழுதி, உயிர் ஆவணஞ் செய்திட்டு உன்கைத்தந்தார் உணரப்படுவாரோடு ஒட்டி வாழ்தி'' என்ற வண்ணம் இறைவனை இடைவிடாது நினைந்து அப்பெருமானது பேரறிவே தம்பால் விளங்கப்பெற்றுத் தம்முணர்வென்பது சிறிதுமின்றி இறைவனது பேரறிவினுள் அடங்கி நின்ற சிவஞானிகளாக விளங்கியவர்களே திருஞானசம்பந்தப்பிள்ளையார், திருநாவுக்கரசர், சுந்தரர் முதலிய அருளாசிரியராவர். அவர்கள் வாயிலாகச் சிவபெருமானே வெளிப்படுத்தியருளிய சிறப்புடையன சைவத் திருமுறைகளாகும். இச்செய்தி "எனதுரை தனதுரையாக" எனத் திருஞானசம்பந்தப்பிள்ளையாரும், ''பன்னிய செந்தமிழ் மாலை பாடுவித்தென், சிந்தை மயக்கறுத்த திருவருளினானை'' எனத் திருநாவுக்கரசடிகளாரும் கூறும் வாய் மொழிகளாலும், சிவபெருமானே நம்பியாரூரர்க்கும் 'பித்தா' எனவும் "தில்லை வாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' எனவும் அடியெடுத்துக் கொடுத்தும், சேக்கிழார் நாயனாருக்கு 'உலகெலாம்' என அடியெடுத்துக் கொடுத்தும் வெளிப்படுத்தியருளிய சிறப்புடைய நிகழ்ச்சிகளாலும் நன்குணரப்படும். பதினொராந்திருமுறையிலுள்ள திருமுகப் பாசுரம், மதுரைத் திருவாலவாய்த் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமானடிகளாகிய சிவபெருமானாலேயே திருவாய்

மலர்ந்தருளப்பெற்ற சிறப்புடையது. தெய்வத் தமிழ் நூல்களாகிய இத்திருமுறைகளே இறைவனால் அருளிச் செய்யப்பட்ட வேத சிவாகமங்களைப் போன்று இறைவனருளிய மறைகளாகவே கொண்டு போற்றிப் பயிலுதல் வேண்டுமென்பது முன்னோர் துணிபு. இறைவன் அருளி செய்தனவாகப் பாராட்டப்படும் வேதங்களை 'எழுதாக்கிளவி' எனவும், இறைவனது திருவருள் பெற்ற திருஞானசம்பந்தப் பிள்ளையார் முதலிய பெருமக்கள் இனிய தமிழாற் பாடியருளிய இத் திருமுறைகளே 'எழுதுமறை' எனவும் வழங்குதல் மரபு. 'வண்டமிழால் எழுது மறை மொழிந்த பிரான்'' எனப் பெரியபுராணமும், ''எழுதுமறை மொழிந்த கழுமல முனிவன்'' எனத் தில்லைக்கலம்பகமும் திருஞானசம்பந்தப் பிள்ளையாரைப் போற்றுமுகமாக, அவர் திருவாய் மலர்ந்தருளிய திருப்பதிகங்களே 'எழுதுமறை' எனச் சிறப்பித்தல் காண்க. வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனாகிய முழுமுதற்கடவுளைப் ''பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவனன்றே'' எனத் திருஞானசம்பந்தப் பிள்ளையார் தம்முடைய தந்தையார்க்குக் கையாற் சுட்டிக்காட்டிய எளிமையும் இனிமையும் உடைமையானும், அடியார்கள் இறைவன்பால் வேண்டிய வேண்டியாங்குப் பெறுதற்குத் துணைபுரிந்தும், உலகமக்களது தீராத நோய் தீர்க்கும் மந்திரங்களாகியும், காணுதற்கரிய கடவுளே உலகமக்கள் கண்காணக் காட்டியும் இறைவனது திருவருளே உலகத்தார்க்குத் தெளிவாக விளக்குவன ஆதலானும், வேத நூல்களினும் மேம்பட்டு விளங்குவன இத்தெய்வத்தமிழ்த் திருமுறைகளென்பர் பெரியோர். திருவருட் செல்வமாகிய இத்திருமுறைகளைத் தன்பாற் கொண்ட சிறப்புடைமை கருதி ''ஞால மளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்'' எனச் சேக்கிழார் பெருமானாற் போற்றப் பெறும் பெருஞ்சிறப்பினை நமது தமிழ்மொழி பெற்றுத் திகழ்கின்றது.

திருமுறையென்னும் இப்பெயர் வழக்கினை, "திருமுறையெழுதுவோர் வாசிப்போர்" எனக் கணநாத நாயனார் புராணத்தில் சேக்கிழார் சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார்கள்.

தொண்டரை யாக்கி யவரவர்க் கேற்ற தொழில்கள் செய்வித்
தண்டர்தங் கோனக் கணத்துக்கு நாயகம் பெற்றவன்காண்
கொண்டல்கொண் டேறிய மின்னுக்குக் கோல மடல்கள் தொறும்
கண்டல்வெண் சோறளிக் குங்கடல் காழிக் கண நாதனே

என்ற இந்நூலில் வரும் திருத்தொண்டர் திருவந்தாதிப் பாடலில் நம்பியாண்டார் நம்பிகள் **தொண்டரை ஆக்குதலாவது, பிற வழிகளில் முயல்பவர்களை சிவனது தொண்டு முயற்சியில் திருப்பிவிடுதல் என்ற அரிய கருத்தை எடுத்தியம்புகிறார். ''அம்முயற்சிகளுள் அவரவருக்கு ஏற்புடைய பணி இது எனத் தெரிந்து அப்பணியில் அவர்களை ஈடுபடுத்தியவர் கணநாதர்''. அப்பணிகளுள் திருமுறைகளை ஏட்டில் எழுதுதல் ஒரு சிறந்த திருப்பணியாகும்.**

பொறியாளராக (இளங்கலை மின்னணுவியல் பட்டதாரி) வாழ்வைத் தொடங்கிய பதிப்பாசிரியரின் தொண்டராகும் முயற்சிக்கு கணநாதர் பற்றிய இப்பாடல் மூலம் ஊக்கமளிக்கிறார் நம்பியாண்டார் நம்பிகள். பதிப்பாசிரியருக்கு ஏற்புடைய பணிகள் என்று நூல் வெளியீடு செய்தலையும், சிவாலயத் திருப்பணிகளையும் ஒதுக்கி ஈடுபடுத்தியுள்ளார்.

பல்லாண்டு காலம் பல சைவ நூல்களை வெளியிட்டபின் சிவபெருமான், திருமுறைகளை, நெறியாகப் பதிப்பிக்கத் திருவுள்ளங் கொண்டு நமது பன்னிரு திருமுறை மையத்தைப் பணித்தார். அவராணையைத் தலைமேல் கொண்டு டிசம்பர் 2014 முதல் இதுவரை 16 அமர்வுகளில் பதினொன்றாம் திருமுறை, மூன்றாம் தொகுதி வரை வெளியிட்டு மகிழ்ந்துள்ளோம். தங்கள் திருக்கரங்களில் உள்ள பதினொன்றாம் திருமுறை, நான்காம் தொகுதி, 11 பிரபந்தங்களை உள்ளடக்கியது. திருவெண்காட்டடிகள் எனப்படும் பட்டினத்தடிகள் இயற்றிய ஒருபா ஒருபஃது என்னும் ஒரு நூலும், நம்பியாண்டார் நம்பிகள் அருளிய பத்து நூல்களும் கீழ்க்கண்டவாறு இப்பதிப்பில் அடங்கியுள்ளன.

## திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது

இந்நூல் அகவல் என்னும் ஒரே வகையான பாவகையில் 10 பாடல்களைக் கொண்டுள்ளது. திருவொற்றியூர் பெருமானைப் போற்றுவதாயுள்ளது. ஆதலின் இது இப்பெயர் பெற்றது. ஒருபா – அகவல் என்னும் ஒருபா. ஒருபஃது – ஒரு பத்துப் பாடல்களை உடையது.

இறைவனின் திருவடிவு, குணம், செயல் ஆகிய மூவகை நலன்களும் இப்பனுவலில் சிறப்பித்துக் கூறப்படுகின்றன.

தூமதி சடைமிசைச் சூடுதல் தூநெறி
ஆமதி யான்என அமைத்த வாறே
அறனுரு வாகிய ஆனே றேறுதல்
இறைவன் யானென இயற்று மாறே
அதுஅவள் அவன்என நின்றமை யார்க்கும்

பொதுநிலை யான்என உணர்த்திய பொருளே
முக்கணன் என்பது முத்தீ வேள்வியில்
தொக்க தென்னிடை என்பதோர் சுருக்கே
வேத மான்மறி ஏந்துதல் மற்றதன்
நாதன் நான்என நவிற்றுமாறே

மூவிலை ஒருதாட் சூலம் ஏந்துதல்
மூவரும் யான்என மொழிந்த வாறே
எண்வகை மூர்த்தி என்பதிவ் வுலகினில்
உண்மை யான்என உணர்த்திய வாறே
நிலம்நீர் தீவளி உயர்வான் என்றும்

உலவாத் தொல்புகழ் உடையோய் என்றும்
பொருநற்பூதப் படையோய் என்றும்
தெருளநின் றுலகினில் தெருட்டு மாறே (997)

எனவரும் பகுதி ‘எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு’ (குறள். 555) என்னும் நோக்கில் அமைந்துள்ளமை அறிந்து இன்புறுதற்குரியது.

## திருநாரையூர் விநாயகர் திருஇரட்டை மணிமாலை

திருநாரையூரில் கோயில் கொண்டு எழுந்தருளி தம்மை ஆட்கொண்ட விநாயகப்பெருமானை நன்றி மறவாமல் முதல் நூலாக அவர் மேல் வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆகிய இரு பாக்களால் அந்தாதித் தொடையாக இந்த அருள் நூலை அருளிச்செய்தார்.

தம்மேல் கருணை கொண்டு ஆண்டதை நினைவு கூர்கிறார். பெருச்சாளி வாகனம் உபயோகிப்பதையும், கயமுகாசுர வதத்தையும் பாடி மகிழ்கிறார். அவர் வடிவத்தை பாதாதிகேசமாக வியந்து மகிழ்கிறார். மாங்கனி பெற்ற வரலாற்றை எட்டாம் பாடலில் எடுத்தியம்புகிறார். விநாயகர் காலனின் தூதர்கள் நம்மை நெருங்காதபடியும் செய்வார் என்றும் பாடுகிறார்.

## கோயில் திருப்பண்ணியர் விருத்தம்

இந்நூல் 70 கட்டளைக் கலித்துறைத் திருவிருத்தங்களால் ஆனது. தில்லைக் கூத்தப்பிரானைப் போற்றிப் புகழ்வது. சைவப் பெருமக்கள் தில்லையைக் கோயில் என அழைத்தலின் இது கோயில் திருப்பண்ணியர் விருத்தம் எனப் பெயர் பெற்றது. பண்ணியர் விருத்தம் – பண்ணொடு இயன்ற பாடல் எனப் பொருள் கொண்டு, தில்லையைப் பற்றிய பண் சுமந்த பாடல்கள் எனப் பொருள் காண்பர். இவ்வாறாயின் லகரம் ரகரம் ஆயிற்று எனக் கோடல் வேண்டும். திருப்பண்ணியர் – தில்லைக் கோவிலில் எழுந்தருளியிருந்து திருத்தகவிற்றாய இன்னருளைப் பொழிபவன் எனப்பொருள் கொண்டு, அப் பெருமானைப் பற்றிய பாடல்கள் என்றும் பொருள் காண்பர்.

> ஆந்தண் பழைய அவிழைஅன் பாகிய பண்டைப்பறைச்
> சேந்தன் கொடுக்க அதுவும் திருவமிர் தாகியதே **(26)**

என வரும் பகுதி,

> அவிழ்ந்த துணியில் அவிழ்ந்த அவிழை
> அவிழ்ந்த மனத்தால் அவிழ்க்க – அவிழ்ந்தசடை
> வேந்தனார்க்கு இன்அமுத மாயிற்றே மெய்யன்பின்
> சேந்தனார் செய்த செயல் **(53)**

என வரும் திருக்களிற்றுப்படியாரையும்,

> தில்லையாய் என்னைத் தீவினைகள்
> ஒறுத்தல்கண் டாற்சிரி யாரோ பிறர் என் உறுதுயரை
> அறுத்தல்செய் யாவிடின் ஆர்க்கோ வரும்சொல் அரும்பழியே **(39)**

என வரும் பகுதி,

'செத்தே போனால் சிரியாரோ'

'போகவிடில் மூவா முழுப்பழி மூளும் கண்டாய்'

எனவரும் திருமுறைப்பகுதிகளையும் நினைவுகூரச் செய்கின்றன.

வருவா சகத்தினின் முற்றுணர்ந் தோனைவண் தில்லைமன்னைத்
திருவாத வூர்ச்சிவ பாத்தியன் செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தருதிருக் கோவைகண் டேயுமற்றப் பொருளைத்
தெருளாத உள்ளத் தவர்கவி பாடிச் சிரிப்பிப்பரே **(53)**

என வரும் பாடலால், நம்பிகளுக்கு மணிவாசகரிடத்தும், அவர் அருளிய திருக்கோவையாரிடத்தும் உள்ள பத்திமை பெரிதும் விளங்குகின்றது.

## திருத்தொண்டர் திருவந்தாதி

இந்நூல் **89** கட்டளைக் கலித்துறைப் பாக்களைக் கொண்டது. 'பொன்னி வடகரை' எனத் தொடங்கும் பாடல், நம்பிகளுக்குரிய வணக்கமாக உள்ளது. சில பதிப்புக்களில் இப்பாடல் முதற்கண் உள்ளது; சில பதிப்புக்களில் இறுதியிலும் உள்ளது. இறுதியில் இருப்பதே பொருத்தமாகும். திருத்தொண்டத் தொகைக்கும் திருத்தொண்டர் புராணத்திற்கும் இடை நூலாக அமைந்து நிற்கும் சிறப்பு இப்பனுவலுக்குரியதாகும். அறுபான்மும்மை நாயன்மார்களின் ஊர், நாடு, மரபு, செயல் ஆகியவற்றை இந்நூல் சுருங்க வகுத்துரைக்கின்றது. இதற்கு முதல் நூலாகவுள்ள திருத்தொண்டத் தொகையில் வரும் அடியவர்களில், தொகை அடியார் ஒன்பதின்மர் என்றும், தனி அடியார் அறுபத்து மூவர் என்றும் வகைப்படுத்தி இந்நூல் காட்டுகின்றது. இவ்வடியவர்களைப் பதினொரு பாடல்களால், திருத்தொண்டத் தொகை என்னும் பெயரில் நாவலூர் அடியன் அருளினன் என இந்நூற்கண் உள்ள **87**ஆவது பாடல் குறிக்கின்றது. திருத்தொண்டர் புராணத்தில் கூறப்பெற்றுள்ள பதினொரு சருக்கங்களின் பெயர்களை முதற்குறிப்பால் அறிந்து நினைவுகூருமாறு **88–**ஆவது பாடல் அமைந்துள்ளது.

பணித்தநற் றொண்டத் தொகைமுதல் தில்லை இலைமலிந்த
அணித்திகழ் மும்மை திருநின்ற வம்பறா வார் கொண்ட சீர்
இணைத்த நற் பொய்யடி மைகறைக் கண்டன் கடல்சூழ்ந்த பின்
மணித்திகழ் சொற்பத்தர் மன்னிய சீர்மறை நாவனொடே

என்பது அப்பாடலாகும். இவ்வந்தாதி செப்பியதால் ஐம்புலன்களும் ஒடுங்கவும், ஊழ்வினை வாடவும் நேர்ந்தன ஆதலின் இதனை மொழிதற்கு நான் எத்தவம் செய்தனன் என்று எண்ணி **89–**ஆவது பாடலில் இறும்பூது எய்துகின்றார்.

இவ்வரிய பனுவலில் திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், சேரமான் பெருமாள் நாயனார், கோச்செங்கட்சோழர் ஆகிய நாயன்மார்களை இரண்டு இரண்டு பாடல்களால் போற்றுகின்றார். ஏனைய அடியவர்களை ஒவ்வொரு பாடல் வழிப் போற்றுதல் செய்துள்ளார். ஒவ்வொரு சருக்க நிறைவிலும் சுந்தரரைப் போற்றி மகிழ்கின்றார். இம்மரபைச் சேக்கிழாரும் தம் நூலில் ஏற்றுப் போற்றியுள்ளார்.

## ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி

அந்தாதித் தொடை பட அமைந்த 100 கட்டளைக் கலித்துறைப் பாடல்களைக் கொண்ட பனுவல் இதுவாகும்.

ஞானசம்பந்தர் தோன்றிய காழிப்பதிக்குப் பன்னிரண்டு பெயர்கள் உளவாதலை முதற்கண் எடுத்துப் போற்றுவதோடு 100–ஆவது பாடலிலும் இவற்றைப் போற்றுகின்றார்.

> நாதன் நனிபள்ளி சூழ்நகர் கானக மாக்கிஃதே
> போதின் மலிவய லாக்கிய கோன் (17)

என இவர் அருளும் கூற்றே, 'பாலை நெய்தல் பாடியதும்' எனப் பின்வந்த ஞான நூல் குறிப்பதற்கு ஏதுவாயிற்று. இவ்வருள் நிகழ்ச்சி இவ்விடத்தினின்றிச் சண்பை விருத்தத்துள்ளும் (4), திருவுலா மாலையிலும் (75) குறிக்கப்பட்டுள்ளது. எனினும் சேக்கிழார் இதனை அவர் வரலாற்றில் கூறிற்றிலர். திருஞான சம்பந்தரின் அழகிய வரலாற்றையும் அற்புதச் செயல்களையும் எண்ணி எண்ணிப் போற்றும் நம்பிகள், இடையிடையே அகப்பொருள் சுவைபடவும் பல பாடல்களை அருளியுள்ளார். 37, 38, 47, 61 முதலிய பாடல்களைக் காண்க.

> கருதத் தவஅருள் ஈந்தருள் ஞானசம் பந்தன் சண்பை
> இரதக் கிளிமொழி மாதே! கலங்கல் இவர் உடலம்
> பொருதக் கழுநிரை யாக்குவன் நுந்தமர் போர்ப்படையேல்
> மருதச் சினையில் பொதும் பருள்ஏறி மறைகுவனே (51)

என வரும் பாடல்,

> அமர் வரின் பெயர்க்குவன்
> நுமர்வரின் மறைகுவன் மாஅயோளே

என வரும் பழம்பாடல் பகுதியோடு ஒத்துள்ளது. இந்நூல் இறுதியில்,

> பாரகலத் துன்பங் கடந்தமர ராற்பணியும்
> ஏரகலம் பெற்றாலும் இன்னாதால் – காரகிலின்
> தூமங் கமழ் மாடத் தோணிபுரத் தலைவன்
> நாமஞ் செவிக்கிசையாநாள்

என வரும் வெண்பாவால் நம்பிகளுக்கு ஞானசம்பந்தர் பால் இருக்கும் பெரும்பத்திமை விளங்குகின்றது.

## திருச்சண்பை விருத்தம்

இந்நூல் கட்டளைக் கலித்துறையாகிய திருவிருத்தத்தால் அமைந்த 10 பாடல்களைக் கொண்டது.

ஆறதே றுஞ்சடை யான் அருள் மேவ அவனியர்க்கு
வீறதே றுந்தமி ழால்வழி கண்டவன்

என இந்நூற்கண் திருஞானசம்பந்தரைப் போற்றி இருப்பது, அவர் தம் தமிழ் நலமும் அதன் வழிப்பெறும் வீட்டு நலமும் கூறி மகிழ்வதாயுள்ளது.

## ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை

ஆசிரியம், வெண்பா, கட்டளைக்கலித்துறை ஆகிய இம்மூவகைப் பாக்களாலும் **30** பாடல்களைக் கொண்ட நூல் இதுவாம். திருஞானசம்பந்தர் பிறந்தது திருவருளால் என்றும், வளர்ந்தது ஞானப் பாலால் என்றும் கூறி, அவர்தம் பல அருட் செயல்களை நினைவுகூரும் நம்பிகள்;

நீத்தது, அவிழ்ச் சுவையே அறிந்துஅரனடி பரவும்
தமிழ்ச்சுவை அறியாத் தம்பங் களையே

எனக் குறிப்பிட்டிருப்பது, இவர் கொண்டிருக்கும் தமிழ்ச்சுவை அருமையைப் புலப்படுத்துவதாகும்.

மலைமகள் புதல்வ கலைபயில் நாவ நினாது
பொங்கொளி மார்பில் தங்கிய திருநீ (று)
ஆதரித் திறைஞ்சிய பேதையர் கையில்
வெள்வளை வாங்கிச் செம்பொன் கொடுத்தலிற்
பிள்ளை யாவது தெரிந்தது பிறர்க்கே

என்பது பத்தாவது பாடலில் வரும் பகுதியாகும். ஒரு தலைமகனைக் கண்டு காதல் உறுவார்க்கு வளை நெகிழ்தலும், பசலை பாய்தலும் இயல்பாதலை இவ்வகையில் அமைத்துக் கூறியிருக்கும் திறம் நயம்பட உள்ளது.

தேம்பி
அழுதகன்றாள் என்னா தணிமலையர் வந்தால்
தொழுதகன்றால் என்றுநீ சொல்லு **(20)**
பெட்டையங் குருகே
வாடை அடிப்பவைகறைப் போதில்
தனிநீ போந்து பனிநீர்ஒழுகக்
கூசிக் குளிர்ந்து பேசா திருந்து
மேனி வெளுத்த காரணம் உரையாய்
இங்குத் தணந் தெய்தி நுமரும்
இன்னம் வந்திலரோ சொல்லிளங் குருகே **(25)**

எனப் புனத்தொடும் புள்ளொடும் கூறும் கூற்றுக்கள் எல்லாம், சொல்லாமரபின் அவற்றொடு

கெழீஇச் செய்யாமரபின் தொழிற்படுத் தடக்கியும், அவரவர் உறுபிணி தமபோற் சேர்த்தியும் கூறப்படும் அகப்பொருள் இலக்கண மரபு பற்றி வந்தனவாம்.

## ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை

உலாவின் பெயர்கள் ஊரொடுபடுத்தும் பெயரொடுபடுத்தும் அமையும். அவற்றுள் இது பெயரொடுபடுத்து அமைந்ததாகும். பேதை முதலாகப் பேரிளம் பெண் ஈறாக உள்ள ஏழு பருவத்து மகளிரும் தனித்தனியே உலாப் போதருவாரிடத்துக் காமுறுவதாகக் கூறும் ஏனைய உலாக்கள் போல் அன்றி, அத்தகைய மகளிர் அனைவரும் ஒருங்கு காமுற்றுக் கூறும் கூற்றாக இவ்வுலா அமைந்துள்ளது. ஆதலின், இது உலா என்னாது உலாமாலை எனப்பட்டது.

143 கண்ணிகளை உடையது இந்நூல். 1 முதல் 58 வரையுள்ள கண்ணிகளில் காழிச் சிறப்பும், 59 முதல் 89 வரையுள்ள கண்ணிகளில் திருஞானசம்பந்தரின் சிறப்பும், 90 முதல் 117 வரை உள்ள கண்ணிகளில் அவர் தம் அழகிய உலா எழுச்சியும், 118 முதல் 143 வரை உள்ள கண்ணிகளில் பேரிளம் பெண் ஈறாகப் பேதை முதலாக உள்ள மகளிர் காழி வேந்தரின் நலம் வேட்டு நின்ற நீர்மையுமாக அமைந்துள்ளன. காழிக்குரிய பன்னிரு பெயர்களும் 56–58 வரை உள்ள கண்ணிகளில் குறிக்கப்படுகின்றன. இவர் அருளிய பதிகங்கள் 16,000 என 60–ஆவது கண்ணி குறிக்கின்றது. ''மழையொண்க'' (72) என்னும் தொடர், ''மழையொண்கண் பரவையைத் தந்து ஆண்டானை''எனவரும் சுந்தரர் திருவாக்கையும்,

> மாயிரு ஞாலத்து மன்னா வடுதுறைபுக்கு
> ஆயிரஞ் செம்பொனது கொண்டும்

என வரும் தொடர் 'மாயிரு ஞாலமெல்லாம்' எனத் தொடங்கும் திருநாவரசர் திருவாக்கையும் நினைவுகூர வைக்கின்றன. ஆற்றொழுக்கான நடையில் அரிய செந்தமிழ்த்திறன் விளங்க இம்மாலை அமைந்துள்ளது.

## ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்

தமிழில் உள்ள பிரபந்த வகைகளுள் கலம்பகம் என்பதும் ஒன்று. இது புயம், தவம், வண்டு, அம்மானை, பாண், மதங்கு, கைக்கிளை, சித்து, ஊசல், களி, மடக்கு, ஊர், மறம், காலம், தழை, இரங்கல், சம்பிரதம், கார் என்னும் 18 உறுப்புக்களைப் பெற்றுவரும். இவ்வகையில் அமைந்த கலம்பகங்களுள் முந்தியது நந்திக் கலம்பகம் ஆகும். இதனை அடுத்து வந்த கலம்பகம் இதுவேயாம்.

கலம்பகம் என்பது பொதுவாக 100 பாடல்களைக் கொண்டிருக்கும். அவ்வகையில் இதுவும் 100 பாடல்களைக் கொண்டு இருக்க வேண்டும். ஆனால் இந்நூலில் இதுபொழுது 49 பாடல்களே உள்ளன. கலம்பக இலக்கணப்படி அந்தாதியாகத் தொகுக்கப் பெற்று வரும்

100 பாடல்களில், இறுதிப் பாடலின் இறுதி, முதற்பாடலின் முதற் சொல்லுடன் மண்டலித்து முடிதல் வேண்டும். இவ்வகையில் இப்பொழுது உள்ள 49 ஆவது பாடலின் இறுதி, முதற் பாடலின் முதல் சொல்லோடு மண்டலித்து முடியவில்லை. ஆதலின் இந்நூல் 100 பாடல்களைக் கொண்டு இருத்தல் வேண்டும் எனத் தெரிகிறது. இடைக்காலத்தே 50 முதல் 100 வரை உள்ள பாடல்கள் சிதைந்துள்ளன.

முதற் பாடலில் உள்ள தரவு, காழிப் பிள்ளையார் ஞானம் பெற்ற வரலாற்றை இனிது விளக்குகின்றது. இந்திர ஞாலம் வல்லான் ஒருவன் தன் ஆற்றலைக் கூறுவதாக அமைப்பது சம்பிரதமாகும். அன்னோன் ஒருவன் ஏழு மலைகளையும் என் கழுத்தில் அடக்குவன், ஏழு கடலையும் வயிற்றில் அடக்குவன், இரவி நிலத்திலே வருமாறு செய்வன் எனக் கூறி இவையனைத்தும் கூட அருஞ்செயல்கள் அல்ல, தமிழ்க் கடலாம் திருஞானசம்பந்தரின் திருவடிகளை வழுத்தி வருவார்க்கும் ஒரு துன்பத்தை வருவிப்பன் எனக் கூறி அனைத்தினும் மேலாயது இவ்வருஞ்செயலே எனக் கூறுவதாக அமைத்துள்ளார். எனவே திருஞானசம்பந்தரின் திருவடிகளைப் பேணி வருவார்க்கு எக்காலத்தும் எத்துன்பங்களும் வாரா என்பது பெற்றாம்.

## ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை

கலிவெண்பாவில் அமைந்த இந்நூல் 61 அடிகளை உடையது. திருஞானசம்பந்தர் ஞானம் பெற்றது முதல் திருமணக் கோலத்துடன் அருட்சோதியில் கலந்தது வரையிலான வரலாற்றைத் தொகுத்துக் கூறலின் இந்நூல் இப்பெயர் பெற்றது. இந்நூலில் பாண்டிமா தேவியார், குலச்சிறையார், முருகர், திருநீலநக்கர் முதலிய அடியவர்கள் குறிக்கப் பெற்றுள்ளனர். அன்றியும்,

வர்த்தமா னீசர் கழல் வணங்கி வாழ்முருகன்
பத்தியை ஈசன் பதிகத்தே காட்டினான் **(51–53)**

வெய்யவிடம்
மேவி இறந்த அயில்வேற்கண் மடமகளை
வாவென் றழைப்பித்து இம் மண்ணுலகில் வாழ்வித்த
சீர்நின்ற செம்மைச் செயலுடையான் **(35–38)**

என வரும் பகுதிகளில், திருஞானசம்பந்தரின் திருப்பதிகக் குறிப்புக்களும் குறிக்கப் பெற்றுள்ளன. பூம்பாவையே! நீ இனைய பல அருஞ்செயல்களை எல்லாம் விடுத்துப் போவாயோ? போக மாட்டாய், வருவாய் என்னும் குறிப்பில் இத்தொடர் அமைந்து இருப்பதைக் கொண்டே ‘வாவென்று அழைப்பித்து’ என்றார். இவ்வருமையும் அறியத்தக்கதாம்.

## திருநாவுக்கரசுதேவர் திருஏகாதச மாலை

தசம்–10, ஏகம்–1. எனவே 11 பாடல்களை உடையதாய், அந்தாதித்தொடை பட அமைந்து, திருநாவுக்கரசரின் புகழ் நுவலும் மாலையாய் இந்நூல் இருத்தலின் இப்பெயர் பெற்றது. முதல் திருப்பாடலில் தமக்கையாரொடு மீளத் தொடர்பு கொண்டதே அவர் தம் வாழ்விற்கு உயர்வாயிற்று எனக் குறித்தருளுகின்றார். இரண்டாவது பாடலில் 'தொண்டலால் துணையுமில்லை' என அருளியதற்கேற்ப, உழவாரப்படையைக் கையில் கொண்டு ஓயாது பணி செய்தருளிய இவரைக் குருவாகக் கொண்டு, இறைவன் திருவருளை அடைய விரும்புபவர்க்குப் பிறவிப்பிணியும் அதன் வழிவரும் துன்பங்களும் இலவாம் எனக் குறித்தருளுகின்றார். இவர் அருளிய பதிகம் 49,000 என ஏழாவது பாடலில் குறிப்பதோடு, நாவுக்கரசர் திருவடிகளைப் பேணுவார்க்கு உளவாகும் நன்மைகளையும் தொகுத்துக் கூறுகின்றார். அப்பாடல்;

பதிகம்ஏழ் எழுநூறு பகருமா கவியோகி
பரசுநா வரசான பரமகா ரணஈசன்
அதிகை மாநகர்மேவி அருளினா லமண்மூடர்
அவர் செய்வா தைகள் தீரும் அனகன்வார் கழல்சூடின்
நிதியரா குவர்சீர்மை உடையரா குவர், வாய்மை
நெறியரா குவர், பாவம் வெறியரா குவர், சால
மதியரா குவர், ஈசன் அடியரா குவர், வானம்
உடையரா குவர், பாரில் மனிதரா னவர் தாமே

என்பதாம். திருநாவுக்கரசு எனும் பெயரில் நம்பிகளுக்கு இருந்த ஈடுபாடு இணையற்றது என்பதை இம்மாலையால் நன்கறியலாம்.

இவை போன்ற ஏராளமான நுட்பங்களைத் தொகுத்து, நூலாக வெளியிட்டு, வழிபாட்டு கருத்தரங்கம் நடத்துதற்குத் திருவருள் கூட்டுவித்த நிலையில் ஏற்கனவே இரண்டு திங்களுக்கொருமுறை நிகழ்ந்த பன்னிரு திருமுறை ஆய்வுக் கருத்தரங்குகளைக் கீழ்க்கண்டவாறு நினைவுகூர்வோம்.

| | |
|---|---|
| முதல் திருமுறை | டிசம்பர் 27, 28.2014 |
| இரண்டாம் திருமுறை | பிப்ரவரி 21, 22.2015 |
| மூன்றாம் திருமுறை | ஏப்ரல் 18, 19.2015 |
| நான்காம் திருமுறை | ஜீன் 27, 28.2015 |
| ஐந்தாம் திருமுறை | ஆகஸ்டு 29, 30.2015 |
| ஆறாம் திருமுறை | அக்டோபர் 24, 25-2015 |

பதினொன்றாம் திருமுறை நான்காம் தொகுதி

| | |
|---|---|
| ஏழாம் திருமுறை | டிசம்பர் 26, 27-2015 |
| எட்டாம் திருமுறை - I | பிப்ரவரி 27, 28 - 2016 |
| எட்டாம் திருமுறை - II | ஏப்ரல் 23 - 2016 |
| ஒன்பதாம் திருமுறை | ஏப்ரல் 24 - 2016 |
| பத்தாம் திருமுறை - I | ஜீன் 26, 27, 2016 |
| பத்தாம் திருமுறை - II | ஆகஸ்ட் 27, 28, 2016 |
| பத்தாம் திருமுறை - III | அக்டோபர் 22, 23, 2016 |
| பதினொன்றாம் திருமுறை - I | டிசம்பர் 24, 25, 2016 |
| பதினொன்றாம் திருமுறை - II | பிப்ரவரி 18, 19, 2017 |
| பதினொன்றாம் திருமுறை - III | ஏப்ரல் 29, 30, 2017 |

அதன் வரிசையில், வரும் ஜுன் மாதத்தில் பதினொன்றாம் திருமுறை, நான்காம் நிறைவுத் தொகுதி வழிபாட்டுக் கருத்தரங்கமானது கீழ்க்கண்ட அட்டவணைப்படி நடைபெறும்.

உ
*சிவமயம்*
*திருச்சிற்றம்பலம்*

# பதினொன்றாம் திருமுறை (நான்காம் தொகுதி)

## வழிபாட்டுக் கருத்தரங்கம்

## (24.06.2017, 25.06.2017 சனி, ஞாயிறு)

## நிகழ்ச்சி நிரல்

| சொற்பொழிவாளர் நாள்/நேரம் | | அமர்வுப் பொருள் | பாடல் எண்கள் |
|---|---|---|---|
| மகாவித்துவான் மயிலம் **வே. சிவசுப்பிரமணியம்** அவர்கள் 24.06.2017 சனி | 30 | பட்டினத்து அடிகள் அருளிய திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது | 992-1001 |
| | 31 | நம்பியாண்டார் நம்பிகள் அருளிய திருநாரையூர் விநாயகர் திருஇரட்டைமணிமாலை | 1002-1021 |
| பேராசிரியர் **ம.வே. பசுபதி** அவர்கள் 24.06.2017 சனி நண்பகல் 11.00-01.00 | 32 | கோயில் திருப்பண்ணியர் விருத்தம் | 1022-1091 |
| **பேரா. புரிசை நடராசன்** அவர்கள் 24.06.2017 சனி பிற்பகல் 02.00-04.00 | 33 | அ) திருத்தொண்டர் திருவந்தாதி முதற்பாகம் | 1092-1135 |
| சிவத்திரு **ப. குமரலிங்கம்** அவர்கள் 24.06.2017 சனி மாலை 04.00-06.00 | 33 | ஆ) திருத்தொண்டர் திருவந்தாதி இரண்டாம் பாகம் | 1136-1181 |
| சிவத்திரு **சு. குஞ்சிதபாதம்** அவர்கள் 25.06.2017 ஞாயிறு காலை 09.00-11.00 | 34 | ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி | 1182-1282 |

| | | | |
|---|---|---|---|
| சிவத்திரு **சிவ. காந்தி** அவர்கள் | 35 | ஆளுடையபிள்ளையார் திருச்சண்பை விருத்தம் | 1283–1293 |
| 25.06.2017 ஞாயிறு நண்பகல் 11.00–01.00 | 36 | ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை | 1294–1323 |
| சிவத்திரு **சொ.சொ.மீ. சுந்தரம்** அவர்கள் | 37 | ஆளுடையபிள்ளையார் திருவுலா மாலை | 1324 |
| 25.06.2017 ஞாயிறு பிற்பகல் 02.00–04.00 | 39 | ஆளுடையபிள்ளையார் திருத்தொகை | 1374 |
| முதுமுனைவர் **ந.இரா. சென்னியப்பனார்** அவர்கள் | 38 | ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம் | 1325–1373 |
| 25.06.2017 ஞாயிறு மாலை 04.00–06.00 | 40 | திருநாவுக்கரசுதேவர் திருஏகாதசமாலை | 1375–1385 |

இரண்டு திங்களுக்கு ஒருமுறை சுமார் பன்னூறு பாடல்கள் கொண்ட ஒரு திருமுறையை முறையாகப் படித்து, அச்சுப்பிழை பலமுறை பார்த்துக் கடின உழைப்பின் பயனாக நூலை வெளியிடும் முனைவர் ப. தமிழரசியைத் தலைவராகக் கொண்டு செயல்படும் தமிழ்த்துறையின் முனைவர் இரா. மதன்குமார், முனைவர் ச.கவிதா, முனைவர் செ.ஆறுச்சாமி உள்ளிட்டோருக்கும், நூலாக்க ஒருங்கிணைப்புப் பணியில் செயலாற்றுகின்ற திரு. ப. வெள்ளிங்கிரி, கணினி நிபுணர்களான திரு. மு. மகேஷ், திரு. து. சசி அவர்களுக்கும், நூலைச் சிறப்பாக வெளியிடும் செஞ்சுடர் அச்சகத்தார்க்கும் மனமுவந்த நன்றிகள். அவர்கள் இம்மை, மறுமை, இன்பம் பெறுவார்களாக.

மென்னூல் வடிவம் www.panniruthirumurai.org என்ற இணைய முகவரியில் உள்ளது. அன்பர்கள் படித்தும், படியெடுத்தும், தாங்கள் பெற்ற இன்பத்தை மற்றவர்க்கு எடுத்துரைத்தும் இன்புற அன்புடன் அழைக்கின்றோம்.

அனைவரும் வருக

நன்றி

அன்பன்,

**இராச. வசந்தகுமார்**

நிறுவன வேந்தர்

கற்பகம் பல்கலைக்கழகம்

# திருவொற்றியூர்

*ஒரு காலத்தில் தலங்கள் உள்பட எல்லா ஊர்களுக்கும் இறை விதித்து அரசன் சுற்றோலை அனுப்பியபொழுது அவனுக்கும் ஒலை நாயகத்திற்கும் தெரியாதபடி வரி பிளந்து "இவ்வாணை ஒற்றியூர் நீங்கலாகக் கொள்க" என்று அவ்வோலையில் எழுதப்பட்டிருந்ததை வியந்து அவ்வூர்க்கு ஒற்றியூர் (விலக்கு அளிக்கப்பட்ட ஊர்) என்றும், பெருமானுக்கு எழுத்தறியும் பெருமான் என்றும் பெயர் ஆயிற்று. "ஏட்டுவரியில் ஒற்றியூர் நீங்கல் என்ன எழுத்தறியும் நாட்ட மலரும் திருநுதலார்" என்னும் பெரியபுராணச் செய்யுளும் காண்க.*

*இது திருவொற்றியூர் தொடர் வண்டி நிலையத்திற்குக் கிழக்கே 1 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. சென்னை மாநகரின் வடபகுதியாக விளங்குவது. இது தொண்டை நாட்டுத் தலங்களுள் ஒன்றாகும்.*

*இறைவரின் திருப்பெயர் - படம்பக்கநாதர். உபமன்யு முனிவரிடத்துச் சிவதீட்சை பெற்றுத் தம்மை வழிபட்ட வாசுகியை இறைவர் தம் திருமேனியில் ஐக்யம் செய்து கொண்டமையால் இப்பெயர் பெற்றார். அப்பாம்பின் வடிவத்தை இறைவர் திருமேனியில் இன்றும் காணலாம்.*

***தியாகேசர் :-*** *அரசனுக்குக் கொடுக்கும் பொருட்டுத் தம்மிடம் நிறைந்த அன்புடைய ஏலேலே சிங்கருக்கு மாணிக்கம் கொடுத்தருளினமையால் இப்பெயர் ஏற்பட்டது.*

*இவைகளன்றி, ஆதிபுரீசுவரர், புற்றிடங்கொண்டார். எழுத்தறியும் பெருமான் என்னும் வேறு பெயர்களும் உண்டு.*

*இறைவியின் திருப்பெயர் - வடிவுடையம்மை. மரம் - மகிழ மரம். தீர்த்தம் - பிரம தீர்த்தம். துர்க்கையாரின் பெயர் - வட்டப் பாறையம்மை. மக்கள் இவரைச் சிறப்பாக வழிபட்டு வருகின்றனர். நந்திதேவர், திருமால், பிரமதேவர், வான்மீகி முனிவர், சந்திரன் முதலானோர் வழிபட்டுப் பேறு பெற்றனர்.*

*சுந்தரமூர்த்தி சுவாமிகள் இங்கு எழுந்தருளி ஞாயிறுகிழாரின் மகளாய்த் தோன்றிய சங்கிலியாரை மகிழ மரத்தடியில் சத்தியஞ் செய்து கொடுத்து மணந்த வரலாற்றை முன்னிட்டு இக்கோயிலில் ஆண்டு தோறும் மாசி மாதத்தில் மகிழடித் திருவிழா மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது. தைல வினைத்தொழில் மரபினராகிய கலியநாயனார் அவதரித்து, கோயிலின்*

உள்ளும் புறம்பும் திருவிளக்கு எரித்து வரும் திருத்தொண்டை வறுமைக் காலத்தும் விடாது நடத்தி வந்தும், ஒருநாள் முட்டுப்பட அது காரணமாகத் தம் கழுத்தை அரிந்து கொள்ளத் தொடங்கிய பொழுது இறைவன் தடுத்து அருள்செய்ததும் இப்பதியாகும். ‘‘பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல் ஆரும் துறக்கை அரிது அரிது” என்று தாயுமானாரால் பாடப்பெற்ற பட்டினத்துப் பிள்ளையார் பேறு பெற்றதும் இப் பதியிலேதான் இத்தலத்திற்கு ஞானசம்பந்தர் பதிகம் ஒன்று, திருநாவுக்கரசர் பதிகங்கள் ஐந்து, சுந்தரர் பதிகம் இரண்டு ஆக எட்டுப் பதிகங்கள் இருக்கின்றன.

## கல்வெட்டு

இவ்வூர்க்கோயிலில் சோழ மன்னர்களுள் மதுரைகொண்ட கோப்பரகேசரி வர்மன், உத்தமசோழதேவன், முதலாம் இராஜராஜ சோழன், முதலாம் இராஜேந்திர சோழன், முதலாம் இராஜாதிராஜ சோழன், முதற் குலோத்துங்க சோழன் முதலானோர் காலங்களிலும், சங்க பல்லவமன்னர்களில் விஜய அபராஜித போத்தரையர், கோவிஜய நிருபதுங்கவர்மர், கோவிஜயகம்பவர்மர் முதலானோர் காலங்களிலும் பாண்டியர்களில் ஜடாவர்மனாகிய திரிபுவனச் சக்கரவர்த்தி சுந்தரபாண்டிய தேவன் காலத்தும், இராஷ்டிரகூட மன்னர்களில் காஞ்சி, தஞ்சை இவைகளைக்கொண்ட கன்னர தேவர் காலத்தும், விசயநகர வேந்தர்களில் சாயண்ண உடையார், தேவராய மகாராஜா குமாரர் புக்கண்ண உடையார், வீரப்பிரதாப தேவராய மகாராயர் முதலானோர் காலங்களிலும், சம்புவராய மன்னர்களில் சகல புவன சக்கரவர்த்தி ராஜ நாராயண சம்புவராயர் காலத்திலும் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

இறைவரின் திருப்பெயர் இக்கோயில் கல்வெட்டுக்களில் இறைவர் மகாதேவபட்டாரர், திருவொற்றியூர் மகாதேவர், ஒற்றியூர் ஆழ்வார், திருவொற்றியூருடைய நாயனார், படம்பக்க நாயகதேவர் என்னும் பெயர்களால் கூறப்பெற்றுள்ளன.

இவற்றுள் படம்பக்க நாயக தேவர் என்னும் பெயர் திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜாதிராஜ தேவரின் ஒன்பதாம் ஆண்டுக் கல்வெட்டிலும், மகாதேவ பட்டாரர் என்னும் பெயர் தெள்ளாறெறிந்த நந்தி போத்தரையர் கல்வெட்டிலும் காணப்படுகின்றன.

## *திருவிழா*

*இத்திருக்கோயிலில் பங்குனி உத்திரத் திருவிழாவும், ஆனித் திருவிழாவும், மாசிமக விழாவும் மிகச்சிறப்பாக நடைபெற்று வந்தன. பங்குனி உத்திரத் திருவிழாவின் ஆறாம் நாளில் படம்பக்க நாயக தேவரைத் திருமகிழ மரத்தின் கீழ் திருவோலக்கஞ் செய்தருளுவித்து ஆளுடைய நம்பியின் புராணத்தைக் கேட்டருளச் செய்வது வழக்கம்.*

*ஆனித்திருவிழாவின் ஆறாம் நாளில் மூன்றாங் குலோத்துங்க சோழன் இக்கோயிலிலுள்ள இராஜராஜன் திருமண்டபத்தில் திருவோலக்கஞ் செய்தருளி விநோதம் கொண்டருளினான் என்று அம்மன்னனது 19-ஆம் ஆண்டுக் கல்வெட்டில் குறிப்பிடப் பெற்றுள்ளது. மாசி மகவிழாவின் பொருட்டு சிறுவப்பேடாகிய மும்முடிச் சோழநல்லூர்ப் புறவுவரித்திணைக் களத்துக் கணக்காளன் நிவந்தம் அளித்திருந்தான். இந்நிவந்தம் அளிக்கப்பெற்ற காலம் மூன்றாங் குலோத்துங்க சோழ தேவரின் முப்பத்தொன்றாவது ஆண்டாகும்.*

## திருவொற்றியூர் ஒருபா வொருபஃது

*மேற்சொன்ன சிறப்புகளை உடைய திருவொற்றியூரிற் கோயிற் கொண்டெழுந்தருளியுள்ள சிவபெருமானது பொருள்சேர் புகழை விரித்துரைக்கும் ஆசிரியப்பாவாகிய பத்துப் பாடல்களால் அந்தாதித் தொடைபெறவமைந்த பனுவலாதலின், இது திருவொற்றியூர் ஒருபாவொருபது என்னும் பெயர்த்தாயிற்று. இதன்கண் உள்ள பாடல்கள் பத்தும் ஒற்றியூரிறைவனை முன்னிலைப்படுத்துப் போற்றுமியல்பினவாய், உணர்தற்கரிய சைவசித்தாந்தவுண்மைகளைத் தெளிவாக விளக்குவனவாக உள்ளன.*

*உலகமே யுருவமாகத் திகழும் இறைவனது பெருந் திருவுருவின் இயல்பினை இப்பனுவலின் முதற்பாடலில் ஆசிரியர் பட்டினத்து அடிகள் இனிது புலப்படுத்தியுள்ளார். சிவபெருமான் சமயங் கடந்த தனிமுதற் பொருளாக விளங்கும் மாட்சியினை,*

*இடத்துறை மாதரோ டீருடம்பென்றும்*
*நடத்தினை நள்ளிருள் நவிற்றினை யென்றும்*
*புலியதள் என்பொடு புனைந்தோ யென்றும்*
*பலிதிரி வாழ்க்கை பயின்றோ யென்றும்*
*அருவமும் உருவமும் ஆனாயென்றும்*
*திருவமர் மாலொடு திசைமுக னென்றும்*
*உளனே யென்றும் இலனே யென்றும்*
*தளரா னென்றும் தளர்வோ னென்றும்*
*ஆதியென்றும் அசோகின னென்றும்*
*போதியிற் பொலிந்த புராண னென்றும்*
*இன்னவை முதலாத் தாமறி யளவையின்*
*மன்னிய நூலின் பன்மையுள் மயங்கிப்*
*பிணங்கு மாந்தர் பெற்றிமை நோக்கி*
*அணங்கிய அவ்வவர்க் கவ்வவையாகி அடையப்*
*பற்றிய பளிங்கு போலும்*
*ஒற்றி மாநக ருடையோய் உருவே*

*எனவரும் இரண்டாவது பாடலில் விரித்துக் கூறுவர்.*

*“திருவொற்றியூரில் எழுந்தருளிய பெருமானே, மாதொரு பாகனாகிய*

நின்னைத் திருமாலென்றும் பிரமனென்றும் அருகனென்றும் புத்ததென்றும் பல்வேறு பெயர்களாற் சமயவாதிகள் பலர் மாறுபடக் கூறினாலும் யாவர்க்கும் மேலாம் இறைவனாகிய நீ, அவ்வச் சமயத்தவர்களுக்கு அவரவர் நினைந்த திருமேனி கொண்டு தோன்றி அருள்புரிகின்றாய். பளிங்கு தன்கண் சார்ந்த பொருளின் தன்மையைப் புலப்படுத்தி அவற்றின் தன்மை தனக்கெய்தலின்றித் தனித்து விளங்குமாறு போன்று மேம்பட்டு விளங்குதல் நின்திருவுருவின் இயல்பென வுணர்ந்தோம்'' என்பது இப்பாடலின் பொருளாகும். இச்செய்யுள்

"மெய்த்தாறு சுவையுமேழிசையு மெண்குணங்களும் விரும்பு நால்வே
தத்தாலும் அறியவொண்ணா நடைதெளியப் பளிங்கே போல் அரிவைபாகம்
ஒத்தாறு சமயங்கட் கொருதலைவன்"

எனவரும் திருஞான சம்பந்தர் திருப்பாடற் பொருளை விரித்துரைத்தல் காண்க.

எல்லாப் பொருள்களிலும் நீக்க மறக்கலந்து விளங்கும் இறைவனுக்கு உலகமே யுருவமாதலின் அப்பேருருவினை விட்டு விலகி நிற்கும் பொருள்கள் உலகில் இல்லை. ஆதலால் உலகப் பொருள்கள் யாவும் இறைவன் திரு வுருவத்தில் அவயவங்களாகவே கொள்ளத் தக்கன. திரிபுர மெரித்தது, தக்கன் தலையரிந்தது, இந்திரனைத் தோள் நெரித்தது, பிரமன் தலைகளிலொன்றைக் கிள்ளியது, மன்மதனை யெரித்தது, இராவணனை விரலால் அடர்த்தது, கூற்றுவனை யுதைத்தது முதலாக இறைவன் செய்த வீரச் செயல்களெனப் போற்றப் பெற்றுவரும் இச் செயல்களெல்லாம், இறைவன் உலகத்தை இயக்குங்கால் அவனருளினை யெதிரேற்றுக் கொள்ளாதார் செய்த வினைவயத்தால் நிகழ்ந்த நிகழ்ச்சிகளெனக் கொள்வதல்லது, இறைவன் தனக்குப் புகழுண்டாக விரும்பிச் செய்த வீரச்செயல்களென மெய்யுணர்வுடையோர் கொள்ள மாட்டார்கள். இவ்வுண்மையினை,

உருவாம் உலகுக் கொருவனாகிய
பெரியோய் வடிவிற் பிறிதிங் கின்மையின்
எப்பொரு ளாயினும் இங்குள தாமெனின்
அப்பொருள் உனக்கே அவயவ மாதலின்
முன்னிய மூவெயில் முழங்கெரி யூட்டித்

*தொன்னீர் வையகந் துயர்கெடச் சூழ்ந்ததும்*
*வேள்வி மூர்த்தி தன் தலையினை விடுத்ததும்*
*நீள்விசும் பாளிதன் தோளினை நெரித்ததும்*
*ஓங்கிய மறையோற் கொருமுகம் ஒழித்ததும்*
*பூங்கணை வேளைப் பொடிபட விழித்ததும்*
*திறல்கெட அரக்கனைத் திருவிர லுறுத்ததும்*
*குறைபடக் கூற்றினைக் குறிப்பினில் அடர்த்ததும்*
*என்றிவை முதலா ஆள்வினை யெல்லாம்*
*நின்றுழிச் செறிந்த நின்செய லாதலின்*
*உலவாத் தொல்புக ழொற்றியூர*
*பகர்வோர் நினக்கு வேறின்மை கண்டவர்*
*நிகழ்ச்சியின் நிகழி னல்லது*
*புகழ்ச்சியிற் படுப்பரோ பொருளுணர்ந்தோரே*

*என்ற பாடலில் அடிகள் தெளிவாக விளக்கிய திறம் அறிந்து மகிழத்தக்கதாகும்.*

*தற்போதத்தால் மெய்ப் பொருளையுணர முற்பட்டு உயர்ந்த நான்முகன் முதலாக அறியாமையாகிய இருளொடு ஒற்றித்து நின்று யாக்கையுட்பட்டு வாழும் எல்லாயுயிர்களும் உருவம், உணர்வு, பெருமை, ஆற்றல், வன்மை, செய்யும் தொழில்வகை ஆகியவற்றால் வேறு பட்டனவாகி வினைத் தொடர்பினின்றும் நீங்காது ஒன்றையொன்றொவ்வாதனவாய்க் கூடி நிற்பது இவ்வுலகத் தொகுதி இதன்கண் வாழும் உயிர்களின் ஒழுகலாறுகள், நிலைபெற்ற பெருங்கடலுள் உயர்ந்து தோன்றும் அலைகளைப் போன்று இறைவனாகிய முழுமுதற் பொருளை ஆதாரமாகக் கொண்டு தோன்றி, அப்பொருளினது வியாபகத்தினிடையே வளர்ந்து விரிந்தும் ஒடுங்கியும் இடம் பெயர்ந்தும் கலந்தும் ஒன்றிலும் தோய்வின்றி விளங்கும் அம்முதல்வனது இயல்பினை விளக்கி நிற்பன. இங்ஙனம் இறைவனது வியாபகத்துள்ளே இவ்வுலகந் தோன்றி நின்றொடுங்கித் தொழிற்படும் இயல்பினை இறைவனது திருவருள் ஞானம் பெற்ற பெரியோர்கள் அறிவதல்லது திருவருள் பெறாத ஏனையோர் அறிதலியலாது. இவ்வுண்மையினை,*

*பொருளுணர்ந் தோங்கிய பூமகன் முதலா*
*இருள்துணை யாக்கையில் இயங்கு மன்னுயிர்*
*உருவினும் உணர்வினும் உயர்வினும் பணியினும்*

*திருவினும் திறலினும் செய்தொழில் வகையினும்*
*வெவ்வேறாகி வினையொடும் பிரியா*
*தொவ்வாப் பன்மையுள் மற்றவர் ஒழுக்கம்*
*மன்னிய வேலையுள் வான்திரை போல*
*நின்னிடை யெழுந்து நின்னிடை யாகியும்*
*பெருகியுஞ் சுருங்கியும் பெயர்ந்துந் தோன்றியும்*
*விரவியும் வேறாய் நின்றனை விளக்கும்*
*ஓவாத் தொல்புகழ் ஒற்றியூர*
*மூவா மேனி முதல்வ நின்னருள்*
*பெற்றவர் அறியினல்லது*
*மற்றவர் அறிவரோ நின்னிடை மயக்கே.*

*எனவரும் பாடலில் அடிகள் தெளிவாக விளக்கியுள்ளார். மாற்றம் மனங்கடந்து விளங்கும் இறைவனதியல்பினை உள்ளவாறுணர வல்லார்க்குப் பிறவிப் பிணி அறுதல் உறுதியென்பதனை ஐந்தாம் பாடலில் அறிவுறுத்தியுள்ளார்.*

*சிவபெருமானது திருக்கோலத்தில் அமைந்துள்ள பொருள் நுட்பத்தை,*

*தூமதி சடைமிசைச் சூடுதல் தூநெறி*
*ஆமதியானென அமைத்தவாறே*
*அறனுரு வாகிய ஆனே றேறுதல்*
*இறைவன் யானென இயற்றுமாறே*
*அதுஅவள் அவனென நின்றமை யார்க்கும்*
*பொதுநிலை யானென உணர்த்திய பொருளே*
*முக்கணன் என்பது முத்தீ வேள்வியில்*
*தொக்க தென்னிடை யென்பதோர் சுருக்கே*
*வேத மான்மறி யேந்துதல் மற்றதன்*
*நாதன் நானென நவிற்று மாறே*
*மூவிலை யொருதாட் சூல மேந்துதல்*
*மூவரும் யானென மொழிந்த வாறே*
*எண்வகை மூர்த்தி யென்பதிவ் வுலகினில்*
*உண்மை யானென உணர்த்திய வாறே.*

*என ஆறாம் பாடலின் அடிகளில் தெளிவாக உணர்த்துகின்றார்.*

*இறைவனாகிய நின்னியல்பு சொல்லினெல்லைக்கு அப்பாற்பட்டு விளங்குவதாதலின் அதனை யறிந்துரைப்பார் ஒருவருமிலர் என ஏழாம் பாடலிலும், 'உடலாகிய கடலிற்பட்டுத் தடுமாறும் அடியேனை நினது திருவடிப் புணையைத் தந்து உய்வித்தருள்க' என எட்டாம் பாடலிலும் குழந்தை அழும் அழுகை யொலியைக் கேளாத தூரத்தே தாய் சென்றாளாயினும் பிள்ளையின் பசிநேரத்தை யெண்ணி அவள் தானே விரைந்து வந்து பசி வருத்தத்தைத் தீர்த்தல் போன்று பல பிறவிகளிலும் உழன்று மயங்கிச் செய்வதறியாது திகைக்கும் எளியேற்கு இறைவனாகிய நீயே யெளிவந்து எனது பாசப்பிணிப்பினை நீக்கி யருள்புரிவாயாக' என ஒன்பதாம் பாடலிலும் அடிகள் இறைவனை வேண்டும் முறை படிப்போருள்ளத்தை யுருக்குவதாகும். இறைவனது மெய்ப்புகழைப் போற்றிப் பரவுவதாக அமைந்தது இப்பனுவலின் பத்தாம் பாடலாகும். இது திருவாசகத்திலுள்ள போற்றித் திருவகவலை யொத்து அமைந்துளது. திருவாசக முதலிய முன்னைத் திருமுறைகளில் திருவெண்காட்டடிகள் கொண்டுள்ள பேரார்வம் அவர் பாடிய செழும் பாடல்களால் நன்கு புலனாதல் காணலாம்.*

## பட்டினத்து அடிகள்

*அருளிச்செய்த*

## 30. திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது

*அகவற்பா*

*திருச்சிற்றம்பலம்*

992. இருநில மடந்தை இயல்பினின் உடுத்த
பொருகடல் மேகலை முகமெனப் பொலிந்த
ஒற்றி மாநகர் உடையோய்! உருவின்
பெற்றியொன் றாகப் பெற்றோர் யாரே?
மின்னின் பிறக்கம் துன்னும்நின் சடையே

மன்னிய அண்டம்நின் சென்னியின் வடிவே
பாவகன் பரிதி பனிமதி தன்னொடும்
மூவகைச் சுடரும்நின் நுதல்நேர் நாட்டம்
தண்ணொளி ஆரம் தாரா கணமே
விண்ணவர் முதலா வேறோர் இடமாக்

கொண்டுறை விசும்பே கோலநின் ஆகம்
எண்திசை திண்தோள் இருங்கடல் உடையே
அணியுடை அல்குல் அவனிமண் டலமே
மணிமுடிப் பாந்தள்நின் தாளிணை வழக்கே
ஒழியா தோடிய மாருதம் உயிர்ப்பே

வழுவா ஓசை முழுதும்நின் வாய்மொழி
வானவர் முதலா மன்னுயிர் பரந்த
ஊனமில் ஞானத் தொகுதிநின் உணர்வே
நெருங்கிய உலகு நீர்மையின் நிற்றலும்
சுருங்கலும் விரிதலும் தோற்றல்நின் தொழிலே

அமைத்தலும் அழித்தலும் ஆங்கதன் முயற்சியும்
இமைத்தலும் விழித்தலும் ஆகும்நின் இயல்பே
என்றிவை முதலாம் இயல்புடை வடிவினோ
டொன்றிய துப்புரு இருவகை ஆகி
முத்திறக் குணத்து நால்வகைப் பிறவி

அத்திறத் தைம்பொறி அறுவகைச் சமயமோ
டேழுல காகி எண்வகை மூர்த்தியோ
டூழிதோ றூழி எண்ணிறந் தோங்கி

எவ்வகை அளவினில் கூடிநின்று
அவ்வகைப் பொருளும்நீ ஆகிய இடத்தே. 1

---

*992. குறிப்புரை :* *அகவல் ஆகிய ஒருவகைப்பாவே அந்தாதியாய் வரப் பத்துப் பாடல்களால் செய்யப்படுவது 'ஒருபா ஒருபது' என்னும் பிரபந்தமாகும்.*

*குறிப்புரை :* *நிலமகள் இயல்பாக உடுத்திய அலைகளைக் கொண்ட கடல் மேகலையாக உள்ளது. இருநிலம் - பெரிய நிலம். 'பொரு கடலாகிய மேகலையை இயல்பினின் உடுத்த இருநில மடந்தை முகம் எனப் பொலிந்த ஒற்றி மாநகர்' என இயைக்க. "உருவின் பெற்றி ஒன்றாகப் பெற்றோர் யாரே" என்பதனை இறுதியிற் கொள்க. துன்னும் - நெருங்கிய. 'நின் சடை மின்னின் பிறக்கம்; நின் சென்னியின் வடிவு அண்டம். நின் நுதல் நேர் நாட்டம் மூவகைச் சுடரும்; ஆரம் தாராகணம்; நின் நுதல் நேர் நாட்டம் மூவகைச் சுடரும்; ஆரம் தாராகணம்; தாள் இணை வழக்குப் பாந்தள்; உயிர்ப்பு மாருதமே; நின் வாய்மொழி ஓசை முழுதும்; நின் உணர்வு ஞானத் தொகுதியே; நின் தெழிவின் விளைவுகள் உலகு நிற்றலும் சுருங்குதலும், விரிதலுமே, நின் இயல்பு அவற்றின் முயற்சியே. அதுவும் இமைத்தலும் விழித்தலுமே; என்று இவை முதலாம் இயல்புடை வடிவினோடு உரு இருவகை ஆகி, எண்வகை மூர்த்தியோடு முத்திறக் குணம் முதலிய ஆகி, எண் இறந்து ஓங்கி, எவ்வகை அளவினும் கூடி நின்று அவ்வகைப் பொருளும் நீ ஆகிய இடத்து (நின்) உருவம் ஒன்றாகப் பெற்றார் யாரே' என இயைத்து முடிக்க. சடை ஒரு வகையது, சென்னி ஒரு வகையது, கண்கள் ஒரு வகையன, மற்றும் பலவும் பலப்பல வகையன. முழுமையாகப் பார்க்கும் பொழுதும் ஒரு கூறு ஆண், ஒரு கூறு பெண் என்றால் உனது திருமேனியை உலகில் உள்ள எந்த இனத்து உடம்பிலும் வைத்து ஒருதலையாக உணர்ந்தோர் ஒருவரும் இலர் என்பதாம். இவற்றிடையே, 'இயல்புகளும் உலகில் உள்ள ஒத்த உயிர் இனத்தின் இயல்பாகவும் இல்லை' என்பது கூறப்பட்டது. இதனால், 'இறைவன் சேதனம், அசேதனம் என்னும் இரு கூற்றுப் பிரபஞ்சத்துள் ஒன்றும் அல்லன்' என்பது அவனது தடத்த இயல்பானே உணரப்படுதல் கூறப்பட்டது.*

*பிறக்கம் - விளக்கம். பாலகன் - அக்கினி. நுதல் நேர் - முகத்தில் பொருந்திய. நுதல், ஆகுபெயர். தண் ஒளி - வெள் ஒளி. வெள் ஒளி ஆரம், தலை மாலை. "விண்ணவர் முதலா" என்பதில் "முதலா" என்பது முனிவர், பிரமன், விட்டுணு ஆகியோரைக் குறித்தது. வேறு, மக்கள் உலகின் வேறு. கோலம் - அழகு. ஆகம் - உடம்பு. இருங்கடல் - கரிய கடல். அல்குல் - பின்பக்கம், இடுப்பின் பூட்டு, குண்டி. இதுபோலும் உயர்ந்தோர்*

**993.** இடத்துறை மாதரோ(டு) ஈருடம் பென்றும்
நடத்தினை நள்ளிருள் நவிற்றினை என்றும்
புலியதள் என்பொடு புனைந்தோய் என்றும்
பலிதிரி வாழ்க்கை பயின்றோய் என்றும்
அருவமும் உருவமும் ஆனாய் என்றும்

திருவமர் மாலொடு திசைமுகன் என்றும்
உளனே என்றும் இலனே என்றும்
தளரான் என்றும் தளர்வோன் என்றும்
ஆதி என்றும் அசோகினன் என்றும்
போதியிற் பொலிந்த புராணன் என்றும்

---

*செய்யுட்கள் பலவற்றிலும் 'அல்குல்' என்பது ஆடவர்க்கும் உரிய உறுப்பாதல் வெளிப்படையாகவே சொல்லப்படவும் அதற்கு இக்காலத்துச் சிலர் இடக்கர்ப் பொருள் கொண்டு பழித்துரை கூறுதல் இரங்கற்குரியது. அவனி மண்டலம் - பூ மண்டலம்; நிலத்தது அகலம். பாந்தள் - ஆதிசேடன். வழக்கு - இயக்கம். மாருதம் - காற்று. உயிர்ப்பு - மூச்சு. இறைவனது உணர்வு உள்நின்று உணர்த்தவே உயிர்களின் உணர்வு எதனையும் உணர்தல் பற்றி 'அவனது உணர்வு உயிர்களின் உணர்வுத் தொகுதியே' என்றார். 'முயற்சியே, முயற்சியும்' என 'முயற்சி' என்பதை இரட்டித்துக் கொள்க. "அதன்" என்பதைத் தனித் தனிக் கூட்டுக. அமைத்தல் - ஆக்குதல். தொழில் - தொழிலின் விளைவு; ஆகுபெயர். "இமைத்தல்" என்பது கண்ணை மூடுதலைக் குறித்தது. 'கண்ணை மூடிக் கொள்ளுதல்' என்பது ஒன்றையும் நினையாமையையும், 'விழித்தல்' என்பது நினைவு எழுதலையும் இலக்கண வழக்காற் குறித்தன. 'இறைவன் நினைவை ஒடுக்கலால் உலகம் ஒடுங்குதலும், நினைவு கொள்ளுதலால் உலகம் தோன்றுதலும் உளவாகும்' என்றபடி. இமைத்தல் விழித்தல்களை அமைத்தல் அழித்தல்களோடு எதிர்நிரல் நிறையாக இயைக்க. "என்று", எண்ணிடைச் சொல். துப்பு உரு - தூயதாகிய திருமேனி. எண்வகை மூர்த்தி - அட்ட மூர்த்தம். "எண் இறந்த" என்பதை "எண் இறப்ப" எனத் திரிக்க. எவ்வகை அளவு - சிறுமை பெருமைகள். கூடி நிற்றல் - மிகுந்து நிற்றல். அவையாவன சிறியவற்றிற்கெல்லாம் சிறியர் ஆதலும், பெரியவற்றிற்கெல்லாம் பெரியர் ஆதலும். "இடத்து" என்பது வினையெச்ச விகுதி. 'நீ இவ்வாறானவிடத்து, நின் உருவின் பெற்றி ஒன்றாகப் பெற்றார் யார்' என மேலே கூட்டி முடிக்க.*

***993. குறிப்புரை :*** *'ஒற்றி மாநகர் உடையோய்! (நின்) உரு, பன்னிய நூலின் பான்மையுள் தாம் அறி அளவையில் மயங்கி என்றும், என்றும்.... பிணங்கும் மாந்தர் பெற்றிமை நோக்கி அவ்வவர்க்கு அவ்வவையாகிப் பற்றிய அடையின் பளிங்கு போலும்' என இயைத்து முடிக்க. முதல் நான்கு அடிகளில்*

இன்னவை முதலாத் தாமறி அளவையின்
மன்னிய நூலின் பன்மையுள் மயங்கிப்
பிணங்கும் மாந்தர் பெற்றிமை நோக்கி
அணங்கிய அவ்வவர்க் கவ்வவை ஆகிப்
பற்றிய அடையின் பளிங்கு போலும்
ஒற்றி மாநகர் உடையோய் உருவே. 2

---

கூறப்பட்டன சைவ புராணங்களையே பற்றி மகேசுர மூர்த்தங்களுள் ஒவ்வொன்றையே சிவனது உண்மையியல்பாகக் கூறிப் பிணங்கும் பௌராணிகரும், அகப்புறச் சமயிகளும், 'அருவம் ஆனாய்' என்றும், 'உருவம் ஆனாய்' என்றும் எனக் கொண்டு கூட்டிக் கொள்க. 'இறைவன் உருவம் உடையனாயின் உயிர் வருக்கத்தவனாவன் ஆதலின் இறைவனுக்கு எவ்வாற்றானும் உருவமில்லை; அவன் அருவனே என்பார் மேற்கூறிய இருமதத்தவருள் ஒவ்வொரு சாரார். இனி, 'இறைவன் உருவன் ஆகாவிடில் உயிர்களுக்குக் காட்சி வழங்குமாறில்லை. அதனால் இறைவனுக்கு உருவமும், அவனுக்கென இடமும் உள்ளன' என்பாரும் மேற்கூறிய இரு மதத்தவருள் ஒரொரு சாரார். 'திருமாலே இறைவன்' என்பார் பாஞ்சராத்திரிகள். 'திசைமுகனே இறைவன்' என்பார் இரணிய கருப்ப மதத்தினர். 'இறைவன் உளன்; ஆயினும் அவனை இன்னன் - எனக்கூற இயலாது' என்பார் காயாவாதிகள். 'இறைவன் இல்லை' என்பார் உலகாயதரும், மீமாஞ்சரும், நிரீச்சுர சாங்கியரும். தளர்தல் நெகிழ்தல், அருளுதல், தளராமை இரங்காது ஒறுத்தலே செய்தல் தளர்தல் ஒறுத்தல் இன்றி அருளலே செய்தல். எட்டாம் அடியிற் கூறிய இரண்டும் சமணர் கூற்றுக்கள். ஆதி - ஆதி முத்தன். அசோகினன் - அசோக மரத்தின்கீழ் இருப்பவன். போதி - அரச மரம். புராணன் - பழையோன். 'போதி நிழலில் இருப்போன் இறைவன்' என்பார் புத்த மதத்தினர். நூல் - வேறுபட்ட சமய நூல்கள். இவைகளையே உணர்ந்து வேத சிவாகமங்களை உணராதாரும், உணரினும் தெளியாதாரும் ஆசிரியராய் மெய்யுணர்வு கொளுத்தப் புகுதலால் இவை போலும் பிணக்குகள் உளவாகின்றன. அதனையே திருமூல நாயனார்,

குருடுங் குருடுங் குருட்டாட்ட மாடிக்
குருடுங் குருடுங் குழிவிழு மாறே[1]

என்று அருளிச்செய்தார். "செய்பவர் செய்திப் பயன் விளைக்கும் செய்யேபோல்"[2] அவரவரது அறிவு செயல்களுக்குத் தக இறைவன் பயன் அளிப்பவனேயல்லது, எவரது செயலையும் வீணாக்குபவன் அல்லன்

---

1. திருமந்திரம் - 1680
2. சிவஞானபோதம் - சூ.2 அதி.2

994. உருவாம் உலகுக் கொருவன் ஆகிய
பெரியோய் வடிவிற் பிறிதிங் கின்மையின்
எப்பொரு ளாயினும் இங்குள தாமெனின்
அப்பொருள் உனக்கே அவயவம் ஆதலின்
முன்னிய மூவெயில் முழங்கெரி ஊட்டித்

தொன்னீர் வையகம் துயர்கெடச் சூழ்ந்ததும்
வேள்வி மூர்த்திதன் தலையினை விடுத்ததும்
நீள்விசும் பாளிதன் தோளினை நெரித்ததும்
ஓங்கிய மறையோற் கொருமுகம் ஒழித்ததும்
பூங்கணை வேளைப் பொடிபட விழித்ததும்

திறல்கெட அரக்கனைத் திருவிரல் உறுத்ததும்
குறைபடக் கூற்றினைக் குறிப்பினில் அடர்த்ததும்
என்றிவை முதலா ஆள்வினை எல்லாம்
நின்றுழிச் செறிந்தவை நின்செய லாதலின்
உலவாத் தொல்புகழ் ஒற்றி யூர.

பகர்வோர் நினைக்குவே றின்மை கண்டவர்
நிகழ்ச்சியின் நிகழ்த்தின் அல்லது
புகழ்ச்சியிற் படுப்பரோ பொருளுணர்ந் தோரே. 3

---

*ஆதலின் அவரவர் கருதுமாறே நின்று அவரவர்க்குப் பயன் தருவன் என்பது பற்றி "அவ்வவர்க்கு அவ்வவை யாகி" என்றார். அணங்கிய - துன்புற்ற. அடை - அடையப்பட்ட பொருள். பளிங்கு தன்னால் அடையப்பட்ட பொருளின் தன்மையாய் நிற்றல்போல, 'இறைவன் தான் தனது அருள் காரணமாகத் துணையாய் அடையப்பட்டாரது கருத்திற்கேற்ற இயல்பினை உடையனாவன்' என்பதாம்.*

*பொன்மை நீலாதி வன்னம்*
*பொருந்திடப் பளிங்கு அவற்றின்*
*தன்மையாய் நிற்கு மாபோல்*

*என்றார் சிவஞான சித்தியிலும்.* இடத்து - இடப்பாகத்தில் உரு, இங்கு 'இயல்பு' என்னும் பொருட்டு.*

***994. குறிப்புரை :*** *சிவபெருமான் செய்த வீரச் செயல்களாகப் புராணங்களில் சொல்லப்படுவன பல. அவை திரிபுரம் எரித்தது, தக்கன் வேள்வியில் எச்சனது தலையைத் தடிந்தது, இந்திரன் தோளை ஒரு காலத்தில்*

---

**சூ. 2.68.*

**995.** பொருளுணர்ந் தோங்கிய பூமகன் முதலா
இருள்துணை யாக்கையில் இயங்கு மன்னுயிர்
உருவினும் உணர்வினும் உயர்வினும் பணியினும்
திருவினும் திறலினுஞ் செய்தொழில் வகையினும்
வெவ்வே றாகி வினையொடும் பிரியாது

ஒவ்வாப் பான்மையுள் மற்றவர் ஒழுக்கம்
மன்னிய வேலையுள் வான்திரை போல
நின்னிடை எழுந்து நின்னிடை ஆகியும்
பெருகியும் சுருங்கியும் பெயர்ந்தும் தோன்றியும்
விரவியும் வேறாய் நின்றனை விளக்கும்

ஓவாத் தொல்புகழ் ஒற்றி யூர
மூவா மேனி முதல்வ நின்னருள்
பெற்றவர் அறியின் அல்லது
மற்றவர் அறிவரோ நின்னிடை மயக்கே. 4

---

*முறித்தது, பிரமன் தலைகளுள் ஒன்றைக் கிள்ளியது, காமனை எரித்தது, இராவணனை மலைக்கீழ் அகப்படுத்தி நெரித்தது. யமனை உதைத்தது முதலியன. சிவபெருமானது வியாபகத்துள் அடங்காதது எப்பொருளும் இல்லை. அஃதே எல்லாப் பொருளையும் அவன் தனக்கு வடிவாக உடைமையின் எப் பொருளும் அவனது உறுப்பே. ஆகவே, பொது மக்களேயன்றி, 'எப் பொருளும் இறைவன் வடிவே' என உணர்ந்தோரும் மேற்கூறிய செயல்களைச் சிறப்பாக எடுத்துக் கூறுவார்களாயின் அது நீ ஓரோர் காலத்து நிகழ்த்திய நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறுவதாகுமேயன்றி, உன்னைப் புகழ்ந்ததாகுமோ? (ஆகாது. ஏனெனில், ஒருவன் தனது உறுப்புக்களைத் தான் பலவகையில் இயக்குதல் அவனுக்குப் புகழாகுமோ? ஆகாமை போல என்பதாம்).*

*உருவாம் உலகு - பருப்பொருளாய் உள்ள உலகு. ஒருவன் - ஒப்பற்ற தலைவன். "வடிவு" என்றது வியாபகத்தை. சூழ்தல் - எண்ணுதல். வேள்வி மூர்த்தி - எச்சன்; யாக தேவன். விசும்பு ஆளி - இந்திரன். மறையோன் - பிரமன். ஆள்வினை - வீரம். "கண்டவர்" என்பதன் பின் 'ஆயின்' என ஒரு சொல் வருவிக்க. படுப்பரோ - படுத்து உணர்வரோ. "உலவாத் தொல் புகழ் ஒற்றியூர்" என்பதை முதலிற் கொள்க.*

***995. குறிப்புரை :*** *"ஓவாத் தொல் புகழ்.... முதல்வ" என்பதை முதலிற் கொள்க. பொருள் - வேதப் பொருள். பூ மகன் - மாயோனது உந்திக் கமலத்தில் தோன்றிய பிரமன். முதல் தொழிலாகிய படைத்தலைச் செய்தல்*

**996.** மயக்கமில் சொல்நீ ஆயினும் மற்றவை
துயக்க நின்திறம் அறியாச் சூழலும்

---

*பற்றிப் பிரமனையே முதல்வனாகக் கூறினார். எனினும் அவனுக்கு மேலும் உயிர் இனத்தவர் உளர் என்க. இருள் - அறியாமை. துணை - அவ் இருளைச் சிறிதே போக்கி உதவுவது. எனவே, அத்தகைய யாக்கையின்றி உயிர்கள் இயங்கா என்பார், "இருள்துணை யாக்கையின் இயங்கும் மன்னுயிர்" - என்றார். 'மன்னுயிர் வினையொடு பிரியாது' என இயையும். வினை காரணமாக அவையடையும் மாற்றங்கள் உருவொடு உணர்வும், உயர்வொடு தாழ்வும், திருவொடு தெளிவுமாம். உரு - உடம்பு. இது பருப்பொருள். உடம்பினின்றும் தோன்றும் உணர்வுகள் நுட்பப்பொருள். பணி - தாழ்வு. திரு - செல்வம். திறல் - வெற்றி. இன் உருபுகள் ஏதுப் பொருளவாய், "வெவ்வேறாகி" என்பதனோடு முடிந்தன. "பிரியாது" என்னும் எதிர்மறை வினையெச்சம், 'நின்று' என்னும் பொருட்டாய், "வினை யொடும்" என்பதற்கு முடிபாயிற்று. அவ் எச்சம், "ஒழுக்கம்" என்னும் தொழிற் பெயர் கொண்டது. உண்மை சிறப்பு. ஒவ்வா - ஒன்றுக்கொன்று மாறுபட்ட. "பான்மையுள்" என்பதில் உள்ள "உள்" என்பதை இன்னாகத் திரிக்க. 'நின்னிடையாகியும்' என உம்மை கொடுத்து ஓதுதல் பாடம் அன்று. பெயர்தல் - மறைதல். "பெருகி" முதலிய நான்கு வினையெச்சங்களும் "விரவி" என்பதனோடே முடிந்தன. "விரவியும்" என்னும் உம்மை சிறப்பு. 'விளக்கம் வேறாய் நின்றனை' என மாற்றிக் கொள்க. "நின்னிடையதாகிய இம்மயக்கினை நின் அருள் பெற்றவர் அறியினல்லது, மற்றவர் அறிவரோ" என முடிக்க. மயக்காவது., உண்மை மாத்திரையால் பொதுப்படத் தோன்றி, 'இன்னது' எனச் சிறப்புற விளங்காமை. மயக்கு உடையதனை "மயக்கு" என்றது உபசாரம். <u>'ஒற்றியூர்ப் பெருமானே! பலவாகிய உயிர்கள் தம் வினை காரணமாக அடையும் அளவிறந்த மாற்றங்கள் பலவற்றிற்கும் நீயே இடமாய் நின்றும் அவற்றுள் ஒரு மாற்றத்தினையும் நீ சிறிதும் எய்தாது, மாற்றம் இல் செம் பொருளாயே நிற்கின்றாய்; இஃது எவ்வாறு' என்னும் அரும் பொருளை உனது அருளைப் பெற்றோர் உணர்வதன்றி, மற்றவர் உணர வல்லுநரல்லர்' என்பது இப்பாட்டின் திரண்ட பொருள்.</u> இஃது எல்லாப் பொருட்கும் இடமாய் நிற்பது ஆகாயமேயாயினும், அப் பொருள்களின் மாற்றங்களுள் ஒன்றையேனும் அவ் ஆகாயம் எய்தாதது போல்வது. இதனையே, 'கலப்பினால் எல்லாமாய் நிற்கின்ற இறைவன், பொருள் தன்மையால் அவற்றின் வேறாகியும் நிற்கின்றான்' எனச் சித்தாந்த நூல்கள் கூறுகின்றன.*

***996. குறிப்புரை :*** *'ஒற்றி யூர! செஞ்சடை மாதவம் துன்னிய தூமதியோய்!' 'சொற்கள் யாவும் நீ' என்பது உண்மையாய் இருக்கவும் அவை உனது*

உறைவிடம் உள்ளம் ஆயினும் மற்றது
கறைபட ஆங்கே கரந்த கள்ளமும்
செய்வினை உலகிற் செய்வோய் எனினும்

அவ்வினைப் பயன்நீ அணுகா அணிமையும்
இனத்திடை இன்பம் வேண்டிநின் பணிவோர்
மனத்திடை வாரி ஆகிய வனப்பும்
அன்பின் அடைந்தவர்க் கணிமையும் அல்லவர்ச்
சேய்மையும் நாள்தொறும்

என்பினை உருக்கும் இயற்கைய ஆதலின்
கண்டவர் தமக்கே ஊனுடல் அழிதல்
உண்டென உணர்ந்தனம் ஒற்றி யூர
மன்னிய பெரும்புகழ் மாதவம்
துன்னிய செஞ்சடைத் தூமதி யோயே. 5

---

*இயல்பை அறிய இயலாத நிலைமையை நீ. உயிர்களின் உள்ளங்கள் யாவும் உனது உறைவிடங்களேயாதல் உண்மையாய் இருக்கவும், அவ்வுள்ளங்கள் அறியாதவாறு கரந்து நிற்கும் கள்வன் ஆகின்றனை நீ. உலகில் நிகழும் தொழில்களையெல்லாம் செய்பவன் நீயேயாதல் உண்மையாய் இருக்கவும், அத் தொழில்களால் விளையும் பயன்களுள் ஒன்றும் உன்னைப் பற்றாதவாறே அவற்றிற்குப் பற்றாகின்றனை. நீ அடியார் கூட்டத்துள் நின்று உனது இன்பத்தினை விரும்பி உன்னை வணங்குகின்றவர்களது உள்ளங்களில் அந்த இன்பமாகவே விளைகின்றவன் நீ. உயிர்கள் யாவும் இனத்தால் ஒன்றாயிருந்த போதிலும் உன்னை அடைந்தவர்க்கு அண்மையனாயும், அடையாதவர்க்குச் சேய்மையனாயும் இருக்கின்றவன் நீ. இத் தன்மைகளை எண்ணிப் பார்க்கின் இவை அங்ஙனம் எண்ணிப் பார்ப்பவரது எலும்பையும் உருக்கும். ஆகவே, இத் தன்மைகளை உணர்ந்தவர்கட்கே ஊன் உடம்பு அற்றொழியும் நிலைமை, (பிறவா நிலைமை) உண்டாகும் என யாம் உணர்ந்தேம்' என்பது இப்பாட்டின் பொருள். மற்று இரண்டும் அசைகள். துயக்கம் - கலக்கம். சூழல் - சூழ்நிலை. கறைபட - குற்றம் உண்டாக. இனம் - அடியார் கூட்டம். வாரி - வெள்ளம்; அல்லது கடல். வனப்பு, இங்கே சிறப்பு. அணிமையனை "அணிமை" என்றும், சேய்மையனை "சேய்மை" என்றும் கூறியன உபசார வழக்கு. காண்டல் - உணர்தல். ''மன்னிய பெரும் புகழ்'' என்பது மதியணிந்தவனாகிய இறைவனைச் சிறப்பித்தது. சந்திரன் இறைவன் திருமுடிமேல் இருக்கப் பெற்றது தவத்தினால் ஆகலின் ''மாதவம் துன்னிய தூமதி" என்றார். 'செஞ்சடைக்கண் மாதவம் துன்னிய தூமதியோய்' என்க.*

997. தூமதி சடைமிசைச் சூடுதல் தூநெறி
ஆமதி யானென அமைத்த வாறே
அறனுரு வாகிய ஆனே றேறுதல்
இறைவன் யானென இயற்று மாறே
அதுஅவள் அவனென நின்றமை யார்க்கும்

பொதுநிலை யானென உணர்த்திய பொருளே
முக்கணன் என்பது முத்தீ வேள்வியில்
தொக்க தென்னிடை என்பதோர் சுருக்கே
வேத மான்மறி ஏந்துதல் மற்றதன்
நாதன் நானென நவிற்று மாறே.

மூவிலை ஒருதாள் சூலம் ஏந்துதல்
மூவரும் யானென மொழிந்த வாறே
எண்வகை மூர்த்தி என்பதிவ் வுலகினில்
உண்மை யானென உணர்த்திய வாறே
நிலம்நீர் தீவளி உயர்வான் என்றும்

உலவாத் தொல்புகழ் உடையோய் என்றும்
பொருநற் பூதப் படையோய் என்றும்
தெருளநின் றுலகினில் தெருட்டு மாறே
ஈங்கிவை முதலா வண்ணமும் வடிவும்
ஓங்குநின் பெருமை உணர்த்தவும் உணராத்

தற்கொலி மாந்தர் தம்மிடைப் பிறந்த
சொற்பொருள் வன்மையின் சுழலும் மாந்தர்க்(கு)
ஆதி ஆகிய அறுதொழி லாளர்
ஓதல் ஓவா ஒற்றி யூர
சிறுவர்தம் செய்கையிற் படுத்து
முறுவலித் திருத்திநீ முகம்படு மளவே. 6

---

*997. **குறிப்புரை :** முதற்கண் 'நீ' என்னும் தோன்றா யெழுவாய் வருவித்துக் கொள்க.*

*நீ சடைமிசைத் தூமதி சூடுதல், 'யான் தூநெறியை உணரும் அறிவு வடிவானவன்' என்பதைக் குறிக்கும் குறிப்பாம்.*

*நீ அறக்கடவுளாகிய ஆன் ஏறு (இடபம்) ஊர்தல், 'அறத்தின்வழி உலகை நடாத்தும் முதல்வன் யான்' என அறிவிக்கும் குறிப்பாம்.*

*(தனி ஒரு பொருளேயாகிய நீதானே) ஒருகால் 'சிவம்' என அஃறிணை யாயும், ஒருகால் 'சிவன்' என உயர்திணை ஆடூவாயும் ஒருகால், 'சிவை' என உயர்திணை மகடூவாயும் சொல்ல நிற்றல், 'உலகப் பொருள் அனைத்திலும் ஒருபடித்தாக நிறைந்து நின்று அவற்றை அவ்வவ் வழியில் இயக்குபவன் யான்' என்பதை அறிவிப்பதாம். மதி, கதிர், தீ (சோம சூரியாக்கினி) மூன்றையும் மூன்று கண்களாகக் கொண்டது 'அந்தணர்கள் வேட்கும் முத்தீயும் எனது கண்ணொளிக்கூறே' என்பதை உணர்த்துவதாம். நான்கு கால்களை உடையதாய், ஒலிக்கும் தன்மையுடைய மான் கன்றைக் கையில் பிடித்துள்ளது, 'நான்கு பகுதியதாய 'வேதத்திற்குக் கருத்தா யான்' என்பதைத் தெரிவிப்பதாம். முனை மூன்றாய், அடி ஒன்றாய் உள்ள சூலத்தை ஏந்தியிருப்பது, 'மூவர் மூர்த்திகட்கும் முதலாய் உள்ள ஒருவனாகிய இறைவன் நான்' என்பதை அறிவுறுத்துவதாம். அட்டமூர்த்தியாய் இருத்தல், 'மாற்றம் உடைய அனைத்து உலகப் பொருட்கும் மாற்றம் இன்றி நிற்கும் அடிநிலைப் பொருள் நான்' என்பதைத் தெளிவுபடுத்துவதாம். ஈங்கு இவை முதலாம் வண்ணமும், வடிவும் 'நிலம் முதலிய ஐம்பெரும் பூதங்களும் தானேயாய், மற்றும் முதற் பொருளின் இயல்புகள் பலவற்றையும் உடைய இறைவன் நீயே' என்றும், அது, பூத நாதனாய் நிற்குமாற்றானே அறியப்படும் என்றும் தெளிவுபட வேதம் முதலிய நூல்கள் பலவும் ஒருபடித்தாக வெளிப்பட எடுத்துக் கூறுகின்றபடியே உனது பெருமைகளை உணர்த்தும் சிறப்பு அடையாளங்களாய் நின்று உணர்த்தவும் உணராது பிணங்கி நிற்போர், தமக்குத் தாமே கேடு சூழ்ந்து கொள்ளும் தற்கேடரே யாவர். அவர் தாம் (நல்ல போலவும், நயவ போலவும்) கூறும் சொல்லிலும், பொருளிலும் அகப்பட்டு மயங்குவார் மயங்காதபடி வேதத்தை வன்மையாக உணர்ந்த அந்தணர்கள் பலர்க்கும் தெளிவுபட ஓதும் வேத முழக்கம் என்றும் நீங்காது ஒலிக்கின்ற திருவொற்றியூரில் உள்ள பெருமானே! (நீ மேற்கூறிய பிணக்குரையாளர்கள்) பிணக்குரையை உன் முன்னே கூறும்பொழுது, நீ (நடை வழியை 'சிறந்த மாட மாளிகை' என்றும், மணலை 'சோறு' என்றும் சொல்லிக் களிக்கின்ற) 'சிறுவர் செயலோடு ஒப்பது' என்று கருதிப் புன்முறுவல் பூத்திருக்கின்றாய் போலும்! என்பது இப்பாட்டின் திரண்ட பொருள்.*

"ஓதி ஓர்க்கப்படாப் பொருளை ஓர்விப்பன"* என்று அருளிச்செய்த ஆளுடைய பிள்ளையார் அருள்மொழியின்படி, வேதாகமங்களை ஓதியுணர மாட்டாத எளியோர்க்கும், வேதாகமங்களை ஓதியபோதிலும் அதன் உண்மையுணர மாட்டாதவர்க்கும் சிவபெருமானது பெருமைகளை இனிது

---

* *திருமுறை - 3.25.2.*

**998.** அளவினில் இறந்த பெருமையை ஆயினும்
எனதுளம் அகலா தொடுங்கிநின் றனையே
மெய்யினை இறந்த மெய்யினை ஆயினும்
வையகம் முழுதும்நின் வடிவெனப் படுமே
கைவலத் திலைநீ எனினும் காதல்

---

*விளக்கி நிற்பனவே அவனது திருமேனியிற் காணப்படும் சிறப்பு அடையாளங்கள். ஆயினும் சில மயக்க நூல்களால் மயங்குவோர் அவற்றின் உண்மையை உணராது தோற்ற மாத்திரத்தையே கண்டு அவரை இகழ்ந்தே போவர் - என்பதைக் காரைக்காலம்மையார்,*

*இவரைப் பொருள்உணர மாட்டாதா ரெல்லாம்*
*இவரை இகழ்வதே கண்டீர்*[1]

*என்று அருளிச் செய்தார்.*

*காணிலும் உருப்பொலார்; செவிக்கினாத காட்சியார்*[2]

*என்பது முதலியவைகளில் அவ்வாறான இகழுரைகளைக் காணலாம்.*

*அறக்கடவுளே ஆனேற்றுருவாய் வந்து சிவபெருமானைச் சுமந்த வரலாற்றைக் கந்த புராணத்துத் தட்ச காண்டத்துத் ததீசி உத்தரப் படலத்துட் காண்க. மூத்தீக்கள் வட்டம், வில், முக்கோணம் ஆகிய இம்மூவகை வடிவில் அமைக்கப்படும் குண்டங்களில் வளர்க்கப்படும் வேள்வித் தீக்கள். அவை முறையே சூரியன், சந்திரன், அக்கினி வடிவங்களைக் குறிக்கும். சதுரமும் வட்டத்தில் அடங்குவதாகும். வேதமான் - வேதம் போலும் மான். வேதம் போலுதல், நான்கு கால்களை உடைமையும், ஒலித்தலும். 'பூத நாதன்' என்பது வெளிப்படைப் பொருளில் "பூத கணங்கட்குத் தலைவன்" எனப் பொருள் தரினும் உள்ளுறைப் பொருளில் 'உயிர்கட்குத் தலைவன்' (பசுபதி) எனப் பொருள் தரும். "தெருட்டுமாற்றானே" என உருபு விரிக்க. "தற்கொலி" என்பது சாதிப் பெயராய் நின்றது. "சொல்வன்மை, பொருள் வன்மை" எனத் தனித்தனிக் கூட்டுக. பொருள் வன்மையாவது வெளிப்படைப் பொருள் இகழ்ச்சியாய் அமைதல்.*

***998. குறிப்புரை :*** *"ஓங்கு கடல் உடுத்த ஒற்றி யூர" என்பதை முதலிற் கொள்க. அளவு - அளவை வகைகள். அவை யனைத்தையும் கடந்த பெருமை - பரப்பு. 'யாதோர் அளவைக்கும் உட்படாத நீ என்னுடைய சிறிய உள்ளத்தினுள் ஒடுங்கி நிற்கின்றாய். "இறைவரோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்"*[3] *என ஔவையாரும் கூறினார். மெய் - உயிர்கள் பெறுகின்ற*

---

1. *அற்புதத் திருவந்தாதி - 29*
2. *திவ்வியப் பிரபந்தம் - திருச்சந்த விருத்தம் - 69*
3. *தனிப்பாடல்*

செய்வோர் வேண்டும் சிறப்பொழி யாயே
சொல்லிய வகையால் துணையலை ஆயினும்
நல்லுயிர்க் கூட்ட நாயகன் நீயே
எங்கும் உள்ளோய் எனினும் வஞ்சனை
தங்கிய அவரைச் சாராய் நீயே.

அஃதான்று
பிறவாப் பிறவியை பெருகாப் பெருமையை
துறவாத் துறவியை தொடராத் தொடர்ச்சியை
நுகரா நுகர்ச்சியை நுணுகா நுணுக்கினை
அகலா அகற்சியை அணுகா அணிமையை
செய்யாச் செய்கையை சிறவாச் சிறப்பினை
வெய்யை தணியை விழுமியை நொய்யை
செய்யை பசியை வெளியை கரியை
ஆக்குதி அழித்தி ஆன பல்பொருள்
நீக்குதி தொகுத்தி நீங்குதி அடைதி
ஏனைய வாகிய எண்ணில் பல்குணம்
நினைதொறும் மயக்கும் நீர்மைய ஆதலின்
ஓங்குகடல் உடுத்த ஒற்றி யூர
ஈங்கிது மொழிவார் யாஅர் தாஅம்
சொல்நிலை சுருங்கின் அல்லது
நின்னியல் அறிவோர் யார்இரு நிலத்தே. 7

---

*பலவகையான உடம்புகள். அத்தகைய உடம்பு எதுவும் உனக்கு இல்லையாயினும் உலகம் முழுதும் உனக்கு உடம்பாகச் சொல்லப்படுகின்றது. (“விசுவ ரூபி” என்பது வேத மொழி) “கைவலம்” என்பதில் வலம், ஏழனுருபு. நீ ஒருவர் கைக்கும் உட்படாதவனாயினும், காதல் செய்வோர் (அன்பர்கள்) செய்யும் சிறப்பு - பூசையும், விழாவும் போல்வனவற்றில் நீங்காது நிற்கின்றாய். முற்படக் கூறிய வகைகளால் நீ ஒருவர் பக்கத்திலும் உள்ளாயில்லையாயினும் உயிர்த் தொகுதிக்கு நீயே தலைவனாகின்றாய். நீ எவ்விடத்திலும் ஒழிவின்றி நிற்பவனாயினும் வஞ்சனையாளரை அணுகாதவனாகின்றாய். இவ்வாறன்றியும் பிறவாமலே பிறந்த பிறவியை உடையாய்; (இயற்கைப் பொருள், அனாதிப் பொருள் என்பதாம். படிமுறையால் பெருகாத (வளராத - இயல்பிலே) விரிந்து நிற்கின்ற விரிவை உடையாய்; துறவாமலே துறந்த துறவை உடையாய்; (‘முன்னே பற்றுக் கொண்டிருந்து, பின்பு அப்பற்றைத் துறவாமல் இயல்பாகவே பற்றற்றவனாய் இருக்கின்றாய்’ என்பதாம்). பிறப்பை,*

'பிறவி' என்றல் போலத் துறவை, 'துறவி' என்றலும் வழக்கு. தொடர்ச்சி - இயைபு. முன்பு வேறாய் இருந்து, பின்பு பிற பொருள்களோடு தொடர்பு கொள்ளாமல் அனாதியே எல்லாப் பொருளிலும் இயைந்து நிற்கின்றாய்; யாதொரு நுகர்ச்சியையும் உயிர்கள் நுகர்தற் பொருட்டு அவைகளோடு உடனாய் நின்று, அவை நுகர்வனவற்றை நீயும் நுகர்கின்றாய் எனினும், அந்நுகர்ச்சியால் நீ தாக்கப்படாது நினது இயல்பிலே நிற்கின்றாய். படி முறையால் வளர்ச்சியடைந்து இயல்பாக விரிந்த விரிவினை உடையையாதல் போலச் சிறிது சிறிதாகத் தேய்ந்து நுணுகாது இயல்பிலே அணுவினும் அணுவாய் நுணுகி நின்றாய்; உயிர்களின் மன வாக்குக் காயங்களுக்கு முன்னர் அகப்படும் பொருளாய் இருந்து, பின் அகப்படாமல் நீங்கினையாகாது, இயல்பிலே அவற்றைக் கடந்து நிற்கின்றாய். அஃதேபோல, முன்பு சேய்மைப் பொருளாய் இருந்து, பின்பு அண்மைப் பொருள் ஆகாது இயல்பிலே அண்மைப் பொருளாய் நிற்கின்றாய். இவ்வாறே நீ ஒன்றையும் செய்யாமலே எல்லாவற்றையும் செய்தலையும், ஒரு காலைக்கொருகால் சிறந்து சிறந்து நில்லாது இயல்பாகவே எல்லாப் பொருளினும் மேலாகச் சிறந்த சிறப்பினையும் உடையவன் ஆகின்றாய். வெப்பத்தை உடையனாய், அது பொழுது தட்பத்தை உடையவனாயும், திண்மையுடையவனாய், அதுபொழுதே நொய்ம்மையை உடையவனாயும் இருக்கின்றாய்; இன்னும் எப்பொருளாயும் படைக்கின்றாய்; பின்பு அழித்து விடுகின்றாய். கூடியிருக்கும் பல பொருள்களை வேறு வேறாக்கி நீங்கச் செய்கின்றாய்; அதனோடு வேறு வேறாய் நீங்கி நிற்கின்ற பொருளாய் ஒன்றாய்த் தொகுக்கின்றாய். நின்ற பொருளினின்றும் நீங்குகின்றாய்; (இஃது அப்பொருள் கேடுறுதற் பொருட்டு, ''கடலின் நஞ்சமது உண்டவர் கைவிட்டால் - உடலினார் கிடந்து ஊர்முனி பண்டமே''* என்னும் அப்பர் வாக்காலும் அறியப்படும்). நீங்கினின்ற பொருளோடு சேர்கின்றாய். (இஃது அப்பொருள் ஆக்கம் பெறுதற் பொருட்டு). எண்ணில் பல்குணம் - ஓர் இனப்படுத்த இயலாத பல்வேறான தன்மைகள். மயக்குதல் - ஐயத்தைத் தோற்றுதல். உணர்வு ஒருதலைப்படாது பலதலைப்படச் செய்தல். ஈங்கிது - இத்தன்மைத்தாய இது. மொழிவார் யார் - ஒருதலைப்பட அறுதியிட்டுச் சொல்பவர் யாவர்? 'ஒருவரும் இலர்' என்றபடி. "தாம்" என்னும் அசைச்சொல் அளபெடை பெற்று வந்தது. இவ்வாற்றெல்லாம் 'மெய்ப்பொருள் இன்னது எனச் சொல்ல வாராத அநிர்வசனப் பொருள்' என்பது கருத்தன்று - என்றற்கு,

சொல்நிலை சுருங்கி னல்லது
நின்னிலை அறிவோர் யார் இருநிலத்தே

* திருமுறை - 5.90.4.

999. நிலத்திடைப் பொறையாய் அவாவினில் நீண்டு
சொலத்தகு பெருமைத் தூறா ஆக்கை
மெய்வளி ஐயொடு பித்தொன் றாகி
ஐவகை நெடுங்காற் றாங்குடன் அடிப்ப
நரையெனும் நுரையே நாடொறும் வெளுப்பத்

திரையுடைத் தோலே செழுந்திரை யாகக்
கூடிய குருதி நீரினுள் நிறைந்து
மூடிய இருமல் ஓசையின் முழங்கிச்
சுடுபசி வெகுளிச் சுறவினம் எறியக்
குடரெனும் அரவக் கூட்டம்வந் தொலிப்ப

ஊன்தடி எலும்பின் உள்திடல் அடைந்து
தோன்றிய பல்பிணிப் பின்னகம் சுழலக்
கால்கையின் நரம்பே கண்ட மாக
மேதகு நிணமே மெய்ச்சா லாக
முழக்குடைத் துளையே முகங்க ளாக.

---

*என்றார். சொல்நிலை - 'அது இன்னது' எனத் தம்மின் வேறாய்ச் சுட்டியுணர்ந்து சொல்லும் நிலை. அது நீங்குதலாவது, தான் அதனின் வேறாய் நில்லாது அதுவேயாய் ஒட்டேயுணரும் நிலை. அந்நிலை உணர்வார் உணர்வதாய் நிற்பதல்லது, வேறாய்ப் பிறர்க்கு உணர்த்த வருவதன்று. அதனையே,*

*இங்ங னிருந்ததென் றெவ்வண்ணம் சொல்லுகேன்*
*அங்ங னிருந்ததென் றுந்தீபற*
*அறியும் அறிவதன் றுந்தீபற*

*எனத் திருவுந்தியார் கூறிற்று. "எவ்வண்ணம் சொல்லுவேன்" என்றதனால் சுட்டியுணர்த்தப் படாமை கூறினாராயினும் ''அங்ஙன் இருந்தது'' என்றமையால் அஃது அனுபவப் பொருளாயினமை கூறினாராதலின், 'மெய்ப்பொருள் அநிர்வசனீயம்' என்றல் பொருந்தாதாம். விழுப்பம், இங்குத் திட்பத்தைக் குறித்தது.*

***999. குறிப்புரை :*** *ஈற்றடியை முதலிற் கொள்க. இப் பாட்டினுள் உடம்பு கடலாகவும், இறைவன் திருவடி அக்கடலைக் கடப்பிக்கும் மரக்கலமாகவும், இறைவன் திருவருளைப் பெற்றோரே அம்மரக்கலத்தைப் பற்றிக் கடலைக் கடக்கும் பயணிகளாகவும் உருவகம் செய்யப்படுதல் அறியத்தக்கது. 'பாதத்தில் சிந்தையை நிறுத்தி' என்க. பொறை - சுமை. 'உடம்பை பூமியோடு பொருத்திக்*

வழுக்குடை மூக்கா றோதம்வந் தொலிப்ப
இப்பரி சியற்றிய உடலிருங் கடலுள்
துப்புர வென்னும் சுழித்தலைப் பட்டிங்
காவா என்றுநின் அருளினைப் பெற்றவர்
நாவா யாகிய நாதநின் பாதம்

முந்திச் சென்று முறைமையின் வணங்கிச்
சிந்தைக் கூம்பினைச் செவ்விதின் நிறுத்தி
உருகிய ஆர்வப் பாய்விரித் தார்த்துப்
பெருகிய நிறையெனுங் கயிற்றிடைப் பிணித்துத்
துன்னிய சுற்றத் தொடர்க்கயி றறுத்து

மன்னிய ஒருமைப் பொறியினை முறுக்கிக்
காமப் பாரெனுங் கடுவெளி அகற்றத்
தூமச் சோதிச் சுடருற நிறுத்திச்
சுருங்கா உணர்ச்சித் துடுப்பினைத் துழாவி
நெருங்கா அளவில் நீள்கரை ஏற்ற

ஆங்கவ் யாத்திரை போக்குதி போலும்
ஓங்குகடல் உடுத்த ஒற்றியூ ரோயே. 8

---

*காணின் உடம்பு பூமிக்குச் சுமையாகும்' எனவும், 'ஆசையோடு பொருத்திப் பார்க்கின், எல்லையின்றி நீள்வதாகும். (ஆசைக்கு அளவில்லை என்பதாம்). சிறுமையைப் 'பெருமை' என்றது இகழ்ச்சிக் குறிப்பு. "ஆக்கை" என்னும் ஐகார ஈற்றுத் தொழிற்பெயர் ஆகுபெயராய் ஆக்கப்பட்ட குழியைக் குறித்தது. குழி - பள்ளம்; ஆழம் என்றது வயிற்றை. 'பொறையாய், நீண்டு, தூர்க்கப் படாத ஆழத்தையுடைய இருங்கடல்' என்க. வளி - வாதம். ஐ - சிலேத்துமம். வாதம் முதலிய மூன்று முதல் நிலைப் பொருள்களில் தலையாயது வாதமேயாதலின் அதனை, "மெய் வளி" என்றார். "ஒடு" என்பதை வளி, பித்து இவற்றிற்கும் கூட்டுக. 'வளி முதலிய மூன்றனோடுங் கூடி, ஐவகைக் காற்று அடிப்ப' என்க. தச வாயுக்களில் பிராணன், அபானன், உதானன், சமானன், வியானன்" என்னும் ஐந்தே சிறப்புடைமை பற்றி 'ஐவகைக் காற்று அடிப்ப' என்றார். கடலில் பல திசையான காற்றுக்கள் அடித்தல் இயல்பு. வெளுப்ப - வெளிதாய்த் தோன்ற. மெலிந்து தொங்கும் தோல், 'திரை' எனப்படும். கடல் அலைகளுக்கும், 'திரை' என்பது பெயர். மூடிய இருமல் - பேசுதலைத் தடுக்கும். இருமல். 'பசியும், வெகுளியுமாகிய சுறவினம்' என்க. அரவம் - பாம்பு; கடல் வாழ் பாம்பு. ஒலிப்ப - இரைய. ஊன் - இறைச்சி. தடி - தசை. திடல் - கடல்களில் சிறு தீவுகள். எதிர்பாராத தீவு எதிர்ப்படின் மரக்கலத்தைப் பின்னோக்கிச் செலுத்துவர். சுழல - திரும்ப. முழக்குடைத் துளை,*

*நவத்துவாரங்கள். கண்டம் - திசை திருப்பும் கருவிகள். சால் - உள் அமைப்பு. முகம் - முன்னோக்கும் பகுதி. மூக்கு ஆறு - மூக்கின் வழியாக விட்டு வாங்கும் மூச்சு. ஓதம் - அலை; அஃது ஆகுபெயராய், அதன் ஓசையைக் குறித்தது. இப்பரிசு இயற்றிய - 'இத் தன்மைத்தாக இயற்றப்பட்ட உடல்' என்க. துப்புரவு - நுகர்ச்சிப் பொருள். கூம்பு - பாய்மரம். ஆர்த்து - பொருத்தி, "கயிற்றிடை" என்பதை, 'கயிற்றினால்' எனத் திரிக்க. அறுக்கப்படுவதாகிய கயிறு, நின்று நீக்கப்படும் துறையின்கண் பிணித்து வைத்துள்ள கயிறு. ஒருமை - மன ஒருமை. பொறி - மரக்கலத்தை வேகமாகச் செலுத்தும் யந்திரம். பார் - பாறை; கடலுள் இருப்பவை. கடுவெளி - கொடிய இடம். இது மரக்கலம் உடைதற்கு ஏதுவாம் ஆதலின், இஃது உள்ள இடம் 'கொடிது' எனப்பட்டது. அகற்ற - இந்த இடத்தைத் தெரிந்து மரக்கலத்தை அப்பாற் படுத்தற்பொருட்டு. தூமம் - நறும் புகை. சோதி - விளக்கு. இவை வழிபாட்டுப் பொருள்கள். 'தூமத்தோடு கூடிய சோதி என்க. மரக்கலத்தை வழி தெரிந்து இயக்க அதன்கண் விளக்கு ஏற்றப்படும். உணர்ச்சி - மெய்யுணர்வு. துழாவுதல் - தண்ணீரை ஒருமுகமாகத் தள்ளுதல். "அளவில் கரை" என்றது 'அளவின்றி நீண்ட கரை' எனப் பொருள் தந்தது. "கரை" என்றது 'வீடு' என்பது தோன்ற அளவின்றி நீள்கரை" என்றமையின், இது குறிப்புருவகம். 'துடுப்பினைத் துழாவி நெருங்கிச் சென்று உயிரைக் கரை ஏற்றும்படி ஆங்கு அவ் யாத்திரை போக்குதிபோலும்!' என முடிக்க. போக்குதி - நிறைவேற்றுவாய். போலும், உரையசை. "ஆகி" என்னும் செய்தென் எச்சம் "அடிப்ப" என்பதனோடும், "அடிப்ப, வெளுப்ப" முதலிய செயவென் எச்சங்கள் பலவும் "இயற்றிய" என்பதனோடும், "நிறைந்து, முழங்கி" என்னும் செய்தென் எச்சங்கள் எண்ணுப் பொருளவாய், "எறிய" என்பதனோடும், "அடைந்து" என்னும் செய்தென் எச்சம் "சுழல" என்பதனோடும், "வணங்கி, நிறுத்தி" முதலிய செய்தென் எச்சங்கள், "நெருங்கா" என்னும் செய்யா என் எச்சத்தோடும், அது "ஏற்ற" என்னும் காரியப் பொருட்டாய் செயவென் எச்சத்தோடும், அது "போக்குதி" என்பதனோடும் முடிந்தன. இடையில், "தலைப்பட்டு" என்பதில், 'தலைப்பட்டும்' என இழிவு சிறப்பும்மை விரித்து, அதனை, "பெற்றவர்" என்பதனோடு முடிக்க.*

*இவ்வாற்றால், "இடர்ப்பாடு மிக்க உடம்பினுள் தங்கி, இடர்ப்பாடான வாழ்வில் நின்றும் இறைவனது திருவருளைப் பெற்றவர் அவனது திருவடியைத் துணையாகப் பற்றி அவனது பணியிலே நின்று தம் உயிரை வீடுபேற்றிற்கு உரித்தாக ஆக்கிக் கொள்ள முயல்வர்" என்பதும், 'அவர்கட்கு இறைவன் துணை நின்று அவர்களது முயற்சி வெற்றிபெறச் செய்வன்' என்பதும் கூறப்பட்டன. நூலாசிரியரின் கடல்வழி வாணிப அனுபவங்களை வெளிக் கொணரும் சான்றாக பாடலின் இவ்வடிகள் விளங்குகின்றன.*

1000. ஒற்றி யூர உலவா நின்குணம்
பற்றி யாரப் பரவுதல் பொருட்டா
என்னிடைப் பிறந்த இன்னாப் புன்மொழி
நின்னிடை அணுகா நீர்மைய ஆதலின்
ஆவலித் தழுதல் அகன்ற அம்மனை

கேவலம் சேய்மையிற் கேளாள் ஆயினும்
பிரித்தற் கரிய பெற்றிய தாகிக்
குறைவினில் ஆர்க்கும் குழவிய தியல்பின்
அறியா தெண்ணில் ஊழிப் பிறவியின்
மயங்கிக் கண்ணிலர் கண்பெற் றாங்கு

தாய்தலைப் படநின் தாளிணை வணக்கம்
வாய்தலை அறியா மயக்குறும் வினையேன்
மல்கிய இன்பத் தோடுடன் கூடிய
எல்லையில் அவாவினில் இயற்றிய வாகக்
கட்டிய நீயே அவிழ்க்கின் அல்லது

எட்டனை யாயினும் யான்அவிழ்க் கறியேன்
துன்னிடை இருளெனும் தூற்றிடை ஒதுங்கி
வெள்ளிடை காண விருப்புறு வினையேன்
தந்தையுந் தாயுஞ் சாதியும் அறிவும்
சிந்தையுந் திருவுஞ் செல்கதித் திறனும்

துன்பமுந் துறவுந் தூய்மையும் அறனும்
இன்பமும் புகழும் இவைபல பிறவும்
சுவைஒளி ஊறோசை நாற்றத் தோற்றமும்
என்றிவை முதலா விளங்குவ எல்லாம்
ஒன்றநின் அடிக்கே ஒருங்குடன் வைத்து

நின்றனன் தமியேன் நின்னடி அல்லது
சார்வுமற் றின்மையின் தளர்ந்தோர் காட்சிச்
சேர்விட மதனைத் திறப்பட நாடி
எய்துதற் கரியோய் யானினிச்
செய்வதும் அறிவனோ தெரியுங் காலே. 9

*1000. **குறிப்புரை :** பொருட்டு - நிமித்தம். 'பொருட்டாக' என ஆக்கம் வருவிக்க. இன்னாமை - துன்பம்; செவிக்குத் துன்பமாகுவன. புன்மை - சிறப்பிலாப் பொருள்களை யுடைமை. நீர்மை - தன்மை. "என்னிடைப் பிறந்த*

1001. காலற் சீறிய கழலோய் போற்றி
மூலத் தொகுதி முதல்வ போற்றி
ஒற்றி மாநகர் உடையோய் போற்றி
முற்றும் ஆகிய முதல்வ போற்றி
அணைதொறுஞ் சிறக்கும் அமிர்தே போற்றி

இணைபிறி தில்லா ஈச போற்றி
ஆர்வஞ் செய்பவர்க் கணியோய் போற்றி
தீர்வில் இன்சுவைத் தேனே போற்றி
வஞ்சனை மாந்தரை மறந்தோய் போற்றி
நஞ்சினை அமிர்தா நயந்தோய் போற்றி

---

*இன்னாப் புன்மொழி - நின்னிடையணுகா நீர்மைய" என்றமையால், 'அருளாளரிடைப் பிறந்த நன்மொழி நின்னுடையணுகும் நீர்மைய' என்பது அருத்தாபத்தியாற் பெறப்பட்டது. ஆவலித்தல் - வாய்விட்டுக் கதறுதல். அம்மனை - தாய். கேவலம் - தனிமை. 'சேய்மைக் கேவலத்தின்' என மொழி மாற்றிக் கொள்க. குறைவினில் - தன் மனக்குறை காரணமாக. ஆர்க்கும் - ஓசை செய்கின்ற. அறியாது - உன்னை அடையும் நெறியை அறியாமல். 'ஊழில்' என ஏழாவது விரிக்க. 'மயங்கி மயக்குறும்' என இயையும். "தலைப்பட" என்பதனையும், 'தலைப்பட்டாற்போல' என்க. 'கண் இலர் கண்பெற்றாற் போலவும், முன்னர்க்கூறிய குழவி தாயைத் தலைப்பட்டாற் போலவும் வணக்கம் வாய்ந்து இன்புறுதலை அறியாமல், மேலும் மேலும் மயக்கத்திலே கிடக்கும் வினையேன் இயற்றிய ஆக' என்க. இன்பம் - ஐம்புல இன்பம். கூடிய - கூடுதற்கு; 'செய்யிய' என்னும் எச்சம். அவாவினில் - ஆசையால். இயற்றிய - இயற்றிவரும் செயல்கள். ஆக - நிகழும் நிலையில் 'நீயே அவிழ்க்கின் அல்லது' என்க. துன்னிய இருள் - செறிந்த இருள். இருள் - அறியாமை. தூறு - புதர். ஒதுங்கி - மறைந்து. வெள்ளிடை - ஒளி பரந்த இடம். "வினையேன்" என்பதற்குப் பின் "நின்னடி யல்லது சார்வுமற் றின்மையின்" என்பதைக் கூட்டுக. (நீ) 'தளர்ந்தோர் காட்சிச் சேர்விடமாகின்ற அதனை நாடி எய்துதற்கு அரியோய் ஆகலின் தெரியுங்கால் யான் இனிச் செய்வதும் அறிவனோ' என முடிக்க.*

***1001. குறிப்புரை :*** *முன் பாட்டிற் போந்த, "ஒற்றி யூர" என்பதை இப்பாட்டின் முதலிலும் வருவித்து, 'என்று இங்ஙனம் நவிற்றின் அல்லது உன்னை ஏத்துதற்குரியோர் இருநிலத்து யார்' என முடிக்க. நவிற்றுதல் - இயன்றஅளவு சொல்லுதல். ஏத்துதல் - புகழ்கள் அனைத்தையும் முற்ற*

விரிகடல் வையக வித்தே போற்றி
புரிவுடை வனமாய்ப் புணர்ந்தோய் போற்றி
காண முன்பொருள் கருத்துறை செம்மைக்(கு)
ஆணி யாகிய அரனே போற்றி
வெம்மை தண்மையென் றிவைகுணம் உடைமையின்
பெண்ணோ டாணெனும் பெயரோய் போற்றி
மேவிய அவர்தமை வீட்டினிற் படுக்கும்
தீப மாகிய சிவனே போற்றி
மாலோய் போற்றி மறையோய் போற்றி
மேலோய் போற்றி வேதிய போற்றி.
சந்திர போற்றி தழலோய் போற்றி
இந்திர போற்றி இறைவ போற்றி
அமரா போற்றி அழகா போற்றி
குமரா போற்றி கூத்தா போற்றி
பொருளே போற்றி போற்றி என்றுனை
நாத்தழும் பிருக்க நவிற்றின் அல்லது
ஏத்துதற் குரியோர் யாரிரு நிலத்தே. 10

*திருச்சிற்றம்பலம்*

---

*எடுத்துக் கூறுதல். மூலம் - உலகத்திற்கு முதற் காரணம்; சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை. அவை பல்வேறு வகை ஆற்றல்களின் திரட்சியாய் இருத்தலின் அவற்றைத் 'தொகுதி' என்றார். முதல்வன், அதனை ஆக்கப்படுத்துபவன். அணைதல் - பற்றுதல். சிறத்தல் - சுவை மிகுதல். வையகம் - நிலம். வனம் - நீர். முன்னுதல் - நினைத்தல். காண விரும்பி நினைக்கப்படுகின்ற பொருள், மெய்ப்பொருள். அது கருத்தில் உற வேண்டுமாயின் கருத்துச் செம்மை பெற வேண்டும்.*

*செம்மையுள் நிற்பராகில்*
*சிவகதி விளையு மன்றே**

*என அப்பரும் அருளிச் செய்தார். ஆணி - நிலைபெறுத்தும் பொருள். வெம்மையாவது அறத்திற்கு மாறானவரைக் காய்தல். தண்மையாவது அறம் உடையார்க்கு அருளல். 'காய்தலும், அருளலும் ஆகிய மாறுபட்ட இரு தன்மைகளை இறைவன் உடையன்' என்பதை உணர்த்தவே அவன் ஆணும், பெண்ணுமாகிய மாறுபட்ட இரு கூறுகளை ஓர் உடம்பில் கொண்டு*

---

**திருமுறை - 4.76.2*

*விளங்குகின்றான் என்றபடி. மேவுதல் - விரும்புதல். தீபம் - விளக்கு. மாலோன் - திருமால். மறையோன் - பிரமன். 'இவர்கள்பால் இவர்களேயாய்க் கலந்து நின்று காத்தல் படைத்தல்களைச் செய்கின்றான்' என்பதாம். மேலோன் - அனைவர்க்கும் மேலானவன். வேதியன் - வேதத்தை அருளிச் செய்தவன். தழலோன் - அக்கினி. இறைவன், இங்கு உருத்திரன். அமரன் - அனைத்துத் தேவரும் ஆயவன். குமரன் - இளையன். சிவனை 'முதியன்' என்றல் உலக வழக்கிலும் காணப்படுவது. பொருள் - அடையத்தக்க பொருள்.*

***திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது முற்றிற்று.***

## நம்பியாண்டார் நம்பிகள்

*பதினொன்றாம் திருமுறையில் பத்துப் பிரபந்தங்களை அருளிச் செய்தவர் இவர். தேவாரத் திருமுறைகளை பொள்ளாப் பிள்ளையார் துணைக்கொண்டு தில்லையிலிருந்து வெளிப்படுத்தியும் திருமுறைகளை வகுத்தும் தந்த பெருமைக்குரியவர் இவர். (பொள்ளா- உளிபடாத)*

### *பிள்ளையார்க்கு அமுதூட்டடல்*

*திருநாரையூரில் பொள்ளாப் பிள்ளையார்க்குப் பூசனை புரியும் ஆதி சைவக் குடும்பத்தில் தோன்றியவர் இவர். பெற்றோர் சிவபிரானைச் சுந்தரர் குறித்துப் போற்றும் நம்பி என்னும் பெயரைச் சூட்டி உரிய பருவத்தில் உபநயனம் செய்வித்து வேத சிவாகமங்களையும் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் கற்பித்தனர். ஒருநாள் இவர் தந்தையார் வேற்றூர்க்குச் செல்ல நேரிட்டது. தந்தையார் தம் மைந்தரை அழைத்து பிள்ளையார்க்குப் பூசை நிவேதனம் செய்து பள்ளிக்குச் செல்லுமாறு பணித்து வெளியூர் சென்றார். தந்தை கட்டளைப்படி நம்பிகள் காலையில் எழுந்து நீராடி மலர் பறித்து மாலை தொடுத்துக்கொண்டு தாயார் தயாரித்து அளித்த நிவேதனத்துடன் ஆலயம் சென்றார். பிள்ளையார்க்குத் திருமஞ்சனம் முதலான செய்து தாயார் அளித்த நிவேதனத்தை எதிரே வைத்து பிள்ளையாரை அமுது செய்தருளுமாறு பலமுறையும் வேண்டி நின்றார். நாள்தோறும் தந்தையார் படைக்கும் நிவேதனத்தைப் பிள்ளையார் உண்டு வருவதாக எண்ணிய நம்பிகள் தன் பூசையில் ஏதேனும் தவறு நேர்ந்ததோ என்று உளம் நைந்து வருந்தியவராய்ப் பிழையிருப்பின் மன்னித்து திருஅமுதை ஏற்றருள வேண்டும் என வேண்டினார். அதற்கும் பிள்ளையார் வாளா இருத்தலைக் கண்டு மனம் பொறாதவராய்த் தன் தலையை கோயிற் சுவரில் மோதிக் கொள்ள முற்பட்டார். அது கண்டு திருவுளம் இரங்கிய பிள்ளையார் 'குழந்தாய் பொறு' எனத் தடுத்து நிவேதனத்தை மகிழ்வோடு உண்டருளினார்.*

### *கலைஞானம் கைவரப்பெறல்*

*இந்நிகழ்ச்சியால் நம்பிகள் பள்ளி செல்லக் காலம் தாழ்ந்தது என்றும் இனிச் சென்றால் ஆசிரியர் தன்னைத் தண்டிப்பார் என்றும் கூறப் பிள்ளையார் "நாமே அப்பாடங்களை உனக்கு கற்பிப்போம்" எனக்கூறித் தாமே நம்பிகளுக்குத் தமிழ் கற்பித்தருளினார்.*

*நற்குஞ் சரக்கன்று நண்ணில் கலைஞானம்*
*கற்கும் சரக்கன்று காண்*

*என்னுமாப்போல விநாயகர் திருவருளால் நம்பிகள் கலைஞானங்கள் அனைத்தும் கைவரப் பெற்றார். விநாயகர் மீது திரு இரட்டை மணிமாலை என்னும் பிரபந்தம் பாடிப் போற்றினார்.*

## திருமுறை கண்ட புராணம்

*இவ்வற்புத நிகழ்ச்சி நாடெங்கும் பரவியது. அதனைக் கேட்டு மகிழ்ந்த அபயகுலசேகரன் என்னும் இராசராச மன்னன் அப்பிள்ளையாரை வழிபடுதற் பொருட்டும் தன் உள்ளத்தில் நெடு நாட்களாக இருந்த கவலையைத் தீர்த்துக் கொள்ளற் பொருட்டும், விநாயகருக்கு உகந்த பழ வகைகள், கரும்பு, தேன், அவல், எள்ளுருண்டை முதலான பொருள்களை வண்டியில் ஏற்றிக் கொண்டு திருநாரையூர் வந்தடைந்தான். நம்பிகளை வணங்கி இவற்றைப் பிள்ளையார் ஏற்றுக் கொள்ளுமாறு செய்ய வேண்டினான். மன்னன் விரும்பிய வண்ணம் நம்பிகள் பிள்ளையார்க்கு அபிடேக ஆராதனைகள் புரிந்து மன்னன் கொண்டு வந்த நிவேதனப் பொருள்களைப் படைத்து அமுது செய்தருள வேண்டிய அளவில் பிள்ளையார் அவற்றை ஏற்றருளினார். அது கண்டு மகிழ்ந்த மன்னன் தன் நெடு நாளைய கவலையை நம்பிகளிடம் தெரிவித்தான். மூவர் அருளிய தேவாரத் திருமுறைகளும், திருத்தொண்டர் வரலாறும் தமிழ் மக்களுக்குக் கிடைக்குமாறு செய்தருள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டான். நம்பிகள் மன்னனின் வேண்டுகோளைப் பிள்ளையாருக்குத் தெரிவித்தார். அவர் வேண்டுகோளை ஏற்ற பொள்ளாப் பிள்ளையார் 'தில்லையில் தேவாரமூவர் கையடையாளத்துடன் ஒரு அறையில் தேவாரத் திருமுறைகள் வைக்கப்பட்டுள்ளன' எனக் கூறியதோடு திருத்தொண்டர் வரலாறுகளையும் நம்பியாண்டார் நம்பிகளுக்கு உணர்த்தியருளினார்.*

*அவற்றைக் கேட்டு மகிழ்ந்த நம்பிகளும் அபய குலசேகரனாகிய சோழ மன்னனும் மகிழ்ந்து தில்லையை அடைந்து அவ்வறையைத் திறக்குமாறு தில்லை வாழ் அந்தணர்களைக் கேட்டுக் கொண்டனர். தில்லைவாழ் அந்தணர்கள் தேவாரமூவர் கையடையாளம் இட்டுள்ளதால் அவர்கள் வந்தால் அன்றி அவ்வறைக் கதவைத் திறத்தல் இயலாது எனக்கூறக் கேட்ட மன்னன் மூவர் திருவுருவங்களுக்கு அபிடேக ஆராதனைகள் செய்து எழுந்தருளச் செய்து அவ்வறைக்கு எதிரே நிறுத்திட மூவரும் வந்துவிட்டனர்.*

கதவைத் திறக்கலாமே எனக் கூறத் தில்லை வாழ் அந்தணர்கள் வேறு வழியின்றி அக் கதவைத் திறந்தனர். அங்குப் பாதுகாப்பாக வைக்கப் பெற்றிருந்த ஏடுகளைக் கரையான் புற்று மூடியிருக்கக்கண்ட மன்னன் மனம் வருந்தி எண்ணெய் சொரிந்து புற்றை அகற்றிப் பார்த்த அளவில் ஏடுகளில் பல செல்லரித்திருந்ததை அறிந்து அளவிலாத துயருற்றான். அந்நிலையில் 'தேவார ஏடுகளில் இக் காலத்துக்கு வேண்டுவனவற்றை மாத்திரம் வைத்துவிட்டு எஞ்சியவற்றைச் செல்லரிக்கச்செய்தோம் கவலற்க' என்றொரு அசரீரி அனைவரும் கேட்க எழுந்தது. மன்னன் ஆறுதல் அடைந்து அவ்வேடுகளைச் சிதையாமல் எடுத்து அவற்றைத் தொகுத்துத் தருமாறு நம்பியாண்டார் நம்பிகளை வேண்டிக் கொண்டான்.

### திருமுறை வகுத்தவர்

நம்பியாண்டார் நம்பிகள் திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகங்களை முதல் மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் அருளிய தேவாரத் திருப்பதிகங்களை நான்கு, ஐந்து, ஆறு திருமுறை களாகவும், சுந்தரர் தேவாரத்தை ஏழாந் திருமுறையாகவும் தொகுத்ததோடு மணிவாசகரின் திருவாசகம் திருக்கோவையார் ஆகியவற்றை எட்டாம் திருமுறையாகவும், திருமாளிகைத்தேவர் முதலானவர்கள் அருளிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகியவற்றை ஒன்பதாம் திருமுறையாகவும், திருமூலர் அருளிய திருமந்திரத்தைப் பத்தாம் திருமுறையாகவும், திருவாலவாயுடையார் அருளிய திருமுகப்பாசுரம் முதலிய பிரபந்தங்களைத் தொகுத்துப் பதினொன்றாம் திருமுறையாகவும் வகுத்தருளினார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருத்தொண்டத்தொகையின் வகைநூலாய் பொள்ளாப்பிள்ளையார் தமக்கு உணர்த்தியருளிய நாயன்மார்களின் பிற வரலாற்றுச் செய்திகளையும் குறிப்பிட்டு திருத்தொண்டர் திருவந்தாதி என்று பெயரிடப்பட்ட வகை நூலையும் திருஞான சம்பந்தப் பிள்ளையார் மீது திருவந்தாதி, திருச்சண்பை விருத்தம், திருமும்மணிக் கோவை, திருவுலா மாலை, திருக்கலம்பகம், திருத்தொகை என்னும் ஆறு பிரபந்தங்களையும் திருநாவுக்கரசு சுவாமிகளின் மீது திருஏகாதசமாலை என்னும் பிரபந்தத்தையும் அருளி மன்னன் விருப்பின்படி அவற்றையும் இத்திருமுறையில் சேர்த்தருளினார்.

**காலம்**

*நம்பியாண்டார் நம்பிகள், திருமுறைகளை வெளிப்படுத்திய முதல் இராசராச சோழன் (கி.பி. 985-1014) காலத்திலும், முதல் இராசேந்திர சோழன் காலத்திலும் வாழ்ந்தவர் என்றே சமய உலகில் பலரும் கருதுவர். உமாபதி சிவாசாரியார் திருமுறைகண்ட புராணத்துள் அபயகுல சேகரன் இராசராசன் என்றே குறிப்பிடுகின்றார். பன்னிரு திருமுறைகளில் பதினொரு திருமுறைகளை நம்பியாண்டார் நம்பிகளே தொகுத்தருளினார் என்பதாலும், அவரால் தொகுக்கப்பட்ட ஒன்பதாம் திருமுறையில் இராசராசசோழன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயிலும் கங்கை கொண்ட சோழபுரத்தில் இராசேந்திரசோழன் எடுப்பித்த கோயிலும் இடம் பெற்றுள்ளமையால் இவ்விரு மன்னர் காலங்களில் நம்பிகள் வாழ்ந்தவர் என்று கொள்ளலே முறை. அங்ஙனமாயின் நம்பிகள் காலம் கி.பி. 10-11 ஆம் நூற்றாண்டுகட்கு இடைப்பட்ட காலம் எனக் கோடலே பொருந்துவதாகும்.*

## திருநாரையூர்

நாரை பூசித்துப் பேறுபெற்றதால் இப்பெயர் பெற்றது. சிதம்பரத்திலிருந்து காட்டுமன்னார் கோயிலுக்குப் போகும் பேருந்து வழியில் 5 கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. சிதம்பரத்திலிருந்து பேருந்து வசதி உள்ளது. காவிரிக்கு வடகரையிலுள்ள 33ஆவது தலமாகும். இறைவரின் திருப்பெயர் சௌந்தரேசுவரர். இறைவியாரின் திருப்பெயர் திரிபுரசுந்தரி.

திருத்தொண்டர் திருவந்தாதியைப் பாடிய நம்பியாண்டார் நம்பிகள் அவதரித்த திருப்பதி இது. தேவாரத் திருமுறைகள் கனக சபையின் மேல்பாலுள்ள ஒரு அறையில் இருந்ததை நம்பியாண்டார் நம்பி மூலமாய் வெளிப்படுத்திய பொள்ளாப் பிள்ளையார் எழுந்தருளியிருக்கும் தலமும் இதுவேயாகும்.

பொள்ளா என்பது பொல்லா என்றும் சில பதிப்புகளில் வந்துள்ளது. பொள்ளாதது என்பது உளி முதலியவற்றால் செய்யப்படாதது. எனவே சுயம்பு மூர்த்தியாகும். இத்தலத்திற்கு ஞானசம்பந்தர் பதிகம் 3, அப்பர் பதிகம் 2 ஆக ஐந்து பதிகங்கள் இருக்கின்றன.

பொள்ளாப்பிள்ளையார் தனிமண்டபம், மகாமண்டபத்தில் ஆறுமுகருடைய உருவம் கல்லில் செதுக்கப்பட்டது. நம்பியாண்டார்நம்பி, இராஜராஜசோழன் உருவங்கள் மகாமண்டபத்தில் இருக்கின்றன. கோயில் விமானம் அர்த்தசந்திர விமானம். விமானத்தின் உச்சியில் இரண்டு கலசங்கள் உண்டு. பிரகாரம் 204 x 370 அடிகள், மதில் உயரம் 9 அடி, அம்பிகை தெற்குமுகம். அபயகுல இராசராசர் திருமுறை வகுக்கும்படி சொன்ன இடம். நம்பியாண்டார்நம்பி வகுத்தது. இருவர் விக்கிரகங்களும் உண்டு. திருமுறை கண்ட புராணம் காண்க.

### கல்வெட்டு

கல்வெட்டுக்கள் 4 கிடைத்தன. கி.பி. 11 ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவை. குலோத்துங்கசோழன் சந்தி விளக்குக்காக ஊர் ஒன்று தந்தான். கைலாசமுடையார்க்கு நித்திய நிவந்தத்திற்காகப் பொருள் இல்லாமையினால் ஆண்டு ஒன்றுக்கு 540 கலம் நெல் தரக்கூடிய நிலதானம் விக்கிரம சோழனால் தரப்பட்டது. குற்றம் தீர்த்த தீர்ப்புகள் கூறப்பட்டுள்ளன. பசு திருடியதைச் சபையோர் விசாரித்து அவனிடமிருந்து பசுவும் கன்றுகளும் மீட்கப்பட்டன.

## 1. திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை

இப்பிரபந்தம் திருநாரையூரிற் கோயில் கொண்டருளிய பொள்ளாப் பிள்ளையாராகிய விநாயகப் பெருமானைப் போற்றிப் பரவுவதாய், வெண்பா, கட்டளைக் கலித்துறையென்னும் இருவகைப் பாக்களால் அந்தாதித் தொடை பெறத் தொடுக்கப் பெற்றதாதலின் திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலையென்னும் பெயர்த்தாயிற்று. திருநாரையூர்ப் பொள்ளாப் பிள்ளையார் திருவருளால் இளம் பருவத்திலேயே செந்தமிழ்ப் புலமை வாய்க்கப் பெற்ற நம்பியாண்டார் நம்பியென்பார் தாம்பெற்ற திருவருட் புலமையின் பயனாக முதன் முதற் பாடிய திருப்பாடல்,

> என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத்
> தன்னை நினையத் தருகின்றான் - புன்னை
> விரசு மகிழ் சோலை வியனாரை யூர்முக்கண்
> அரசு மகிழ் அத்திமுகத்தான்

என்பதாகும். "புன்னை மரங்களும் மகிழ மரங்களும் அடர்ந்த சோலையாற் சூழப்பெற்ற திருநாரையூரிற் கோயில் கொண்டருளும் முக்கட் பெருமானாகிய சிவபெருமான் மகிழும் மூத்தபிள்ளையாராகிய யானை முகப்பெருமான், யான் அவனை நினைக்கும் ஆற்றல் பெறாத முன்னே என்மேல் வைத்த பெருங்கருணையால் என்னை நினைந்து ஆட்கொண்டு, அடியேனது பிறவித் துயரைப் போக்கி இறைவனாகிய தன்னை இடைவிடாது நினைந்து பரவும் சிவஞானத்தை அடியேற்கு மேலும் மேலும் வழங்கியருள்கின்றான்'' என நம்பியாண்டார் நம்பிகள் தாம்பெற்ற திருவருளனுபவத்தை இத் திருப்பாடலில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இதன்கண் 'அரச மகிழ் அத்தி முகத்தான்' என்ற தொடரில் அரசு, மகிழ், அத்தி என்ற சொற்கள் அவ்வப் பெயருடைய மரங்களையும் குறிப்பால் அறிவுறுத்தி நிற்றல் அறிந்து மகிழத்தக்கதாகும். இவ்வெண்பாவினால் தன்னை போற்றியதற்கு உளமிக மகிழ்ந்த விநாயகப்பெருமான், திருமாலின் தோற்றமெனப் போற்றப் பெறுந் திருவுடை மன்னனாகிய இராசராச அபயகுலசேகரனென்னும் சோழமன்னனுக்குத் தில்லையில் தேவாரத் திருமுறைகள் சேமிக்கப் பெற்றிருந்த செய்தியினையும் திருத்தொண்டத் தொகையிற் போற்றப்பெறும் அடியார்களது வரலாற்றினையும் தம் வாயிலாகப் புலப்படுத்தியருளிய உண்மை வரலாற்றினை,

*யானைத் தியவெண்பா என்னை நினைந்தடிமை*
*தானே சனார்த்தனற்கு நல்கினான் - தேனே*
*தொடுத்தபொழில் நாரையூர்ச் சூலம் வலன் ஏந்தி*
*எடுத்த மதமுகத்த ஏறு.*

*எனவரும் இவ்விரட்டை மணிமாலையின் 13-ஆம் பாடலால் நம்பியாண்டார் நம்பி உய்த்துணர வைத்தமை நினைந்து போற்றத்தக்கதாகும். இப்பாடலில் சனார்த்தனன் என்றது, திருமாலின் தோற்றமெனக் குடிமக்களாற் போற்றப் பெற்றவனும் இந்நூலாசிரியராகிய நம்பியாண்டார் நம்பியைப் போற்றித் தேவாரத் திருமுறையை யாண்டும் பரவச் செய்தவனுமாகிய சோழ மன்னனை யெனக் கொள்ளுதல் பொருந்தும்.*

*விநாயகர் திருவிரட்டை மணிமாலையாகிய இப்பனுவல் கபில தேவ நாயனார் பாடிய மூத்த பிள்ளையார் திருவிரட்டை மணிமாலையை யடியொற்றி அமைந்ததாகும். நம்பியாண்டார் நம்பி முதன் முதற் பாடிய 'என்னை நினைந்தடிமை கொண்டு' என்ற வெண்பாவை முதற் பாடலாகக் கொண்டு இவ்விரட்டை மணிமாலை தொடுக்கப் பெற்றிருத்தலால், நம்பியாண்டார் நம்பி இளம் பருவத்தில் முதன்முதற் பாடிய செந்தமிழ்ப் பிரபந்தம் இதுவென்பது நன்கு பெறப்படும்.*

*சிவபெருமானிடமிருந்து தீஞ்சுவை மிக்கதொரு மாங்கனியைப் பரிசாகப் பெறுதற்பொருட்டு முருகப் பெருமானும் மூத்தபிள்ளையாராகிய விநாயகரும் உலகத்தை விரைவிற் சுற்றிவரும் போட்டியில் ஈடுபட்டனரென்பதும், அவருள் இளையபிள்ளையாராகிய முருகன் மயில் மீதமர்ந்து உலகத்தைச் சுற்றிவரச் செல்ல விநாயகர் உலகமே உருவாகிய சிவபெருமானை வலம்வந்து மாங்கனியை எளிதிற்பெற்று மகிழ்ந்தனரென்பதும் புராணவரலாறாகும். இச்செய்தியினை,*

*கொம்பனைய வள்ளிகொழுநன் குறுகாமே*
*வம்பனைய மாங்கனியை நாரையூர் - நம்பனையே*
*தன்னவலஞ் செய்துகொளும் தாழ்தடக்கையாயென்னோய்,*
*பின்னவலஞ் செய்வதெனோ பேசு.*

*மலஞ்செய்த வல்வினை நோக்கி உலகை வலம்வருமப்*
*புலஞ்செய்த காட்சிக் குமரற்கு முன்னே புரிசடைமேற்*

*சலஞ்செய்த நாரைப் பதியரனறன்னைக் கனிதரவே*
*வலஞ்செய்து கொண்ட மதகளிறே யுன்னை வாழ்த்துவனே.*

*எனவரும் பாடல்களால் ஆசிரியர் உளமுருகிப் போற்றியுள்ளார். இவ்வாறு இத்திருவிரட்டை மணிமாலையிலுள்ள திருப்பாடலைக் கூர்ந்து நோக்குங்கால் திருநாரையூர் பொள்ளாப் பிள்ளையாரை வழிபடு கடவுளாகக் கொண்டு சிவநெறி பரப்பிய திருவருட் செல்வர் நம்பியாண்டார் நம்பியென்பது நன்கு புலனாம்.*

## நம்பியாண்டார் நம்பிகள்

*அருளிச்செய்த*

## 31. திருநாரையூர் விநாயகர் திருஇரட்டை மணிமாலை

**வெண்பா**

*திருச்சிற்றம்பலம்*

1002. என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் – புன்னை
விரசுமகிழ் சோலை வியன்நாரை யூர்முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத் தான். 1

***கட்டளைக் கலித்துறை***

1003. முகத்தாற் கரியனென் றாலும் தனையே முயன்றவர்க்கு
மிகத்தான் வெளியனென் றேமெய்ம்மை உன்னும் விரும்படியார்

---

*1002. இரட்டைமணி மாலை பற்றி பதினொன்றாம் திருமுறை முதல் தொகுதியில் காரைக்காலம்மையார் பிரபந்த உரையுட் காண்க.*

***குறிப்புரை :*** *விரசு - நெருங்கிய. "மகிழ்" இரண்டில் முன்னது மகிழ மரம்; பின்னது மகிழ்ச்சி. அத்தி - யானை. அரசு, 'அரசமரம்' எனவும், அத்தி, 'அத்தி மரம்' எனவும் வேறொரு பொருளைத் தோற்றுவித்தலாகிய நயத்தைப் பயந்தது. அந்நயம் முரண் தொடையாம். 'நாரையூர் அத்தி முகத்தான்' என இயைக்க. இவ்விநாயகர், 'பொல்லாப் பிள்ளையார்' என்னும் பெயர் உடையர். இப் பெயர்ப் பொருளைச் சிவஞான போத மங்கல வாழ்த்து உரையிற் காண்க. 'இப்பெருமானுக்கு யான் அடியன் ஆனதும் அவன் என்னை நினைந்து அடிமை கொண்டதனாலும், பின்பும் நான் அவனை மறவாது நினைதலும் அவன் நினைப்பிப்பதனாலுமே' என்பதாம். 'இப்பெருமானுக்கு யான் செய்யும் கைம்மாறு யாது?' என்பது குறிப்பெச்சம். இதனால் 'இவ்வாசிரியர் விநாயகப் பெருமானது திருவருளை எய்திய அருளாளர்' என்பது போந்தது.*

***1003. குறிப்புரை :*** *கரியன் - யானையாகியவன். வெளியன் - வெளிப்பட்டு நிற்பவன். இவை இரண்டும் முறையே 'கருநிறத்தை உடையவன். வெண்ணிறத்தையுடையவன்' எனப் பிறிதுமோர் பொருள் தந்து, முரண் தொடையாயும் நின்றன. முயலுதல், இங்குப் பணிதல், அகத்தான் - மனத்தில் இருப்பவன். திருநாரையூர் பாடல் பெற்ற சிவத்தலம் ஆதல் அறியத் தக்கது. அம்மான் - அப்பெரியோன்; சிவபெருமான். எம்மான் - எங்கள் இறைவன். தானவன், கயமுகாசுரன். 'அவன் உடலம் உகப் பிளந்த ஒரு கொம்பன்' என்க.*

அகத்தான் திகழ்தரு நாரையூர் அம்மான் பயந்தவெம்மான்
உகத்தா னவன்தன் னுடலம் பிளந்த ஒரு கொம்பனே. 2

*வெண்பா*

1004. கொம்பனைய வள்ளி கொழுநன் குறுகாமே
வம்பனைய மாங்கனியை நாரையூர் – நம்பனையே
தன்னவலம் செய்துகொளும் தாழ்தடக்கை யாயென்நோய்
பின்னவலம் செய்வதென்னோ பேசு. 3

***கட்டளைக் கலித்துறை***

1005. பேசத் தகாதெனப் பேயெரு தும்பெருச் சாளியுமென்(று)
ஏசத் தகும்படி ஏறுவ தேயிமை யாதமுக்கட்

---

*உக - சிதைந்து சிந்த. யாதொரு படைக்கலத்தாலும் அழியா வரம் பெற்ற கயாமுகாசுரனை விநாயகப் பெருமான் தனது இரு தந்தங்களுள் வலத் தந்தத்தை ஒடித்து அதனாலே கொன்று, ஒற்றைக் கொம்பன் ஆகியதைக் கந்தபுராணக் கயமுகன் உற்பத்திப் படலத்துக் காண்க. இதன் முன்னிரண்டு அடிகளில் ஆசிரியர் தம் அனுபவத்தைக் குறிப்பாற் புலப்படுத்தி யிருத்தலை உன்னுக.*

*1004. **குறிப்புரை :** இப்பாட்டிற்கு 'நெஞ்சே' என்னும் முன்னிலை வருவித்துக் கொள்க. கொம்பு, பூங்கொம்பு. குறுகாமே - வந்து அடையும் முன். வம்பு அனைய - புதிதாகிய அந்த; இது பண்டறி சுட்டு. தன்னம் - சிறுமை. உலகை வலம் வருதலினும் அன்னை தந்தையரை வலம் வருதல் எளிதாதல் பற்றி "தன்ன வலம்" என்றார். மாங்கனியின் பொருட்டுச் சிவபெருமான் வைத்த ஓட்டத்துள் விநாயகர் முருகனை வென்று மாங்கனியைப் பெற்ற வரலாறு நன்கறியப்பட்டது. என் - என்று சொல். 'சொன்னால், பின் நோய் (வினைகள்) அவலம் (துன்பம்) செய்வது என் உளது? பேசு' என முடிக்க.*

*1005. **குறிப்புரை :** "இந்தத் தேசத்தவர்... சிவக்களிறே! நுங்கையும், நுந்தையும், நீயும் - பேசத் தகாது - என ஏசத் தகும்படி பேயும், எருதும், பெருச்சாளியும் என்று இவற்றை ஏறுவதே" என இயைத்து முடிக்க. நுங்கை - உன் தங்கை. துற்கையை உமை அம்சமாதல் பற்றி 'அவள் தங்கை' என்பதேயன்றி மகளாகவும் கூறுவர். அதை வைத்து இங்கு "நுங்கை" என்றார். கூசத்தகும் தொழில் கொலை. அசுரனையழித்தல். "பேய்" என்பதிலும் எண்ணும்மை விரிக்க.*

கூசத் தகுந்தொழில் நுங்கையும் நுந்தையும் நீயுமிந்தத்
தேசத் தவர்தொழும் நாரைப் பதியுட் சிவக்களிறே. 4

*வெண்பா*

1006. களிறு முகத்தவனாய்க் காயம்செந் தீயின்
ஒளிறும் உருக்கொண்ட தென்னே – அளறுதொறும்
பின்நாரை ஊர்ஆரல் ஆரும் பெரும்படுகர்
மன்நாரை யூரான் மகன். 5

*கட்டளைக் கலித்துறை*

1007. மகத்தினில் வானவர் பல்கண் சிரம்தோள் நெரித்தருளும்
சுகத்தினில் நீள்பொழில் நாரைப் பதியுட் சுரன்மகற்கு
முகத்தது கையந்தக் கையது மூக்கந்த மூக்கதனின்
அகத்தது வாய்அந்த வாயது போலும் அடுமருப்பே. 6

---

***1006. குறிப்புரை :*** *''அளறுதொறும்'' என்பது முதலாகத் தொடங்கியுரைக்க. அளறு - சேறு. அஃது ஆகு பெயராய் அவற்றையுடைய வயல்களைக் குறித்தது. 'ஊர் ஆரலை அவ்வூர்தலின் பின்னாகப் பற்றி நாரை ஆரும் (உண்கின்ற) படுகர்' என்க. ஆரல், மீன் வகை. படுகர் - நீர் நிலை. மன் - நிலை பெற்ற. நாரையூரான் - திருநாரையூர்ச் சிவபெருமான். "களிறு முகத்தவனாய்" என்பதை, "முகம் களிறவனாய்" என மாற்றிக் கொள்க. 'முகம் யானையாகியவன், காயம் (திருமேனி மேகம் போலாது) செந்தீயைப்போல ஒளிறும் (ஒளிவிடுகின்ற) நிறத்தைக் கொண்டிருப்பது என்ன வியப்பு' என்றபடி.*

***1007. குறிப்புரை :*** *மகம் - வேள்வி. தக்கன் செய்தது. அதில் பல் உதிர்க்கப்பட்டவன் 'பூடா' என்னும் சூரியன். கண் பறிக்கப்பட்டவன் 'பகன்' என்னும் சூரியன். சிரம் அறுக்கப் பட்டவன் எச்சன். (யாக தேவன்). தோள் நெரிக்கப்பட்டவன் இந்திரன். 'நெரித்தருளும் சுரன்' என்க. சுரன் - தேவன். சுகம் - கிளி. ''சுகத்தினில்'' என்பதை 'சுகத்தொடு' எனத் திரிக்க. பின்னிரண்டடிகள் தும்பிக்கையின் அமைப்பை வியந்து கூறியன.*

***1008. குறிப்புரை :*** *"மருப்பை" என்பது, இசையெச்சத்தால் 'ஒரு காலத்தில் ஒடிக்கப்பட்ட மருப்பை' எனவும், "கொண்டு" என்பது, 'எப்பொழுதும் கொண்டு' எனவும் பொருள் தந்தன. மருப்பு - தந்தம். "பொருப்பு" என்பது 'பொருப்புப் போன்றவன்' எனவும், "எறும்பு" என்பது எறும்பு போல்வது எனவும் பொருள் தருதலால் உவமையாகு பெயர்கள். பொருப்பு, வடிவு*

*வெண்பா*

**1008.** மருப்பையொரு கைக்கொண்டு நாரையூர் மன்னும்
பொருப்பையடி போற்றத் துணிந்தால் – நெருப்பை
அருந்தவெண்ணு கின்றவெறும் பன்றே அவரை
வருந்தவெண்ணு கின்ற மலம். **7**

*கட்டளைக் கலித்துறை*

**1009.** மலஞ்செய்த வல்வினை நோக்கி உலகை வலம்வருமப்
புலஞ்செய்த காட்சிக் குமரற்கு முன்னே புரிசடைமேற்
சலஞ்செய்த நாரைப் பதியரன் தன்னைக் கனிதரவே
வலஞ்செய்து கொண்ட மதக்களி றேயுன்னை வாழ்த்துவனே. **8**

*வெண்பா*

**1010.** வனஞ்சாய வல்வினைநோய் நீக்கி வனசத்
தனஞ்சாய லைத்தருவா னன்றோ – இனஞ்சாயத்
தேரையூர் நம்பர்மகன் திண்தோள் நெரித்தருளும்
நாரையூர் நம்பர்மக னாம். **9**

---

*பற்றியும், எறும்பு, மடமையாகிய பண்பு பற்றியும் உவமையாயின. "நெருப்பை.. எறும்பன்றே" என்பதை இறுதியிற் கூட்டுக. 'வருத்த' என்பது எதுகை நோக்கி மெலிந்து நின்றது. மலம் மூல மலமும், பின் அது பற்றி வரும் கன்ம மாயா மலங்களும், 'அவை வருத்தா' எனவே, வீடு உளதாதல் அமைந்தது.*

***1009. குறிப்புரை :*** *"மலம் செய்த வல்வினை நோக்கி" என்பதை, "உன்னை வாழ்த்துவன்'' என்பதற்கு முன்னே கூட்டி யுரைக்க. மலம் செய்த - ஆணவத்தால் வருவிக்கப்பட்ட "வல்வினை" என்பது அதன் நீக்கத்தைக் குறித்தது. "நோக்கி" என்றது, 'அது நிமித்தமாகக் கருதி' என்றபடி. புலம் செய்த - எவ்விடத்தும் நின்ற. காட்சி - தோற்றம். சலம் - நீர்; கங்கை.*

***1010. குறிப்புரை :*** *"இனம் சாய" என்பது முதலாகத் தொடங்கியுரைக்க. இனம் - அசுரர் சுற்றம். அசுரர், முப்புரத்து அசுரர். "நம்பர்'' என்பது சிவபெருமானைக் குறித்து இரு முறையாற் கூறப்பட்டது. மகன் - மகவான்; இந்திரன். சிவபெருமான் இந்திரனைத் தோள் நெரித்தமை மேல், "மகத்தினில் வானவர்'' என்னும் பாட்டிலும் சொல்லப்பட்டது. 'நாம் நீக்கி அலை தருவானன்றே' என இயைக்க. வனம் - காடு. உருவகம், 'வினையாகிய வனம்' என வருதல் பெரும்பான்மைத்தாயினும் சிறுபான்மை 'வனமாகிய வினை' என வருதலும் உண்டு என்பதைத் தொல்காப்பிய உவம இயலில் கண்டுணர்க.*

*கட்டளைக் கலித்துறை*

**1011.** நாரணன் முன்பணிந் தேத்தநின் றெல்லை நடாவியவத்
தேரண வும்திரு நாரையூர் மன்னு சிவன்மகனே
காரண னேயெம் கணபதி யேநற் கரிவதனா
ஆரண நுண்பொரு ளேயென் பவர்க்கில்லை அல்லல்களே. 10

*வெண்பா*

**1012.** அல்லல் களைந்தான்தன் அம்பொன் உலகத்தின்
எல்லை புகுவிப்பான் ஈண்டுழவர் – நெல்லல்களை
செங்கழுநீர் கட்கும் திருநாரை யூர்ச்சிவன்சேய்
கொங்கெழுதார் ஐங்கரத்த கோ. 11

---

*'வனமாகிய வல்வினை சாய, அதனானே அவற்றால் வரும் நோயை (துன்பத்தை) நீக்கி' என்க. வனசத்தன் - தாமரை மலரில் உள்ளவன்; பிரமன். அவனது அம் - அழகு; அழகிய எழுத்து. இனி, 'அழகாவது அவனது திறல்' எனினும் ஆம். திறலாவது இங்குப் படைக்கும் திறன். இதனையடுத்து நின்ற 'சாய' என்பதில் ஈற்று அகரம் தொகுக்கப்பட்டது. அலை - அலைத்தலை; அழித்தலை. 'நாம் இனி வினைகாரணமாகப் பிரமனால் படைக்கப்படுதலை ஒழிக்கும் நிலையை நமக்குத் தருவான்' என்பதாம். "நம்பர்மகன்" இரண்டிலும் ரகர ஒற்று அலகு பெறாது நின்றது.*

***1011. குறிப்புரை :*** *'ஏத்த நின்று மன்னு சிவன்' என்க. எல்லை நடாவிய அத்தேர் அணவும் - நாற்பாங்கு எல்லை யளவும் நடத்தப்படுகின்ற தேர் பொருந்திய. காரணன் - எப் பொருட்கும் காரணன். கரி வதனன் - யானை முகன். என்பவர் - என்று துதிப்பவர். இப்பாட்டின் முதலாகிய "நாரணன்" என்பது முன்பாட்டு இறுதியில் உள்ள "நாரையூர்" என்பதை ஓராற்றால் அந்தாதியாகக் கொண்டதாம்.*

***1012. குறிப்புரை :*** *"ஈண்டு உழவர்" என்பது முதலாகத் தொடங்கியுரைக்க. ஈண்டு - நெருங்கிய. நெல் அல்களை - நெற் பயிருக்கு வேண்டத் தகாத களை. 'செங்கழு நீரைக் களையாகக் கட்கும்' என்க. கட்டல் - களைதல். 'அரிய செங்கழுநீர் மலர்களை எளியவாகக் கருதிக் களையோடு சேர்த்து எறிகின்றனர்' என்பது அதன் மிகுதி கூறியவாறு. இதனை 'வீறுகோளணி' அல்லது 'உதாத்த அணி' என்பர். கொங்கு - நறுமணம். தார் - மாலை. அவை கொன்றை மலர் முதலியவற்றால் ஆயவை. "அவன்" என்பதை, "கோ" என்பதன் பின்னர்க் கூட்டி, 'சேயும், கோவுமாகிய அவன் தன் அடியார்க்கு' என உரைக்க. 'தன் அடியார்க்கு' என்பது இசையெச்சம். தன் உலகம் - கண லோகம். கணம், சிவகணம். 'எல்லையும்' என உருபு விரிக்க.*

*கட்டளைக் கலித்துறை*

**1013.** கோவிற் கொடிய நமன்தமர் கூடா வகைவிடுவன்
காவில் திகழ்தரு நாரைப் பதியிற் கரும்பனைக்கை
மேவற் கரிய இருமதத் தொற்றை மருப்பின்முக்கண்
ஏவிற் புருவத் திமையவள் தான்பெற்ற யானையையே. 12

*வெண்பா*

**1014.** யானேத் தியவெண்பா என்னை நினைந்தடிமை
தானேச னாய்த்தனக்கு நல்கினான் – தேனே
தொடுத்தபொழில் நாரையூர்ச் சூலம் வலனேந்தி
எடுத்த மதமுகத்த ஏறு. 13

---

*1013. குறிப்புரை : முதல் அடியில் 'நமன் தமர் வரின் அவர் கூடாவகை யான் விடுவன்' என வேண்டும் சொற்கள் வருவித்து விரித்து, அதனை இறுதியிற் கூட்டுக. கோவில் - கோக்களில்; அரசர்களில். புண்ணியரை அளித்தல் செய்யாது, பாவிகளை ஒறுத்தலை மட்டுமே தொழிலாக உடைமை பற்றி நமனை, 'கோக்களில் கொடியவன்' என்றார். விடுவன் - எதிர் சென்று துரக்குமாறு அனுப்புவேன். 'அனுப்புதல், குறையிரத்தல் வாயிலாக' என்க. 'யான் குறையிரந்தால் அவன் அருளாதொழியான்' என்பதாம். காவின் - காவினால். கா - சோலை. கரு, பனைக் கை, இரு மதம், ஒற்றை மருப்பு, முக்கண் இவை யனைத்தும் யானையைச் சிறப்பித்தன. இரு மதம் - கரிய மதம். ஏ வில் புருவம் - அம்பையுடைய வில்போலும் புருவம். 'கண்கள் அம்பு போலும்' என்பது குறிப்பு. கண் இமையாதவனை "இமையவள்" என்றது எதிர்மறை இலக்கணையாய், 'தேவி' என்னும் கருத்துடையதாயிற்று. தேவி உமா தேவி. தான், அசை.*

*1014. குறிப்புரை : 'யான் ஏத்திய வெண்பாக்கள் (யான் ஏத்திய அல்ல; மற்று). நாரையூர் விநாயகப் பெருமான் தானே தனக்கு நல்கிக் கொண்டவை' என்க. "வெண்பா" என்பது, இங்கு, 'வெளிற்றுப் பொருள்களையுடைய பாக்கள்' எனப் பொருள் தந்தது. 'இவைகளைத் தாமும் அவனது அருள் இன்றி, யானே இயற்றுதல் இயலாது' என்றபடி. என்னை நினைந்து அருள் காரணமாக என்னையும் ஒருவனாகத் திருவுளத்து அடைத்து. 'தலைவனாகிய அவன் அடிமை நேசனாகிய யானாகவேயிருந்து நல்கிக் கொண்டான்' என்க. இதனால் இப் பிரபந்தம் சீவபோதத்தின் வழிப் போந்ததாகாது, சிவபோதத்தின் வழிப் போந்ததாதல் விளங்கும். "சூலம் வலனேந்தி" என்றது, 'சிவபெருமான்' என்றபடி. "ஏந்தி" என்பது பெயர். எடுத்த - ஈன்றெடுத்த.*

**கட்டளைக் கலித்துறை**

1015. ஏறிய சீர்வீ ரணக்குடி ஏந்திழைக் கும்மிருந்தேன்
நாறிய பூந்தார்க் குமரற்கும் முன்னினை நண்ணலரைச்
சீறிய வெம்பணைச் சிங்கத்தி னுக்கிளை யானைவிண்ணோர்
வேறியல் பால்தொழும் நாரைப் பதியுள் விநாயகனே. 14

---

*மதம் - கன்ன மதம். 'அது முகத்தின் வழியாகப் பாய்கின்றது' என்றபடி. ஏறு - சிங்க ஏறு. உவம ஆகுபெயர். இது நடையாகிய தொழில் பற்றி வந்த உவமம். 'ஏறுபோற் பீடு நடை'[1] என்றார் திருவள்ளுவரும். "நல்கினான்" என உயர்திணையால் முடித்தமையின் "ஏறு" என்பது உபசாரமும், உருவகமும் ஆகாமை உணர்க. இங்கும் - "சூலம்வலள்" என்பதில் மகர ஒற்று அலகு பெறாதாயிற்று. இரண்டாம் அடியில் பாடபேதம் உண்டு.*

***1015. குறிப்புரை :*** *வீரணக் குடி ஏந்திழை - வீரர்களால் வெற்றி வேண்டி வழிபடப்படும் கொற்றவை; துற்கை. இவளை மேல்[2] "நுங்கை" என்றதுபோல இங்கு 'அவளுக்கு முன்' (முன்னோன் - தமையன்) என்றார். முன்னினை - தமையனை; இன், சாரியை. நண்ணலர் - பகைவர். இங்குத் தக்கனும், அவன் சார்பாக அவனது வேள்வியை ஏற்றவரும். வெம்பணை - போர் முரசு. 'அதனையுடைய சிங்கம்' என்றது வீரபத்திரரை. அவர் உமை மலையரையன் மகளாதற்கு முன்னர்த் தோன்றினமையால் விநாயகரை 'அவருக்கு இளையோன்' என்றார். "விநாயகன்" என்பதிலும் தொகுக்கப்பட்ட இரண்டனுருபை விரித்து அதனை, "இளையானை" என்பதன் பின்னர்க் கூட்டுக. விண் - தேவலோகம். 'அது வேறு ஓர் இயல்பால் தொழும்' என்க. வேறு - தனி - தனி ஓர் இயல்பால் தொழுதலாவது, விரும்பிய செயலை இடையூறின்றி இனிது முற்றுவிக்க வேண்டித் தொழுதல். 'முன்னவனும், இளையானும் ஆகிய நாரைப் பதியுள் விநாயகனை விண் வேறு இயல்பால் தொழும்' - என வினை முடிக்க.*

***1016. குறிப்புரை :*** *கனம் - மேகம் - 'கனம் மதிலின்கண் சூழ் நாரையூர்' என்க. கசிந்தார் - அன்பால் மனம் உருகினவர். அவர்தம் மனம் மருவினான் சிவபெருமான். 'பயந்த கன்று' என இயையும். வாய்ந்த - 'அவனுக்குப் பொருந்திய ஆரம்' என்க. சினம் மருவியதும், தீண்டுதற்குப் பிறர் கூசுவதும் ஆகிய ஆரம்; அது பாம்பாகிய மாலை. 'குஞ்சர முகக் கன்று' என மாறுக.*

---

*1. திருக்குறள் - 55*
*2. இந்நூல் - 4*

*வெண்பா*

1016. கனமதில்சூழ் நாரையூர் மேவிக் கசிந்தார்
மனமருவி னான்பயந்த வாய்ந்த – சினமருவு
கூசாரம் பூண்டமுகக் குஞ்சரக்கன் றென்றார்க்கு
மாசார மோசொல்லு வான். 15

*கட்டளைக் கலித்துறை*

1017. வானிற் பிறந்த மதிதவ ழும்பொழில் மாட்டளிசூழ்
தேனிற் பிறந்த மலர்த்திரு நாரைப் பதிதிகழும்
கோனிற் பிறந்த கணபதி தன்னைக் குலமலையின்
மானிற் பிறந்த களிறென் றுரைப்பரிவ் வையகத்தே. 16

*வெண்பா*

1018. வையகத்தோர் ஏத்த மதில்நாரை யூர்மகிழ்ந்து
பொய்யகத்தார் உள்ளம் புகலொழிந்து – கையகத்தோர்

---

*முகம் யானையாயினமை பற்றிப் பிள்ளையாரையே 'யானை' என்றலும் ஆம் என்றற்கு, 'பிள்ளை' என்னாது, "கன்று" என்றார். என்றார்க்கு - என்று சொல்லித் துதித்தவர்க்கு. 'வான் மா சரமோ? சொல்லு' என்க. வான் - சுவர்க்க லோகம். மா சாரம் - பெரிய பயன். "சொல்லு" என்றது நெஞ்சை நோக்கி. எனவே, 'நீயும் அவ்வாறு சொல்' என்பது குறிப்பெச்சமாயிற்று.*

***1017. குறிப்புரை :*** "தேனின் பிறந்த" *என்பதில் இன்னுருபை ஒரு உருபாகத் திரித்துக் கொள்க. மலர், அவை மலரும் பொய்கையைக் குறித்தலால் தானியாகுபெயர். கோனின் - கோனால். குலம் - சிறப்பு. "மலையின் மான்" என்பது இலக்கணை (சார்பு) வழக்கால் 'மலையரையன் மகள்' எனப் பொருள்படுவதை 'மலையில் வாழ்கின்ற மான்' எனப் பொருள்படுகின்ற இயல்பு வழக்காகக் காட்டி, அதிசயம் தோற்றுவித்தவாறு.*

***1018. குறிப்புரை :*** *"நம் சிந்தை அமர்வான்" என்பதை முதலில் வைத்து உரைக்க. கை ஐந்து ஆகலின் ஐந்திலும் ஐந்து பொருள்கள் இருத்தல் கூறப்பட்டது. மாங்கனி இடப்புறக் கீழ்க்கை. கொம்பு - தந்தம்; வலப்புறக் கீழ்க்கை. அண்டம் - ஆகாயம்; தும்பிக்கை; 'ஆகாயத்தைத் தடவுகின்றது' என்றபடி. பாசம் இடப்புற மேற் கை. "மழு" என்பது 'படைக்கலம்' எனப்*

மாங்கனிதன் கொம்பண்டம் பாசமழு மல்குவித்தான்
ஆங்கனிநம் சிந்தையமர் வான். 17

*கட்டளைக் கலித்துறை*

1019. அமரா அமரர் தொழுஞ்சரண் நாரைப் பதியமர்ந்த
குமரா குமரற்கு முன்னவ னேகொடித் தேரவுணர்
தமரா சறுத்தவன் தன்னுழைத் தோன்றின னேயெனநின்(று)
அமரா மனத்தவர் ஆழ்நர கத்தில் அழுந்துவரே. 18

*வெண்பா*

1020. அவமதியா துள்ளமே அல்லலற நல்ல
தவமதியால் ஏத்திச் சதுர்த்தோம் – நவமதியாம்
கொம்பன் விநாயகன்கொங் கார்பொழில்சூழ் நாரையூர்
நம்பன் சிறுவன்சீர் நாம். 19

---

*பொருள் தந்து, அங்குசத்தைக் குறித்தது. வலப்புற மேற்கை. மல்குதல் - நிறைதல். "மல்குவித்தான்" என்பது வினைப்பெயர். ஆம் அசை. கனி சிந்தை வினைத்தொகை. அமர்வான் - விரும்புவான். "நம் சிந்தை அமர்வான்" என்பது, 'புலி கொல் யானை' என்பதுபோலத் தடுமாறு தொழிற்பெயர்.*

***1019. குறிப்புரை :*** *அமரா - தேவனே. குமரன் - பிள்ளை. சரண் - பாதம். குமரற்கு முன்னவன் - முருகனுக்குத் தமையன். தமர் - சுற்றத்தார். ஆசு - குற்றம்; 'அவுணர் தமராகிய ஆசு' என்க. அவுணர், இங்கு முப்புரத்து அசுரர். "என நின்று அமரர் மனத்தவர்" என்பதை 'என அமர்ந்து நில்லாதவர்' என மாற்றிக் கொள்க. அமர்தல் - விரும்புதல். 'என' என் எச்சத்தால், 'துதித்து நில்லாதவர்' எனக் கொள்க.*

***1020. குறிப்புரை :*** *"உள்ளமே" என்பதை முதலிற் கூட்டுக. தவமதி - தவத்தால் உண்டாகிய ஞானம். தவமாவன, சரியை கிரியா யோகங்கள். சதுர்த்தோம் - பெருமை பெற்றோம். நவ மதியாம் கொம்பு - புதிதாகத் தோன்றுகின்ற பிறைபோலும் தந்தம். நம்பன் - சிவபெருமான். சிறுவன் - மகன். "அவமதி யாது" என்பது, முன்பாட்டில், "மனத்தவர்" என்ற அந்தத்தை ஆதியாகக் கொண்டதாம்.*

***1021. குறிப்புரை :*** *மனம் - மனமே. இதனை முதலிற் கொள்க. 'நம் தனம்' என்பது "நாம் தனம்" என நீட்டல் பெற்றது. தாம் தனம் - தாவும்*

***கட்டளைக் கலித்துறை***

**1021.** நாந்தன மாமனம் ஏத்துகண் டாயென்றும் நாண்மலரால்
தாந்தன மாக இருந்தனன் நாரைப் பதிதன்னுளே
சேர்ந்தன னேயைந்து செங்கைய னேநின் திரள்மருப்பை
ஏந்தின னேயென்னை ஆண்டவ னேயெனக் கென்னையனே. **20**

---

*(இவ்வுலகத்தைக் கடந்து பற்றும்) செல்வம். 'இருந்தனே' என இதுவும் விளி. எனக்கு என் - 'எனக்கு' என்று இருக்கின்ற. ஐயன் - தலைவன். 'மனமே! தாம் தனமாக இருத்தனனே!.... என் ஐயனே! என்று நாள் மலரால், நம் தனமாக ஏத்து' என வினை முடிக்க. கண்டாய், முன்னிலையசை.*

***திருநாரையூர் விநாயகர் திருஇரட்டை மணிமாலை முற்றிற்று.***

## பிள்ளையார் சுழி

### *எழுத்தில் பிள்ளையார்*

*ஏடுகளில் எழுதத் தொடங்கினாலும், கல்லில் எழுத்துக்களை வெட்டத் தொடங்கினாலும், காகிதங்களில் எழுதத் தொடங்கினாலும் பிள்ளையார் சுழியை முன்னர் இட்டே தொடங்குவது மரபு. மறந்தாவது பிள்ளையார்சுழி போடாமல் விட்டால் போதும்; பெரியவர்களுக்குக் கோபம் பொங்கி வந்துவிடும். நாமாகத் தவற்றினை அறிந்து திருந்தும்வரை அவர்கள் மறக்கருணை காட்டியே தீருவார்கள்.*

### *பிள்ளையார் சுழி பிறந்தது எப்படி?*

*இது இக்காலத்தில் பலருடைய கருத்துக்களைக் கவர்ந்திருக்கின்றது. அவரவர்களும் தங்கள் அறிவு அநுபவங்களுக்கு ஏற்பக் காரணம் காட்டி வருகின்றார்கள். அவைகளை எல்லாம் தொகுத்துணர்வது கூட உண்மையை அறிந்து கொள்ள உறுதுணையாகும்.*

*சிலர், நம்முடைய எழுத்து வட்ட வடிவமானது. வட்டம் இயற்கையான வடிவம். குழந்தைகள் வட்டம் வட்டமாக எழுதுவதைப் பார்க்கின்றோம். அதுபோல, எழுதத் தொடங்குபவனும் வட்டம் இட்டான். விரைந்து எழுதும்போது வட்டத்தின் முடிவு நீளக் கோட்டில் முடியும். இதற்குப் 'பிள்ளையார் சுழி' என்று பெயர் சூட்டினர் சமயத்துறை சார்ந்த தக்கோர் என்பர்.*

*சிலர், ஏட்டிலும், தாளிலும் எழுதும்போது எழுதுகோலின் நேர்மையை ஆராயச் சுழித்து இழுத்தார்கள். வட்டமும், கோடுமான இருவடிவத்தையும் எழுத இந்த எழுதுகோல் பயன்படுமா என்று பார்க்கச் சுழித்து இழுத்தார்கள். தொடங்கிய எதனையும் பிள்ளையாரோடு சேர்த்து விடும் பெருந்தகையாளர்கள் இதனைப் பிள்ளையார்சுழி என்றனர் என்பர்.*

*சிலர், ஓம் என்பது முதல் எழுத்து, இதனை விரைந்து எழுதும்போது உ இப்படி எழுதினர் நன்றி மறவாத தமிழ் மக்கள். எழுத்துகளுக்கு எல்லாந் தாயாகிய ப்ரணவத்தை முன்னெழுதியே, ஏனையவற்றைப் பின் எழுதினர். இந்தப் பிரணவம் பிள்ளையார் வடிவம். பிரணவத்தின் திரிந்த வடிவம் பிள்ளையார் சுழி என்பர்.*

## *பிரணவமும் - பிள்ளையார் சுழியும்*

*ஓங்காரம், பரம்பொருளை உணர்த்தும் சொல். இதற்கு உயர்த்துவது என்றும் பொருள் உண்டு. ஒருமுறை விதிப்படி உச்சரித்தால் உச்சரித்தவனை உயர்வற உயர்ந்த கதியிற் சேர்ப்பது என்பது கருத்து.*

*உபதேசம் பெற்ற ஆன்மா இதனை உச்சரித்த அளவில், பருவுடல் நுண்ணுடல் காரணவுடல் என்ற மூன்றுடலையும் அகற்றிப் பிரகிருதி மண்டலத்திற்கு மேலே உயர்வன் என்பது விளக்கமாம்.*

*இந்தப் பிரணவமே வேதமூலம். இதனைத் தியானித்து அநுபூதியடைந்தவன் சாவா மூவாப் பேரின்பநிலை எய்துகிறான். இந்தப் பிரணவம் உயிர்க்குற்றங்கள் அனைத்தையும் அகற்றி, அரனடிக்கீழ்ச் சேர்ப்பிக்கின்றது. இதுவே எல்லா ஒலிகட்கும் மூலகாரணம். எல்லாத் தேவர்கட்கும் பிறப்பிடம்.*

*இதன் ஒலிவடிவில் அகாரம் உகாரம் மகாரம் இவை ஒவ்வொன்றின் பின்னரும் மனனுணர்ச்சியாலே (பைசந்திவாக்காக) தியானிக்கப்பெறும் அரைமாத்திரையொலி இவை நான்கும் கூடியுள்ளன. இங்ஙனம் கூடியுள்ள நிலை சமட்டிப் பிரணவம். இதன் வரிவடிவத்தை விளக்க உபநிடதங்களும், ஆகமங்களும் பல உவமைகளை எடுத்துக்காட்டின. அவற்றுள் முண்டகோபநிஷத் 'பிரணவம் வில் வடிவானது'[1] என்றது. சர்ப்ப வடிவான குண்டலினி இது. மூலநாடி, அன்னத்தின் குரல்போன்ற ஒலியுடையது என்கின்றது ஞானசித்தியாகமம்.*

*பிரணவம் ஐந்தெழுத்துக்களுடைய கூட்டம், முதல் உரு நட்சத்திர வடிவு. அதாவது வட்டப்புள்ளி ●. இரண்டாம் வடிவு தண்டம்போலப் படுக்கையில் கிடக்கும் நேர்கோடு —— . மூன்றாம் உரு வட்டம் ○. நான்காம் உரு பிறைமதி. ◡ ஐந்தாம் உருவாகிய பிந்து● புள்ளி வடிவு. இவற்றுள் வட்டப் புள்ளியும் நேர்கோடும் சேர்ந்து உ பிள்ளையார் சுழி ஆகிறது. இந்தச் சுழியை இட்டாலே போதும். பிள்ளையார் வணக்கம் ஆகிவிடுகிறது.*

*முன்னர்க் காட்டிய வண்ணம் ஒலிவடிவிலும் வரிவடிவிலும் ஐந்தன் கூட்டமாகிய பிரணவத்தில் அகரம் சிவம்; உகரம் சக்தி; மகரம் மலம்; நாதம்*

---

*1. "இறைசத்தி பாசம் எழில்மாயை ஆவி*
*உறநிற்கும் ஓங்காரத்துள்" - திருவருட்பயன். பா. 82*
*"ஆமே சிவங்கள் அகார உகாரங்கள்" - திருமந்திரம், பா. 891.*

மாயை; பிந்து உயிர். இவற்றுள் அகர உகர வடிவாக உள்ள உ பிள்ளையார் சுழி சிவசத்திகளின் சேர்க்கையாகும்.

மற்றோரிடத்தில், திருமூலர் அகாரம் உயிர், உகாரம் இறை, மகாரம் மலம் என்று அருளினார்[1]. இக்கருத்தையும் ஊன்றி அநுபவித்து, அகர உகரக் கூறாக இணைந்த பிள்ளையார் சுழியையும் உற்று நோக்குவோம். இறையுடன் நாம் ஒன்றியிருக்கும் நிலையைக் காண்போம். தாடலைபோல அகாரமாகிய உயிர், உகாரமாகிய இறைவனோடு இயைந்து, வடிவம் அற்று, உகரவடிவே வடிவாய் பிள்ளையார் சுழியாய் - அத்துவிதமாய் நிற்கும் சுத்தாத்துவித சித்தாந்த முத்தி நிலையைத் தெரிவிக்கும் குறியீடாகும். இந்த இயைபு நம்மையறியாமலே நம் வாழ்க்கையில் சித்தாந்தச் செந்நெறி கலந்திருப்பதைக் காட்டும் சிறந்த சான்றாகும்.

பிரணவத்தின் ஐந்து கூறுகளுக்கும் உரிய அதிதேவதைகள் இன்னார் இன்னார் என்று கூறவந்த சிவஞானபோதம் அகரத்திற்குப் பிரமனையும், உகரத்திற்குத் திருமாலையும், மகரத்திற்கு உருத்திரனையும், விந்துவிற்கு மகேசனையும், நாதத்திற்கு சதாசிவனையும் கூறிற்று[2]. இதனையும் நம் மனத்துட் கொண்டு பிள்ளையார் சுழியைப் பார்ப்போம். எழுதத் தொடங்குவது என்பது இலக்கிய சிருஷ்டி. அதற்குமுன் பிரமனை அதிதெய்வமாகக் கொண்ட அகரத்தின் கூறாகிய ெ இதனையும், தோன்றிய இலக்கியம் நின்று நிலவுதற் பொருட்டுத் திருமாலை அதிதெய்வமாகக் கொண்ட உகரத்தின் கூறாகிய___ இதனையும் இணைத்து ெ___பிள்ளையார் சுழியாக எழுதுகிறோம். இதன் அடிப்படையுண்மை ''தோன்றிய இலக்கியமாகிய அறிவுக்கோயில், என்றும் நின்று நிலவுவதாகுக" என்று நற்குறிப்பாக இருத்தல் நம்மனோர்க்குச் சிறந்த ஞானவிருந்தாகும். இங்ஙனம் பிரமாதிகளை அதிதெய்வங்களாகச் சொன்னது உபசாரம்.

○ வட்டம் நகாரம். —— படுக்கையான நேர்கோடு மகாரம். 3 இது சிகாரம். ◡ பிறைமதி வகாரம். ● பிந்து யகாரம். இவை திருவைந்தெழுத்தின்

---

1. "அகாரம் உயிரே உகாரம் பரமே
   மகாரம் மலமாய் வருமுப் பதத்தில்" - திருமந்திரம், பா. 975.
2. "எண்ணில வோங்காரத் தீசர் சதாசிவமாம்
   நண்ணிய விந்துவொடு நாதத்துக் - கண்ணில்
   பகரயன்மா லோடு பரமனதி தெய்வம்
   அகரவுக ரம்மகரத் தான்" - சிவஞா. சூத்.4, பா. 4.

*வடிவு[3]. இவற்றில் வட்ட வடிவாகிய நகாரமும் கோட்டு வடிவாகிய மகாரமும் சேர்ந்த பிள்ளையார்சுழி நம என்றதன் வடிவாகும். இதற்கு வணக்கம் என்பது பொருள். வணக்கமாவது ஆணவத்தின் விளைவான தற்போதமடங்கித் தான் சிற்றறிவும் சிறுதொழிலும் உடையவன்; முற்றறிவும் முற்றுத்தொழிலும் உடைய பரம்பொருளின் உடைமை என்பதை அறிந்து அடங்கி இருத்தல். பிள்ளையார் சுழியையிட்டால் பசுபோதம் அடங்கிப் போக, பதிபோதம் மேம்பட்டிருக்கிறது. அப்போது இயற்றப்பெறும் தொழில்கள் யாவும் சிவன் செயலே என்பதைக் காட்டும் அடையாளமாகும்.*

## இனி மற்றொரு முறையும் வேறு பெயரும்

*பிந்து புள்ளி வடிவம்; இது சக்தி. நாதம் சிவம்; இது தண்ட வடிவம். இவ்விரண்டின் இணைப்பு பிள்ளையார் சுழி. நாத பிந்துகளை ஒலிப்பது. எப்படி? முடியாது. அதனானே இது பெயர் மாத்திரையான் உணர வேண்டியதாயிற்று. இத்தகைய அநாதி மூலப் பொருள்களாகிய சிவசத்திகளின் நினைவோடு, அவற்றின் வேறாகாத - இணைந்து உண்டான பிள்ளையாரை நினைவூட்டப் பிள்ளையார்சுழி இடம்பெறுகின்றது. ஒலிக்க முடியாமையால் இதனை 'ஊமை எழுத்து' என்றழைப்பர் பெரியோர். சாத்திர நூல்கள் இதனை மௌனாக்கரம், மூலமனு. மௌனக்குறி என்ற பெயர்களால் வழங்குகின்றன.*

*இதுகாறுங் கூறியவாற்றால், பிள்ளையார் சுழி மூலமனுவாகிய பிரணவத்தின் சிதைந்த வடிவே என்பதும், உயிரும் இறையும், சிவமும் சக்தியும், ஒன்றாகக் கலந்துள்ள நிலையைக் காட்டும் அடையாளமாம் என்பதும், இதனை எழுதுவதன் வாயிலாக ஆன்மாக்கள் தற்போதங்கெட்டு, பதிஞானம் மேவரப்பெறுகின்றனர் என்பதும், அந்நிலையில் இயற்றப் பெறுஞ் செயல்கள் யாவும் சிவன் செயலேயாக விளக்கம் பெறும் என்பதும் உணர்த்தப்பெற்றன.*

---

*3. இந்து சாதனம் ஜய ஆடி 29உ இதழ்.*

# திருவுருத் தத்துவம்

விநாயகர் திருமேனி ஞானமே வடிவானது அவருடைய கரசரணாதி அவயவங்களும் அங்ஙனமே என்பதை விளக்குவாம்.

## திருவடி

ஆன்மாவைப் பொருந்தி நின்று மலகன்ம மாயைகளைத் தொழிற்படுத்தி இருமையின்பத்தையும் அளிப்பது ஞானம். இத்தகைய ஞானம் பொருந்த உயிர்கள் விளக்கம் பெறுகின்றன. அந்த ஞானமே விநாயகப் பெருமானுடைய திருவடிகள். சிவபெருமானை ஞானத் திருவுருவாகக் காட்டும் குமரகுருபர அடிகள் 'ஞானம் திருவடியா' என்றது இதற்குப் பிரமாணம். இந்த ஞானத் திருவடி அன்பரகத் தாமரையிற் பொருந்த உயிர்கள் பிராரத்த வினையால் விளையும் இன்னலும் வலிகுன்றிப்போக, வருவினையும் செய்வினையும் சேராதொழிய என்றும் இன்பம் பெருக உதவுகின்றன.

## பெருவயிறு

ஆகாசம் எல்லாப் பொருள்களும் தன்னகத்து ஒடுங்கவும், உண்டாகவும் இடந்தந்து இருப்பது போலப் பெருவயிறாகிய ஆகாசமும் எல்லா உலகங்களும் உயிர்களும் தம்முள் அடங்கியிருக்கின்றன என்பதைக் குறிப்பிடுவது. விநாயகர் விஸ்வரூபராகையால் அவரிடம் எல்லாம் அடங்கல் இயல்பேயாம். தான் எல்லாவற்றிலும் வியாபகமாய், அவைகளை வியாப்பியமாக அடக்கி விளங்கும் சர்வகாரணத்துவ சக்தியாயுள்ளது பேழை வயிறு என்பது கருத்து.

## ஐங்கரம்

கரம் கன்மேந்திரியமாகிய தொழில்புரி கருவி. விநாயகருக்கு ஐந்து கரங்கள். அவற்றில், ஒரு கரத்தில் பாசம் ஏந்தியிருக்கிறார். பாசம் பற்றுள்ளத்தைப் பிறப்பித்துப் பிணித்து நிற்பது. பிணிப்பு பிறத்தற்கேது. அப்பாசத்தைத் தரித்த கரம் அவரது படைத்தற் தொழிலைக் குறிப்பது. ஒரு கரம் அங்குசம் தரித்தது. அங்குசம் அழிக்குந் தன்மையது. அதனை ஏந்திய கை அவரது அழித்தற்றொழிலை அறிவிப்பது. அமைத்தகரமாகிய அபய கரம் பிறவிக்கடலில் வினைச்சுழலில் துன்ப இன்பச்சுறாவால் துரத்தப்பெற்று ஓடிவருகின்ற உயிர்களுக்கு அஞ்சாமையளித்துக்காப்பது. ஆதலால் இது 'திதி' வன்மையையறிவிப்பது. வரதமும் மோதகமும் ஏந்தியதுமாகிய கரம் அங்ஙனம்

அபயம் பெற்ற உயிர்களின் பரிபாகத்திற்கு ஏற்ப அருளலைச் செய்வதாம். இக்கரம் கீழ்நோக்கியிருப்பது சிறந்த ஞானக்குறி. பிறவிக்கு அஞ்சி வந்தடைந்த ஆன்மாக்கள் அடையுமிடம் திருவடியாகிய முத்திப்பேறு என்பதைக் குறிப்பிப்பது. இவ்வண்ணம் உணர்த்தியும் உலக இன்பத்தையே உயிர்கள் விரும்புமாயின் அவற்றையும் வேண்டியவாறு எய்துக என அள்ளிவீசும் அடையாளமுமாம். துதிக்கை ஊறு உணர்ச்சியும், மணம் அறிதலும், உணவை எடுத்தலும் ஆகிய முத்திறங்களையுடையது. இக்கரம் மோதகத்தை ஏந்தியிருக்கிறது. வரதகரத்தையும் அடுத்துச் சுட்டாமல் சுட்டிக் காட்டுகிறது. இது காட்டியும், மறைத்தும் நிற்கும் திரோதானமாகிய மறைப்புத் தொழிலை அறிவிப்பதாம். இங்ஙனம் ஐந்து திருக்கரங்களும் ஐந்தொழிலை அறிவிப்பன.

## கொம்புகள்

ஒடிந்தகொம்பு, துணை உறுப்பினுள் ஒன்றாகவும் இருந்து, ஆயுதமாகவும் பயன்படும். இது அபரஞானமாகிய விந்து. மற்ற ஒற்றைக்கொம்பு நிலைத்த இறைவனையுணர்தற்கு வாயிலான பரஞானம். கொம்புகளைப் பதிஞானமும் பசுஞானமும் எனக் கூறுதலும் உண்டு. பாசஞானம் வலது கொம்பாகிய ஒடிக்கப் பெற்ற கொம்பு. பாசஞானம் கலைஞானமாகச் சிவஞானத்திற்கு வாயிலாக இருப்பது. அதனாலேயே இது பாரதம் எழுதத் துணையான எழுத்தாணியாக இருந்தது. பாரதம் மன்னர் வரலாற்றைக் குறிக்கும் பாசஞான நூல். அது பலவிடங்களிற் சிவபரத்துவங் கூறி, சிவஞானத்திற்கு வாயிலாகிறது. அதனாலேயே இக்கொம்பு பின் ஒருகால் மாயையுருவினனாகிய கஜமுகன்மேல் ஏவப் பெற்றது. அவனுடைய மலமாயைகளின் வன்மையை விரட்டி ஆட்கொண்டது. இங்ஙனம் இல்லையானால் ஞானவடிவினராகிய விநாயகரின் உபாங்கமாகிய ஞானத்தந்தம் மாயேய உருவினனான அவனைப் பொருந்தாது. இடது கொம்பு பதிஞானம். அதனாலேயே பெருமானைப் பொருந்திப் பிரிவின்றி இருக்கிறது. இங்ஙனம் தந்தத்தை ஞானமாக உருவகித்தே* “கரணம், மாபுலன் ஆணவ கான்மியம், மரணமாகத் திகழ்ந்த மருப்புடன்” என்பர் பெரியோர்.

## தாழ்செவி

திருச்செவிகள் இரண்டும் உயிர்களுக்கு மலவாதனை தாக்காமல் காத்து, வினை வெப்பம் போக்கியருள்வன. இது எல்லாமறியும் தன்மையைக் குறிப்பது.

---

* அருணகிரிபுராணம் : காப்புச் செய்யுள்.

### முக்கண்

உள்ளீடு பெருக்குதலும், வளர்ச்சியும், பதஞ் செய்தலுமாகிய முத்தொழிலைச் செய்யும் சோம சூரிய அக்கினிகள். 'இறைவற்குக் கண் மூன்றும் முச்சுடர்' என்ற இலக்கண நூல் எடுத்துக்காட்டும். இதனை வலியுறுத்தும்.

### பிறைமுடி

உடல், தேய்ந்துபோனாலும், களங்கம் அகன்றது பிறை. அதுபோலத் தவ விரதங்களான் அறியாமை தேய்ந்து உண்மை ஞானம் பெற்ற உயிர்களே சிரத்தானம் எய்துதற்குரியவை என்பதைக் காட்டும் அடையாளமாம்.

### மும்மதம்

உவமையிலாக் கலைஞானமும், உணர்வரிய மெய்ஞ்ஞானமும், திருப்பெருகு சிவஞானமுமாகிய மூன்று மதங்கள். *"ஞானமதம்" என்று உமாபதிசிவம் குறிப்பிடுகிறார்.

### சர்ப்பாபரணம்

உதரபந்தம் பாம்பு, அணி பாம்பு. பூணூல் பாம்பு. பாம்பு குண்டலி சக்தியின் வடிவம். மூலாதாரத்தில் குண்டலியே விநாயகர் விளங்கும் இடம். அச்சக்தி சுருண்ட நிலையிலிருந்து நிமிரின் பாம்பு படம் விரித்து எழுந்து நின்றாற்போல மூலாதாரத்தினின்று சகஸ்திராரம் வரையில் வியாபித்து ஆன்மாவினிடமாகச் சிவம் பிரகாசிக்கச் செய்யும் என்பதைக் குறிப்பதாகும். உந்தியிலும், மார்பிலும், கழுத்திலும், நெற்றியிலும், உச்சியிலும் பாம்பு படம் விரித்து இருப்பது ஆறாதார நிலையில் அங்கங்கே அநுபவிகளுக்கு கிடைக்கும் குண்டலி தரிசனத்தைக் குறிப்பிடுகிறது.

### யானை முகம்

விநாயகப் பெருமான் யானைமுகங்கொண்டமைக்குப் பல காரணங்கள் உள்ளன. யானை விலங்கினங்களுக்குள் மிகப்பெரியது; ஆற்றல்மிக்கது; எதனையும் வருத்தமின்றியே சுமப்பது; எத்துணைப் பெரிய படையாயினும் அஞ்சாது அழித்து வெற்றிகாணும் பெற்றியுடையது; படைக்கெல்லாம் படையாயிருப்பது; காலம் வருந்துணையும் காத்திருந்து எதிரியை அழிக்கும்

---

* சேக்கிழார் புராணம், பா. 1.

*பண்புடையது; இதனை 'ஒளித்த துப்பு' என்பர் புறநானூற்றில். மும்மதம் உடையது. ஏழுமுழம் உயர்ந்தது. ஐந்துறப்பு உறத்தாழ்ந்தது. வனசரம், கிரிசரம், நதிசரம் என்ற மூன்று பகுப்புடையது. உணவு கொடுத்து அன்புடன் பாதுகாக்கும் பாகர்தன் காலில் அடிவைத்தால் முடிமேல் வைத்து உயர்த்துவது. அவர்களுக்கு இடுக்கண் வராமல் பாதுகாப்பது. அவர்கள் கட்ட விரும்பினால் விரும்புமிடத்திற்குச் சங்கிலியையும் தானே கொண்டுபோய்க் கொடுத்து, அவர்கள் கட்டிலகப்பட்டு நிற்பது. இசைக்கு வயப்படுவது. இத்தனை குணங்களும் விநாயகருக்கும் உண்டு.*

*நாயகன் - தலைவன். விநாயகன் - தனக்கு மேற்பட்ட தலைவன் கிடையாது. விநாயகர் தனக்கு தலைவன் தானேயாய், வேறு தலைவனின்றி விளங்குபவர். தேவர்கள் யாருக்குமில்லாத அளவிலாத ஆற்றல் வாய்ந்தவர். இவ்வுலகம் எல்லாவற்றையும் தனது வயிற்றகத்தடக்கி இடையூறு புகுதாமே சுமப்பவர். மாயப் படைகளும் இன்னற் படைகளும் எத்துணை திரண்டு வரினும் அடியார்களுக்காக ஒருசேரத் தாக்கி வெற்றி காணும் வீரகணபதி. கணங்கட்கெல்லாம் பதியாயிருப்பவர். ஆன்மாக்களுக்குப் பக்குவம் வருந்துணையும் பார்த்திருந்து அவர்கள் பரிபாகந்தெரிந்து வினைஎதிரியை வேரறத் தொலைப்பவர். குண்டலியில் விளங்கி, மூலாதாரம் முதல் ஆஞ்ஞை சக்கரம் வரையில் வளர்ந்து, அதனையுங் கடந்த துவாதசாந்தமாகிய ஏழாம் இடத்திலும் உயர்ந்து விளங்குபவர். திருவடிகளும், அபய வரத கரங்களும் திரோதானத்தைச் செய்யும் துதிக்கையுமாகிய ஐந்து உறுப்புக்களும் மிக நீண்டு எங்கிருந்தாலும் அன்பரைத் தேடிக்காக்கும் சிறப்பினையுடையவர். பிரகிருதி தத்துவம், சுத்தவித்தியா தத்துவம், ஈசுவரதத்துவம் என்ற மூன்றிடங்களிலும் விளங்கிப் பிரகிருதி, தெய்வம் பரஞானம் என்ற மூன்று நிலையில் அவரவர்களுக்குத்தகத் தோற்றம் தருபவர். பூவும் நீருங்கொண்டு பொழுதுவழுவாமல் பூசிக்கும் அன்பர்கள். தோய்ந்த அன்போடு திருவடியைத் தொழுதால் அவர்களைத் தலையாய இன்பவுலகில் ஏற்றியிருத்துபவர். தன்னாலும், பிறவுயிர்களாலும், தெய்வங்களாலும் துன்பம் வராமற் பாதுகாப்பவர். தன்னைக் கட்ட அன்பாகிய தொடரைத் தாமே கொடுத்து, அவர்களது உள்ளமெனுங்கூடத்தில், ஊக்கம் என்னுங் கட்டுத்தறியில் கட்டுண்டு நிற்பவர். அவர்கள் அளிக்கும் வினைகளும், பசுபோதமுமாகிய உணவையுட்கொண்டு, அவர்கள் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிக் கூறும் கனிந்த தோத்திரப் பாடலுக்கு வயப்பெற்று அவர்கள் விருப்பப்படி நடப்பவர். இவ்வண்ணம் யானைக்குள்ள குணநலன்கள்*

அனைத்தும் தமக்கும் இருப்பதாலே யானை முகத்தைக் கொண்டருளினர். அதிலும், தாம், உயர்திணை அஃறிணையென்ற திணைப்பாகுபாடு, ஆண் பெண் என்ற பாற்பாகுபாடு இவற்றைக் கடந்து விளங்கும் நிலையைத் தெரிவிக்க ஒற்றைக்கொம்பும் யானைமுகமும் தேவ உடலும் கொண்டு திகழ்கிறார்.

நச்சினார்க்கினியர், யானை நாதத்திற்றோன்றியது என்பர். இதனாலும் விநாயகர் பரநாதவடிவினராதலாலும் யானைமுகத்தோராயினர் எனலாம். அதுவும் ஈண்டு இணைத்துச் சிந்தித்தற்குரியது.

மேலும் தெய்வ வணக்கம் நமது நாட்டில் பிள்ளைமைப் பருவத்திலேயே பிள்ளையார் வணக்கத்திலிருந்துதான் தோன்றுகின்றது என்று முன்னர்க் கூறினோம். குழந்தைகளுக்கு யானையைப் பார்ப்பதில் தனி ஆவல். அதிலும் ஒருமுறை இருமுறையல்ல; பலகாலும் பார்க்க ஆசை. விநாயகரையும் ஒருமுறை இருமுறையல்ல; பலகாலும் பார்க்க நமக்கு விருப்பம் உளதாகும். யானையின் உருவம் பார்த்தால் மனத்தைவிட்டகலாது. அதுபோலவே விநாயகரை ஒருமுறை வணங்கினாற் போதும், உருவம் நெஞ்சைவிட்டு அகலாது. இத்துணை ஏதுக்களால் விநாயகர் யானையின் முகத்தை ஏற்றார் என்பது அறிந்து இன்புறற்குரியது.

வாழைக் கனிபல வின்கனி
    மாங்கனி தாஞ்சிறந்த
கூழைச் சுருள்குழை அப்பம்எள்
    ளுண்டைஎல் லாந்துறுத்தும்
பேழைப் பெருவயிற் றோடும்
    புகுந்தென் உளம்பிரியான்
வேழத் திருமுகத் துச்செக்கர்
    மேனி விநாயகனே.

- கபிலதேவ நாயனார்.

## பிள்ளையார் வகைகள்

*கடவுளைப் பூசிக்கும் அன்பர்களுடைய மனம், அவரவர்களுடைய பரிபாகத்திற்கு ஏற்பப் பல்வேறு நிலைகளில், பலவேறு திருவுருவ அமைப்பில் ஈடுபடுகின்றது; ஒன்றுகிறது; உருவேற்றுகிறது; உயர்கிறது; இவ்வண்ணமாகிய இடையறாத தியானம், எல்லா இன்பங்களையும் அளித்து, ஈடேறச் செய்கிறது. விநாயகப் பெருமானுடைய திருவுருவமும், அன்பர்களுக்காக முப்பத்திரண்டாகப் போற்றப் பெறுகின்றது.*

### *1. பால கணபதி*

*நான்கு திருக்கரங்களும், யானை முகமும் உடையவர், உதிக்கின்ற செங்கதிர் போன்ற நிறம் உடையவர். குழந்தைத் திருமேனியுடையவர். வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு இவற்றை நான்கு திருக்கரங்களிலும் தாங்கியவர். இவரது துதிக்கையில் மோதகம் விளங்கும்.*

### *2. தருண கணபதி*

*எட்டுத் திருக்கரங்களையும், யானை முகத்தையும் உடையவர். கைகளில் பாசம், அங்குசம், பணியாரமாகிய மோதகம், விளாம்பழம், நாவற்பழம், ஒடிந்த தன்கொம்பு, நெற்கதிர், கரும்பின் துண்டு இவைகளையுடையவர். நண்பகல் தோன்றுகின்ற சூரியனைப் போன்ற நல்ல சிவந்த திருமேனி படைத்தவர்.*

### *3. பக்த கணபதி*

*சரத்காலத்து நிறைமதி போன்ற வெண்ணிறம் படைத்தவராக, தேங்காய், மாம்பழம், வாழைப்பழம், பாயஸ பாத்திரம் இவற்றை நான்கு திருக்கரங்களில் ஏந்தி, யானைமுகமும் உடையவராக விளங்குபவர்.*

### *4. வீர கணபதி*

*வேதாளம், வேல், அம்பு, வில், சக்கரம், கத்தி, கேடகம், சம்மட்டி, சுதை, அங்குசம், நாகம், பாசம், சூலம், குந்தாலி, மழு, கொடி ஆகிய பதினாறையும் தாங்கிய பதினாறு திருக்கரங்களையும், சிவந்த திருமேனியையும், சிறிது சினந்த திருமுகத்தையும் உடையவர்.*

### 5. சித்தி கணபதி

*செவ்வந்தி வானம் போன்ற நிறமுடையவராக, பச்சைநிற மேனியளாகிய தேவியைத் தழுவிக்கொண்டு இருப்பவர். ஒருவர்க்கொருவர் இடுப்பில் கைகொடுத்துத் தழுவிக்கொண்டிருப்பது தனியழகு. பாசம், பூமாலை இவற்றைத் தாங்கிய திருக்கரத்துடன் அஞ்சலென்கிற அபயகரமும் உடையவர்.*

### 6. துவிஜ கணபதி

*நான்கு திருக்கரங்களிலும் முறையே புத்தகம், அட்சமாலை, தண்டம், கமண்டலம் இவற்றைத் தரித்தவர். மின்னற் கொடிபோல விளங்குகின்ற கைவளையல்களை உடையவர். சந்திரன்போல வெண்மையானவர். நான்கு யானைமுகங்களை உடையவர்.*

### 7. சித்தி கணபதி

*மாம்பழம், பூங்கொத்து, கரும்புத்துண்டு, எள்ளுருண்டை, பரசு இவற்றைத் துதிக்கையுள்பட ஐந்து கரங்களில் தரித்தவரும், பொன்கலந்த பசுமை நிறமுடையவருமாக விளங்குபவர்.*

### 8. உச்சிஷ்ட கணபதி

*நீலோற்பலம், மாதுளம்பழம், வீணை, நெற்கதிர், அட்சமாலை இவற்றைத் தரித்தவரும், நீலநிறத் திருமேனி உடையவருமாக விளங்குபவர்.*

***வேறுவகை :*** *பெண்ணின் யோனியில் துதிக்கையை வைத்தவராக காம மோகிதராக விளங்குபவர். நீலவர்ணம் உடையவர்.*

### 9. விக்ன கணபதி

*சங்கு, கரும்புவில், புஷ்பபாணம், கோடரி, பாசம், சக்கரம், கொம்பு, மாலை, பூங்கொத்து, பாணம் முதலியவற்றோடு கூடிய திருக்கரங்களையுடையவரும், ஆபரணங்களை நிரம்பத் தரித்தவரும், பொன்மேனியருமாக விளங்குபவர்.*

### *10. க்ஷிப்ர கணபதி*

*தந்தம், கற்பகக்கொடி, பாசம், ரத்னகும்பம், அங்குசம் இவற்றை ஏந்தியவர். செவ்வரத்தம்பூப் போன்ற அழகிய மேனியர். செந்நிறமானவர்.*

### *11. ஏரம்ப கணபதி*

*அபயம், வரதமாகிய கைகளையுடையவர். பாசம், தந்தம், அட்சமாலை, மாலை, பரசு, சம்மட்டி, மோதகம், பழம் இவற்றைத் தாங்கியவர். சிங்க வாகனத்தில் ஏறியவர். யானை முகம் ஐந்துடையவர். பசுமைகலந்த கருமை நிறம் உடையவர்.*

### *12. லட்சுமி கணபதி*

*எட்டுக் கைகளிலும் கிளி, மாதுளம்பழம், கலசம், அங்குசம், பாசம், கற்பகக் கொடி, கட்கம், வரதம் இவற்றையுடையவர். அமுதப் பிரவாகம் போன்ற வெண்மை நிறத்தோடு நீலத் தாமரைப் பூவை ஏந்திய இரு பெருந்தேவிமார்களோடு திகழுபவர்.*

### *13. மஹா கணபதி*

*மாதுளம்பழம், கதை, கரும்பு, வில், சக்கரம், தாமரை, பாசம், நீலோத்பலம், நெற்கதிர், தந்தம், ரத்னகலசம் இவற்றைத் திருக்கரங்களில் தாங்கியவர். செங்கதிர் போன்ற நிறம் உடையவர். முக்கண்ணர். பிறைமுடியர். மடிமீது எழுந்தருளியிருக்கிற தாமரையை ஏந்திய தேவியாற் சுவையோடு தழுவப்பெற்றவர்.*

### *14. விஜய கணபதி*

*பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவைகளைத் தரித்தவர். பெருச்சாளி வாகனத்தில் ஏறியிருப்பவர். செந்நிறமானவர்.*

### 15. நிருத்த கணபதி

இவர் கூத்தாடும் பிள்ளையார் எனப்பெறுவர். மோதிரங்களணிந்த விரல்களையுடைய கைகளால் பாசம், அங்குசம், அபூபம், கோடரி, தந்தம் இவைகளைத் தரித்தவர். பொன்போற் நிறமுடைய திருமேனியர். கற்பக விருட்சத்தினடியில் எழுந்தருளியிருப்பவர்.

### 16. ஊர்த்துவ கணபதி

நீலப்பூ, நெற்பயிர், தாமரை, கரும்புவில், பாணம், தந்தம் இவற்றையுடையவர். பொன்வண்ண வண்ணர், பச்சைநிற மேனியோடு விளங்குகின்ற தேவியைத் தழுவியிருப்பவர்.

### 17. ஏகாட்சர கணபதி

செந்நிறமானவர், செம்பட்டாடையர். செம்மலர் மாலையர். பிறை முடியர். முக்கண்ணர். குறுந்தாளர். குறுங்கையர். மாதுளம்பழம், பாசம், அங்குசம், வரதம் இவை தாங்கிய கரங்களையுடையவர். யானைமுகவர். பதுமாசனத்திருப்பவர். பெருச்சாளி வாகனர்.

### 18. வர கணபதி

செவ்வண்ணர், யானை முகவர், முக்கண்ணர், பாசம் அங்குசங்களைத் தரித்தவர். தேன் நிறைந்த மண்டையையுடையவர். பிறைமுடியர்.

### 19. திரயாக்ஷர கணபதி

அசைகின்ற செவிகளில் சாமரையணிந்தவர். பொன்னிறமானவர். நான்கு கரங்களை உடையவர். பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைத் தாங்கியவர். துதிக்கை நுனியில் மோதகம் உடையவர்.

### 20. க்ஷிப்ரபிரசாத கணபதி

பாசம், அங்குசம், கல்பலதை, மாதுளம்பழம், தாமரை, தருப்பை விஷ்டரம் இவற்றைத் தரித்தவர். திருவாபரணங்களை அணிந்தவர். பேழை வயிற்றையுடையவர்.

### *21. ஹரித்திரா கணபதி*

*மஞ்சள் நிறமானவர், நான்கு கரங்களையுடையவர். அவற்றில் பாசம், அங்குசம், தந்தம், மோதகம் இவற்றைத் தரித்திருப்பவர்.*

### *22. ஏகதந்த கணபதி*

*பேழை வயிற்றுடன் நீலமேனியர். கோடரி, அட்சமாலை, லட்டு, தந்தம் இவற்றையுடையவர்.*

### *23. சிருஷ்டி கணபதி*

*பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைக் கரங்களில் ஏந்தியவர். பெருச்சாளி வாகனத்தையுடையவர். சிவந்த மேனியர்.*

### *24. உத்தண்ட கணபதி*

*நீலம், தாமரை, மாதுளம்பழம், கதை, தந்தம், கரும்புவில், ரத்னகலசம், பாசம், நெற்கதிர், மாலை இவற்றையேந்திய பத்துக்கைகளை உடையவர். அழகிய தாமரைப் பூவை ஏந்திய, பச்சை மேனியளாகிய தேவியால் தழுவப்பெற்றவர்.*

### *25. ரணமோசன கணபதி*

*பாசம், அங்குசம், தந்தம், நாவற்பழம் இவற்றைத் தரித்தவர். வெண்பளிங்கு போன்ற மேனியர். செந்நிறப் பட்டாடையுடுத்தியவர்.*

### *26. துண்டி கணபதி*

*அட்சமாலை, கோடரி, ரத்னகலசம் இவற்றை ஏந்தியவர்.*

### *27. துவிமுக கணபதி*

*தந்தம், பாசம், அங்குசம், ரத்னபாத்திரம் இவற்றைக் கையில் ஏந்தியவர். பசுநீல மேனியர், செம்பட்டாடையும், ரத்தின கிரீடமும் அணிந்தவர். இருமுகம் உடையவர்.*

### 28. மும்முக கணபதி

வலது கைகளில் கூரிய அங்குசம், அட்சமாலை, வரதம் இவற்றை உடையவர். இடது கைகளில் பாசம், அமுதகலசம், அபயம் இவற்றை உடையவர். பொற்றாமரை ஆசனத்தின் நடுப்பொகுட்டில் மூன்று முகங்களோடு எழுந்தருளியிருப்பவர். புரசம் பூப் போன்ற சிவந்த நிறம் உடையவர்.

### 29. சிங்க கணபதி

வீணை, கற்பகக்கொடி, சிங்கம், வரதம் இவற்றை வலது கைகளில் தாங்கியவர். தாமரை, ரத்னகலசம், பூங்கொத்து, அபயம் இவையமைந்த இடது கைகளையுடையவர். வெண்ணிறமான மேனியர். யானை முகவர். சிங்க வாகனத்தில் எழுந்தருளியிருப்பவர்.

### 30. யோக கணபதி

யோக நிலையில், யோக பட்டம் தரித்துக் கொண்டு, இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு இந்திர நீலம் போன்ற ஆடையை உடுத்திக்கொண்டு பாசம், அக்ஷமாலை, யோகதண்டம், கரும்பு இவற்றை ஏந்தி இருப்பவர்.

### 31. துர்க்கா கணபதி

சுட்ட பசும்பொன்னிறம், எட்டுக்கை, பெரிய மேனி, அங்குசம், பாணம், அட்சமாலை, தந்தம் இவைகளை வலது கைகளில் ஏந்தியவர். பாசம், வில், கொடி, நாவற்பழம் இவைகளை இடது கைகளில் உடையவர். செந்நிற ஆடையர்.

### 32. சங்கடஹர கணபதி

இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு, இடப்பாகத் தொடையில் அம்மையை உடையவர். அம்மை பசியமேனியளாக, நீலப்பூவை ஏந்தியவளாக இருப்பள். வலது கையில் அங்குசம், வரதம் உடையவர். இடது கையில் பாசம், பாயசபாத்திரம் ஏந்தியவர்; செந்தாமரைப் பீடத்தில் இருப்பவர். நீலநிறமான ஆடையணிந்தவர்.

## கோயில் திருப்பண்ணியர் விருத்தம்

*சிவநெறிச் செல்வர்களாற் கோயில் எனச் சிறப்பித்துப் போற்றப்பெறும் பெரும்பற்றப் புலியூராகிய தில்லைச் சிற்றம்பலத்திலே எழுந்தருளியுள்ள கூத்தப் பெருமானைப் போற்றும் கட்டளைக் கலித்துறையாகிய திருவிருத்தங்களால் இயன்ற பனுவலாதலின் இது கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம் என யாப்பினாற் பெயர் பெறுவதாயிற்று. பண்ணோடியன்ற பாடல் என்ற பொருளிற் பண்ணியர் விருத்தமென்பது லகரத்திற்கு ரகரம் போலியாய்ப் பண்ணியர் விருத்தமென்றாகித் திருப்பண்ணியர் விருத்தமென வழங்கப் பெற்றதெனக் கொள்ளுதல் பொருந்தும். கட்டளைக் கலித்துறையைத் திருவிருத்தமென வழங்கும் வழக்கம் உண்மை திருநாவுக்கரசர் அருளிய திருவிருத்தமாகிய திருப்பதிகங்களின் பெயராலும் நம்மாழ்வார் அருளிய திருவிருத்தம் என்ற பிரபந்தத்தின் பெயராலும் இனிது புலனாம். இனி, 'கோயில் திருப்பண்ணியர்' என்ற தொடர்க்குத் 'தில்லைப் பெருங்கோயிலில் எழுந்தருளியிருந்து உயிர்களுக்குத் திருத்தகவிற்றாகிய இன்னருளைப் புரிவார்' எனப் பொருள் கொண்டு, பாட்டுடைத் தலைவனாகிய இறைவன் பெயரால் கோயிற்றிருப்பண்ணியர் விருத்தமென இந்நூல் பெயரெய்தியதெனக் கொள்ளினும் அமையும். அந்தாதியாகவமைந்த இப்பிரபந்தம், எழுபது கட்டளைக் கலித்துறைகளை யுடையதாகும். திருநாரையூர்ப் பொள்ளாப் பிள்ளையார் அறிவுறுத்தியபடி தில்லைப் பெருங்கோயிலையடைந்து தேவாரத் திருமுறைகளைக் காண விரும்பிய நம்பியாண்டார் நம்பிகள் இப்பனுவலைப் பாடித் தில்லைச் சிற்றம்பலவனை யிறைஞ்சிப் போற்றினார் என்பது வரலாறு.*

*'முற்காலத்திலே தேவர்கள் உய்யும் வண்ணம் ஆலகால நஞ்சினையுண்டு மிடற்றிலடக்கிய பெரியோனே, தில்லைச் சிற்றம்பலத்தில் திருக்கூத்தியற்றி நின்ற செம்பவளம் போலும் நிறமமைந்த திருமேனியையுடைய சிவபெருமானே, எனதுள்ளத்திலுள்ள வஞ்சனை முதலிய குற்றங்களை நீக்கி நெஞ்சத்தை நினது திருவடிக்கீழ் நிலைபெறவைத்து மலர்போலுங் கண்களில் கண்ணீர் ததும்ப நின்னை வணங்கிப் போற்றினேனல்லேன். ஒரு சிறிதும் தகுதிபெறாத எளியேனையும் நீ ஆட்கொண்டருளினாய். நினது திருவருட்கு யான் என்ன தகுதியுடையேன் என என்னைக் கண்ட பிறரெல்லாம் நின்னைக் கடிந்துரைப்பரல்லரோ' எனத் தில்லைப் பெருமானை நோக்கி நம்பியாண்டார் நம்பிகள் உளமுருகிப் போற்றுவதாக அமைந்தது.*

*நெஞ்சந் திருவடிக் கீழ்வைத்து நீண்மலர்க் கண்பனிப்ப*
*வஞ்சங் கடிந்துன்னை வந்தித்திலேன் அன்று வானருய்ய*
*நஞ்சங் கருத்து பெருந்தகையே நல்ல தில்லைநின்ற*
*அஞ்செம் பவளவண்ணா அருட்கியானினி யாரென்பனே*

*எனவரும் இப்பிரபந்தத்தின் முதல் திருவிருத்தமாகும்.*

*இறைவன் உயிர்களது பிறவி நோயைக் களைதற்பொருட்டே தில்லைச் சிற்றம்பலத்தில் திருக்கூத்தியற்றுகின்றான். எவ்வுயிர்க்குந் தாயுந் தந்தையுமாகிய அவ்விறைவனது திருவடியே அடியேற்குத் தலைமறை நன்னிழலாவது. காளத்திமலையில் தன்னை வழிபட்ட வேடுவராகிய கண்ணப்பர்க்கு வேண்டும் வரமருளிப் பொருவில் அன்புருவமாகிய தெய்வத் தன்மையை வழங்கிய பேரருளாளன் அவ்விறைவனாவன். பொன்னம்பலத்துறை புண்ணியனாகிய அவனுக்குப் பண்டைப் பறைச் சேந்தன் அன்பினால் அளித்த பழைய சோறும் திருவமுதாயிற்று. அம்பலவாணனாகிய அவனருளால் நம்பியாரூரராகிய சுந்தரரும் கழறிற்றறிவாராகிய சேரமான் பெருமாளும் முறையே வெள்ளை யானை மீதும் குதிரை மீதும் அமர்ந்து மக்கள் யாக்கையோடு திருக்கயிலையை யடைந்து இன்புற்றார்கள். கல்லாலெறிந்த சாக்கியனார்க்கும் இறைவன் எதிர்தோன்றி இன்னருள் புரிந்தான். கண்ணப்பர் அன்பினாற் படைத்த இறைச்சியையும் அதிபத்தரென்பார் விடுத்த மீனையும் இழித்தொதுக்கத் தக்கன எனவெண்ணாது ஏற்றுக் கொண்டமையால் உயிர்கள் செய்யும் பழிக்கத்தக்க செயல்களையும் இகழாத பண்புடையான் இறைவன் என்பது புலனாம். தன்னை வழிபடுவாரனைவர்க்கும் மீளாவழியாகிய பேரின்பத்தை வழங்கவேண்டிச் சிவபெருமான் மன்றாடவும் சில ஊமர்கள் அவ்விறைவன் திருவருளில் நாட்டமின்றிப் பிறப்பிறப்பில் வீழ்ந்து தடுமாறுதல் அந்தோ இரங்கத்தக்கது. தில்லைமன்னனாகிய சிவபெருமானைத் தம் சித்தகக் கோயிலில் இருத்தி வழிபடும் ஆகமசீலர்க்கன்றி நூல்களைக் கற்றும் கற்றவழியடங்கி நில்லாத வெறும் புத்தகப் பேய்களுக்கு அவன் பொன்னடி புலப்படுதலில்லை என நம்பியாண்டார் நம்பிகள் இந்நூலில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.*

*திருவாதவூரடிகளாகிய மாணிக்கவாசகசுவாமிகள் இறைவன் திருவடிக்கே பொருளமைத்து அகனைந்திணையாகிய இன்பத்துறையிற் பாடிய திருச்சிற்றம்பலக் கோவையாகிய செந்தமிழ்ப் பனுவல் உயர்வுற*

*வுயர்ந்த நலமுடைய தென்றும், அதன் பொருள் நலங்களைத் தெளிந்து கொள்ளு வன்மை பெறாத புலவர் சிலர் அகப்பொருட்டுறையமையத் தாமும் பல பாடல்களைப் பாடுதல் அறிஞரது நகைப்பிற்கு இடந்தருவதாமென்றும் விளக்குவதாக அமைந்தது.*

*வருவாசகத்தினின் முற்றுணர் ந்தோனை வண்தில்லை மன்னைத்*
*திருவாதவூர்ச் சிவபாத்தியன் செய்திருச் சிற்றம்பலப்*
*பொருளார்தருதிருக் கோவை கண்டேயும் மற்றப் பொருளைத்*
*தெருளாத வுள்ளத்தவர் கவிபாடிச் சிரிப்பிப்பரே. 1079*

*என்ற பாடலாகும். திருச்சிற்றம்பலக் கோவையில் நம்பியாண்டார் நம்பிகள் கொண்ட பெருமதிப்பு இச்செய்யுளால் இனிது புலனாதல் காண்க.*

*'பெரிய அன்பின் வரகுணதேவர்' எனப் பட்டினத்தடிகளாற் போற்றப் பெற்ற வரகுணபாண்டியர் திருநீற்றின்மேல் வைத்த உறைப்புடைய பேரன்பைப் புலப்படுத்தும் வரலாற்று நிகழ்ச்சியினை,*

*பொடியேர் தருமேனியனாகிப் பூசல் புகவடிக்கே*
*கடிசேர் கணைகுளிப்பக்கண்டு கோயிற் கருவியில்லா*
*அடியேபட வமையுங்கணை யென்ற வரகுணன்றன்*
*முடியேதருகழல் அம்பலத் தாடிதன் மொய்கழலே. 1083*

*எனவரும் பாடலில் நம்பியாண்டார் நம்பிகள் குறிப்பிட்டுப் போற்றினமை படித்துணர்ந்து மகிழ வேண்டிய பகுதியாகும்.*

## நம்பியாண்டார் நம்பிகள்

*அருளிச்செய்த*

## 32. கோயில் திருப்பண்ணியர் விருத்தம்

*கட்டளைக் கலித்துறை*

*திருச்சிற்றம்பலம்*

1022. நெஞ்சந் திருவடிக் கீழ்வைத்து, நீள்மலர்க் கண்பனிப்ப
வஞ்சம் கடிந்துன்னை வந்திக்கி லேன்அன்று வானருய்ய
நஞ்சங் கருந்து பெருந்தகை யே;நல்ல தில்லைநின்ற
அஞ்செம் பவளவண் ணா!வருட் கியானினி யாரென்பனே. 1

1023. என்பும், தழுவிய ஊனும், நெகஅக மேயெழுந்த
அன்பின் வழிவந்த வாரமிர் தே!யடி யேனுரைத்த

---

*1022. கோயில் - தில்லைத் தலம். பண்ணியர் - கூத்தாடுபவர். இங்கு 'விருத்தம்' எனப்பட்டது கட்டளைக் கலித்துறையே. முதற்காலத்தில் இவ்வாறு வழங்கப்பட்டது. இதுவும் ஓர் அந்தாதியே.*

***குறிப்புரை :*** *"நஞ்சு அங்கு அருந்து" என்பதில் அங்கு, அசை. "அன்று வானர் உய்ய... பவள வண்ணா" - என்பதை முதலிற் கொள்க. மலர்க் கண் - மலர்போலும் கண்கள். பனிப்ப - நீரைத் துளிக்க. "உன்னை வந்திக்கிலேன்; இனி (உன்) அருட்கு 'யார்' என்பன்" என வினை முடிக்க. அருட்கு - அருளைப் பெறுதற்கு. யார் - என்ன உரிமையுடையேன். "யார்" என்னும் வினாவினைக் குறிப்பு, உயர்திணை முப்பாற்கும் உரித்தாகலானும், 'தன்மைச் சொல் உயர்திணையது' என்றல் பழைய வழக்கு ஆதலாலும் அது "நான் ஆர்"[1] என்றாற் போல வருதல் இலக்கணமேயாதலின் இங்கு "யான் யார்" என வந்தது. "உன் உள்ளம் ஆர்"[2] என்பது உயர்திணையாயினாரது உள்ளமே யாதலின் அது, "எம் கோதைகூட்டுண்ணிய தான் யார்மன்" - என்பதிற் திணைவழுவமைதியாம் - 'என்பர்' என்பது பாடமன்று.*

***1023. குறிப்புரை :*** *"வளர் தில்லைதன்னுள்... விண்ணவனே" என்பதை, "ஆனமிர்தே" என்பதன் பின்னர்க் கூட்டுக. என்பும், 'அதனைத் தழுவிய ஊனும்' என்க. நெக - நெகிழ்ந்து உருகும்படி. இறைவனை "அமிர்து" என்றதற்கு ஏற்ப, அன்பை, 'கடல்' என உருவகம் செய்யாமையால் இஃது*

---

*1. திருவாசகம் - திருக்கோத்தும்பி - 2.*
*2. தொல்காப்பியச் சேனாவரையம் - சூ. 210 மேற்கோள்*

வன்புன் மொழிகள் பொறுத்திகொ லாம்;வளர் தில்லைதன்னுள்
மின்புன் மிளிர்சடை வீசிநின் றாடிய விண்ணவனே. 2

1024. அவநெறிக் கேவிழப் புக்கவிந் தியானழுந் தாமைவாங்கித்
தவநெறிக் கேயிட்ட தத்துவ னே!அத் தவப்பயனாம்
சிவநெறிக் கேயென்னை உய்ப்பவ னே!சென னந்தொறுஞ்செய்
பவமறுத் தாள்வதற் கோ,தில்லை நட்டம் பயில்கின்றதே. 3

1025. பயில்கின் றிலேன்நின் திறத்திரு நாமம்; பனிமலர்த்தார்
முயல்கின் றிலேன்நின் திருவடிக் கேயப்ப; முன்னுதில்லை
இயல்கின்ற நாடகச் சிற்றம் பலத்துளெந் தாய்!இங்ஙனே
அயர்கின்ற நானெங்ங னேபெறு மாறுநின் னாரருளே. 4

---

*ஏகதேச உருவகம். "அன்பினில் விளைந்த ஆரமுதே"* என்பது காண்க. வன்மை - செவி பொறுக்க ஒண்ணாமை. புன்மை - பொருட் சிறப்பு இன்மை. கொல், அசை. ஆம், உரையசை. 'போதும்' என்றபடி, "அகமே எழுந்த அன்பின் வழி வந்த ஆரமிர்தே" என்றமையால் 'அன்பர் சொல்லை ஏற்கின்ற நீ அன்பில்லாத என் சொல்லையும் கருணையினால் ஏற்பாய் போலும்' என்பது குறிப்பாயிற்று.*

***1024. குறிப்புரை :*** *நெறிக்கே - நெறிக்கண்ணே; உருபு மயக்கம். புக்கு - சென்று. அவிந்து - (வீணே) இறந்து. அழுந்தாமை - பின்பு நரகத்தில் அழுந்தாதபடி. வாங்கி - மீட்டு. தவநெறி - பசு புண்ணிய வழி. பசு புண்ணியங்கட்கு இடையே நிகழும் அபுத்தி பூர்வ சிவ புண்ணியங்களே புத்தி பூர்வ சிவ புண்ணியமாகிய சிவ நெறியிற் சேர்க்குமாயினும் சிவநெறியை அத்தகைய அபுத்தி பூர்வ புண்ணியங்கட்குத் துணையாகும் பசு புண்ணியங்களின் பயனாகவே கூறினார். தத்துவன் - மெய்ப்பொருளாய் உள்ளவன். 'நீ நடம் பயில்கின்றது (உயிர்களை அவை) செய் பவம் அறுத்து ஆள்வதற்கோ' என்க. பவம் - பாவம். ஓகாரம் சிறப்பு. எனவே, 'பவம் அறுத்து ஆள்வதற்கே' என்பதாம். 'தில்லைப் பெருமான் திருநடம் புரிதல் உயிர்களுக்கு வீடுபேற்றைத் தருதற் பொருட்டே' என்பதாம். இதனானே, தில்லை, 'காண முத்தி தரும் தலம்' எனப்படுகின்றது.*

***1025. குறிப்புரை :*** *அப்புதல், இங்குச் சாத்துதலைக் குறித்தது. 'பனி மலர்த்தால் அப்ப முயல்கின்றிலேன்' என்க. அயர்தல் - இளைத்தல். எந்தாய் - என் தந்தையே.*

---

* *திருவாசகம் - பிடித்த பத்து - 3.*

**1026.** அருதிக்கு விம்ம நிவந்த(து)ஓர் வெள்ளிக் குன்றமஞ்சு
பருதிக் குழவி யுமிழ்கின்றதே யொக்கும்; பற்றுவிட்டோர்
கருதித் தொழுகழற் பாதமும், கைத்தலம் நான்கும்,மெய்த்த
சுருதிப் பதமுழங் குந்தில்லை மேய சுடரிருட்கே. **5**

**1027.** சுடலைப் பொடியும் படுதலை மாலையும், சூழ்ந்தவென்பும்
மடலைப் பொலிமலர் மாலைமென் தோள்மேல் மயிர்க்கயிறும்
அடலைப் பொலிஅயில் மூவிலை வேலும் அணிகொள்தில்லை
விடலைக்கென் ஆனைக் கழ(கு)இது வேத வினோதத்தையே. **6**

---

***1026. குறிப்புரை :*** *"பற்று விட்டோர்" என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க. மெய்த்த - திருமேனியால் அமைந்த. சுருதி முழங்கும் சுடர் என இயைக்க. சுருதி - வேதம். அதுவே கூத்தப் பெருமான் காலில் அணியும் சிலம்பு ஆதலின், 'சுருதி பதத்தின்கண் முழங்கும் சுடர்' என்றார். "சுருதிப்பதம்" என்பதில் பகர ஒற்று, எதுகை நோக்கி விரிக்கப்பட்டது. 'பதத்தின்கண்' என ஏழாவது விரிக்க. சுடர், கூத்தப் பெருமான். இருட்கு - இருளை நீக்குதற்கு. 'தில்லை மேயசுடர், இருட்டு மஞ்சு பருதிக் குழவியை உமிழ்க்கின்றதே ஒக்கும்' என இயைத்து முடிக்க. பருதிக் குழவி, இள ஞாயிறு. மஞ்சு - மேகம். சிவபெருமானது திருநீறு நிறைந்த திருமேனிமேல் யானைத் தோற் போர்வையிருத்தலால், 'அத்தோல் வெள்ளி மலைமேல் கவிந்த மேகம் போலவும், யானைத் தோற் போர்வையின் ஊடே ஊடே வெளிப்படுகின்ற சிவபெருமானது திருமேனியின் ஒளி, இளஞாயிறு வீசும் கதிர்கள் போலவும் உள்ளன' என்பதாம். 'சுடரினுக்கே' என்பது பாடமன்று. 'அருந்திக்கு' என்பதில் நகர ஒற்று எதுகை நோக்கித் தொகுக்கப்பட்டது. திக்கு - திசைகள். விம்ம - நிறையும்படி. நிவந்தது - ஓங்கியது.*

***1027. குறிப்புரை :*** *"மடலை, அடலை என்பவற்றில் ஐகாரம் சாரியை. அடல் - வெற்றி. அயில் - கூர்மை. மயிர்க்கயிறு, பஞ்ச வடம். இதனை மாவிரதிகள் சிறப்பாக அணிவர். 'அணியாக' என ஆக்கம் விரிக்க. 'குரிசில்' என்பதுபோல 'விடலை' என்பதும் தலைவருக்கு உரிய பெயர். வினோதம் - பொழுதுபோக்கு. "செலியரத்தை நின் வெகுளி"[1] என்பதிற்போல இப்பாட்டின் ஈற்றில் வந்த "அத்தை" என்னும் அசைநிலை இடைச்சொல். "அத்தின் அகரம் அகரமுனையில்லை"[2] எனச் சாரியை இடைச்சொற்கு ஓதிய முறையானே முதலில் உள்ள அகரம் கெட்டு நின்றது.*

---

1. *புறம் - 6.*
2. *தொல் - எழுத்து - உருபியல்.*

**1028.** வேத முதல்வன் தலையும் தலையாய வேள்விதன்னுள்
நாத னவனெச்சன் நற்றலை யும்,தக்க னார்தலையுங்
காதிய தில்லைச்சிற் றம்பலத் தான்கழல் சூழ்ந்துநின்று
மாதவ ரென்னோ மறைமொழி யாலே வழுத்துவதே. 7

**1029.** வழுத்திய சீர்த்திரு மாலுல குண்டு,வன் பாம்புதன்னின்
கழுத்தரு கேதுயின் றான்உட்கப் பாந்தளைக் கங்கணமாச்
செழுத்திரள் நீர்த்திருச் சிற்றம் பலத்தான் திருக்கையிட,
அழுத்திய கல்லொத் தன்ஆய னாகிய மாயவனே. 8

**1030.** மாயவன், முந்நீர்த் துயின்றவன், அன்று மருதிடையே
போயவன் காணாத பூங்கழல், நல்ல புலத்தினர்நெஞ்(சு)

---

***1028. குறிப்புரை :*** *வேத முதல்வன், பிரமன். எச்சன் - யாக தெய்வம். காதிய - அழித்த. “வேள்வி வேத ஒழுக்கம். ஆயினும் வேள்வியில் வேத முதல்வன் தலையையும், வேள்வித் தேவன் தலையையும், வேட்டோன் தலையையும் அறுத்த சிவபெருமானை அந்தணர்கள் வேத மந்திரங்களைச் சொல்லித் துதித்தல் ஏன்” என வியப்புத் தோன்றக் கூறிக் குறிப்பால், ‘உண்மை வேத ஒழுக்கம் இன்னது’ என்பதைத் தோன்ற வைத்தமையின், இது விபாவனையணி. உண்மை வேத ஒழுக்கமாவது சிவபிரானைப் போற்றுதலன்றி இகழ்தலன்று என்பதாம். நாதன் - தலைவன். அவன், பகுதிப் பொருள் விகுதி.*

***1029. குறிப்புரை :*** *(“உண்ட களைப்புத் தொண்டருக்கும் உண்டு - என்னும் முறையில்”) ‘திருமால் உலகை உண்டபின் ஆதிசேடனாகிய பாம்பின் கழுத்தில் படுத்துச் சிறிதே உறங்கினான். அப்பொழுது அப்பாம்பினைத் திருச்சிற்றம் பலத்து இறைவன் தனது கையில் கங்கணமாக இட, அக் கங்கணத்தில் அழுத்திய நீலமணிபோல அவன் விளங்கினான்’ என்பதாம். உட்கு - அஞ்சத்தக்க. ‘துயின்றானுக்கு’ என்பது பாடமன்று. பாந்தள் - பாம்பு. ‘திருக்கையில் இட’ என்க. ‘அம் மாயவன்’ எனச் சுட்டு வருவிக்க. வழுத்திய சீர் - பலராலும் துதிக்கப்படும் புகழையுடைய. ‘செழுந்திரள்’ என்பது எதுகை நோக்கி வலிந்து நின்றது. இடத்துக்குரிய, ‘செழுந்திரள் நீர்’ என்னும் அடை ஒற்றுமை பற்றி இடத்தின்கண் உள்ள பொருட்குக் கூறப்பட்டது.*

***1030. குறிப்புரை :*** *“நல்ல புலத்தினர் நெஞ்சு ஏய் அவன்... ஆடும் கழல்” என்பதை முதலிற் கூட்டியுரைக்க. புலம் - அறிவு; ஞானம். ஏய்தல் - பொருந்துதல். தாயவன் - தாயாகியவன். மறைத்தல் - தீங்கைத் தடுத்துக் காத்தல். “நிழல்” என்றதனால், தடுக்கப்படுவது வெயிலாயிற்று. எனவே,*

ஏயவன் சிற்றம் பலத்துள்நின் றாடுங் கழலெவர்க்குந்
தாயவன் தன்பொற் கழலென் தலைமறை நன்னிழலே. 9

1031. நிழல்படு பூண்நெடு மாலயன் காணாமை நீண்டவரே
தழல்படு பொன்னக லேந்தித் தமருகம் தாடித்தமைத்(து)
எழில்பட வீசிக் கரமெறி நீர்த்தில்லை யம்பலத்தே
குழல்படு சொல்வழி யாடுவர், யாவர்க்குங் கூத்தினையே. 10

1032. கூத்தனென் றுந்தில்லை வாணனென் றுங்குழு மிட்டிமையோர்
ஏத்தனென் றுஞ்செவி மாட்டிசை யாதே, யிடுதுணங்கை,
மூத்தவன் பெண்டிர் குணலையிட் டாலும், முகில்நிறத்த
சாத்தனென் றாலும் வருமோ இவளுக்குத் தண்ணெனவே. 11

---

*'வெயிலைத் தடுத்துத் தலையைக் காக்கின்ற நிழல்போல, வினையைத் தடுத்துக் காக்கும் காப்பு' என்பதாம்.*

***1031. குறிப்புரை :*** *நிழல் - ஒளி. பூண் - அணிகலன்; இங்குச் சிறப்பாகக் கௌத்துவ மணியைக் குறித்தது. 'நீண்டவரே யாவர்க்கும் கூத்தினை ஆடுவர்' என இயைத்து முடிக்க. "யாவர்க்கும்" எனச் சிறப்புடைய உயர்திணை மேல் வைத்துக் கூறினாராயினும், 'எவ்வுயிர்க்கும்' என்றலே கருத்து. 'யாவர்க்கும் ஆக' என ஆக்கம் வருவிக்க. ஆதல் - நன்மை பயத்தல். 'தழலை அகலில் ஏந்தி' என்க. படு - பொருந்திய. பொன் - அழகு. தமருகம் - உடுக்கை. 'தாடனம் - அடித்தல். 'கரத்தை எழில்பட வீசி' என மாறுக. தில்லை - தில்லை நகர். நிறத்தொடு பட்ட இசையை. "சொல்" என்றார். நிறத்தை, 'வர்ணம்' என்பர். "நீண்டவரே" என்னும் பிரிநிலை ஏகாரத்தால், 'பிறர் அது செய்கின்றிலர்' என்பது போந்தது.*

***1032. குறிப்புரை :*** *இப்பாட்டுத் தில்லைப் பெருமானைக் காதலித்தாள் ஒருத்தியது வேறுபாடு கண்டு, 'இது தெய்வத்தான் ஆயது' எனக் கருதி எடுக்கப்பட்ட வெறியாட்டினைத் தோழி விலக்கி, அறத்தொடு நின்றது. 'குழுமியிட்டு' என்பது இடைக் குறைந்து நின்றது. ஏத்தன் - துதிகளை உடையவன். செவிமாட்டு இசைத்தல் - செவியிற் செல்லும்படி கூறுதல். 'அதனைச் செய்யாமல் பலவகை ஆடல்களை ஆடினால் பயன் தருமோ' என்றாள். துணங்கை, குணலை சில கூத்தின் வகைகள். பின்னர் 'சாத்தன்' என வருதலால், "மூத்தவன்" என்றது, அவனுக்கு முன்னோனாகிய முருகனை. குறிஞ்சிக் கிழவனாய உரிமை பற்றிக் குறிஞ்சி நிலப் பெண்களை முருகன் பெண்டிராகக் கூறினார். 'பெண்டீர்' என்பது பாடமாயின் அதனை முதற்கண் கூட்டியுரைக்க. சாத்தன் - ஐயனார். குறிஞ்சி நிலப் பெண்களை முருகன்*

**1033.** தண்ணார் புனல்தில்லைச் சிற்றம் பலந்தன்னின் மன்னிநின்ற
விண்ணாள னைக்கண்ட நாள்விருப் பாயென் னுடல்முழுதும்
கண்ணாங் கிலோ!தொழக் கையாங் கிலோ!திரு நாமங்கள்கற்(று)
எண்ணாம் பரிசெங்கும் வாயாங்கி லோ!வெனெக் கிப்பிறப்பே. **12**

**1034.** பிறவியிற் பெற்ற பயனொன்று கண்டிலம், பேரொலிநீர்
நறவியல் பூம்பொழில் தில்லையுள் நாடக மாடுகின்ற
துறவியல் சோதியைச் சுந்தரக் கூத்தனைத் தொண்டர்தொண்டர்
உறவியல் வாற்கண்கள் கண்டுகண் டின்பத்தை உண்டிடவே. **13**

---

*பற்றுவதாகக் கூறுதலே மரபாயினும், 'சிறுபான்மை ஐயனார் பற்றுவதாகக் கூறுதலும் உண்டு' என்பது இதனால் அறிகின்றோம். தண்ணென வருமோ - குளிர்ச்சி உண்டாகுமோ; உண்டாகாது; வெம்மையே உண்டாகும் என்பதாம்.*

***1033. குறிப்புரை :*** *இறுதிக்கண் தொக்க ஏழாவதனை, 'எனக்கு இப்பிறப்பின்கண்' என விரித்து, 'கண்ட நாள்' என்பதன் பின்னர்க் கூட்டுக. இவ்வாறன்றி இன்மையை உடைமையின் மறுதலையாக்கி, இயல்பாகவே கொள்ள அம் ஆம், கண்ணிற்குக் கூறிய "உடல் முழுதும்" என்பதனை ஏனைக் கை, வாய் இவற்றிற்கும் இயைக்க. கைக்கும், வாய்க்கும் முறையே "தொழ" எனவும், "எண் ஆம் பரிசு" எனவும் கூறினாற்போலக் கண்ணிற்கும், 'காண' என்பது வருவிக்க. "விருப்பாய்" என்னும் எச்சம், 'காண, தொழ, எண் ஆம் பரிசு' என்பவற்றோடு முடிந்தது. "ஆங்கு" மூன்றும் அசை நிலைகள். ஓகாரங்கள் இரக்கப் பொருள். எண் - எண்ணல்; உருவேற்றுதல். முதனிலைத் தொழிற்பெயர். "அக்கு மாலைகொடு அங்கையில் எண்ணுவார்"* என்று அருளிச் செய்தது காண்க. பரிசு - வகை.*

***1034. குறிப்புரை :*** *"பிறவியில்.... கண்டிலம்" - என்பதை இறுதிக்கண் கூட்டுக. ஒன்று - வேறொன்று. 'ஒன்றும்' என்னும் இழிவு சிறப்பும்மை தொகுக்கப்பட்டது. நறவு - தேன். துறவு இயல் - துறவு வேடம். அவை சடை முடியும் கல்லாடையும். உறவு இயல்வால் - கூட்டுறவு நிகழ்தலால். 'தொண்டர் உறவே கூத்தனைக் காண வாய்ப்பளித்தது' என்றபடி. 'உண்டபின்' என்பது "உண்டிட" எனத் திரிந்து நின்றது. 'உண்டபின்' என்பதும், 'உண்ணுதலைப் பெற்றபின்' என்றதேயாம். "கண்டிலம்" என்றது "கருதிற்றிலம்" என்றபடி.*

---

* *திருமுறை - 3.49.3.*

**1035.** உண்டேன் அவரரு ளாரமிர் தத்தினை வுண்டலுமே
கண்டேன் எடுத்த கழலுங் கனலுங் கவித்தகையும்;
ஒண்டேன் மொழியினை நோக்கிய நோக்கு மொளிநகையும்
வண்டேன் மலர்த்தில்லை யம்பலத் தாடும் மணியினையே. **14**

**1036.** மணியொப் பன,திரு மால்மகு டத்து; மலர்க்கமலத்(து)
அணியொப் பன,வவன் தன்முடி மேலடி யேனிடர்க்குத்
துணியச் சமைத்தநல் ஈர்வா ளனையன சூழ்பொழில்கள்
திணியத் திகழ்தில்லை யம்பலத் தான்தன் திருந்தடியே. **15**

---

*1035. குறிப்புரை :* அருளாகிய அமிர்தத்தை உண்டதாவது, அருள் கைவரப் பெற்றமை. 'அருள் உண்டாய வழியே அம்பலத்து ஆடும் மணியினைக் காண்டல் கூடும். அஃது இல்லையாயின் அது கூடாது' என்றபடி. செய்யுட்கண் முதற்கண் வந்த "அவர்" என்னும் சுட்டுப் பெயர் ஒருமைப் பன்மை மயக்கமாய்ப் பின் 'மணி' எனப்பட்டவனையே சுட்டிற்று. எடுத்த கழல் - தூக்கிய திருவடி. "கனல்" என்றே போயினாராயினும், ஏனையவற்றோடு இயைய, 'கனற் கையும்' என உரைக்க. கவித்த கை, தூக்கிய திருவடியின்மேல் உள்ள கை. தேன்மொழி - தேன்மொழியாள்; சிவகாம சுந்தரி.

முதற்சினைக் கிளவிக்கு அதுஎன் வேற்றுமை
முதற்கண் வரினே சினைக்கு ஐயாகும்*

என்பது இலக்கணமாயினும், 'அவனைக் கையைப் பிடித்தான்' என்றவழி, 'கையைப் பிடித்தான்' என்னும் தொடர் மொழி, 'தீண்டினான்' எனப் பொருள் தந்து ஒரு சொல் தன்மைப்படுதலின் இவை போல்வனவற்றில் இரண்டிடத்து ஐயுருபு வருதல் சிறுபான்மை வழக்காய் அமைதல் பற்றி, இங்கு 'மணியினைக் கழலையும், கையையும், நோக்கையும், நகையையும் கண்டேன்' என்றார். இரண்டன் உருபுகள் இறுதிக்கண் தொக்கன. இனி இவ்வாறன்றி, "மணியினை" என்றது உருபு மயக்கம் எனினுமாம்.

*1036. குறிப்புரை :* சூழ் பொழில்கள் என்பது முதலாகத் தொடங்கியுரைக்க. 'அம்பலத்தான்றன் அடி திருமாலது முடியின்மேல் அதன் மணியும், அதில் அணியப்பட்ட கமல மலரும் ஒப்பன' என ஒரு தொடராகத் தொகுத்தோதற் பாலதனை இருதொடராக வகுத்தோதினார், இரண்டனையும் நன்கு வலியுறுத்தற்கு. துணிய - துண்டுபட்டு விழும்படி என்றது, 'விழுந்தது போலக் கெடும்படி' என்றவாறு. ஈர் வாள் - அறுக்கின்ற வாள். "துணிய"

---

* தொல் - சொல் - வேற்றுமை மயங்கியல்.

1037. அடியிட்ட கண்ணினுக் கோ ?அவ னன்பினுக் கோ ?அவுணர்
செடியிட்ட வான்துயர் சேர்வதற் கோ ?தில்லை யம்பலத்து
முடியிட்ட கொன்றைநன் முக்கட் பிரான்அன்று மூவுலகும்
அடியிட்ட கண்ணனுக் கீந்தது வாய்ந்த அரும்படையே. 16

1038. படைபடு கண்ணிதன் பங்க !தென் தில்லைப் பரம்பர !வல்
விடைபடு கேதுக ! விண்ணப்பங் கேளென் விதிவசத்தால்
கடைபடு சாதி பிறக்கினும் நீவைத் தருளுகண்டாய்,
புடைபடு கிங்கிணித் தாட்செய்ய பாதமென் னுள்புகவே. 17

---

*எனவும், "ஈர் வாள்" எனவும் போந்தவற்றிற்கு ஏற்ப, 'வலிய பெருமரம் ஒத்த இடர்' என வருவித்துரைக்க. இங்கு, பல பொருள் உவமை வந்தது. "இடர்" என்பது காரியவாகுபெயராய், அவற்றை விளைக்கும் வினைகளைக் குறித்தது. "இருவினை மாமரம்"[1] எனத் திருவாசகத்தும் கூறப்பட்டது.*

***1037. குறிப்புரை :*** *அடி இட்ட - திருவடியில் சாத்திய. செடி இட்ட - கீழ்மை பொருந்திய. வான் துயர் - மிக்க துன்பம். கண்ணன் - திருமால். 'திருமால் சிவபிரானை நாள்தோறும் ஆயிரந்தாமரை மலரால் அருச்சித்து வழிபட்டிருக்கும் நாள்களில் ஒருநாள் சிவபிரான் ஒரு மலரை மறைத்துவிட, அதற்கு ஈடாகத் திருமால் தனது கண் ஒன்றைப் பறித்துப் பெருமான் திருவடியில் சாத்திடப் பெருமான் மகிழ்ந்து தன்னிடம் இருந்த வலிய சக்கரப் படையை அளித்தருள, திருமால் அதைக் கொண்டு அசுரர்களை அழித்து உலகிற்கு நன்மை தந்து வருகின்றான்' என்பது புராண வரலாறு. 'அறத்திற்கோ, புகழுக்கோ பொருள் கொடுக்கின்றீர்' என வினவினால், 'இரண்டிற்குந்தான்' என்பது பொதுவிடை யாயினும் சிலர், அவற்றுள் ஒன்றையே சிறப்பாகக் கருதுவர்; அதுபோலவே, இங்கு, 'கண்ணினுக்கோ அன்பினுக்கோ, அவுணர் துயர் சேர்வதற்கோ அரும்படை ஈந்தது' என எழுப்பப்பட்ட வினாவிற்கு, 'மூன்றிற்குந்தான்' என்பது பொது விடையாயினும், 'அன்பிற்கு' என்பதே இங்குச் சிறப்பாகக் கருதப்பட்டது.*

***1038. குறிப்புரை :*** *படை, இங்கு வாள். படு, உவம உருபு. வல்விடை - விரைந்து செல்லும் இடபம். கேதுகன் - விருது கொடியை உடையவன்.*

*தரைதனில் கீழை விட்டுத் தவம்செய் சாதியினில் வந்து*[2]

*எனச் சாத்திரம் கூறுதலின்,*

---

1. *திருஅண்டப் பகுதி - அடி. 87.*
2. *சிவஞான சித்தி - சூ. 2.90.*

**1039.** புகவுகிர் வாளெயிற் றானிலங் கீண்டு பொறிகலங்கி,
மிகவுகும் மாற்கரும் பாதத்த னேல்,வியன் தில்லைதன்னுள்
நகவு குலாமதிக் கண்ணி,யற்(கு) கங்கண னென்றனன்றும்
தகவு கொலாம்,தக வன்று கொலாமென்று சங்கிப்பனே. **18**

---

*சாதி யிரண்டொழிய வேறில்லை.... மேதினியில்*
*இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்**

*என்றாற்போல இங்கும், 'தவம் செய் சாதி, தவம் செயாச் சாதி என இரு சாதிகளே கொள்ளப்பட்டு, அவற்றுள் 'தவம் செய் சாதி மேற்சாதி, தவம் செயாச் சாதி கீழ்ச்சாதி' எனக் கொள்ளப்படுதல் அறியப்படுதலால் இங்கு, "கடை படு சாதி" என்றது தவம் செயாச் சாதியையேயாயிற்று. 'வேறு சில வினை வயத்தால் அடியேன் அச்சாதியில் பிறக்கினும், இப்பொழுது செய்யும் இவ்விண்ணப்பத்தைத் திருச்செவி சாத்தி நீ அடியேனுக்கு அருளல் வேண்டும்' என்றபடி. கண்டாய், முன்னிலையசை. 'கிங்கிணியை அணிந்தனவும், செம்மையான நிறத்தை உடையனவும் ஆகிய பாதம்' என்றல் கருத்து என்க.*

***1039. குறிப்புரை :*** *புக - தான் உள்ளே செல்லுதற் பொருட்டு 'உகிராலும், எயிற்றாலும் நிலத்தைக் கீண்டு' என்க. பொறி - ஐம்பொறி. கலங்கி - நிலை கலங்கி. "கலங்கி" எனச் சினைவினை முதல்மேல் ஏற்றப்பட்டது. உகும் - மெலிந்த. மாற்கு - திருமாலுக்கு. அரு - காணுதற்கு அரிய. 'நகு' என்னும் முதனிலை 'ஐ' என்னும் இறுதி நிலை பெற்று 'நகை' என வருதல் பெரும்பான்மை. அதற்கு 'வு' இறுதி நிலை புணர்த்து, இடையே அகரச் சாரியை சேர்த்து, "நகவு" என்றார். 'ஒளி' என்பது அதன் பொருள். அற்கு - இருளைப் போக்குதற்கு. அம்கணன் - அழகிய கண்களை உடையவன். அஃதாவது, சூரிய சந்திரனைக் கண்களாக உடையவன். நன்றும் - மிகவும். "கொல்" இரண்டும் ஐயப் பொருள். "ஆம்" *இரண்டும் அசைகள். சங்கிப்பன் - ஐயுறுவேன். "சிவபெருமான், திருமால் பாதலம் முழுவதையும் குடைந்து கடந்து சென்றும் காணாத பாதங்களை உடையவன் - என்றல் உண்மையானால், - அவன் தில்லைத் தலத்தில் தனது முழுத் திருமேனியையும் யாவரும் காண ஆடுகின்றான் - என்பது உண்மையா, அன்றா? என்று நான் ஐயுறுகின்றேன்" - என்பது இப்பாட்டின் திரண்ட பொருள். 'பெரிய பொருள்கட்கெல்லாம் பெரிய பொருளாய், அதே சமயத்தில் சிறிய பொருள்கட்கெல்லாம் சிறிய பொருளாய் நிற்கும் ஓர் அதிசய நிலையே பரம்பொருளது நிலை' என்பதை இங்ஙனம் குறிப்பால் உணர்த்தியவாறு. எனவே, 'இப்பாட்டிற் குறித்த இரண்டுமே உண்மைகள்தாம்' என்பதே விடையாதல் அறிக.*

---

* *ஔவையார் - நல்வழி*

**1040.** சங்கோர் கரத்தன் மகன்,தக்கன், தானவர் நான்முகத்தோன்
செங்கோல விந்திரன், தோள்,தலை, யூர்,வேள்வி, சீருடலம்
அங்கோல வெவ்வழ லாயிட் டழிந்தெரிந் தற்றனவால்;
எங்கோன் எழில்தில்லைக் கூத்தன் கடைக்கண் சிவந்திடவே. **19**

**1041.** ஏவுசெய் மேருத் தடக்கை யெழில்தில்லை யம்பலத்து
மேவுசெய் மேனிப் பிரானன்றி யங்கணா் மிக்குளரே?
காவுசெய் காளத்திக் கண்ணுதல் வேண்டும் வரங்கொடுத்துத்
தேவுசெய் வான்;வாய்ப் புனலாட் டியதிறல் வேடுவனே. **20**

---

*1040. **குறிப்புரை :** சங்கு ஓர் கரத்தன், திருமால். அவன் மகன் மன்மதன். தானவர், திரிபுரத்து அசுரர். செங்கோல் - செங்கோலை (வானுலக ஆட்சியை) உடைய - மன்மதன் முதலாகக் கூறப்பட்ட ஐவர்கட்கும், 'தோள், தலை, ஊர், வேள்வி, உடலம்' என்பவற்றை எதிர்நிரல் நிறையாக இயைக்க. சீர் - அழகு. அம் கோலம் - அழகிய தோற்றம். "ஆயிட்டு" என்பதில் இட்டு, அசை, கண் சிவத்தல், கோலக் குறிப்பு. 'கடைக்கண் சிறிதே சிவந்த அளவில் இத்தனையும் சாம்பலாயின' என்றது குணக் குறை பற்றி வந்த விசேட அணி.*

*1041. **குறிப்புரை :** ஏ - அம்பு. இஃது ஏவப்படும் காரணம் பற்றி வந்த பெயர். அஃது ஈற்றில் லகர உகரம் பெற்று, "ஏவு" என வந்தது. எனவே, அஃது இரட்டுற மொழிதலாய், 'அம்பை ஏவுதல் செய்கின்ற' எனப் பொருள் தந்தது. இதனால், ''மேரு'' என்பதும் ''மேருவாகிய வில்'' என்னும் பொருட்டாயிற்று. ''அம்பலம்'' என்பது ஆகுபெயராய் அதன்கண் இயற்றப்படும் கூத்தைக் குறித்தது. அம் கண்ணர் - அழகிய கண்ணை யுடையவர். "கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்"* என்ப ஆகலின், அதனையுடைய கண் 'அழகிய கண்' எனப்பட்டது. ஆகவே, "அங்கணர்" என்பது 'கருணையுடையவர்' என்னும் கருத்தினதாம். ''மிக்கு உளரே'' என்றாராயினும் 'மிக்க கருணை யுடையவர் உளரே' என்பதே கருத்தென்க. ஏகாரம் வினாப் பொருட்டாய், எதிர் மறுத்தலையுணர்த்திற்று. 'காளத்திக் கண்ணுதலாய்' என ஆக்கம் வருவித்து, 'வாய்ப் புனல் ஆட்டிய வேடுவனை' எனத் தொகுக்கப்பட்ட இரண்டாவதை வருவித்து, 'வேண்டும் வரங் கொடுத்துத் தேவு செய்வான்' என முடிக்க. தேவு செய்தது ஒரு காலத்தே யாயினும், 'அஃது அவர்க்கு என்றும் உள்ள இயல்பு' என்றற்கு, "செய்வான்" என எதிர்காலத்தாற் கூறினார். காவு - கா; சோலை. வாய்ப்புனல் ஆட்டிய வேடுவன், கண்ணப்ப நாயனார் என்பது வெளிப்படை.*

---

* *திருக்குறள் - 575.*

1042. வேடனென் றாள்;வில் விசயற்கு வெங்கணை யன்றளித்த
கோடனென் றாள்;குழைக் காதனென் றாள்இடக் காதிலிட்ட
தோடனென் றாள்;தொகு சீர்த்தில்லை யம்பலத் தாடுகின்ற
சேடனென் றாள்;மங்கை யங்கைச் சரிவளை சிந்தினவே. 21

1043. சிந்திக் கவும்உரை யாடவும் செம்மல ராற்கழல்கள்
வந்திக் கவும்மனம் வாய்கர மென்னும் வழிகள்பெற்றுஞ்
சந்திக் கிலர்சிலர் தெண்ணர்தண் ணார்தில்லை யம்பலத்துள்
அந்திக் கமர்திரு மேனியெம் மான்ற னருள்பெறவே. 22

1044. அருள்தரு சீர்த்தில்லை யம்பலத் தான்தன் அருளினன்றிப்
பொருள்தரு வானத் தரசாத லிற்,புழு வாதல்நன்றாம்;
சுருள்தரு செஞ்சடை யோனரு ளேல்,துற விக்குநன்றாம்,
இருள்தரு கீழேழ் நரகத்து வீழும் இருஞ்சிறையே. 23

---

*1042. **குறிப்புரை :*** *இப்பாட்டு தலைவியது வேறுபாடு கண்டு வினவிய நற்றாய்க்குச் செவிலி அறத்தொடு நின்றது. கோடன் - கோஷன். ஆரவாரத்தையுடையவன். ஆரவாரம் - போர் காரணமாக எழுந்தது. சேடன் - பெருமையுடையவன். 'அவ்வளை, கைவளை' எனத் தனித்தனி இயைக்க. அம் - அழகு. அது 'வளை' என்பதனோடு புணருங்கால் ஈறுகெட்டு லகர ஒற்று மிக்கது. சரி - வளையல்களில் ஒருவகை. "மங்கை" என்பதன்பின், 'அதுபொழுது' என்பது வருவிக்க. இவ்வாற்றால், 'இவளது வேறுபாட்டிற்குக் காரணம் தில்லைக் கூத்தனைக் காதலித்த காதலே' என்பதைக் குறிப்பால் உணர்த்தினாளாம்.*

*1043. **குறிப்புரை :*** *'சிந்திக்க மனம், உரையாட வாய், மலரால் கழல்கள் வந்திக்கக் கரம்' - என நிரல்நிறையாக இயைத்துக்கொள்க. சந்தித்தல் - சென்று அடைதல். தெண்ணர் - அறிவிலிகள். அமர் - ஒத்த; உவம உருபு.*

*1044. **குறிப்புரை :*** *அருளின் அன்றி - அருள்வழியாக அல்லாமல் பிறவாற்றால். அருளேல் - 'அருள் வழியாக வருமாயின் துறவிக்குப் புழுவாதலும் நன்றாம். நரகத்து வீழும் இருஞ் சிறையும் நன்றாம்' என்க. "நரகம் புகினும் எள்ளேன் திருவருளாலே இருக்கப்பெறில், இறைவா"* என மாணிக்கவாசகரும் அருளிச்செய்தார்.*

---

* *திருவாசகம் - திருச்சதகம்.*

**1045.** சிறைப்புள வாம்புனல் சூழ்வயல் தில்லைச்சிற் றம்பலத்துப்
பிறைப்பிள வார்சடை யோன்திரு நாமங்க ளேபிதற்ற
மிறைப்புள வாகிவெண் ணீறணிந்(து) ஓடேந்தும் வித்தகர்தம்
உறைப்புள வோ,வயன் மாலினொ(டு) உம்பர்தம் நாயகற்கே. **24**

**1046.** அகழ்சூழ் மதில்தில்லை யம்பலக் கூத்த! அடியமிட்ட
முகிழ்சூ ழிலையும் முகைகளு மேயுங்கொல்! கற்பகத்தின்
திகழ்சூழ் மலர்மழை தூவித் திறம்பயில் சிந்தையராய்ப்
புகழ்சூ ழிமையவர் போற்றித் தொழும்நின் பூங்கழற்கே. **25**

---

*புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி*
*என்மனத்தே*
*வழுவா திருக்க வரந்தர வேண்டும்*[1]

*என்பதும் இக்கருத்தே பற்றி எழுந்தது. இன்பமாவது திருவருளோடு கூடியிருத்தலும், துன்பமாவது அதனொடு கூடாதிருத்தலுமே என்னும் உண்மை இவ்வாறு எங்கும் விளக்கப்படுகின்றது. துறவி - உலகப் பற்றை விட்டவன்.*

***1045. குறிப்புரை :*** *சிறைப் புள் - சிறகையுடைய பறவை. அவாம் - விரும்புகின்ற. 'பிறையாகிய பிளவு' என்க. பிதற்றுதல் - அன்பால் பலகாலும் சொல்லுதல். மிறைப்பு - மன உறுதி. உறைப்பு - வலிமை; யாதொன்றிற்கும் அஞ்சாமையும், எதனையும் வெல்லுதலும். அயன், மால், இந்திரனாகியோர் ஒவ்வொருவரையும் நோக்க வலிமை பலவாதலின், "உளவோ" என்றார். ஓடேந்துதலைக் கூறியது, வறுமையை உணர்த்த.*

***1046. குறிப்புரை :*** *முகிழ் - அரும்பு. 'அவை சூழ் இலை' என்றது, 'இடையே அரும்புகளையுடைய இலைக் கொத்து' என்றபடி. ஏயும் - பொருந்தும். கொல், ஐயம். 'தேவர் தூவும் கற்பக மலர் மழையையன்றி. யாம் இடும் நிலவுலக இலையையும், அரும்பையும் விரும்புவையோ' என வினாவிய படி. 'யாம் இடும் இலையையும், அரும்பையுமே நீ விரும்புவாய்' என்பது இதன் உட்கருத்து. ஏன் எனில், 'யாம் அன்பே காரணமாக இடுகின்றோம்; இமையவரோ தாம் தம் நிலையிலே நிலைத்து வாழ்தல் வேண்டியிடுகின்றனர்' என்பதாம்.*

*வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான்*[2]

*என்று அருளியது காண்க. இங்கு, "திறம் பயில்" என்றது அதனையே.*

---

1. *திருமுறை - 4.94.8*
2. *திருவாசகம் - திருச்சதகம் - 16.*

**1047.** பூந்தண் பொழில்சூழ் புலியூர்ப் பொலிசெம்பொ னம்பலத்து
வேந்தன் தனக்கன்றி யாட்செய்வ தென்னே! விரிதுணிமேல்
ஆந்தண் பழைய அவிழைஅன் பாகிய பண்டைப்பறைச்
சேந்தன் கொடுக்க, வதுவும் திருவமிர் தாகியதே. **26**

**1048.** ஆகங் கனகனைக் கீறிய கோளரிக் கஞ்சிவிண்ணோர்
பாகங் கனங்குழை யாய்,அரு ளாயெனத் தில்லைப்பிரான்
வேகம் தருஞ்சிம்புள் விட்டரி வெங்கதஞ் செற்றிலனேல்,
மோகங் கலந்தன் றுலந்ததன் றோவிந்த மூவுலகே. **27**

---

*1047. **குறிப்புரை :** 'சேந்தனார்' என்னும் அடியவர் பாடிய பாடல்கள் திருவிசைப்பாவில் இருத்தலுடன், திருப்பல்லாண்டு பதிகம் 9-ஆம் திருமுறையிறுதியில் தனியே உள்ளது. 'அப்பதிகத்தைப் பாடி இவர், செல்லாது நின்ற கூத்தப் பெருமான் தேரினைச் செல்லச் செய்தார்' என்பர். 'இவர் குலத்தால் தாழ்ந்தவர்' என்பது இப்பாட்டில், "பறைச் சேந்தன்" என்பதனால் குறிக்கப்பட்டது. திருவாதிரை நாளில் கூத்தப் பெருமானுக்கு அன்பர்கள் களி செய்து படைத்து வழிபடுதல் வழக்கம். கோயிலிலும் இது செய்யப்படும். 'அம்முறையில் செய்ய அரிசி கிடையாமையால் சேந்தனார் தவிட்டுக் களி செய்து துணியில் இட்டுப் படைத்தார்' என்பதும் 'அது மறுநாள் விடியலில் திருச்சிற்றம்பலக் கூத்தப் பெருமான் திருமேனியில் காணப்பட்டது' என்பதும் இவரைப் பற்றி வழங்கும் வரலாறுகள். அதுவே இப்பாட்டின், பின் இரண்டு அடிகளில் குறிக்கப்பட்டது.*

*அவிழ்ந்த துணியில் அவிழ்ந்த அவிழை
அவிழ்ந்த மனத்தால் அவிழ்க்க - அவிழ்ந்த சடை
வேந்தனார்க் கின்னமுத மாயிற்றே மெய்யன்பின்
சேந்தனார் செய்த செயல்**

*என இது திருக்களிற்றுப்படியாரிலும் கூறப்பட்டது. தனிப்பாடல் ஒன்றில், "தவிட்டமுதம் சேந்தன் இட உண்டனை" - எனச் சிவஞான யோகிகள் கூறினார். இப்பாட்டில் அவிழ் - உணவு. "தண் பழைய" என்றது 'மிகவும் ஆறிப்போன' என்றபடி. 'குலத்தால் தாழ்ந்த ஒருவர் சுவையற்ற ஓர் எளிய உணவைப் படைக்க, அதனை மிக இனியதாக ஏற்றருளிய அந்தப் பெருமானுக்கு ஆட் செய்யாமல் பிறருக்கு ஆட்செய்வது என்ன அறியாமை' என்பது இப்பாட்டின் திரண்ட பொருள். இதனால் இவ்வாசிரியர் சேந்தனாருக்குப் பின்னர் வாழ்ந்தவராதல் அறியப்படும்.*

---

* *வெண்பா - 53.*

**1049.** மூவுல கத்தவ ரேத்தித் தொழுதில்லை முக்கட்பிராற்(கு)
ஏவு தொழில்செய்யப் பெற்றவர் யாரெனில் ஏர்விடையாய்த்
தாவு தொழிற்பட் டெடுத்தனன் மாலயன் சாரதியா
மேவிர தத்தொடு பூண்டதொன் மாமிக்க வேதங்களே. **28**

---

*1048. **குறிப்புரை :** கனகன் - இரணியன். ஆகம் - மார்பு. "கனகனை ஆகம் கீறிய" என்றதை, 'யானையைக் காலை வெட்டினான்' என்பது போலக் கொள்க. கோளரி, இங்கு நரசிங்கம். 'நரசிங்கமாய்த் தோன்றி இரணியன் மார்பை நகத்தாற் பிளந்து, அவனது வரத்திற்கு அஞ்சி, அவனது உதிரம் ஒரு துளியும் கீழே விழாதபடி குடித்த திருமால் அந்த உதிர வெறியால் மூவுலகத்தையும் தாக்கியபொழுது தேவர்கள் சிவபெருமானைத் துதித்து முறையிட, அவர் சரபமாய்ச் சென்று நரசிங்கத்தை அழித்தமையால், திருமால் முன் நிலைமையை அடைந்து அருள் உடையரானார்' என்பது பண்டை வரலாறு. குழை - குழையை உடையவள். 'குழையை உடையவளை ஒரு பாகத்தில் உடையவனே' என்க. சிம்புள் - சாபம். இதனை 'எண்காற் பறவை' என்பர். "சிம்புளை விட்டுச் செற்றியனேல்" என்றமையால், சிம்புளைச் சிவபெருமான் தமது உருவினின்றும் தோற்றுவித்து விடுத்தமை பெறப்படும். அரி - திருமால். கதம் - கோபம். மோகம், இங்குத் திகைப்பு. உலந்தது - அழிந்தது. 'அழிந்திருக்கும்' என்பதைத் துணிவு பற்றி, 'அழிந்தது' என்றே கூறினார். 'அழிந்திருக்கும்' என்பதில் 'இருக்கும்' என்பது எதிர்கால முற்றாதலின், அதனொடு முடிக்க 'அழிந்து' என்னும் செய்தென் எச்சம்.*

*செய்தென் எச்சத்து இறந்த காலம்
எய்திட னுடைத்தே வாராக் காலம்**

*என்னும் விதியினால் எதிர்காலத்து இறந்த காலமாய்த் தனி இறந்த காலத்தில் அது நிகழாமையைக் குறிக்கும். மூவுலகு - முப்பகுதித்தாய உலகு.*

*1049. **குறிப்புரை :** ஏவு தொழில் - அப்பெருமானால் குறிப்பிட்டு ஏவப்பட்ட தொழில். தாவு தொழில்பட்டு - குறித்த இடத்திற்குத் தாவிச் செல்லுகின்ற தொழிலிலே பொருந்தி. சாரதியா - சாரதியாய் இருக்க. 'மால் விடையாய்த் தாவு தொழிற்பட்டு எடுத்தனன். அயன் சாரதியாக, வேதங்கள் இரதத்தொடு பூண்ட மா ஆயின' - என முடிக்க. எடுத்தல் - தாங்குதல்; சுமத்தல். "சாரதியாக" என்ற அனுவாதத்தானே, 'சாரதி ஆயினான்' என்பது பெறப்பட்டது. மா - குதிரை. இதன்பின் 'ஆயின' என்பது தொகுத்தலாயிற்று. "இரதத்தொடு" என்பதை, 'இரதத்தை' எனத் திரிக்க. அனைவரும் 'தில்லைப் பிரானுக்கு ஏவலாளர்களே' என்றபடி.*

---

* *தொல் - சொல் - வினையியல்*

1050. வேதகச் சிந்தை விரும்பிய வன்,தில்லை யம்பலத்து
மேதகக் கோயில்கொண் டோன்,சேய வன்,வீ ரணக்குடிவாய்ப்
போதகப் போர்வைப் பொறிவா ளரவரைப் பொங்குசினச்
சாதகப் பெண்பிளை தன்ஐயன்; தந்த தலைமகனே. 29

1051. தலையவன்; பின்னவன்; தாய்;தந்தை; யிந்தத் தராதலத்து
நிலையவன் நீக்கு தொழில்புரிந் தோன்;அடு வாகிநின்ற
கொலையவன் சூலப் படையவன்; ஆலத் தெழுகொழுந்தின்
இலையவன் காண்டற் கருந்தில்லை யம்பலத் துள்ளிறையே. 30

1052. இறையும் தெளிகிலர், கண்டும், எழில்தில்லை யம்பலத்துள்
அறையும் புனல்சென்னி யோனரு ளாலன்(று) அடுகரிமேல்

---

*1050. குறிப்புரை :* *வேதகம் - இரச வாதத்தால் பொன்னாக மாறிய பிற உலோகங்கள் அவைபோலும் சிந்தையாவது, திருவருளால் அஞ்ஞானம் நீங்கி மெய்ஞ்ஞானத்தை அடைந்த சிந்தை. அறிவு அதனை விரும்பியவன் என்றும், 'அதனால் விரும்பப்பட்டவன்' என்றும் இருபொருளும் கொள்க. "தந்த தலைமகன்" என்பதைக் "கோயில் கொண்டோன்" - என்பதன் பின்னர்க் கூட்டுக. தலைமகன் - விநாயகக் கடவுள். சேயவன் - முருகன். "வீரணக் குடிவாய்... பெண்பிள்ளை" துற்கை 'இவ்விருவர்க்கும் ஐயன்; தமையன்' என்க. 'திருநாரையூர் விநாயகர் இரட்டைமணி மாலை' 14-ஆம் பாடலைக் காண்க. போதகம் - யானை; அதன் தோல்; ஆகுபெயர். பொறி - புள்ளிகள். வாளரவு - கொடிய பாம்பு. பெற்ற மக்களது சிறப்புக் கூறு முகத்தால், பெற்றோனது சிறப்பு உணர்த்தியவாறு. சாதகம் - பேய்க் கூட்டம்.*

*1051. குறிப்புரை :* *"ஆலத்தெழு" என்பது முதலாகத் தொடங்கி, "இந்தத் தராதலத்து" என்பதை முதலிற் கூட்டி யுரைக்க. ஆலத்து எழு கொழுந்தின் இலையவன் - ஆல் இலையில் பள்ளி கொள்பவன்; மாயோன். தலையவன் - முன்னோன்; முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருள். பின்னவன் - பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியன்*. "தாய், தந்தை" என்றதனால் தோற்றுவித்தல் குறிக்கப்பட்டது. நிலையவன் - நிலைக்கச் செய்பவன். நீக்கு தொழில் - அழிக்கும் தொழில். நடுவாகி நிற்றல் - இரு முனையோடு நடுவண் ஒரு முனையுடையதாய் இருத்தல். "கொலைய" என்பது தொழிலடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம்.*

*1052. குறிப்புரை :* *அடு கரி - கொல்லும் யானை. "கொல்லும்" என்றது இன அடை. ஆரூரன், சுந்தர மூர்த்தி நாயனார். தார்ப் பரி - மணிக்கோவை*

---

* *திருவாசகம் - திருவெம்பாவை - 9.*

நிறையும் புகழ்த்திரு வாரூ ரனும்,நிறை தார்ப்பரிமேல்
நறையும் கமழ்தொங்கல் வில்லவ னும்புக்க நல்வழியே. **31**

**1053.** நல்வழி நின்றார் பகைநன்று, நொய்ய ருறவிலென்னும்
சொல்வழி கண்டனம் யாம்;தொகு சீர்த்தில்லை யம்பலத்து,
வில்வழி தானவ ரூரெரித் தோன்,வியன் சாக்கியனார்,
கல்வழி நேர்நின் றளித்தனன் காண்க, சிவகதியே. **32**

---

*யணிந்த குதிரை. வில்லவன் - விற்கொடியையுடைய சேரன்; சேரமான் பெருமாள் நாயனார். சுந்தரர் யானைமீது ஏறிக் கயிலாயம் செல்கையில் வழியில் சிவபெருமானைக் குறித்து,*

*மண்ணுல கிற்பிறந்து நும்மை*
*வாழ்த்தும் வழியடியார்*
*பொன்னுல கம்பெறுதல்*
*தொண்ட னேன்இன்று கண்டொழிந்தேன்*[1]

*என அருளிச் செய்தார். அங்ஙனம், "மண்ணுலகத்தில் மக்களாய்ப் பிறந்தோர் சிவபெருமானை வாழ்த்தி வணங்கினால் அவர்கள் பின்பு அப்பெருமானுடைய உலகத்தை அடைவர்" என்னும் ஆகமப் பிரமாணம் காட்சிப் பிரமாணம் ஆனதையறிந்தும் மண்ணுலகில் மக்களாய்ப் பிறந்தோர் சிலர் அவ்ஆகமப் பிராமணத்தைச் சிறிதும் தெளிகின்றிலர் - என்பதாம். இறையும் - சிறிதும். அறையும் - ஒலிக்கின்ற. சுந்தரர் யானைமேற் கயிலை சென்றபொழுது அவர்க்குத் தோழனாய் இருந்த சேரமான் பெருமாள் நாயனாரும் குதிரைமேல் உடன் சென்றதையறிக.*

***1053. குறிப்புரை :*** *நொய்யர் - சிறியார். "நொய்யர் உறவில் நல்வழி நின்றார் பகை நன்று" என்னும் சொல்லாவது,*

*பேதை பெருங்கெழீஇ நட்பின், அறிவுடையார்*
*ஏதின்மை கோடி யுறும்*[2]

*என்னும் குறள். சாக்கிய நாயனார் சிவலிங்கத்தைக் கல்லால் எறிதலை நியாயமாகக் கொண்டு செய்து முத்தி பெற்றார். கல்லால் எறிதல் பகைமைச் செயலாயினும் அன்பு காரணமாகச் செய்யப்பட்டது. இங்ஙனமே கண்ணப்ப நாயனார் தமது செருப்புக் காலைச் சிவலிங்கத்தின்மேல் வைத்ததும் இதனால், 'நல்வழியில் நிற்கும் நல்லோர் பிறர்க்குத் தீங்குபோல எவற்றையேனும் செய்வாராயினும் அச்செயற்குக் காரணம் பகைமையாகாது, அன்பேயாய்*

---

1. *திருமுறை - 7.100.5*
2. *திருக்குறள் - 816.*

**1054.** கதியே! யடியவர்க்(கு) எய்ப்பினில் வைப்பாக் கருதிவைத்த
நிதியே! நிமிர்புன் சடையமிர் தே!நின்னை யென்னுள்வைத்த
மதியே! வளர்தில்லை யம்பலத் தாய்!மகிழ் மாமலையாள்
பதியே! பொறுத்தரு ளாய்,கொடி யேன்செய்த பல்பிழையே. **33**

**1055.** பிழையா யினவே பெருக்கி,நின் பெய்கழற்(கு) அன்புதன்னில்
நுழையாத சிந்தையி னேனையும், மந்தா கினித்துவலை
முழையார் தருதலை மாலை முடித்த முழுமுதலே!
புழையார் கரியுரித் தோய்!தில்லை நாத! பொறுத்தருளே. **34**

**1056.** பொறுத்தில னேனும்பன் நஞ்சினைப் பொங்கெரி வெங்கத்தைச்
செறுத்தில னேனும்;நந் தில்லைப் பிரானத் திரிபுரங்கள்

---

*<u>இருக்கும்' என்றபடி</u>. 'வில்வழியாக' என ஆக்கம் விரிக்க. தானவர் - அசுரர்; முப்புரத்தவர். கல்வழி - கல்லை எறிந்ததே வழியாக. நேர் நின்று - நேரே காட்சியளித்து. "காண்க" என்பது அசை.*

***1054. குறிப்புரை :*** *"கதியே" முதலிய நான்கும் விளிகள். கதி - புகலிடம். 'அனைத்துயிர்க்கும் கதியே' எனவும், 'கருத்தினுள் வைத்த நிதியே' எனவும் உரைக்க. மதியே - ஞான வடிவினனே. பதி - கணவன். இங்ஙனம் பலவாறு விளித்தும் பிழை பொறுக்க வேண்டி விண்ணப்பித்தபடி.*

***1055. குறிப்புரை :*** *"மந்தாகினி.... தில்லை நாத! பிழையாயினவே... பொறுத்தருள்" என இயைத்து முடிக்க. மந்தாகினி - கங்கை. துவலை - திவலை; துளி. 'கங்கையினது துளிகள் தனது முழையின்கண் வந்து ஆரப் பெறுகின்ற (நிரம்பப் பெறுகின்ற) தலை' என்க. தலை, வெண்டலை. புழை - உள்ளாற் செல்லும் துளை. "புழை ஆர்" என்பதில் உள்ள 'ஆர்', "கரி" என்பதன் முதனிலையோடு முடிந்தது. கரம் + இ = கரி. இதன் முதலிரண்டடிகளை,*

*பெற்றது கொண்டு பிழையே பெருக்கிச்*
*சுருக்குமன்பின்*
*வெற்றடி யேனை விடுதிகண்டாய்[1]*

*வெறுப்பனவே செய்யு மென்சிறுமையை நின்*
*பெருமையினால் - பொறுப்பவனே[2]*

*என்னும் திருவாசகப் பகுதிகளோடு ஒப்பிட்டுக்காண்க.*

***1056. குறிப்புரை :*** *"நம் தில்லைப்பிரான்" என்பதை முதலிற் கூட்டியும், 'நஞ்சினைப் பொறுத்திலனேனும்' எனவும் 'அமரருக்கு அடுப்பன என்கொல்'*

---

1. *நீத்தல் விண்ணப்பம் - 23.*
2. *அடைக்கலப் பத்து - 2.*

கறுத்தில னேனுங் கமலத் தயன்கதிர் மாமுடியை
அறுத்தில னேனும் அமரருக் கென்கொல் அடுப்பனவே. 35

---

*எனவும் மொழி மாற்றியும் உரைக்க. எரி, தாருகாவன முனிவர் சிவபிரான்மேல் ஏவிய வேள்வித்தீ. அஃது அப்பெருமானை யாதும் செய்ய மாட்டாது. ஆயினும் ஆபிசார மந்திர ஆற்றலோடு கூடிய அத்தீத் தன்னை விட்டுச் சென்று பலரை இரையாக்கிக் கொள்ளாதபடி அப்பெருமான் அதனைத் தன் கையில் ஏந்திக் கொண்டான். அயன் - பிரமன். அவன் செருக்கு மிகுதியால் சிவபெருமானை, "என் மகனே! வா" என்றான். 'அவன் கூறிய சொல் பொல்லாச் செருக்குச் சொல்லேயன்றி, உண்மையன்று' என்பதை உணர்த்தச் சிவபெருமான் தன்னை அங்ஙனம் அழைத்த அவனது உச்சித் தலையைக் கிள்ளி எடுத்தார். பிரமன் சிவபெருமானைப் படைக்கும் அளவிற்கு ஆற்றல் உடையனாயின், அவரால் பறிக்கப்பட்ட அத்தலையை உடனே முன்போலத் தோற்றுவித்துக் கொள்வான் அல்லனோ? பிரமன் படைப்பதும், மாயோன் காப்பதும், பிறவும் எல்லாம் சிவபிரானது சங்கற்பத்தின்படியல்லது, தங்கள் சங்கற்பத்தின்படியல்ல' என்பதையே இத்தகைய புராண வரலாறுகள் விளக்குகின்றன.*

*பித்தன்உனது ஓர்தலை பிடுங்கிஎறி போதில்*
*அத்தலை நமக்கென அமைக்கவிதி யில்லாய்*
*எத்தலைவன் என்பதுனை? இத்தகைமை கொண்டோ*
*பைத்தரை அராமுடிகொள் பாரிடம் விதித்தாய்?*

*எனப் பிற்காலத்து ஆன்றோரும்[1] கூறினார்.*

*அயன்றனை யாதி யாக*
*அரனுரு என்ப தென்னை?*
*பயந்திடும் சத்தி யாதி பதிதலால்*

*எனவும்,*

*சத்திதான் பலவோ என்னில்*
*தான்ஒன்றே அநேக மாக*
*வைத்திடும் காரியத்தால்*
*மந்திரி யாதிக் கெல்லாம்*
*உய்த்திடும் ஒருவன் சத்திபோல்*
*அரனுடைய தாகிப்*
*புத்தி முத்திகளை யெல்லாம்*
*புரிந்து அவன் நினைந்தவாறாம்*

*என்னும் சிவஞான சித்திச் செய்யுள்களைக் காண்க[2].*

---

1. *சைவ எல்லப்ப நாவலர் - அருணாசல புராணம் - திருமலைச் சருக்கம்.*
2. *முதற் சூத்திரம் - 60, 61.*

**1057.** அடுக்கிய சீலைய ராய்,அக லேந்தித் தசையெலும்பில்
ஒடுக்கிய மேனியோ(டு) ஊணிரப் பாரொள் ளிரணியனை
நடுக்கிய மாநர சிங்கனைச் சிம்புள தாய்நரல
இடுக்கிய பாதன்றன் தில்லை தொழாவிட்ட ஏழையரே. 36

**1058.** ஏழையென் புன்மை கருதா(து) இடையறா அன்பெனக்கு
வாழிநின் பாத மலர்க்கே மருவ அருளுகண்டாய்;
மாழைமென் நோக்கிதன் பங்க! வளர்தில்லை யம்பலத்துப்
போழிளந் திங்கள் சடைமுடி மேல்வைத்த புண்ணியனே. 37

---

*'ஒரு கற்பத்தில் உண்டாக்கப்பட்ட பிரம தேவனுக்குப் படைத்தல் தொழிலைக் கற்பித்தற் பொருட்டுச் சிவபெருமானது சங்கற்பத்தின்படி அவனது நெற்றியினின்று நீலலோகிதன் முதலிய உருத்திரர் பதினொருவர் தோன்றினர்' என்பது புராண வரலாறு. இஃதே பற்றி, பிரமன் உருத்திரனைப் படைத்தான்' என வைணவர்கள் சிவபெருமானைப் பிரமனிலும் தாழ்ந்தவனாகக் கூறிக் கொள்கின்றார்கள். 'உருத்திரன்' எனச் சிறப்பாகக் கூறப்படுபவர், அயன், மால் இருவர்க்கும் மேலாய் நின்று, பிரகிருதி மாயா உலகங்களை அழித்தல் தொழிலைச் செய்யும் சீகண்ட உருத்திரர். இவரைப் பிரமனிலும் தாழ்வாகக் கூறுதல் தத்துவ முறையோடு மாறுபடுவதாகும். பிரமனது செருக்கினால் உண்மை மறைக்கப்பட்டதுடன், அவனது படைத்தல் தொழிலும் தாறுமாறாய் நிகழ, உலகத்திற்குப் பல தீமைகள் உளவா மாகலின், 'அவையெல்லாம் நிகழாமைப் பொருட்டு அவனது தலையைச் சிவபெருமான் கிள்ளினார்' என்றபடி. அடுப்பன - விளைவன. இஃது இறந்த காலத்தில் எதிர்காலம். பன்னுதல் - சொல்லுதல். அஃதாவது, தேவர் 'உண்டருள்க' என்றது. கதம் - கோபம். செறுத்தல் - அடக்குதல். கறுத்தல் - கோபித்தல். அஃது இங்கு அழித்தலாகிய தன்காரியத்தைத் தோற்றி நின்றது. கொல், ஐயப் பொருட்டு.*

***1057. குறிப்புரை :*** *அடுக்கிய சீலை - கிழிந்த துளைகள் தோன்ற ஒட்டாமல் பல மடிப்புக்களாக மடிக்கப்பட்ட சீலை. அகல் - மண்டை; மட்பாத்திரம். 'எலும்பில் தசை ஒடுக்கிய மேனி' என்க. அஃதாவது எலும்புகள் நன்கு தோன்றும் உடம்பு. நடுக்கிய - நடுங்கச் செய்த. நரல் - (சிங்கன்) அலறும்படி. ஏழையர் - அறிவிலிகள் (முற்பிறப்பில்) தில்லை தொழாத ஏழையர்கள் (இப் பிறப்பில்). வறியராய் ஊண் இரப்பார்கள் என்க.*

***1058. குறிப்புரை :*** *இதன் பொருள் வெளிப்படை. வாழி, அசை. மாழை - மாவடு.*

**1059.** புண்ணிய னேயென்று போற்றி செயாது புலன்வழியே
நண்ணிய னேற்கினி யாதுகொ லாம்புகல் என்னுள் வந்திட்(டு)
அண்ணிய னே!தில்லை யம்பல வா!வலர் திங்கள் வைத்த
கண்ணிய னே!செய்ய காமன் வெளுப்பக் கறுத்தவனே. 38

**1060.** கறுத்தகண் டா!அண்ட வாணா! வருபுனற் கங்கைசடை
செறுத்தசிந் தாமணி யே!தில்லை யாயென்னைத் தீவினைகள்
ஒறுத்தல்கண் டாற்சிரி யாரோ பிறர்என் னுறுதுயரை
அறுத்தல்செய் யாவிடி னார்க்கோ வருஞ்சொ லரும்பழியே. 39

**1061.** பழித்தக் கவுமிக ழான்தில்லை யான்;பண்டு வேட்டுவனும்
அழித்திட் டிறைச்சி, புலைய னளித்த அவிழ்க்குழங்கன்
மொழித்தக்க சீரதி பத்தன் படுத்திட்ட மீன்முழுதும்
இழித்தக்க வென்னா(து) அமிர்துசெய் தானென் றியம்புவரே. 40

**1062.** வரந்தரு மாறிதன் மேலுமுண் டோ!வயல் தில்லைதன்னுள்
புரந்தரன் மால்தொழ நின்ற பிரான்,புலைப் பொய்ம்மையிலே

---

***1059. குறிப்புரை :*** *புகல் - கதி. அண்ணியன் - இனிப்பவன். கண்ணி - முடியிலணியும் மாலை. அன்றி, 'கண்ணிய மானவன்' என்றலும் ஆம். செய்ய - எல்லாரையும் ஒருபடித்தாக வருத்துகின்ற. காமன் - மன்மதன். வெளுப்ப - சாம்பலாகும்படி. கறுத்தவன் - கோபித்தவன்.*

***1060. குறிப்புரை :*** *கறுத்த கண்டன் - நீல கண்டன். அண்டவாணன் - ஆகாயத்தில் இருப்பவன். செறுத்த - அடக்கிய. உறுதுயர் - மிக்க துன்பம். 'அரும்பழி ஆர்க்கு வரும்?' சொல் என்க. ஓகாரம் சிறப்பு. 'உனக்குத்தான் வரும்' என்பது குறிப்பு.*

***1061. குறிப்புரை :*** *இப்பாட்டில் "அழித்திட்டிறைச்சி புலையன் அளித்த அவிழ்க் குழங்கல்" என இவ்வாறு இருக்க வேண்டிய பாடம் மிகவும் திரிபு பட்டுள்ளது. கண்ணப்ப நாயனாரை "வேட்டுவன்" எனச் சாதிப் பெயராற் கூறியது போலவே, சேந்தனாரையும் 'புலையன்' எனச் சாதிப் பெயராற் கூறினார். சேந்தனார் இட்ட தவிட்டுக் களி திருவமுதாயினமை மேல், "பூந்தண் பொழில்சூழ்" என்னும் பாடலிலும் குறிப்பிடப்பட்டது. அதிபத்தன் - அதிபத்த நாயனார். இவர் வலைஞர். அழித்து - விலங்குகளைக் கொன்று. 'இட்ட' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று.*

***1062. குறிப்புரை :*** *புலைப் பொய்மை - கீழான நிலையாப் பொருள்கள். அவை உலகத் துப்புரவுகள். நிரந்தரம் - இடையறாமை. 'தன் அடியார்,*

நிரந்தர மாய்நின்ற வென்னையும் மெய்ம்மையின் தன்னடியார்
தரந்தரு வான்செல்வத் தாழ்த்தினன்; பேசருந் தன்மையிதே. 41

**1063.** தன்தாள் தரித்தார் யாவர்க்கும் மீளா வழிதருவான்
குன்றா மதில்தில்லை மூதூர்க் கொடிமேல் விடையுடையோன்
மன்றா டவும்,பின்னும் மற்றவன்பாதம் வணங்கியங்கே
ஒன்றார் இரண்டில் விழுவரந் தோ!சில வூமர்களே. 42

**1064.** களைக ணிலாமையுந் தன்பொற் கழல்துணை யாந்தன்மையும்
துளைக ணிலாம்முகக் கைக்கரிப் போர்வைச் சுரம்நினையான்;
தளைக ணிலாமலர்க் கொன்றையன், தண்புலி யூரனென்றேன்
வளைக ணிலாமை வணங்கும் அநங்கன் வரிசிலையே. 43

---

*மெய்ம்மையில் தரம் தரு செல்வம்' என்க. தரம் தருதல் - மேன்மையடைதல். தன்மையுடையதனை, "தன்மை" என்றார். 'இது பேசருந் தன்மையுடையது ஆதலின், இதன்மேலும் (எனக்கு அவன்) வரம் (மேன்மை) தருமாறு உண்டோ' என முடிக்க.*

***1063. குறிப்புரை :*** *"சில ஊர்மக்கள்" - என்பதை முதலிற் கூட்டியுரைக்க. ஊமர் - பேச அறியாதவர். ஒழுகும் நெறியறியாதவரை இங்ஙனம் 'பேச அறியாதவர்' என்றல் வழக்கு. "கொடி மேல் விடையுடையான்" என்பது, 'சிவன்' என ஒரு சொல் தன்மைப்பட்டு நின்று, "தில்லை மூதூர்" என்பது ஏழாவதன் பொருள்படத் தொக நின்றது. "ஆடவும்" என்னும் உம்மை எளிமையை உணர்த்தி நிற்றலின் இழிவு சிறப்பும்மை. 'மன்றில் ஆடவும் வணங்கி ஒன்றார்' என்க. மற்று, அசை. அங்கே - அம்மன்றிலே. ஒன்றுதல் - மனம் ஒருங்குதல். இரண்டு, பிறப்பும் இறப்பும். இது தொகைக் குறிப்பு.*

***1064. குறிப்புரை :*** *இப்பாட்டுத் தலைவி தோழிக்கு அறத்தொடு நின்றது. மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி யுரைக்க. தளைகள் நிலா மலர் - கட்டு (முறுக்கு - அரும்பாய் இருக்கும் நிலை) நில்லாத, (நிலா, இடைக்குறை) எனவே, நன்கு மலர்ந்த மலர். 'கொன்றையன்' என்றும், 'புலியூரன்' என்றும் ஒருமுறை சொன்னேன். அது காரணமாகக் கையில் வளைகள் நில்லாது கழன்று விழும்படி அநங்கனது (மன்மதனது) வரிந்து கட்டப்பட்ட வில் என்னை நோக்கி வளையா நின்றது. இது பற்றி அச்சுரன் (தேவன், சிவபெருமான்) நினைகின்றானில்லை. 'அதுவே என் வேறுபாட்டிற்குக் காரணம்' என்பது குறிப்பெச்சம். கணைகள் - பற்றுக்கோடு. 'கழலே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்தலாயிற்று. 'கண் நிலாவும் முகத்தையும், துளை*

**1065.** வரித்தடந் திண்சிலை மன்மத னாலும் ஆழிவட்டம்
தரித்தவன் தன்மக னென்பதோர் பொற்புந் தவநெறிகள்
தெரித்தவன், தில்லையுட் சிற்றம் பலவன் திருப்புருவம்
நெரித்தலும் கண்டது வெண்பொடி யேயன்றி நின்றிலவே. 44

**1066.** நின்றில வேவிச யன்னொடுஞ் சிந்தை களிப்புறநீள்
தென்தில்லை மாநட மாடும் பிரான்தன் திருமலைமேல்
தன்தலை யால்நடந் தேறிச் சரங்கொண் டிழிந்ததென்பர்
கன்றினை யேவிள மேலெறிந் தார்த்த கரியவனே. 45

---

*நிலாவும் கையையும் உடைய கரி' என எதிர்நிரல் நிறையாக இயைத்துரைக்க. "நிலாமை" என்பது எதிர்மறை வினையெச்சம். 'சுரம் நினையான்' என்பது பாடமன்று.*

***1065. குறிப்புரை :*** *'சிற்றம்பலவன் (மன்மதனை நோக்கித்) திருப்புருவம் நெரித்த மாத்திரத்தில் கண்டது சாம்பலேயன்றி, அவனது பேரழகும், 'திருமால் பெற்ற மகன்' என்னும் புகழும் சிறிதும், நின்றில என்க. 'மன்மதனை நோக்கி' என்பது முன்னர்ப் போந்த சொற்களின் குறிப்பால் வந்து இயைந்த இசையெச்சம். தவநெறிகள் - சிவதன்ம வழிகள்.*

***1066. குறிப்புரை :*** *பாரத - இதிகாசத்துள், 'பதின்மூன்றாம் நாட்போர் முடிந்தபின் இரவில் கிருட்டினன் அருச்சுனனை அவனது சூக்கும தேகத்தோடு மட்டும் உடன் கொண்டு கயிலாயத்தை அடைந்து, சிவபெருமானைத் தரிசிப்பித்து, அப் பெருமான் முன்பு அவனுக்கு வழங்கிய பாசுபதாத்திரம் இந்திரன் பொருட்டு அவனால் 'நிவாத கவச காலகேயர்' என்னும் அசுரர் மேல் ஏவப்பட்டமையால் அஃது அவ் வசுரர்களையழித்து விட்டுக் கயிலாயத்துள் சென்றிருந்ததைத் திரும்பப் பெற்றுக்கொள்ளச் செய்து மீண்டு குருச்சேத்திரத்தை அடையச் செய்தான்' எனக் கூறப்பட்டது. அப்பொழுது கிருட்டினன் கயிலாய மலைமேல் 'காலால் நடத்தல் கூடாது' தலையால் நடந்து ஏறினமை இப்பாட்டால் அறியப்படுகின்றது. இப்பாட்டு அந்தாதியாய் அமைதற் பொருட்டு, "நின்றிலவே" என்பது பாடமாகக் காணப்பட்ட போதிலும் "நின்றிரவே" என்பதே பாடமாகும். அப்பாடம் அந்தாதிக்கு மாறாவதன்று. "நின்று" என்பதை "ஏறி" என்பதன் பின்னர்க் கூட்டுக. 'கரியவன் இரவே விசயன்னொடும் திருமலைமேல் சரம் கொண்டு இழிந்தது தலையால் நடந்து ஏறி நின்று' என இயைத்து முடிக்க.*

**1067.** கருப்புரு வத்திரு வார்த்தைகள் கேட்டலும் கண்பனியேன்;
விருப்புரு வத்தினொ டுள்ளம் உருகேன்; விதிர்விதிரேன்;
இருப்புரு வச்சிந்தை யென்னைவந் தாண்டது மெய்வணமோ
பொருப்புரு வப்புரி சைத்தில்லை யாடல் புரிந்தவனே. **46**

**1068.** புரிந்தவன் பின்றியும் பொய்ம்மையி லேயும், திசைவழியே
விரிந்தகங் கைம்மலர் சென்னியில் கூப்பின், வியன்நமனார்
பரிந்தவ னூர்புக லில்லை; பதிமூன்(று) எரியவம்பு
தெரிந்தவெங் கோன்தன் திரையார் புனல்வயற் சேண்தில்லையே. **47**

**1069.** சேண்தில்லை மாநகர்த் திப்பியக் கூத்தனைக் கண்டுமன்பு
பூண்டிலை; நின்னை மறந்திலை; யாங்கவன் பூங்கழற்கே
மாண்டிலை; யின்னம் புலன்வழி யேவந்து வாழ்ந்திடுவான்
மீண்டனை; யென்னையென் செய்திட வோ ?சிந்தை ! நீவிளம்பே. **48**

---

***1067. குறிப்புரை :*** *கரும்பு + உருவம் - கருப்புருவம். 'கரும்பு போலும் உருவம்' என்க. கரும்பு போலுவதாவது கண்டார்க்கு இனிதாதல். 'அவ்வுருவத்தைக் குறிக்கின்ற திருவார்த்தைகள்' என்க. விருப்பு உருவம் - அன்பே வடிவான உடம்பு. இரும்பு + உருவம் - இருப்புருவம். இங்கு "உருவம்" என்றது தன்மையை. பொருப்பு உருவப் புரிசை - மலை போலும் உருவத்தையுடைய மதில்.*

***1068. குறிப்புரை :*** *இப்பாட்டிற்கு முதற்கண் 'ஒருவன்' என்னும் எழுவாய் வருவிக்க. பொய்ம்மையிலே - பொய்யாகவே; அஃதாவது மனம் பற்றாது மற்றவர் செய்வது போலச் செய்பவனாய். திசைவழியே - ஒரு திசை நோக்கிச் செல்லும் வழியில். அகங்கைம்மலர் - உள்ளங்கையாகிய மலர்கள். "விரிந்து" என்பதனை, 'விரிய' எனத் திரிக்க. 'முன்னே விரியப் பின்னே கூப்பின்' என்க. அகங்கை இரண்டனையும் விரித்தல் ஒருவகை ஆவாகன முத்திரை. இறைவனிடம் ஒன்றை வேண்டுதற்கும் இம்முத்திரை பயன்படும். 'அவன்பால் மட்டு மன்று; அவனது ஊர்க்குள்ளும் நமனார் புகலில்லை' என்பதாம். 'ஒருவன் தில்லையை நோக்கிச் சென்னியிற் கைகூப்பினால் அவனது ஊர்க் குள்ளும் நமனார் புகலில்லை' என்க. பரிந்து - விரைந்து. பதிமூன்று - முப்புரம்.*

***1069. குறிப்புரை :*** *சேண் - அகன்ற இடம். 'திவ்வியம்' என்பது "திப்பியம்" எனத் திரிந்து வந்தது. திவ்வியம் - தெய்வத் தன்மை. சிந்தை அடங்குதலை, 'அது தன்னை மறத்தல்' என்றார். கழற்கு - கழற்கண்; உருபு மயக்கம். மாறாதல்*

**1070.** விளவைத் தளர்வித்த விண்டுவுந், தாமரை மேலயனும்
அளவிற்கு அறியா வகைநின்ற வன்றும் அடுக்கல்பெற்ற
தளர்வில் திருநகை யாளும்நின் பாகங்கொல்! தண்புலியூர்க்
களவிற் கனிபுரை யுங்கண்ட! வார்சடைக் கங்கையனே. 49

**1071.** கங்கை வலம்,இடம் பூ;வலங் குண்டலம்; தோடிடப்பால்;
தங்குங் கரம்வலம் வெம்மழு; வீயிடம்; பாந்தள்வலம்
சங்க மிடம்;வலம் தோலிட மாடை; வலம்அக்(கு);இடம்
அங்கஞ் சரி;அம் பலவன் வலங்கா ணிடமணங்கே. 50

---

*- ஒடுங்குதல். மீண்டனை - கழலிற் சென்றும் திரும்பினாய். 'என்னை என் செய்திட மீண்டனை' என ஓகாரம் வினாப் பொருட்டு. "சிந்தை" என்பதை முதலிற் கூட்டுக. அதனைப் பின்னும் கூட்டுக. சிந்தை, அண்மை விளி.*

***1070. குறிப்புரை :*** *ஈற்றடியை முதலில் வைத்து உரைக்க. களர் - "கள" எனச் செய்யுளில் ஈறு குறுகி நின்றது. களா, ஒருவகைச் செடி. 'அதில் உள்ள கனி' என்க. புரையும் - போலும். 'கற்ற வார்சடை' என்பது பாடமன்று. 'வார்சடையிற் கங்கையை உடையவனே' என்க.*

*விளாவைத் தளர்வித்த - (கண்ணனாய் இருந்த நிலைமையில்) விளாங்கனியை எறிந்து உதிர்த்த. விண்டு - விட்டுணு; அடுக்கப் பெற்ற - மலையரையன் பெற்ற. தளவின் திருநகையாள் - முல்லையரும்பு போன்ற நகையை உடைய உமாதேவி. 'சடைக் கங்கையனே! நீ மாலும், அயனும் அடி முடிதேட அனற்பிழம்பாய் நின்ற அப்பொழுதும் மலைமகள் உன் இடப்பாகத்தில் இருந்தாளோ' என்க. கொல், ஐயம். 'என்றுமே உமை பாகம் பிரியாய்' எனப்படுகின்ற நீ நெருப்புருவமாய் நின்ற காலத்தில் அவளைப் பிரியாதிருத்தல் எங்ஙனம் கூடிற்று என்றபடி. "எத்திறம் நின்றான் ஈசன், அத்திறம் அவளும் நிற்பள்"* என்பது அவள் இயல்பாகலின், "நீ நெருப்பாய் நின்றபொழுது, அவள் அதன் சூடாய் இருந்தாள் போலும்" என்பது குறிப்பு.*

***1071. குறிப்புரை :*** *இப்பாட்டு மாதொரு கூறாம் வடிவத்தை வருணித்தது. 'வலம் கரம் மழுதங்கும்' என இயைக்க. வீ - பூச்செண்டு. பாந்தள் - பாம்பு. சங்கம் - சங்க வளையல். அங்கு, அசை. அக்கு - எலும்பு மாலை. அம்சரி - அழகிய சரிவு. (தொங்கல்) பொன்னரி மாலை முதலியன. காண், அசை. 'வலம் அம்பலவன்; இடம் அணங்கு. (பெண்) இந்நிலைமைக்கு ஏற்ப, தலையில் வலம் கங்கை; இடம் பூ முதலியனவாம்' என்க.*

---

* *சிவஞான சித்தி - சுபக்கம் - சூ.2.75.*

1072. அணங்(கு),ஆ டகக்குன்ற மா(து),அற ஆட்டிய வாலமர்ந்தாட்(கு)
இணங்கா யவன்தில்லை யெல்லை மிதித்தலு மென்புருகா
வணங்கா, வழுத்தா விழாவெழும் பாவைத் தவாமதர்த்த
குணங்காண் இவளென்ன வென்றுகொ லாம்வந்து கூடுவதே. 51

1073. கூடுவ(து) அம்பலக் கூத்த னடியார் குழுவுதொறும்;
தேடுவ(து) ஆங்கவ னாக்கமச் செவ்வழி; யவ்வழியே
ஓடுவ(து) உள்ளத் திருத்துவ தொண்சுட ரைப்பிறவி
வீடுவ தாக நினையவல் லோர்செய்யும் வித்தகமே. 52

---

***1072. குறிப்புரை :*** *இது தலைவியது கைக்கிளைக் காதல் ஆற்றாமை கண்டு தோழி மனமழிந்து கூறியது. ஆல் - திரு ஆலங்காடு தலம். அதில் அமர்ந்தவள் காளி. அவளை "அணங்கு" என்றதனோடு, சத்தி கூறாதல் பற்றி, "ஆடகக் குன்று மாது" என்றார். 'பொன்மலை மகள்' என்பது அதன் பொருள். அற ஆட்டிய - தன்னை (சிவனை) மிகவும் ஆடச் செய்த. "இறைவனை - ஆடல்கண்டருளிய அணங்கு" என முற்கால ஆசிரியரும் கூறினார். அவளை ஒறுத்து அடக்காமல், இனிய நடனத்தினாலே வென்று அடக்கினமை பற்றிச் சிவபெருமானை "அவளுக்கு இணங்கியவன்" என்றார்.*

*தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்*
*தான்புக்கு நட்டம் பயிலுமது என்னேடீ?*
*தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெலாம்*
*ஊன்புக்க வேற்காளிக்கு ஊட்டாங்காண் சாழலோ**

*என்னும் திருவாசகத்தைக் காண்க. வழுத்தல் - துதித்தல். பாவை, தலைவி. 'பாவை, தில்லை எல்லை மிதித்தலும் என்பு உருகா...... எழும்; (ஆகவே, தில்லைப்பிரான் இவளை) - இவள் மதர்த்த குணம் - என்ன (இரங்கி) என்று வந்து கூடுவது' என இயைத்து முடிக்க. தவா - நீங்காத; மதர்த்த - களித்த; பித்துக் கொண்ட குணம் உடையவளை, "குணம்" என்றார். காண், கொல் ஆம் அசைகள். ''உருகா'' என்பது முதலாக எண்ணின்கண் வந்த வினையெச்சங்கள் யாவும் "எழும்" என்னும் முற்றோடு முடிந்தன.*

***1073. குறிப்புரை :*** *'பிறவி வீடுவதாக நினைய வல்லோர் செய்யும் வித்தகம் அடியார் குழுவு தொறும் கூடுவதும், அவன் ஆக்கும் செல்வழி தேடுவதும், அவ்வழியே ஓடுவதும், ஒண் சுடரை உள்ளத்து இருத்துவதும் 'ஆம்' என இயைத்து முடிக்க. "ஆக்கும்" என்பது இறந்த காலத்தில் வந்தது. சிவன் ஆக்கிய செவ்விய வழியாவது சிவகாம நெறி. அதனை அடுத்துவரும் பாட்டாலும்*

---

* *திருச்சாழல் - 14.*

**1074.** வித்தகச் செஞ்சடை வெண்மதிக் கார்நிறக் கண்டத்தெண்தோள்
மத்தகக் கைம்மலைப் போர்வை மதில்தில்லை மன்னனைத்தம்
சித்தகக் கோயில் இருத்தும் திறத்(து)ஆ கமியர்க்கல்லால்
புத்தகப் பேய்களுக் கெங்கித்த தோ!அரன் பொன்னடியே. **53**

---

*அறியலாம். "கூடுவது" முதலிய நான்கு தொழிற் பெயர்களும் செவ்வெண். அவற்றது இறுதியில் அவற்றின் தொகை தொகுக்கப்பட்டு நின்றது. 'அவ்வழிக்கண்ணே' - என ஏழாவது விரிக்க. ஒண்சுடர் - ஞானம்; என்றது சிவஞானத்தை. "வீடுவது ஆக" என்பதில் "ஆக" என்றது, 'உண்டாகும்படி' என்றவாறு. வித்தகம் - திறல். திறலால் செய்யப்படும் செயல்களை, 'திறல்' என்றார். 'பிறவாறு செய்யும் செயல்கள் பிறவியை நீக்கமாட்டா' என்பது கருத்து.*

***1074. குறிப்புரை :*** *வித்தகம், வெண்மதி, கார்நிறக் கண்டம், எண்தோள், கைம்மலைப் போர்வை - இவை அனைத்தும் தில்லை மன்னனாகிய ஒருவனையே சிறப்பித்தன. வித்தகம் - திறல். 'செஞ்சடைக்கண் வெண்மதியை உடைய' என்க. கார் - மேகம்; கருமையுமாம். கை மலை - யானை. இஃது ஆகு பெயராய், அதன் தோலைக் குறித்தது. சித்தம் - மனம். 'சித்த' என்பதன் ஈற்று அகரம் குறைந்து நின்றது. 'சித்தமாகிய அகக் கோயில்' என்க. 'கோயிலின்கண்' என ஏழாவது விரிக்க. ஆகமியர் - சிவாகம நெறியில் நிற்பவர்கள். ''காருறு கண்ணியர்'' என்றாற் போல்வனவற்றில் ஒருமையுணர்த்தும் இகர விகுதி சாரியையாய்விட 'அர்' என்னும் பன்மை விகுதிபுணர்ந்து பன்மையை உணர்த்தும். இவ்வாறு வருதல் அஃறிணைப் பெயர்கள் இன்மையாலும், இன்னோரன்னவை உயர்வு பற்றி வந்த பன்மைப் பெயராகாது, பொருட்பன்மை பற்றிய பெயர்களே ஆதலாலும், இவை தனி மொழிகளில் ஒட்டுப் பெயர் ஆக்கத்தில் உள்ள சில வேறுபாடுகளேயாம். ஆசிரியர் தொல்காப்பியனார் தனிமொழியாக்கத்தைக் கூற முற்படாமையின் இன்னோரன்னவற்றை அவர் விரித்திலர். "புத்தகப் பேய்கள்" - சுவடிகளைக் காத்தல் மாத்திரத்தையே உடையவர்கள்.*

*புத்தகமே சாலத் தொகுத்தும் பொருளறியார்*
*உய்த்தக மெல்லாம் நிரப்பினும் - மற்றவற்றைப்*
*போற்றும் புலவரும் வேறே; பொருள்தெரிந்து*
*தேற்றும் புலவரும் வேறு**

*என்னும் நாலடிச் செய்யுளைக் காண்க. இதில் 'போற்றுதல்' என்றது, "ஊரா மிலைக்கக் குருட்டா மிலைத்தல்"[1] போல. மற்றவர்கள் உயர்த்துப் பேசுதலைக்*

---

* *வெண்பா - 318.*
1. *திருவாசகம் - திருச்சதகம் - 87*

**1075.** பொன்னம் பலத்துறை புண்ணிய னென்பர்; புயல்மறந்த
கன்னல்மை தீரப் புனிற்றுக் கலிக்காமற்(கு) அன்றுபுன்கூர்
மன்னு மழைபொழிந்(து) ஈரறு வேலிகொண் டாங்கவற்கே
பின்னும் மழைதவிர்த்(து) ஈரறு வேலிகொள் பிஞ்ஞகனே. **54**

---

*கேட்டுத் தாங்களும் உயர்த்துப் பேசுதல். 'சிவாகமப் பொருளை அறியாதவர்கட்குப் பிற நூல்களின் உண்மைப் பொருள் விளங்காது' என்பதாம்.*

*அசிக்க ஆரியங்கள் ஓதும்*
*ஆதரைப் பேத வாதப்*
*பிசுக்கரைக் காணாகண், வாய்*
*பேசாதப் பேய்க ளோடே*[1]

*எனவும்,*

*ஆரியப் புத்தகப் பேய்கொண்டு புலம்புற்று*
*வட்டணை பேசுவர்*[2]

*எனவும் போந்தனவும் இக்கருத்தே பற்றி எழுந்தனவாம். 'எங்குள்ளதோ' என்பதை, 'எங்கித்ததோ' என்றல் ஒரு வட்டார வழக்கு. "எங்கிருந்தோ" என்றது, 'அறிய வாராது' என்றபடி.*

***1075. குறிப்புரை :*** *"பொன்னம்பலத்துறை புண்ணியன் என்பர்" - என்பதனை இறுதியிற் கூட்டுக. புயல் - மேகம். அஃது இங்கு மழையைக் குறித்தது. கன்னல் - நாழிகை; அஃது இங்குப் பொதுவாக, 'காலம்' எனப் பொருள் தந்து நின்றது. மை - குற்றம். அது மழை பெய்யாமைக்குக் காரணமாகிய குற்றம். தீர - தீர்ந்தமையால் 'தீர்ந்தது பிரார்த்தனையினால்' என்க. நீற்றுக் கலிக்காமன் திருநீற்றை யணிந்த (அஃதாவது பிரார்த்தித்து அணிந்த) ஏயர்கோன் கலிக்காம நாயனார். 'புன்கூர் - அந்நாயனாருக்கு உரியதாய் இருந்த திருப்புன்கூர். 'புன்கூரில்' என ஏழாவது விரிக்க. கலிக்காம நாயனார் தாமும், தம்மைச் சார்ந்த மக்களும் ஏதோ பிழை செய்தமையால் மழை பெய்யா தொழிந்தது எனக் கருதி, அப்பிழை தீர்தற்குப் பன்னிரண்டு வேலி நிலத்தைத் திருப்புன்கூர் இறைவருக்குத் தேவதானமாகக் கொடுப்பது என்று பிரார்த்தித்துக் கொண்டமையால் மழை பெய்யத் தொடங்கியது. தொடங்கிய மழை விடாது பொழிந்தமையால் மழை நின்றால், மற்றும் பன்னிரு வேலி தேவதானம் செய்வதாகப் பிரார்த்தித்தமையால் மழை*

---

1. *திருமுறை - 9. "இணங்கிலா ஈசன்"*
2. *திருமுறை - 11. கோபப் பிரசாதம் - அடி, 84, 85.*

**1076.** நேசனல் லேன்;நினை யேன்;வினை தீர்க்குந் திருவடிக்கீழ்
வாசநன் மாமல ரிட்டிறைஞ் சேனென்தன் வாயதனால்
தேசனென் னானைபொன் னார்திருச் சிற்றம் பலம்நிலவும்
ஈசனென் னேன்பிறப்(பு) என்னாய்க் கழியுங்கொல்! என்தனக்கே. 55

**1077.** தனந்,தலை, சக்கரம், வானத் தலைமை குபேரன்,தக்கன்,
வனந்தலை ஏறடர்த் தோன்,வா சவன்உயிர், பல்லுடலூர்
சினந்தலை காலன், பகல்,காமன், தானவர், தில்லைவிண்ணோர்
இனந்தலை வன்னரு ளால்முனி வால்பெற் றிகந்தவரே. 56

---

*நின்றது. இச்செய்தியைச் சுந்தர மூர்த்தி நாயனார் தமது திருப்புன்கூர்த் தலப் பதிகத்து இரண்டாம் பாடலில் குறித்தருளினார். அஃதே இப்பாட்டிற் கூறப்பட்டது. 'பொழிவித்து' என்பதில் பிறவினை விகுதி தொகுக்கப்பட்டது. ஈற்றடியில், பின்னும் பிழை தவிர்த்து என்பது பாடமன்று. ஈற்றில் தொகுக்கப்பட்ட 'பிஞ்ஞகனை' என்னும் இரண்டாம் வேற்றுமையை விரிக்க.*

***1076. குறிப்புரை :*** *நேசன் - அன்பன். 'வினை நீக்கும்' எனப் பாடம் ஓதுதல் சிறக்கும். தேசன் ஒளியுடையவன். 'ஆனை' என்பது காதற் சொல். என்னேன் - என்று துதியேன். 'இப்பிறப்பு' எனச் சுட்டு வருவிக்க. என் ஆய் - என்ன பயன் தந்ததாய். 'யாதொரு பயனையும் தந்ததாகாது வீணாய்க் கழியும் போலும்' என்பதாம். கொல், ஐயம். 'என்றனக்கு என் ஆய்' எனக் கூட்டுக.*

***1077. குறிப்புரை :*** *'தில்லைத் தலைவன் அருளால் தனமும், தலையும், சக்கரமும், வானத் தலைமையும் பெற்றவர் முறையே குபேரனும், தக்கனும், ஏறடர்த்தோனும், வாசவனும்' எனவும், 'அவன் முனிவால் உயிரையும், பல்லையும், உடலையும், ஊரையும் இகந்தவர் முறையே காலனும், பகலவனும், காமனும், தானவரும்' எனவும் இயைத்துப் பொருள் கொள்க. இது நிரல்நிறையணி. 'தில்லைப் பெருமான் அன்பர்கட்கு அருளையும், வன்பர்கட்கு ஒறுப்பையும் அளிக்க வல்லவன்' என்பதாம். தனம் - செல்வம். வானத்தலைமை - வானுலக ஆட்சி. ஏறு அடர்த்தான், நப்பின்னையை மணப்பதற்காகக் காளைகளைத் தழுவிக் கொன்றவன், கண்ணன், திருமால். வனந் தலை ஏறு - காட்டில் சென்று மேயும் காளைகள். சினந்து அலை காலன் - உயிர்கள்மேல் கோபித்துத் திரிகின்ற யமன். பகலைச் செய்பவனைப் "பகல்" என்றார். 'இனத் தலைவன்' என்பது எதுகை நோக்கி மெலிந்து நின்றது. "பெற்று இகந்தவர்" என்பதில் "பெற்று" என்னும் எச்சம் எண்ணின்கண் வந்ததாகலின், 'பெற்றவர், இகந்தவர்' என்றவாறு.*

***1078. குறிப்புரை :*** *அவமதித்து - (கூற்றுவனால்) இகழப்பட்டு. ஆதர் -*

**1078.** அவமதித் தாழ்நர கத்தில் இடப்படும் ஆதர்களும்
தவமதித்(து) ஒப்பில ரென்னவிண் ணாளுந் தகைமையரும்
நவநிதித் தில்லையுட் சிற்றம் பலத்து நடம்பயிலும்
சிவநிதிக் கேநினை யாரும், நினைந்திட்ட செல்வருமே. **57**

**1079.** வருவா சகத்தினில், முற்றுணர்ந் தோனை,வண் தில்லைமன்னைத்
திருவாத வூர்ச்சிவ பாத்தியன் செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தருதிருக் கோவைகண் டேயுமற் றப்பொருளைத்
தெருளாத வுள்ளத் தவர்கவி பாடிச் சிரிப்பிப்பரே. **58**

---

*அறிவிலிகள். தவம் மதித்து - தவத்தை மேன்மையாக மதித்துச் செய்து. சிவநிதி - சிவனாகிய செல்வம். 'நிதிக்கே' என்னும் நான்காம் உருபை இரண்டாம் உருபாகத் திரிக்க. ஈற்றில் 'ஆவர்' என்னும் பயனிலை வருவித்து முடிக்க. 'நினையாதவர் நரகம் புகுவர்' எனவும், 'நினைந்தவர் சிவ லோகம் பெறுவர்' எனவும் கூறியவாறு.*

***1079. குறிப்புரை :*** *'வரு வாசகத்தினில் செய்' என இயையும். வருவாசகம் - திருவருளின் வழித் தமது நாவில் வந்த சொற்கள். இவை 'திருவாசகம்' - எனப் பெற்றன. சிவ பாத்தியன் - சிவனது பாத சம்பந்தத்தை (திருவடி தீட்சையை)ப் பெற்றவன்; திருவாதவூரடிகள். 'திருவாசகம் மாணிக்கம் போன்றது' என்னும் கருத்தால் அவ்வாசகத்தை வெளியிட்ட அடிகள் 'மாணிக்க வாசகர்' எனப் பெயர் பெற்றார். இவரை 'ஆதிசைவ அந்தணர்' என அறிஞர்[1] கருதுவர். இவர் தில்லைப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாக வைத்து அருளிச் செய்த கோவைப் பிரபந்தம், 'திருச்சிற்றம்பலக் கோவையார்' என்றும், 'திருக்கோவையார்' என்றும் சொல்லப்படுதல் இப் பாட்டில் குறிக்கப்பட்டமை காண்க. "வருவாசகத்தினில் செய்" என்றதனால் இதுவும் திருவாசகமேயாக குறிக்கப்பட்டது. இதனைக் 'கோவைத் திருவாசகம்' என்பர். இக்கோவையாரை இவ்வாசிரியர் (நம்பியாண்டார் நம்பிகள்) எட்டாம் திருமுறையாகச் சேர்த்திருத்தல் வெளிப்படை. அப்பொருள், அதில் சொல்லப்பட்டுள்ள உலகியற் பொருள், அறிவன் நூற் பொருள்[2] 'கவியாற் பாடி' என மூன்றாவது விரிக்க. 'அப் பெருமானைச் சிரிக்கச் செய்வர்' என்க. சிரித்தல் - எள்ளி நகையாடுதல். 'அருள்வழியால் வந்த சொற் பிரபந்தத்திற்கு அஃது இன்றி, மலவழியால் வரும் சொற்பிரபந்தங்கள் ஒவ்வா' என்பது கருத்து. இதனால் இவ்வாசிரியர்*

---

1. *திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், எம்.ஏ., எம்.பில்.,*
2. *திருக்கோவையார்க்குப் பேராசிரியர் உரையின் உரைப்பாயிரம்.*

**1080.** சிரித்திட்ட செம்பவ ளத்தின் திரளும், செழுஞ்சடைமேல்
விரித்திட்ட பைங்கதிர்த் திங்களும், வெங்கதப் பாந்தளும்,தீத்
தரித்திட்ட வங்கையும், சங்கச் சுருளுமென் நெஞ்சினுள்ளே
தெரிந்திட்ட வா! தில்லைச் சிற்றம் பலத்துத் திருநடனே. **59**

**1081.** நடஞ்செய்சிற் றம்பலத் தான்முனி வென்செயும் ? காமனன்று
கொடுஞ்சினத் தீவிழித் தாற்குக் குளிர்ந்தனன்; விற்கொடும்பூண்
விடுஞ்சினத் தானவர் வெந்திலர்; வெய்தென வெங்கதத்தை
ஒடுங்கிய காலனந் நாள்நின் றுதையுணா விட்டனனே. **60**

---

*காலத்தில் சிவபிரான் மீது பாடப்பட்ட வேறு சில கோவைகளும் இருந்தமை அறியப்படும்.*

***1080. குறிப்புரை :*** *"தில்லைச் சிற்றம்பலத்துத் திருநடன்" என்பதை முதலில் கொள்க. சிரித்திட்ட - ஒளிவீசுகின்ற. பவளம் - பவளத்தின் நிறம்; ஆகுபெயர். திரள் - திரள் போலும் திருவுருவம். கதம் - கோபம். சங்கச் சுருள் காதில் உள்ளது. தெரித்திட்டவா - தோற்றுவித்தவாறு; 'வியப்பினது' எனச் சொல்லெச்சம் வருவித்து முடிக்க. நடன் - நடனத்தைச் செய்பவன்.*

***1081. குறிப்புரை :*** *இப்பாட்டு நிந்தாத்துதி. அஃதாவது, பழித்ததுபோலப் புகழ் புலப்படுத்தியது. மிக்க சினத்தோடு தீ எழப் பார்த்த அவன்முன் மன்மதன் குளிர்ந்து எழுந்தான். திரிபுரத்தை எரித்தபொழுது அதில் இருந்த அசுரர்கள் எரிந் தொழியவில்லை. (முன்போலவே இருந்தார்கள்). அவனால் உதைக்கப்பட்ட பின்பும் யமன் முன்போல இருந்து கொண்டுதான் இருக்கின்றான் என்றால் தில்லையம்பலத்தில் நடனம் புரியும் பெருமான் கோபித்தால், அக்கோபம் யாரை, என்ன செய்யும்? (இரதிதேவி தன் வேண்டுகோளுக்கு இரங்கிச் சிவபெருமான் முன்பு எரிந்துபோன மன்மதனை எழுப்பித் தந்து, அவளுக்கு மட்டும் முன்போலத் தோன்றியிருக்கும்படி செய்தார். திரிபுரத்தை எரித்தபொழுது புத்தன் போதனையால் மயங்கிப் பத்தியை விட்டுவிடாமல் முன்போலவே இருந்த ஒரு மூவர் அசுரரை எரியாது பிழைத்திருக்கச் செய்தார். யமனை உதைத்த பின்பு எழுப்பி 'எம் அடியவர்பாற் செல்லாதே' என்று அறிவுரை கூறி விடுத்தார். இவைகளை யெல்லாம் குறிப்பிடாமல் பொதுவாக நகைச்சுவை தோன்றக் கூறினார். 'தீமைக்குத் தீமையைத் தருதல் மட்டுமன்றி, நன்மைக்கு நன்மையும் தருபவன் சிவன்' என்பதைக் குறிப்பால் உணர்த்தியவாறு. "விழித்தாற்கு" என்னும் குவ்வுருபை, 'முன்' என்னும் பொருட்டாகிய கண்ணுருபாகத் திரிக்க. வில் - ஒளி. 'விற் பூண்' என இயையும். கொடுமை - வளைவு. பூண் - அணிகலம்.*

1082. விட்டங் கொளிமணிப் பூண்திகழ் வன்மதன் மெய்யுரைக்கில்
இட்டங் கரியன்;நல் லானல்லன்; அம்பலத் தெம்பரன்மேல்
கட்டங் கியகணை யெய்தலுந் தன்னைப்பொன் னார்முடிமேல்
புட்டங்கி னான்மக னாமென்று பார்க்கப் பொடிந்தனனே. 61

1083. பொடிஏர் தருமே னியனாகிப் பூசல் புகவடிக்கே
கடிசேர் கணைகுளிப் பக்கண்டு, கோயிற் கருவியில்லா,
வடியே படவமை யுங்கணை யென்ற வரகுணன்தன்
முடி ஏர்தருகழ லம்பலத் தாடிதன் மொய்கழலே. 62

---

*விடும் சினத் தானவர் - சினத்தை விட்டொழித்த அசுரர். வெய்தென - விளைவாக. 'ஒடுக்கிய' என்பது எதுகை நோக்கி மெலிந்து நின்றது. "நின்று" என்பது ஐந்தாம் வேற்றுமைச் சொல்லுருபு.*

***1082. குறிப்புரை :*** *மதன் - மன்மதன். மெய் - உடம்பு - கரியன் - கருமை நிறமானவன். இட்டம் - விருப்பம். இதனை, 'கரியன்' என்பதன் பின்னர்க் கூட்டி, "இட்டம் நல்லனல்லன்" என குணவினை குணிமேல் நின்றதாக உரைக்க. "நல்லனல்லன்" என்பதன்பின், அதனால் என்னும் சொல்லெச்சம் வருவிக்க. கள் - தேன். கள் தங்கிய கணை, மலர்க் கணை. தன்னை - அவனை. புள் மேல் தங்கினான் - கருட வாகனத்தின் மேல் வருபவன்; திருமால். 'அவன் பொன்னார் முடியை உடையவன்' 'திருமால் மகன்' என்பது, 'மன்மதன்' என்னும் பெயரளவாய் நின்றது. என்று - என்று தெரிந்து. பார்க்க - நெற்றிக் கண்ணைத் திறந்து பார்க்க. பொடிந்தனன் - சாம்பலாயினான். 'சிவபெருமான் ஒறுப்பது தீயோரையே' என்றபடி.*

***1083. குறிப்புரை :*** *"அம்பலத்து ஆடிதன் மொய்கழல்" என்பதை முதலில் வைத்து உரைக்க. 'வரகுணன்' என்னும் பாண்டியன் மிகுந்த சிவபத்தனாய் இருந்த நிலையில் பகைவர்கள் படையெடுத்து வந்து அவன்மேற் போர் தொடுக்க, அவன் திருநீற்றையே கவசமாகப் பூசிக்கொண்டு நிராயுதனாய்ப் போர்க்களத்தில் சென்று நிற்கப் பகைவர்கள் விட்ட அம்புகள் அவனை ஒன்றும் செய்யாமல், அவன் காலடியிலே வீழ்ந்தன' என்பது இப்பாட்டுள் கூறப்பட்டது. இதுவும், இதுபோல இவனது பத்தி மிகுதியை விளக்குவனவாக பதினொன்றாம் திருமுறையில் உள்ள பட்டினத்து அடிகள் பாடலும், திருவிளையாடற் புராணங்களும் கூறும் செய்திகளும் கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்ட இருவர் வரகுணருள் ஒருவனுக்கும் அக்கல்வெட்டுக்கள் கூறாமையால் 'கல்வெட்டுக்கள் கூறும் வரகுணர் இருவருள் ஒருவனே இப் பாட்டில் குறிக்கப்பட்ட வரகுணன்' எனச் சிலர் கூறுதல் ஏற்புடையதாய்*

1084. கழலும் பசுபாசர் ஆம்இமை யோர்தங் கழல்பணிந்திட்(டு)
அழலு மிருக்குந் தருக்குடை யோர்,இடப் பால்வலப்பால்
தழலும், தமருக மும்பிடித் தாடிசிற் றம்பலத்தைச்
சுழலு மொருகா லிருகால் வரவல்ல தோன்றல்களே. 63

1085. தோன்றலை, வெண்மதி தாங்கியைத் துள்ளிய மாலயற்குத்
தான்தலை பாதங்கள் சார்வரி யோன்றன்னைச் சார்ந்தவர்க்குத்
தேன்றலை யான்பா லதுகலந் தாலன்ன சீரனைச்சீர்
வான்தலை நாதனைக் காண்பதென் றோதில்லை மன்றிடையே. 64

---

*இல்லை. எனவே, இவ்வரகுணன் தமிழ் நாட்டில் கல்வெட்டுக்கள் தோன்றுதற்கு முன்னே வாழ்ந்த வரகுணனாவன்.*

*பொடி - திருநீறு. ஏர்தரு - அழகைத் தருகின்ற. பூசல் - போர்; போர்க்களம். "அடிக்கு" என்னும் நான்காவதை ஏழாவதாகத் திரிக்க. கடி, வடி - கூர்மை. கோயிற் கருவி - அரண்மனையில் உள்ள படைக்கலங்கள். 'அவை யில்லாமல்' என்றது. 'அவைகளை எடாமலே' என்றபடி. அமையும் - ஏற்கும். 'முடியின் கண்' என ஏழாவது விரிக்க.*

***1084. குறிப்புரை :*** *"இடப்பால் வலப்பால்" என்பது முதலாகத் தொடங்கியுரைக்க. 'இடப்பால் தழலும், வலப்பால் தமருகமும்' என நிரல் நிறையாக இயைக்க. சுழல் வரல் - சுற்றி வருதல், "சுழலும்" என்னும் உம்மை 'வீழ்ந்து பறித்து' என இறந்தது தழுவிற்று. தோன்றல்கள் - பெருமையுடையவர்கள். கழலும் பசு பாசம் - பசுக்களைக் கட்டியுள்ள பாசம் கழலுபவர். ஆம் இமையோர் - மக்களின் மேலானவராகிய தேவர்கள். தம் கழல் - தமது (சுற்றி வந்தவர்களது) பாதங்கள். அழல் - அன்பினால் கண்ணீர் வார நிற்றல். "அழல்" என்னும் தொழிற்பெயர், 'அழ' என்னும் செயலென் எச்சப் பொருட்டாய் நின்றது உம்மைச் சிறப்பு. தருக்கு - பெருமிதம். 'தில்லை யம்பலத்தை வணங்கினோர், தம்மைத் தேவர் வணங்க இருப்பார்கள்' என்பதாம்.*

***1085. குறிப்புரை :*** *தோன்றல் - பெருமையுடையவன். துள்ளிய - அகங்கரித்த. தோன்றல், தாங்கி, சார்வரியோன், சீரன், நாதன் - இவை ஒரு பொருள்மேல் வந்த பல பெயர்கள். தேன்தலை - தேனின்கண். ஆண்பால் - பசுவின்பால். சீர் - தன்மை. வான் - வானுலகத்திற்கு, தலை நாதன் - மேலான தலைவன். "காண்பது" என்பதற்கு, 'இடைவிடாது காண்பது' என உரைக்க.*

**1086.** மன்றங் கமர்திருச் சிற்றம் பலவ! வடவனத்து
மின்றங் கிடைக்(கு)உந்தி நாடக மாடக்கொல்! வெண்தரங்கம்
துன்றங் கிளர்கங்கை யாளைச் சுடுசினத் தீயரவக்
கன்றங் கடைசடை மேலடை யாவிட்ட கைதவமே. 65

**1087.** தவனைத் தவத்தவர்க் கன்பனைத் தன்னடி யெற்குதவும்
சிவனைச் சிவக்கத் திரிபுரத் தைச்சிவந் தானைச்செய்ய
அவனைத் தவளத் திருநீ றனைப்பெரு நீர்கரந்த
பவனைப் பணியுமின்; நும்பண்டை வல்வினை பற்றறவே. 66

---

*1086.* ***குறிப்புரை :*** *'மன்று அங்கு, கன்று அங்கு' என்பவற்றில் வந்த 'அங்கு' என்பன அசைகள். வட வனம் - திருவாலங்காடு. 'மின் தங்கு இடை' என்றது காளியை. 'இடைக்கு எதிராக' என ஒரு சொல் வருவிக்க. உந்தி - எழும்பி. கொல், ஐயம். தரங்கம் - அலை. அம் - அழகு. கங்கையாளை வெளியில் இருக்க விடாமல் சடைக்குள் மறைத்து வைத்த கைதவம் (கரவு) காளி எதிரில் நடனம் ஆடுதற் பொருட்டோ' என்றபடி. 'தனித்து நின்று ஆடாது, ஒரு பெண்ணுடன் சேர்ந்து நின்று ஆடினால் காளி நடனப் போர் செய்ய உடன்பட மாட்டாளன்றோ' என்றபடி. இளம் பாம்புகளை, "கன்று" என்றது மரபு வழுவமைதி. "இளநாகமொடு ஏன முளைக்கொம் பவை பூண்டு"[1] எனத் திருஞானசம்பந்தரும் அருளிச் செய்தார். அடைத்தல் - மறைத்தல். அடையா இட்ட- அடைத்து வைத்த. கைதவம் - வஞ்சனை. சிவபெருமான் திருவாலங்காட்டில் நடனப் போர் செய்தமை மேல் "அணங்காடகக் குன்ற மாது"[2] என்னும் பாட்டிலும் கூறப்பட்டது.*

*1087.* ***குறிப்புரை :*** *"உலகீர்" - என்னும் முன்னிலை வருவித்து, "நும் வினை பற்றற என எடுத்துக்கொண்டு உரைக்க. தவன் - தவக்கோலம் உடையன். "சிவக்க" என்றது, 'தீயால் சிவந்து தோன்ற' என்றபடி. சிவந்தான் - கோபித்தான். "பெறலின், இழவின், காதலின், வெகுளியின்"[3] என்றதனால், வெகுளுதல் இரண்டாம் வேற்றுமை பெறுதலை உணர்க. 'திரிபுரத்தை அவை சிவக்கச் சிவந்தான்' என மாற்றிக் கொள்க. செய்ய - சிவந்த நிறத்தையுடைய. பவன் - கருதுவார் கருதும் இடத்தில் தோன்றுபவன். "கடி சொல் இல்லைக் காலத்துப் படினே"[4] என்பதனால் முன்னிலைக்கண் வந்த உம்' விகுதியின் பின் 'மின்' என்பது விகுதிமேல் விகுதியாய் வந்து, "பணியுமின்" என்றாயிற்று.*

---

1. *திருமுறை - 1.1.2.*
2. *பாட்டு - 51.*
3. *தொல் - சொல் - வேற்றுமையியல்.*
4. *தொல் - சொல் - எச்சவியல்*

1088. பற்றற முப்புரம் வெந்தது, பைம்பொழில் தில்லைதன்னுள்
செற்றரு மாமணிக் கோயிலின் நின்றது, தேவர்கணம்
சுற்றரு நின்புக ழேத்தித் திரிவது சூழ்சடையோய்!
புற்றர வாட்டித் திரியும் அதுவொரு புல்லனவே. 68

1089. புல்லறி வின்மற்றைத் தேவரும், பூம்புலி யூருள்நின்ற
அல்லெறி மாமதிக் கண்ணியன் போ லருளுவரே
கல்லெறிந் தானுந்தன் வாய்நீர் கதிர்முடி மேலுகுத்த
நல்லறி வாளனும் மீளா வழிசென்று நண்ணினரே. 69

---

***1088. குறிப்புரை :*** *"சூழ் சடையோய்" என்பதை முதலிற் கொள்க. சூழ்தல் - சுற்றிலும் சுழலுதல். 'உனது வெகுளியால் முப்புரம் வெந்தது. நீ உயர்ந்த மாணிக்கக் கோயிலிலே இருப்பது, தேவர் கூட்டம் உன்னையே புகழ்ந்து திரிவது இவையெல்லாம் உனக்குப் பெருமையைத் தருகின்றன. ஆயினும், நீ எங்கும் பாம்பாட்டித் திரிவது ஒன்று மட்டும் உனக்குச் சிறுமையைத் தருகின்றது' என்பது இப்பாட்டின் பொருள். "திரிவது" என்பதன்பின், 'இவை பெருமைய' என்பது வருவிக்க. 'ஆகையால் அதனை நீ விட்டொழிக' என்பது குறிப்பெச்சம். சிவபெருமானுக்கு இவற்றால் எல்லாம் பெருமையோ, சிறுமையோ உண்டாதல் இல்லை என்பது இதன் உள்ளுறைப் பொருள். செல்தரு - உயரத்தால் மேகங்களைத் தடுத்து நிறுத்துகின்ற. சுற்று - எங்கும் பரவிய. அரு - அருமையான.*

***1089. குறிப்புரை :*** *மூன்றாம் அடி முதலாகத் தொடங்கி யுரைக்க. சிவலிங்கத்தின் மேல் மறவாது கல்லெறிந்தவர் சாக்கிய நாயனார். சிவலிங்கத்தின் மேல் வாய்நீரை உமிழ்ந்தவர் கண்ணப்ப நாயனார். இவ்விருவரும் இச் செயல்களால் தீக்கதி யடையாது உள்ளத்து அன்பே காரணமாக, மீளா வழியாகிய வீட்டு நெறியிற் சென்று முத்தியை அடைந்தார்கள். செயலை நோக்காது உள்ளத்தை நோக்கி இவ்வாறு அருள்செய்த தேவர், பிறர் இருக்கின்றனரா? என வினவுகின்றார். 'செயலை விடுத்து உள்ளத்தையறிதல் முற்றறிவுடையனுக்கே கூடும்' என்பதாம். அவ் எறி மதி - இராக் காலத்தில் ஒளி வீசுகின்ற திங்கள்.*

***1090. குறிப்புரை :*** *'நாசத்திற் செலுத்தி' என ஏழாவது விரிக்க. நமன் உலகத்து எண் - யமனது உலகத்தைப் பற்றிய நினைவு. அது விடாத ஆகு பெயராய், அதுபொழுது நிகழும் அச்சத்தைக் குறித்தது. இருக்கல் உற்றீர் - இருக்க விரும்புபவர்களே! 'உங்கள் விருப்பம் நிறைவேற வேண்டுமாயின்*

1090. நண்ணிய தீவினை நாசஞ் செலுத்தி, நமனுலகத்(து)
எண்ணினை நீக்கி இமையோ ருலகத் திருக்கலுற்றீர்!
பெண்ணினொர் பாகத்தன், சிற்றம் பலத்துப் பெருநடனைக்
கண்ணினை யார்தரக் கண்டுகை யாரத் தொழுமின்களே. 70

1091. கைச்செல்வ மெய்திட லாமென்று பின்சென்று, கண்குழியல்
பொய்ச்செல்வர் செய்திடும் புன்மைகட் கேயென்றும் பொன்றலில்லா
அச்செல்வ மெய்திட வேண்டுதி யே;தில்லை யம்பலத்துள்
இச்செல்வன் பாதங் கரு(கு)இரந் தேனுன்னை; யென்னெஞ்சமே. 71

*திருச்சிற்றம்பலம்*

---

*நீங்கள் பெருநடனைக் கண்டு தொழுமின்கள்' என்க. ஆர்தல் - நிரம்புதல். அஃதாவது இன்பம் நிரம்புதல். 'பெண்ணினை' என்பதில் சாரியை நிற்க இரண்டன் உருபு தொகுதல் இலேசினாற் கொள்க.* இனி, 'பெண்ணினது பாகத்தன்' என ஆறாவது விரித்தலும் அமைவுடையதே. நடன் -நடனம் ஆடுபவன்.*

*1091. **குறிப்புரை :** கைச் செல்வம் - கைப் பொருள். கருத்து நோக்கி, 'பொய்ச் செல்வர் பின் சென்று அவர் செய்திடும் புன்மைகட்குக் கண்குழியல்' என உரைக்க. கண் குழியல் - கண் குழியற்க. கண் குழிதல் - பட்டினியால் 'கண் குழித்தல்' என்பது பாடம் அன்று. புன்மைகள் - அற்பச் செயல். அவை 'இல்லை' எனக் கரத்தலோடு, இகழ்தலையும் செய்தல். 'புன்மைகட்கு' என்னும் நான்காம் வேற்றுமை உருபை, 'புன்மையால்' என மூன்றாவதாகத் திரிக்க. "வேண்டுதியே" என்னும் ஏகாரம் தேற்றம். இதன்பின், 'அதற்கு' என்பது வருவிக்க. இப்பாட்டின் இறுதியை முதற்பாட்டின் முதலோடு மண்டலிக்க வைத்தமையின் இவ் அந்தாதி எழுபது பாட்டுக்களோடே முடிக்கப் பட்டதாம். அந்தாதிகள் சில இவ்வாறு எழுபது பாட்டோடே முடிதலும் மரபே.*

***கோயில் திருப்பண்ணியர் விருத்தம் முற்றிற்று.***

---

* *தொல் - எழுத்து - தொகை மரபு*

## திருத்தொண்டர் திருவந்தாதி

திருவாரூர்ப் பெருமான் 'தில்லை வாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என அடியெடுத்துக் கொடுக்க நம்பியாரூரர் ஏழாம் திருமுறையில் திருவாய் மலர்ந்தருளிய திருத்தொண்டத் தொகையென்னுந் திருப்பதிகத்திற் போற்றப் பெற்ற திருத்தொண்டர்களின் வரலாற்றைச் சுருக்கமாக வகுத்துக் கூறும் கருத்துடன் நம்பியாண்டார் நம்பி பாடிய பனுவல் திருத்தொண்டர் திருவந்தாதி யென்பதாகும். சோழமன்னன் வேண்டிக் கொண்டபடி தில்லையில் தேவாரத் திருமுறையைக் கண்டு ஏழு திருமுறைகளாக வகுத்து உதவிய நம்பியாண்டார் நம்பி தமக்குப் பொள்ளாப் பிள்ளையார் உபதேசித்தருளியபடி திருத்தொண்டத்தொகையை முதனூலாகக் கொண்டு தனியடியார் அறுபதின்மரும் ஒன்பது திருக்கூட்டத்தாரும் ஆகிய திருத்தொண்டர்களுக்குரிய ஊர், நாடு, மரபு முதலியவற்றையும் அவர்கள் மேற்கொண்டொழுகிய திருத்தொண்டின் நெறியினையும் அதனால் அவர்கள் பெற்ற பேற்றினையும் வகுத்து விளக்கும் நிலையில் கலித்துறைத் திருவந்தாதியாகிய இப்பனுவலைப் பாடியருளினாரென்பது,

ஆக்கியபின் திருத்தொண்டத் தொகையடைவை யருளாலே
நோக்கியபின் நாயன்மார் நுடங்கடைவுந் தொழிற்பேறும்
பாக்கியத்தால் இபமுகந்தோன் அருள்செய்த பகுதியினால்
வாக்கியல்சேர் அந்தாதிநம்பி யடைவே வகுத்தார்

எனவரும் திருமுறை கண்ட புராணச் செய்யுளாலும்,

பொன்னி வடகரை சேர்நாரையூரிற் புழைக்கைமுக
மன்னன் அறுபத்து மூவர் பதிதேம் மரபுசெயல்
பன்ன அத்தொண்டத் தொகைவகை பல்குமந்தாதி தன்னைச்
சொன்ன மறைக்குல நம்பிபொற் பாதத்துணை துணையே.

என நம்பியாண்டார் நம்பிக்குரிய வணக்கமாக இத்திருவந்தாதியில் காணப்படும் பழம் பாடலினாலும் இனிது விளங்கும்.

நம்பியாரூரர் பாடிய திருத்தொண்டத் தொகையிற் போற்றப்பெற்ற அடியார்களின் வரலாறுகளை வகுத்துக் கூறுவது இத்திருவந்தாதியாதலின், இதனைத் 'திருத்தொண்டத் தொகைவகை'யென வழங்குதல் உண்டென்பதும், முதனூலாகிய திருத்தொண்டத் தொகையையும் அதன் வகையாகிய இத்திருவந்தாதியையும் ஆதாரமாகக் கொண்டு இயற்றப்பெற்றது திருத்தொண்டர் புராணமாதலின் அதற்குத் 'திருத்தொண்டத் தொகைவிரி' யென்றதோர் பெயரும் உண்டென்பதும்,

அந்தமெய்ப் பதிகத் தடியார்களை
நந்தம் நாதனாம் நம்பியாண்டார் நம்பி
புந்தியாரப் புகன்ற வகையினால்
வந்தவாறு வழாமல் இயம்புவாம்

எனவும்,

தொன்றுசீர்த் திருத் தொண்டத் தொகைவிரி
இன்றெனாதர வாலிங் கியம்புகேன்

எனவும் வரும் சேக்கிழாரடிகள் வாய்மொழியால் உய்த்துணரப்படும்.

ஏழாம் திருமுறை சுந்தரர் திருத்தொண்டத்தொகைத் திருப்பதிகத்தினை அடியொற்றி அதன்கண் போற்றப் பெறும் அடியார்களின் வரலாறுகளை இத்திருவந்தாதி வகுத்துக் கூறுகின்றது. இதன்கண் எண்பத்தொன்பது கட்டளைக் கலித்துறைகள் உள்ளன. திருத்தொண்டத்தொகைத் திருப்பதிகத்திலுள்ள பதினொரு பாடல்களிலும் 'ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே'யென நம்பியாரூரர் தம்மைத் தொண்டர்க்குத் தொண்டராகக் குறிப்பிடுகின்றார். இப்பதினோரிடங்களிலும் சுந்தரர் வரலாற்று நிகழ்ச்சிகளைக் குறித்துப் போற்றும் பதினொரு பாடல்கள் இத்திருவந்தாதியில் முறையே அமைந்துள்ளன. திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சேரமான் பெருமாள், கோச்செங்கட் சோழர் ஆகிய பெருமக்களின் வரலாறுகள் இரண்டிரண்டு பாடல்களிலும், ஏனைப் பெருமக்களின் வரலாறுகள் ஒவ்வொரு பாடலிலும் குறித்துப் போற்றப் பெற்றன. திருத்தொண்டத் தொகையிற் போற்றப் பெறும் தனியடியார்

*தொகையடியார் இத்துணையரென்பதை ஒரு பாடலிலும், அத்திருப்பதிகத்திலுள்ள பாடல்களின் முதற்குறிப்பினை ஒரு பாடலிலும் இத்திருவந்தாதியை ஓதுவதால் வரும் பயனை ஒரு பாடலிலும் கூறி நம்பியாண்டார் நம்பிகள் இத்திருவந்தாதியினை நிறைவு செய்துள்ளார். இதன் அமைப்பினைக் கூர்ந்து நோக்குங்கால் இத்திருவந்தாதி திருத்தொண்டத்தொகையின் விளக்கமாக இயற்றப்பெற்றதென்பது நன்கு விளங்கும். இதன் முதனூலாகிய திருத்தொண்டத் தொகையையும் இதனை விரித்துரைக்கும் முறையில் தோன்றிய விரிநூலாகிய பெரிய புராணத்தையும் ஒப்பு நோக்கிப் பயில்வார்க்கு இத்திருவந்தாதியின் பொருள் நலங்கள் இனிது புலனாகும். தொகை, வகை, விரிநூல் பாடல்களுடன், கொற்றவன்குடி உமாபதி சிவசாரியார் இயற்றியருளிய “திருத்தொண்டர் புராணச் சாரம்” என்ற நூலிலிருந்தும் பாடல்கள் இணைக்கப்பட்டுள்ளன. நூலின் வலப்புறப்பக்கத்தில் நூல்களின் பாடல்களும், இடதுபுறப் பக்கத்தில் நாயன்மார்களின் நிகழ்வுகளின் நிழற்படங்களும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.*

## நம்பியாண்டார் நம்பிகள்

*அருளிச்செய்த*

## 33. திருத்தொண்டர் திருவந்தாதி

*கட்டளைக் கலித்துறை*

*சிறப்புப் பாயிரம்*

*திருச்சிற்றம்பலம்*

**1092.** பொன்னி வடகரை சேர்நாரை யூரிற் புழைக்கைமுக
மன்னன் அறுபத்து மூவர் பதிதேம் மரபுசெயல்
பன்னஅத் தொண்டத் தொகைவகை பல்குமந் தாதிதனைச்
சொன்ன மறைக்குல நம்பிபொற் பாதத் துணைதுணையே. 1

---

*1092. குறிப்புரை :* *இப்பாட்டுப் பிற்காலத்தவரால் சிறப்புப் பாயிரமாகச் செய்து சேர்க்கப்பட்டது. திருத்தொண்டர்களாகிய நாயன்மார்களது வரலாற்றைப் பொதுவாகச் சுட்டும் முறையில் சுந்தர மூர்த்தி நாயனார் பெயரளவாக ஒரு திருப்பதிகத்தில் தொகுத்து அருளிச் செய்தார். அதனால் திருத்தொண்டர்களது வரலாற்றுத் தொகையாயிற்று. அது திருத்தொண்டத் தொகை என்ற பதிகமாக ஏழாம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது.*

*அத்திருப்பதிகத்தில் சுட்டப்பட்ட நாயன்மார்களது நாடு, ஊர், குலம், அவர்கள் செய்த தொண்டு இவைகளை ஒரொரு சொல்லால் கூறி ஒருவருக்கு ஒருபாட்டினை அந்தாதியாகச் செய்தமையால் 'திருத்தொண்டர் திருவந்தாதி' எனப் பெயர்பெற்ற இவ்வந்தாதி நாயன்மார்களது வரலாற்று வகையாயிற்று. இவைகளையும், 'இதை அருளிச் செய்தவர் திருநாரையூர் நம்பிகள்' என்பதையும், இவர் அத்தலத்து விநாயகர் திருவருளைப் பெற்ற திருவருட் செல்வர்' என்பதையும் இப்பாட்டுக் கூறிற்று. 'ஆண்டார்' என்பது ஒரு காலத்தில் ஆதி சைவர்களைக் குறிக்கும் சிறப்புப் பெயராய் வழங்கிற்று ஆதலின், 'நம்பியாண்டார்' என்பதே இவரது பெயராயிற்று. இதற்கு மேலும் இவரது சிறப்பைக் குறிப்பதாக 'நம்பி' என்பதைச் சேர்த்து, 'நம்பியாண்டார் நம்பிகள்' என வழங்குவர்.*

*'நாயன்மார்களது ஊர், குலம், தொண்டு இவைகளைத் திருநாரையூர் விநாயகர் சொல்ல இவர் பாடினார்' என இப்பாட்டுக் கூறுகின்றது. இதனை*

வைத்துத் திருமுறை கண்ட புராணமும் இவ்வாறே கூறிற்று. இதனை ஆராய்ச்சியாளர் 'நம்பிகள் விநாயகப் பெருமானது திருவருளைப் பெற்ற திருவருட் செல்வர்' என்னும் அளவில் கொள்கின்றனர். 'இத் திருவந்தாதியைச் சேக்கிழார் திருத்தொண்டத் தொகைத் திருப்பதிகத்தோடு ஒத்த அருளாசிரியத் திருமொழியாகக் கொண்டே திருத்தொண்டர் வரலாற்று விரியைத் தாம் அருளிச் செய்தார்' - என்பதை

அந்த மெய்ப்பதி கத்துஅடி யார்களை
நந்தம் நாதனாம் நம்பியாண் டார்நம்பி
புந்தி யாரப் புகன்ற வகையினால்
வந்த வாறு வழாமல் இயம்புவாம்

எனக் கூறியவாற்றால் அறிகின்றோம். 'நாதன்' என்பது அருளாசிரியரைக் குறிக்கும் சொல். இதன்கண் சேக்கிழார், "புந்தி ஆரப் புகன்ற வகை" - என்றதன்றி, 'விநாயகர் சொல்லிய வகைப்படி' எனக் கூறாமை நோக்கத் தக்கது.

வகை நூலாகிய இதன் விரியே திருத்தொண்டர் புராணம் ஆகலின், இவ்வந்தாதிப் பாடல்களின் விரி பொருள் அப்புராணத்திலே காணத்தக்கது.

உ
*சிவமயம்*
*திருச்சிற்றம்பலம்*

# நாயன்மார்கள் தொகை, வகைப்பாடல் வரிசை எண் அட்டவணை

| திருத் தொண்டர் திருவந்தாதி (வகை) பாடல் எண் | பதினொன்றாம் திருமுறைப் பாடல் எண் | பாடல் பெற்ற நாயனார் | திருத் தொண்டத் தொகை வரிசை எண் | திருத் தொண்டர் திருவந்தாதிப் பாடல்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | 1092 | நம்பியாண்டார் நம்பி வணக்கம் | | |
| 1 | 1093 | தில்லை வாழந்தணர் | தொ(1) | 1 |
| 2 | 1094 | திருநீலகண்ட நாயனார் | 1 | 1 |
| 3 | 1095 | இயற்பகை நாயனார் | 2 | 1 |
| 4 | 1096 | இளையான் குடிமாற நாயனார் | 3 | 1 |
| 5 | 1097 | மெய்ப்பொருள் நாயனார் | 4 | 1 |
| 6 | 1098 | விறன்மிண்ட நாயனார் | 5 | 1 |
| 7 | 1099 | அமர்நீதி நாயனார் | 6 | 1 |
| 8 | 1100 | சுந்தரமூர்த்தி நாயனார் துதி 1 | | 1 |
| 9 | 1101 | எறிபத்த நாயனார் | 7 | 1 |
| 10 | 1102 | ஏனாதி நாயனார் | 8 | 1 |
| 11 | 1103 | கண்ணப்ப நாயனார் | 9 | 1 |
| 12 | 1104 | குங்கிலியக்கலய நாயனார் | 10 | 1 |
| 13 | 1105 | மானக்கஞ்சாற நாயனார் | 11 | 1 |
| 14 | 1106 | அரிவட்டாய நாயனார் | 12 | 1 |
| 15 | 1107 | ஆனாய நாயனார் | 13 | 1 |
| 16 | 1108 | சுந்தரமூர்த்தி நாயனார் துதி 2 | | 1 |
| 17 | 1109 | மூர்த்தி நாயனார் | 14 | 1 |
| 18 | 1110 | முருக நாயனார் | 15 | 1 |
| 19 | 1111 | உருத்திரபசுபதி நாயனார் | 16 | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| 20 | 1112 | திருநாளைப்போவார் நாயனார் | 17 | 1 |
| 21 | 1113 | திருக்குறிப்புத்தொண்ட நாயனார் | 18 | 1 |
| 22 | 1114 | சண்டேசுர நாயனார் | 19 | 1 |
| 23 | 1115 | சுந்தரமூர்த்தி நாயனார் துதி 3 | | 1 |
| 24, 25 | 1116, 1117 | திருநாவுக்கரசு நாயனார் | 20 | 2 |
| 26 | 1118 | குலச்சிறை நாயனார் | 21 | 1 |
| 27 | 1119 | பெருமிழலைக்குறும்ப நாயனார் | 22 | 1 |
| 28 | 1120 | காரைக்காலம்மையார் | 23 | 1 |
| 29 | 1121 | அப்பூதியடிகள் நாயனார் | 24 | 1 |
| 30 | 1122 | திருநீலநக்க நாயனார் | 25 | 1 |
| 31 | 1123 | நமிநந்தியடிகள் நாயனார் | 26 | 1 |
| 32 | 1124 | சுந்தரமூர்த்தி நாயனார் துதி 4 | | 1 |
| 33, 34 | 1125, 1126 | திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் | 27 | 2 |
| 35 | 1127 | ஏயர்கோன் கலிக்காம நாயனார் | 28 | 1 |
| 36 | 1128 | திருமூலதேவ நாயனார் | 29 | 1 |
| 37 | 1129 | தண்டியடிகள் நாயனார் | 30 | 1 |
| 38 | 1130 | மூர்க்க நாயனார் | 31 | 1 |
| 39 | 1131 | சோமாசிமாற நாயனார் | 32 | 1 |
| 40 | 1132 | சுந்தரமூர்த்தி நாயனார் துதி 5 | | 1 |
| 41 | 1133 | சாக்கிய நாயனார் | 33 | 1 |
| 42 | 1134 | சிறப்புலி நாயனார் | 34 | 1 |
| 43 | 1135 | சிறுத்தொண்ட நாயனார் | 35 | 1 |
| 44, 45 | 1136, 1137 | சேரமான் பெருமாள் நாயனார் | 36 | 2 |
| 46 | 1138 | கணநாத நாயனார் | 37 | 1 |
| 47 | 1139 | கூற்றுவ நாயனார் | 38 | 1 |
| 48 | 1140 | சுந்தரமுர்த்தி நாயனார் துதி 6 | | 1 |
| 49 | 1141 | பொய்யடிமையில்லாத புலவர் | தொ(2) | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| 50 | 1142 | புகழ்ச்சோழ நாயனார் | 39 | 1 |
| 51 | 1143 | நரசிங்க முனையரைய நாயனார் | 40 | 1 |
| 52 | 1144 | அதிபத்த நாயனார் | 41 | 1 |
| 53 | 1145 | கலிக்கம்ப நாயனார் | 42 | 1 |
| 54 | 1146 | கலிய நாயனார் | 43 | 1 |
| 55 | 1147 | சத்தி நாயனார் | 44 | 1 |
| 56 | 1148 | ஐயடிகள் காடவர்கோன் நாயனார் | 45 | 1 |
| 57 | 1149 | சுந்தரமூர்த்தி நாயனார் துதி 7 | | 1 |
| 58 | 1150 | கணம்புல்ல நாயனார் | 46 | 1 |
| 59 | 1151 | காரி நாயனார் | 47 | 1 |
| 60 | 1152 | நெடுமாற நாயனார் | 48 | 1 |
| 61 | 1153 | வாயிலார் நாயனார் | 49 | 1 |
| 62 | 1154 | முனையடுவார் நாயனார் | 50 | 1 |
| 63 | 1155 | சுந்தரமூர்த்தி நாயனார் துதி 8 | | 1 |
| 64 | 1156 | கழற்சிங்க நாயனார் | 51 | 1 |
| 65 | 1157 | இடங்கழி நாயனார் | 52 | 1 |
| 66 | 1158 | செருத்துணை நாயனார் | 53 | 1 |
| 67 | 1159 | புகழ்த்துணை நாயனார் | 54 | 1 |
| 68 | 1160 | கோட்புலி நாயனார் | 55 | 1 |
| 69 | 1161 | சுந்தரமூர்த்தி நாயனார் துதி 9 | | 1 |
| 70 | 1162 | பத்தராய்ப் பணிவார்கள் | தொ(3) | 1 |
| 71 | 1163 | பரமனையே பாடுவார் | தொ(4) | 1 |
| 72 | 1164 | சித்தத்தைச் சிவன்பாலே வைத்தவர் | தொ(5) | 1 |
| 73 | 1165 | திருவாரூர்ப் பிறந்தார்கள் | தொ(6) | 1 |
| 74 | 1166 | முப்போதுந் திருமேனி தீண்டுவார் | தொ(7) | 1 |
| 75 | 1167 | முழுநீறுபூசிய முனிவர் | தொ(8) | 1 |
| 76 | 1168 | அப்பாலும் அடிச்சார்ந்தார் | தொ(9) | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| 77 | 1169 | சுந்தரமூர்த்தி நாயனார் துதி 10 | | 1 |
| 78 | 1170 | பூசலார் நாயனார் | 56 | 1 |
| 79 | 1171 | மங்கையர்க்கரசியார் நாயனார் | 57 | 1 |
| 80 | 1172 | நேச நாயனார் | 58 | 1 |
| 81, 82 | 1173, 1174 | கோச்செங்கட் சோழ நாயனார் | 59 | 2 |
| 83 | 1175 | திருநீலகண்ட யாழ்ப்பாணர் | 60 | 1 |
| 84 | 1176 | சடைய நாயனார் | 61 | 1 |
| 85 | 1177 | இசைஞானியார் | 62 | 1 |
| 86 | 1178 | சுந்தரமூர்த்தி நாயனார் | 63 | 1 |
| 87 | 1179 | திருத்தொண்டத் தொகையில் உள்ள தொகையடியார்கள் – தனியடியார்கள் | 64 | 1 |
| 88 | 1180 | திருத்தொண்ட தொகைப்பாடல் முதற்குறிப்பு | 65 | 1 |
| 89 | 1181 | திருப்பதிகப் பொருட்சிறப்பு | 66 | 1 |
| | | 63 நாயன்மார்களில் | | |
| | 1 | திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், சேரமான் பெருமாள், கோச்செங்கட் சோழர் ஆகிய நால்வருக்கு மட்டும் இரண்டு பாடல்கள் | 4 x 2 | 8 |
| | 2 | ஏனைய 59 நாயன்மார்களுக்கு தலா ஒரு பாடல் | 59 x 1 | 59 |
| | 3 | சுந்தரமூர்த்தி நாயனார் துதிகள் | | 10 |
| | 4 | தொகையடியார்கள் | | 9 |
| | 5 | மற்ற சிறப்புகள் | | 3 |
| | | திருத்தொண்டர் திருவந்தாதியாகிய இந்நூலின் மொத்தப்பாடல்கள் | | 89 |

| நூற்சிறப்பு | காலம் (நூற்றாண்டு) | நூலின் பெயர் | ஆசிரியர் |
|---|---|---|---|
| தொகைநூல் | 7/8 | திருத்தொண்டத் தொகை<br>தேவாரம் ஏழாம் திருமுறை | சுந்தரர் |
| வகைநூல் | 10/11 | திருத்தொண்டர் திருவந்தாதி | நம்பியாண்டார் நம்பி |
| விரிநூல் | 12 | திருத்தொண்டர் புராணம்<br>(பெரியபுராணம்) | சேக்கிழார் |
| சார்பு நூல் | 14 | திருத்தொண்டர் புராண சாரம் | கொற்றவன்குடி<br>உமாபதிசிவம் |

சிவபெருமானின் ஆணையைத் தலைமேற்கொண்டு சுந்தரர் ஒவ்வொரு அடியாரைப் பற்றியும் ஓரிரு அடிகளில் பாடுகிறார். அதை மூலமாக வைத்துக் கொண்டு நம்பியாண்டார் நம்பிகள் ஒவ்வொரு அடியாரையும் ஓரிரு நான்கடிப் பாட்டால் பாடி மகிழ்கிறார். முன்னவர் தொகுக்க, பின்னவர் வகுக்க பல்லாயிரம் பாடல்களில் பெரிய புராணமே பாடுகிறார் சேக்கிழார் பெருமான்.


தில்லைவாழ் அந்தணர்கள் ( சித்திரை - முதல் நாள் )

## 1. தில்லைவாழந்தணர்

***தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கு மடியேன்***

*- திருத்தொண்டத் தொகை (தொகை)*

1093 செப்பத் தகுபுகழ்த் தில்லைப்பதியிற் செழுமறையோர்
ஒப்பப் புவனங்கள் மூன்றினும்உம்பரின் ஊர்எரித்த
அப்பர்க் கமுதத் திருநடர்க்கந்திப் பிறையணிந்த
துப்பர்க் குரிமைத் தொழில்புரி வோர்தமைச் சொல்லுதுமே 1

***- திருத்தொண்டர் திருவந்தாதி (வகை)***

***குறிப்புரை :*** *புவனங்கள் மூன்றினும் ஒப்ப உம்பரின் ஊர் - மூவுலங்களிலும் ஒருபடித்தாக மேலே திரிந்த ஊர்கள்; திரிபுரம். அமுதத் திருநடம் - அமுதம்போல இறப்பினை நீக்கிப் பேரானந்தத்தைத் தருகின்ற நடனம். நடர் - நடனமாடுபவர். துப்பர் - தூயவர். உரிமைத்தொழில் - அகம்படித் தொண்டு, அணுக்கத் தொண்டு; வழிபாடு. சொல்லுதும் - துதிப்போம்.*

*செம்மையால் தணிந்த சிந்தைத் தெய்வவே தியர்க ளானார்*
*மும்மைஆ யிரவர் தாங்கள் போற்றிட முதல்வ னாரை*
*இம்மையே பெற்று வாழ்வார்இனிப்பெறும் பேறொன் றில்லார்*
*தம்மையே தமக்கொப் பான நிலைமையால் தலைமை சார்ந்தார்*

***- திருத்தொண்டர் புராணம் (விரி)***

***வரலாற்றுக் குறிப்பு:*** *தொகையடியார். நடராசப் பெருமான் திருமேனி தீண்டி அருச்சிக்கும் தில்லை வாழ்ந்தணர் அனைவரையும் குறிப்பது. ஒருகாலத்தில் மூவாயிரவர் பூசை செய்துள்ளனர். இருபத்தொன்றாம் நூற்றாண்டில் முந்நூறு பேர் பூசை செய்வதாகச் சொல்கிறார்கள்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*நல்லவா னவர்போற்றும் தில்லை மன்றுள்*
*நாடகஞ்செய் பெருமானுக்கு அணியார் நற்பொன்*
*தொல்லைவான் பணியெடுத்தற்கு உரியார் வீடும்*
*துறந்தநெறி யார்தொண்டத் தொகைமுன் பாடத்*
*தில்லைவா ழந்தணர் என்று எடுத்துநாதன்*
*செப்பும்அரு ளுடையார்முத் தீயார் பத்திக்கு*
*எல்லைகாண் பரியார் ஒப்பு உலகில் தாமே*
*ஏய்ந்துளார் எமையாள வாய்ந்து ளாரே.*


திருநீலகண்ட நாயனார் (தை - விசாகம்)

## 2. திருநீலகண்ட நாயனார்

***திருநீலகண்டத்துக் குயவனார்க்கடியேன்*** *- தொகை*

1094 சொல்லச் சிவன்திரு ஆணைதன் தூமொழி தோள்நசையை
ஒல்லைத் துறந்துரு மூத்ததற் பின்னுமை கோனருளால்
வில்லை புரைநுத லாளோ டிளமைபெற் றின்பமிக்கான்
தில்லைத் திருநீல கண்டக் குயவனாம் செய்தவனே. – 2 வகை

***குறிப்புரை :*** *'சிவன்திரு ஆணைசொல்ல' எனக்கூட்டுக. சிவன்ஆணை - சிவன்மேல் ஆணை. தூய மொழியினை உடையாள் என்னும் பொருட்டாகிய தூமொழி என்பது துணைவி என்னும் பொருட்டாய் நின்றது. நசை - விருப்பம். ஒல்லை - விரைவாக; அப்பொழுதே. உரு - உடல். புரை - ஒத்த.*

*தொல்லைவேட் கோவர்தங் குலத்துள் தோன்றிய*
*மல்குசீர்த் தொண்டனார் வணங்கி வாங்கிக்கொண்டு*
*ஒல்லையின் மனையிலோர் மருங்கு காப்புறும்*
*எல்லையில் வைத்துவந் திறையை யெய்தினார்*

**- *விரி***

**வரலாற்றுக் குறிப்பு:** *குயவர், சோழநாடு, சிதம்பரம் - அயலறியாவண்ணம் மனைவியின் சபதத்துக்குடன்பட்டு அவளைத் தீண்டாது இளமையிலும் முதுமையிலும் இல்லறம் நடத்திப் பின் திருவருளால் இளமை பெற்றவர். திருநட்சத்திரம். தை-விசாகம். அடியவர்களுக்குத் திருவோடு கொடுப்பது அவர் தந்திருத்தொண்டு. சிவபெருமான்றன் திருநீலகண்டத்தினிடத்துப் பேரன்பு கொண்டு "திருநீலகண்டம் திருநீலகண்டம்" என்று அவர்சொல்லி வந்தமையான், அவருக்குத்* ***திருநீலகண்ட நாயனார்*** *என்னுந் திருப்பெயர் வழங்கலாயிற்று.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*தில்லைநகர் வேட்கோவர் தூர்த்த ராகித்*
*தீண்டி லெமைத் திருநீல கண்டமென்று*
*சொல்லுமனை யாள்தனையே அன்றி மற்றுந்*
*துடியிடையாரிடையின்பந் துறந்துமூத்தங்*
*கெல்லையிலோ டிறைவைத்து மாற்றிநாங்கள்*
*எடுத்திலமென் றியம்புமெனஇழிந்து பொய்கை*
*மெல்லியலா ளுடன்மூழ்கிஇளமை எய்தி*
*விளங்குபுலீச் சரத்தரனை மேவி னாரே.*


இயற்பகை நாயனார் ( மார்கழி - உத்திரம்)

## 3. இயற்பகை நாயனார்

**இல்லையேஎன்னாதஇயற்பகைக்குமடியேன்** - *தொகை*

1095 செய்தவர் வேண்டியதி யாதுங் கொடுப்பச் சிவன்தவனாய்க்
கைத்தவம் பேசிநின் காதலி யைத்தரு கென்றலுமே
மைதிகழ் கண்ணியை ஈந்தவன் வாய்த்த பெரும்புகழ்வந்
தெய்திய காவிரிப் பூம்பட் டினத்துள் இயற்பகையே. **– 3** வகை

***குறிப்புரை :*** *செய்தவர் - தவம்செய்பவர்; சிவனடியார்கள் கொடுப்ப - கொடுத்துவரும் நாட்களில் கைதவம் - வஞ்சனை; தூர்த்தர் பேசுவது போலப் பேசியது. காவிரிப்பூம்பட்டினம் என்றதனானே வணிகர் என்பது பெறப்படும் என்பது கருத்து.*

*இயற்பகை முனிவா ஓலம்ஈண்டுநீ வருவாய் ஓலம்*
*அயர்ப்பிலா தானே ஓலம்அன்பனே ஓலம் ஓலம்*
*செயற்கருஞ் செய்கை செய்ததீரனே ஓலம் என்றான்*
*மயக்கறு மறைஓ லிட்டு மாலயன் தேட நின்றான்*

**- *விரி***

***வரலாற்றுக் குறிப்பு:*** *வணிகர், சோழநாடு, காவிரிப்பூம்பட்டினம் - சிவனடியாருக்குத் தமது மனைவியையே தானமாகக் கொடுத்தவர். திருநட்சத்திரம்; மார்கழி-உத்திரம். அவர் இல்லற ஞானியார். அவர்பால் அடியவராய் அணைவோர் எவராயினும், அடியவர் விரும்புவது எதுவாயினும், அவருக்கு அதை இல்லை என்னாது அளித்து வருவது அவர்தந் திருத்தொண்டாகும்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*எழிலாருங் காவிரிப்பூம் பட்டி னத்துள்*
*இயல்வணிக ரியற்பகையா ரிருவர் தேட*
*வழலாய பிரான்றூர்த்த மறையோ னாகி*
*யாயிழையைத் தரவேண்டி யணைய வையன்*
*கழலாரப் பணிந்துமனைக் கற்பின் மேன்மைக்*
*காதலியைக் கொடுத்தமர் செய் கருத்தால் வந்த*
*பிழையாருஞ் சுற்றமெலாந் துணித்து மீளப்*
*பிஞ்ஞகனா ரழைத்தருளப் பெற்று ளாரே.*


இளையான்குடிமாற நாயனார் (ஆவணி - மகம்)

## 4. இளையான்குடிமாற நாயனார்

***இளையான்றன் குடிமாறன் அடியார்க்கு மடியேன்*** - *தொகை*

1096 இயலா விடைச்சென்ற மாதவர்க் கின்னமு தாவிதைத்த
வயலார் முளைவித்து வாரி மனையலக் கால்வறுத்துச்
செயலார் பயிர்விழுத் தீங்கறி யாக்கு மவன்செழுநீர்க்
கயலாரிளையான் குடியுடை மாறனெங் கற்பகமே. **– 4 வகை**

***குறிப்புரை :*** *இயலா இடை - யாதும் செய்ய இயலாத காலம். அது வறுமை நிலையும் பாதி இரவும், மழைப்பெயலும் ஆகிய காலம். மாதவன் - சிவனடியான். வித்து - விதை. மனை அலக்கு - வீட்டுக் கூரையாயிருந்த கழிகள். செயல் ஆர் பயிர் - வீட்டுப் புழைக்கடையில் அப்பொழுது தான் சிறிதே வளர்ந்த கீரைப்பயிர். விழு - விருப்பம், மேன்மை. தீ - இனிமை. இளையான்குடி, ஊர்.*

*செல்ல னீங்கப் பகல்வித் தியசெந்நெல்*
*மல்ல னீர்முளை வாரிக் கொடுவந்தால்*
*வல்ல வாறமு தாக்கலு மாகு; மற்*
*றல்ல தொன்றறி யே னென் றயர்வுற;*

***- விரி***

***வரலாற்றுக் குறிப்பு:*** *வேளாளர், இளையான்குடி - விதைத்த நெல்லெடுத்து வீட்டின் அலக்கெரித்து மாரிக்கால இரவில் அடியார்க்கமுதளித்தவர். திருநட்சத்திரம் - ஆவணி - மகம். தமது இல்லம் போதரும் அடியவர் எவராயினும் அவருக்குச் சோறிடுவதை ஒரு பெருந்தொண்டாக் கொண்டு அவர் வாழ்ந்து வந்தார்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*மன்னியவே ளாண்தொன்மை இளைசை மாறர்*
*வறுமையால் உணவுமிக மறந்து வைகி*
*உன்னருநள் ளிருள் மழையில் உண்டி வேண்டி*
*உம்பர்பிரான் அணையவயல் உழுது வித்தும்*
*செந்நெல்முளை அமுதுமனை அலக்கா லாக்கிச்*
*சிறுபயிரின் கறியமுது திருந்தச் செய்து*
*பன்னலரும் உணவுஅருந்தற்கு எழுந்த சோதிப்*
*பரலோக முழுதாண்ட பான்மையாரே.*


மெய்ப்பொருள் நாயனார் (கார்த்திகை - உத்திரம்)

## 5. மெய்ப்பொருள் நாயனார்

***வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்.*** *- தொகை*

1097 கற்றநன் மெய்த்தவன் போலொரு பொய்த்தவன் காய்ச்சினத்தால்
செற்றவன் தன்னை யவனைச் செறப்புக லுந்திருவாய்
மற்றவன் தத்தாநமரே யெனச் சொல்லி வானுலகம்
பெற்றவன் சேதிபன் மெய்ப்பொரு ளாமென்று பேசுவரே. **– 5 வகை**

***குறிப்புரை :*** *தன்னைக் காய் சினத்தால் செற்றவன் நன் மெய்த்தவன் போல் ஒரு பொய்த்தவன். அவனை எனக் கூட்டுக. 'போல் பொய்த்தவன்' என்பது 'போல்கின்ற பொய்த்தவன்' என வினைத்தொகை. இவை "முத்தநாதன்" என்னும் பெயரினனாகிய பகையரசன். செற - கொல்ல - புகுந்தவன் 'தத்தன்' என்னும் காவலாளி - என்பது பின்பு. 'தத்தா' என்றதனால் விளங்குகின்றது. திருவாயால் எனவும், 'மற்று அவனை' எனவும் உருபுகள் விரித்து, 'சொல்லி' என்பதன்பின் 'தடுத்து' என ஒரு சொல் வருவிக்க, மற்று, வினைமாற்று, சேதிபன் - சேதி நாட்டு அரசன். சேதிநாடு - திருமுனைப்பாடி நாடாகிய மலையமான் நாடு.*

*கைத்தலத் திருந்த வஞ்சக் கவளிகை மடிமேல் வைத்துப்*
*புத்தகம் அவிழ்ப்பான் போன்றுபுரிந்தவர் வணங்கும் போதில்*
*பத்திரம் வாங்கித் தான்முன் நினைந்தஅப் பரிசே செய்ய*
*மெய்த்தவ வேட மேமெய்ப் பொருளெனத் தொழுது வென்றார்*

***- விரி***

***வரலாற்றுக் குறிப்பு:*** *குறுநில மன்னர், வஞ்சித்துத் தம்மைக் கொல்லும் சிவவேடதாரியைக் காப்பாற்றித்தாம் உயிர் விட்டவர். திருநட்சத்திரம். கார்த்திகை - உத்திரம். மெய்ப்பொருள் நாயனார் சேதி நன்னாட்டில் திருக்கோவலூரில் வாழ்ந்த வேந்தர் பெருமான். அடியவர் திருவேடத்தையே மெய்பொருளெனக் கொண்டமையால், அவர், மெய்ப்பொருள்நாயனார் என்று அழைக்கப்பட்டார். அவர், மலையமான் வழியில் தோன்றியவர். பகைவர்களை வென்று நாட்டுக்கு நலஞ்செய்வதில் பேர் பெற்றவர். அடியவர்கள் கருத்தறிந்து ஏவல் செய்வோர். தமது உடைமை எல்லாம் அடியவர்களது உடைமை என்னுங் கருத்துடையவர். திருக்கோயில்களில் பூசை, விழா முதலியன செய்வதும் அவர்தம் திருத்தொண்டுகளில் ஒன்றாம்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*சேதிபர்நற் கோவலூர் மலாட மன்னர்*
*திருவேட மெய்ப்பொருளாத் தெளிந்த சிந்தை*
*நீதியனா ருடன்பொருது தோற்ற மாற்றா*
*னெடுஞ்சினமுங் கொடும்பகையு நிகழா வண்ண*
*மாதவர்போ லொருமுறைகொண் டணுகி வாளால்*
*வன்மைபுரிந் திடமருண்டு வந்த தத்தன்*
*காதலுற நமர்தத்தா வென்று நோக்கிக்*
*கடிதகல்வித் திறைவனடி கைக்கொண் டாரே.*




விறன்மிண்ட நாயனார் ( சித்திரை - திருவாதிரை )

## 6. விறன்மிண்ட நாயனார்

*விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க்கு அடியேன்* - தொகை

1098 பேசும் பெருமையவ் வாரூ ரனையும் பிரானவனாம்
ஈசன் தனையும் புறகுதட் டென்றவ னீசனுக்கே
நேச னெனக்கும் பிரான்மனைக் கேபுக நீடுதென்றல்
வீசும் பொழில்திருச் செங்குன்றம்மேய விறன்மிண்டனே. – 6 வகை

***குறிப்புரை :*** *ஆரூரன், சுந்தரமூர்த்தி நாயனார், பிரான், திருவாரூர்ச் சிவபெருமான். தட்டு - தடை; தடுக்கப்பட்ட இடம். புறகு தட்டு - புறம்பாகிய தடுக்கப்பட்ட இடம். புறகாகிய இடத்தில் உள்ளவர்களை, புறகுதட்டு என்றது உபசாரம். புறம்பாகிய இடத்தில் உள்ளவர்களை என்றது எம்மரவன்றி அயலார், என்றபடி, புறகுதட்டு என்று சொல்லியே ஈசனுக்கு நேசன் ஆயினான்; எனக்கும் பிரான் (தலைவன்) ஆயினான் என்பதாம். திருச்செங்குன்றம், மலை நாட்டில் உள்ள ஊர்.*

*சேணார் மேருச் சிலைவளைத்தசிவனா ரடியார் திருக்கூட்டம்*
*பேணா தேகும் ஊரனுக்கும் பிரானாந் தன்மைப் பிறைசூடிப்*
*பூணா ரரவம் புனைந்தார்க்கும் புறகென் றுரைக்க மற்றவர்பாற்*
*கோணா வருளைப் பெற்றார்மற் றினியார் பெருமை கூறுவார்*
- ***விரி***

***வரலாற்றுக் குறிப்பு:*** *வேளாளர், மலைநாடு, செங்குன்றூர். அடியார்களை வணங்கிப்பின் ஆண்டவனை வணங்குவார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத்தருணத்தில் திருவாரூரில் திருத்தொண்டத் தொகை பாடுதற்குக் காரணமாயிருந்தவர். திருநட்சத்திரம் - சித்திரை - திருவாதிரை. வீடுபேற்றில் கணங்களுக்குத் தலைவரானார். இவனும் புறகு. இவனை ஆண்ட சிவனும் புறகு என்று சுந்தரரைக் கூறியவர்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*விளங்குதிருச் செங்குன்றூர் வேளாண்தொன்மை*
*விறன்மிண்டர் திருவாரூர் மேவு நாளில்*
*வளங்குலவு தொண்டரடி வணங்கா தேகும்*
*வன்றொண்டன் புறகவனை வலியஆண்ட*
*துளங்குசடை முடியோனும் புறகென் றன்பாற்*
*சொல்லுதலு மவர்தொண்டத் தொகைமுன் பாட*
*உளங்குளிர உளதென்றார்அதனால்அண்ணல்*
*உவகைதர உயர்கணத்துள்ஓங்கி னாரே.*


அமர்நீதி நாயனார் (ஆனி - பூரம்)

## 7. அமர்நீதி நாயனார்

***அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்*** *- தொகை*

1099 மிண்டும் பொழிற்பழை யாறை யமர்நீதி வெண்பொடியின்
முண்டந் தரித்த பிராற்குநல் லூரின்முன் "கோவண நேர்
கொண்டிங் கரு" ளென்று தன்பெருஞ் செல்வமுந் தன்னையுந்தன்
துண்ட மதிநுத லாளையு மீந்த தொழிலினனே. – 7 வகை

***குறிப்புரை :*** *மிண்டும் - நெருங்கிய. பொழில் - சோலை. பழையாறை - ஒரு பழைய பெருநகரம். சோழர்களின் உறைவிடமாயிருந்தது. தற்போது வள்ளலார் கோயில் எனப்படுகிறது. வெண்பொடி - திருநீறு. முண்டம் - நெற்றி. தரித்த - தாங்கிய. வெண்பொடியணிந்த முண்டத்தைத் தரித்த பிரான் சிவன். நல்லூர், பழையாறைப் பெருநகரின் ஒரு பகுதி. கோவண நேர்கொண்டு - கோவணத்திற்குச் சம எடையாக ஏற்று. இங்கு அருள் - இப்பொழுது அருள்புரிவாயாக. மதிநுதலார் என்பது, துணைவி எனப் பொருள்தந்து நின்றது. தொழில் என்பது, தொண்டினைக் குறித்தது.*

*இழைத்தஅன்பினி லிறைதிரு நீற்றுமெய் யடிமை*
*பிழைத்தி லோமெனில் பெருந்துலை நேர்நிற்க என்று*
*மழைத்த டம்பொழில் திருநல்லூர் இறைவரை வணங்கித்*
*தழைத்த அஞ்செழுத் தோதினார் ஏறினார் தட்டில்*

***- விரி***

***வரலாற்றுக் குறிப்பு:*** *வணிகர், சோழநாடு, பழையாறை. அடியார்கள் கருத்தறிந்து அவர்கட்குக் கந்தை, கீள், உடை, கோவணம் அளித்தல் முதலிய தொண்டுகளைச் செய்து வந்தார். கோவணத்துக்கு நிறையாக மனைவி மக்கள் சொத்துக்களுடன் தம்மையும் ஐந்தெழுத்தோதிச் சிவனடியாருக்குத் தந்தவர். திருநட்சத்திரம் : ஆனி-பூரம்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*பழையாரறை வணிகர் அமர் நீதி யார்பால்*
*பாவுசிறு முனிவடிவாய்ப் பயிலும் நல்லூர்க்*
*குழைகாதர் வந்தொருகோ வணத்தை வைக்கக்*
*கொடுத்ததனை எடுத்தொளித்துக் குளித்து வந்து*
*தொழிலாரும் அதுவேண்டி வெகுண்டு நீர்இத்*
*துலையிலிடும் கோவணநேர் தூக்கும் என்ன*
*எழிலாரும் பொன்மனைவி இளஞ்சேய் ஏற்றி*
*ஏறினர் வான் உலகுதொழ ஏறி னாரே.*



## 8. சுந்தரமூர்த்தி சுவாமிகள்

***ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே** - தொகை*

1100 தொழுதும் வணங்கியும் மாலயன் தேடருஞ் சோதிசென்றாங்
கெழுதுந் தமிழ்ப்பழ வாவணங் காட்டி யெனக்குன்குடி
முழுதும் அடிமைவந் தாட்செ யெனப்பெற்ற வன்முரல்தேன்
ஒழுகும் மலரின்நற் றாரெம்பி ரான்நம்பி யாரூரனே. **– 8 வகை**

***குறிப்புரை :** திருத்தொண்டத் தொகைத் திருப்பதிகத்தின் ஒவ்வொரு பாட்டின் நிறைவிலும் ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே என்று சுந்தரமூர்த்தி நாயனார் தம்மைக் குறித்தருளினார். அவ்வாறாகவே இத்திருவந்தாதியிலும் நம்பிகள் அவரது வரலாற்றிற்குத் தனி ஒரு பாட்டே அமைத்துப் போகாமல், ஒவ்வொரு பாட்டிலும் சொல்லப்பட்ட அடியார்களைப் பற்றிக் கூறி முடித்தபின், சுந்தரரைப் பற்றிய பாட்டுக்களை அமைத்தருளினார். பின்பு இதன் விரிபாடிய சேக்கிழார் நாயனார் ஒரு பாட்டில் உள்ள நாயன்மார்களது வரலாறுகளை ஒரு சருக்கமாகத் தொகுத்தருளினார். ஒவ்வொரு சருக்க நிறைவிலும் சுந்தரருக்கு ஒரு பாடலை அருளிச்செய்தார். இப்பாடலுடன் தில்லை வாழந்தணர் சருக்கம் நிறைவுறுகிறது. தொழுதல் - கும்பிடுதல். வணங்கல் - வீழ்ந்து வணங்குதல். வணங்கியும் அருஞ் சோதி என வேறாக்கி முடிக்க. முரலுதற்கு வண்டு என்னும் எழுவாய் வருவிக்க. ஒழுகும் - ஒழுகுதற்கு முதலாகிய.மலர், தாமரை மலர். தார் - மாலை.*

*மலர்மிசை அயனு மாலுங் காணுதற் கரிய வள்ளல்
பலர்புகழ் வெண்ணெய் நல்லூர் ஆவணப் பழைமைகாட்டி
உலகுய்ய ஆண்டு கொள்ளப் பெற்றவர் பாதம்உன்னித்
தலைமிசை வைத்து வாழுந் தலைமைநந் தலைமை யாகும் **- விரி***

***வரலாற்றுக் குறிப்பு:** நால்வரில் ஒருவர். ஆதிசைவர், நடுநாடு, திருநாவலூர் - திருத்தொண்டத் தொகை பாடியவர். இறைவனைத் தூது கொண்டவர். முதலையுண்ட பிள்ளையை வருவித்தது முதலிய அருட்செயல்களைப் புரிந்தவர். திருநட்சத்திரம். ஆடி - சுவாதி.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*தண்கயிலையது நீங்கி நாவ லூர்வாழ்
சைவனார் சடையனார் தனயனாராய்
மண்புகழ அருட்டுறையான் ஓலைகாட்டி
மணம்விலக்க வன்றொண்டர் அதிகை சேர்ந்து
நண்பினுடன் அருள்புரிய ஆரூர் மேவி
நலங்கிளரும் பரவைதோள் நயந்து வைகித்
திண்குலவும் விறன்மிண்டர் திறல்கண் டேத்தும்
திருத்தொண்டத் தொகையருளால் செப்பி னாரே.*



எறிபத்த நாயனார் (மாசி - அத்தம்)

## 9. எறிபத்த நாயனார்

***இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தற் கடியேன்*** - *தொகை*

1101 ஊர்மதில் மூன்றட்ட வுத்தமற் கென்றோருயர்தவத்தோன்
தார்மலர் கொய்யா வருபவன் தண்டின் மலர்பறித்த
ஊர்மலை மேற்கொள்ளும் பாகருடல்துணி யாக்குமவன்
ஏர்மலி மாமதில் சூழ்கருவூரில் எறிபத்தனே. **– 9** வகை

***குறிப்புரை :*** *ஊர்மதில் - வானத்தில் திரிகின்ற கோட்டைகள். உயர் தவத்தோன், சிவகாமியாண்டார் என்பவர். உத்தமற்கு - என்று மலர் கொய்யா (கொய்து) வருபவன் என்க. ஊர் - ஊரத்தக்க மலைபோலும் யானை. மலையினதும், பாகரதும் ஆகிய உடல்களைத் துணி ஆக்கும் அவன் என உரைக்க. இவரது மரபு அறியப்படவில்லை.*

*கையினைத் துணித்த போது கடலெனக் கதறி வீழ்ந்து*
*மைவரை யனைய வேழம் புரண்டிட மருங்கு வந்த*
*வெய்யகோல் பாகர் மூவர் மிசைகொண்டார் இருவ ராக*
*ஐவரைக் கொன்று நின்றார் அருவரை அனைய தோளார்*
**- *விரி***

***வரலாற்றுக் குறிப்பு:*** *சிவனடியார்களுக்குத் தீங்கிழைப்பவர்களைத் தண்டிப்பர். சோழநாடு, கருவூர், சோழ மன்னருக்குரிய தலைநகரங்கள் ஐந்தனுள் ஒன்று. பூக்குடலையைச் சிவகாமியாண்டார் எனும் சிவனடியாரிடமிருந்து பிடித்திழுத்துச் சிதறிய பட்டத்து யானையின் துதிக்கையை வெட்டியவர். திருநட்சத்திரம்: மாசி - அஸ்தம்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*திருமருவு கருவூர் ஆனிலையார் சாத்தும்*
*சிவகாமி யார்மலரைச் சிந்த யானை*
*அரனெறியோர் எறிபத்தர் பாக ரோடும்*
*அறஎறிய என்னுயிரும் அகற்றீர் என்று*
*புரவலனார் கொடுத்தபடை அன்பால் வாங்கிப்*
*புரிந்துஅரிவான் புகஎழுந்த புனித வாக்கால்*
*கரியினுடன் விழுந்தாரும் எழுந்தார் தாமும்*
*கணநாத ரதுகாவல் கைக்கொண் டாரே.*


எனாதிநாத நாயனார் (புரட்டாசி - உத்திராடம்)


ௐ
நில்லு கண்ணப்ப!
நில்லு கண்ணப்ப!
நில்லு கண்ணப்ப!
கண்ணப்ப நாயனார் ( தை - மிருகசீரிடம் )

## 11. கண்ணப்ப நாயனார்

***கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்*** - *தொகை*

1103 நிலத்தில் திகழ்திருக் காளத்தி யார்திரு நெற்றியின்மேல்
நலத்தில் பொழிதரு கண்ணில் குருதிகண் டுள்நடுங்கி
வலத்திற் கடுங்கணை யால்தன் மலர்க்கண் ணிடந்தப்பினான்
குலத்திற் கிராதன்நங் கண்ணப்ப னாமென்று கூறுவரே. **– 11** வகை

*குறிப்புரை :*

*அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்*
*அவனுடைய அறிவெல்லாம் நமையறியும் அறிவென்றும்*
*அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாமென்றும்*
*அவனுடைய நிலைஇவ்வா றறிநீயென் றருள்செய்வார்*

**- *விரி***

***வரலாற்றுக் குறிப்பு:*** *வேடர், தொண்டைநாடு, உடுப்பூர் - ஆறே நாளில் அளவு கடந்த பக்தியால் தம் கண்ணைப் பறித்துக் காளத்தியப்பருக்குக் கண்ணாக அப்பி வீடு பேற்றை அடைந்தவர். இப்பிறவியிலேயே முக்தியடைய முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர். திருநட்சத்திரம் : தை - மிருகசீரிடம்.*

## திருத்தொண்டர் புராணசாரம்

*வேடரதி பதிஉடுப்பூர் வேந்தன் நாகன்*
*விளங்கியசேய் திண்ணனார் கன்னி வேட்டைக்*
*காடதில்வாய் மஞ்சனமும் குஞ்சிதரு மலரும்*
*காய்ச்சினமென் றிடுதசையும் காளத்தி யார்க்குத்*
*தேடருமன் பினில்ஆறு தினத்தளவும் அளிப்பச்*
*சீறுசிவ கோசரியும் தெளியவிழிப் புண்ணீர்*
*ஓடவொரு கண்அப்பி ஒருகண் அப்ப!*
*ஒழிக வெனும் அருள்கொடரு(கு) உறநின் றாரே.*


குங்கிலியக்கலய நாயனார் ( ஆவணி - மூலம் )

## 12. குங்குலியக்கலய நாயனார்

***கடவூரிற் கலயன்தன் அடியார்க்கும் அடியேன்*** - *தொகை*

1104 ஏய்ந்த கயிறுதன் கண்டத்திற் பூட்டி எழிற்பனந்தாள்
சாய்ந்த சிவன்நிலைத் தானென்பர் காதலி தாலிகொடுத்
தாய்ந்தநற் குங்குலி யங்கொண் டனற்புகை காலனைமுன்
காய்ந்த அரற்கிட்ட தென்கட வூரிற் கலயனையே. – 12 வகை

***குறிப்புரை :*** *கண்டம் - கழுத்து, சிவனை நிலைப்பித்தான் என்பதில் இரண்டன் உருபும், பிறவினை விகுதியும் தொகுக்கப்பட்டன. கொடுத்துக் கொண்டு என இயையும், காலனைக் காய்ந்த அரன், திருக்கடவூர்ப் பெருமான்.*

*நண்ணிய ஒருமை யன்பின் நாருறு பாசத் தாலே*
*திண்ணிய தொண்டர் பூட்டி இளைத்தபின் திறம்பி நிற்க*
*ஒண்ணுமோ கலய னார்தம் ஒருப்பாடு கண்ட போதே*
*அண்ணலார் நேரே நின்றார் அமரரும் விசும்பில் ஆர்த்தார்*
***- விரி***

***வரலாற்றுக் குறிப்பு:*** *அந்தணர், சோழநாடு, திருக்கடவூர் - மனைவியின் தாலியை விற்றுக் குங்குலியம் வாங்கிக் குங்குலியத் தூபமிட்டவர். திருத்தாடகையீச்சரத்தில் (திருப்பனந்தாளில்) சாய்ந்த சிவலிங்கத்தைக் கழுத்தில் கயிறு கட்டி இழுத்து நிமிர்த்தியவர். திருநட்சத்திரம்: ஆவணி - மூலம்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*சீலமலி திருக்கடவூர்க் கலய னாராம்*
*திகழ்மறையோர் பணிவறுமை சிதையா முன்னே*
*தாலியைநெற் கொளஎன்று வாங்கிக் கொண்டு*
*சங்கையில்குங் குலியத்தால் சார்ந்த செல்வர்*
*ஞாலநிகழ் திருப்பனந்தாள் நாதர் நேரே*
*நரபதியும் தொழக்கச்சால் நயந்து போதப்*
*பாலமுதம் உண்டாரும் அரசும் எய்திப்*
*பரிந்துஅமுது செயஅருள்சேர் பான்மை யாரே.*



மானக்கஞ்சாற நாயனார் (மார்கழி - சுவாதி)

## 13. மானக்கஞ்சாற நாயனார்

***மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறனுக்கும் அடியேன்*** - *தொகை*

1105 கலச முலைக்கன்னி காதற் புதல்வி கமழ்குழலை
நலசெய் தவத்தவன் பஞ்ச வடிக்கிவை நல்கெனலும்
அலசு மெனக்கரு தாதவள் கூந்தல் அரிந்தளித்தான்
மலைசெய் மதிற்கஞ்சை மானக்கஞ் சாற னென்னும் வள்ளலே. – 13 வகை

***குறிப்புரை :*** *'கன்னியாகிய புதல்வி' என்க. நல்ல என்பது இடைக்குறைந்து நின்றது. பஞ்சவடி, மாவிரத மதத்தினர் மார்பில் அணியும் மயிர்க்கயிறு. அலசும் - (மகள்) வருந்துவாள். கஞ்சை - கஞ்சாறூர்.*

*அருள்செய்த மொழிகேளா அடற்சுரிகை தனையுருவிப்*
*பொருள்செய்தா மெனப்பெற்றேன் எனக்கொண்டு பூங்கொடிதன்*
*இருள்செய்த கருங்கூந்தல் அடியிலரிந் தெதிர்நின்ற*
*மருள்செய்த பிறப்பறுப்பார் மலர்க்கரத்தி னிடைநீட்ட.*

*வாங்குவார் போல்நின்ற மறைப்பொருளாம் அவர்மறைந்து*
*பாங்கின்மலை வல்லியுடன் பழையமழ விடைஏறி*
*ஓங்கியவிண் மிசைவந்தார்; ஒளிவிசும்பில்-நிலநெருங்கத்*
*தூங்கிய பொன் மலர்மாரி, தொழும்பர்தொழு தெதிர்விழுந்தார்*
***- விரி***

***வரலாற்றுக் குறிப்பு:*** *வேளாளர், கஞ்சாறூர் (ஆனந்ததாண்டவபுரம்) - கலியாணம் தொடங்கும்போது கலியாணப் பெண்ணாகிய தம் மகளின் தலைமயிரை அறுத்து சிவனடியாருக்குப் பஞ்சவடிக்காகத் தந்தவர். திருநட்சத்திரம் - மார்கழி - சுவாதி. வேளாண்குலத் தலைவர். சேனாதிபதி. சிவனடியார்களைச் சிவனே என்று கருதுவோர். தமது உடைமையெல்லாம் சிவனடியார் உடைமை என்று எண்ணும் பெருநிலையில் நின்றவர். எதையுங் குறிப்பறிந்து கொடுப்பவர்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*கஞ்சநகர் மானக்கஞ் சாற னார்சீர்க்*
*காதன்மகள் வதுவைமணங் காண நாதன்*
*வஞ்சமலி மாவிரதத் தலைவ னாகி*
*வந்துபுகுந் தவளக மகிழ்ந்து நோக்கிப்*
*பஞ்சவடிக் காமென்ன வரிந்து நீட்டும்*
*பத்தரெதிர் மறைந்திறைவன் பணித்த வாக்கா*
*லெஞ்சலில்வண் குழல்பெற்ற பேதை மாதை*
*யேயர்பிராற் குதவியரு ளெய்தி னாரே.*



அரிவாட்டாய நாயனார் (தை - திருவாதிரை)

## 14. அரிவாட்டாய நாயனார்

***எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்*** - தொகை

1106 வள்ளற் பிராற்கமு தேந்தி வருவோ னுகலுமிங்கே
வெள்ளச் சடையா யமுதுசெய் யாவிடி லென்தலையைத்
தள்ளத் தகுமென்று வாட்பூட் டியதடங் கையினன்காண்
அள்ளற் பழனக் கணமங் கலத்தரி வாட்டாயனே. **– 14 வகை**

***குறிப்புரை :*** *வள்ளற்பிரான் - சிவபெருமான். அமுது - நிவேதன அமுது. உகலும் - தவறிக் கீழ் கொட்டிப்போன பொழுது, கணமங்கலம் - ஊர்.*

*ஆட்கொள்ளு மையர் தாமிங் கமுதுசெய் திலர்கொ லென்னாப்*
*பூட்டிய அரிவாள் பற்றிப் புரையற விரவு மன்பு*
*காட்டிய நெறியி னுள்ளம் தண்டறக் கழுத்தி னோடே*
*ஊட்டியு மரியா நின்றார் உறுபிறப் பிரிவா ரொத்தார்*

**- *விரி***

***வரலாற்றுக் குறிப்பு :*** *தாயானார் ஒரு வேளாளர், சோழநாடு, கணமங்கலம் - சிவநிவேதனத்துக்குரிய பொருள் சிந்தியதற்காகத் தமது கழுத்தை அரிய முற்பட்டவர். திருநட்சத்திரம் - தை - திருவாதிரை. அவர் செல்வத்திற் சிறந்தவர். வேளாண் குலத்தலைவர். செந்நெல் அரிசியையும், செங்கீரையையும், மாவடுவையும் சிவபெருமானுக்குத் திருவமுது செய்விப்பது அவர்தந் திருத்தொண்டு.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*தாவில்கண மங்கலத்துள் வேளாண் தொன்மைத்*
*தாயனார் நாயனார் தமக்கே செந்நெற்*
*றூவரிசி யெனவிளைவ தவையே யாகத்*
*துறந்துணவு வடுவரிசி துளங்கு கீரை*
*யாவினிலைந் துடன் கொணரக் கமரிற் சிந்த*
*வழிந்தரிவாள் கொண்டூட்டி யரியா முன்னே*
*மாவடுவி னொலியுமரன் கரமுந் தோன்றி*
*வாள்விலக்கி யமரர்தொழ வைத்த தன்றே.*


ஆனாய நாயனார் (கார்த்திகை - அத்தம்)

## 15. ஆனாய நாயனார்

***அலைமலிந்த புனல்மங்கை ஆனாயார்க்கும் அடியேன்*** - தொகை

1107 தாயவன் யாவுக்குந் தாழ்சடை மேற்றனித் திங்கள்வைத்த
தூயவன் பாதந் தொடர்ந்துதொல் சீர்த்துளை யாற்பரவும்
வேயவன் மேன்மழ நாட்டு விரிபுனன் மங்கலக்கோன்
ஆயவ னானாய னென்னை யுவந்தாண் டருளினனே. – 15 வகை

**குறிப்புரை :** *தாயவன் - தாய் போன்றவன். துளை - துளைக்கருவி. வேய் - மூங்கில். துளையால் தொடர்ந்து பரவும் வேயவன் என்க. பரவுதல் - துதித்தல். மங்கலம் - ஊர். ஆன் ஆயன் - பசுக்களை மேய்க்கும் இடையன்.*

*ஆனாயர் குழலோசை கேட்டருளி அருட்கருணை*
*தானாய திருவுள்ளம் உடையதவ வல்லியுடன்*
*கானாதி காரணராம் கண்ணுதலார் விடையுகைத்து*
*வானாறு வந்தணைந்தார் மதிநாறும் சடைதாழ*

*திசைமுழுதும் கணநாதர் தேவர்கட்கு முன்நெருங்கி*
*மிசைமிடைந்து வரும்பொழுது வேற்றொலிகள் விரவாமே*
*அசையஎழும் குழல்நாதத் தஞ்செழுத்தால் தமைப்பரவும்*
*இசைவிரும்பும் கூத்தனார் எழுந்தருளி எதிர்நின்றார்*

- ***விரி***

**வரலாற்றுக் குறிப்பு :** *இடையர், மழநாடு, மங்கலவூர். பசுமேய்க்கும் போது ஐந்தெழுத்தைப் புல்லாங்குழலில் அமைத்து வாசித்து வீடுபெற்றவர். திருநட்சத்திரம் - கார்த்திகை - அஸ்தம். அப்பெரியார், இடையர்களுக்குத் தலைமை பூண்டு பசுக்கூட்டங்களைக் காத்து வந்தார். அவர்தம் முயற்சியால் பசுக்கூட்டங்கள் காட்டுக்குப் போய் எவ்வித இடையூறுமின்றி நறும்புல் மேய்ந்து, தூநீர் அருந்தி, நல்வழியில் பெருகலாயின. பசுக்கூட்டங்களை மேய்த்துக் காப்பதுடன், வேய்ங்குழல் வாசிப்பதும் ஆனாயரின் வழக்கமாயிருந்து வந்தது.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*மங்கலமா மழநாட்டு மங்கலமா நகருண்*
*மருவுபுக ழானாயர், வளரா மேய்ப்பார்,*
*கொங்கலர்பூந் திருக்கொன்றை மருங்கு சார்ந்து*
*குழலிசையி னைந்தெழுத்துங் குழைய வைத்துத்,*
*தங்குசரா சரங்களெல்லா முருகா நிற்பத்,*
*தம்பிரா னணைந்துசெவி தாழ்த்தி வாழ்ந்து*
*பொங்கியவான் கருணைபுரிந் "தென்று மூதப்*
*போதுக" வென் றருள, வுடன் போயி னாரே.*


சுந்தரமூர்த்தி நாயனார் (ஆடி - சுவாதி)

## 16. சுந்தரமூர்த்தி நாயனார்

***ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே*** - *தொகை*

1108 அருட்டுறை அத்தற் கடிமைப் பட்டேன் இனி அல்லன்என்னும்
பொருட்டுறை யாவதென் னேஎன்ன வல்லவன் பூங்குவளை
இருட்டுறை நீர்வயல் நாவற் பதிக்கும் பிரான்அடைந்தோர்
மருட்டுறை நீக்கிநல் வான்வழி காட்டிட வல்லவனே **– 16** வகை

***குறிப்புரை :*** *இதன் முதல் இரண்டடிகள் பித்தா பிறைசூடி எனத் தொடங்கும் திருப்பதிகத்தின் பொருளை உணர்த்திநின்றன. குவளைமலர்கள் கருநிறத்தன ஆகலின் அவற்றை இருட்டாக உருவகம் செய்தார். நாவல் - திருநாவலூர்.*

*தீதுகொள் வினைக்கு வாரோஞ் செஞ்சடைக் கூத்தர் தம்மைக்*
*காதுகொள் குழைகள் வீசுங் கதிர்நில விருள்கால் சீப்ப*
*மாதுகொள் புலவி நீக்க மனையிடை யிருகாற்செல்லத்*
*தூதுகொள் பவரா நம்மைத் தொழும்புகொண் டுரிமை கொள்வார்*

***- விரி***

***வரலாற்றுக் குறிப்பு :*** *நாமெல்லாம் உய்வதற்கு ஏழாம் திருமுறையாம் தேவாரத் தொகுப்பை அருளிச் செய்தவர். தோழமை நெறிக்கு எடுத்துக்காட்டாக விளங்கி வெள்ளை யானை ஏறிக் கயிலாயம் சென்றவர்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*செப்பலருங் குண்டையூர் நெல்லழைத்துத்*
*திருப்புகலூர்ச் செங்கல் செழும் பொன்னாச் செய்து*
*தப்பின்முது குன்றந்தரும் பொருளாற்*
*றிட்டுத் தடத்தெடுத்துச் சங்கிலிதோள் சார்ந்து நாதன்*
*ஒப்பிறனித் தூதுவந்தா றூடு*
*கீறி வுறுமுதலை சிறுமதலை யுமிழ நல்கி*
*மெய்ப்பெரிய களிறேறி யருளாற் சேர*
*வேந்தருடன் வடகயிலை மேவி னாரே.*



மூர்த்தி நாயனார் (ஆடி - கார்த்திகை)

## 17. மூர்த்தி நாயனார்

*மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்* - தொகை

1109 அவந்திரி குண்டம ணாவதின் மாள்வனென் றன்றாலவாய்ச்
சிவன்திரு மேனிக்குச் செஞ்சந் தனமாச் செழுமுழங்கை
உவந்தொளிர் பாறையில் தேய்த்துல காண்டவொண் மூர்த்திதன்னூர்
நிவந்தபொன் மாட மதுரா புரியென்னும் நீள்பதியே – 17 வகை

**குறிப்புரை :** *குண்டு அமண் ஆவதில் மாள்வன் - கீழான சமண் சமயத்து அரசன் வழிப்பட்டு எனது பணியை ஒழிப்பதைவிட இறந்துபடுவேன். நிவந்த - ஓங்கிய*

*நட்டம்புரி வாரணி நற்றிரு மெய்ப்பூச் சின்று*
*முட்டும்பரி சாயினுந் தேய்க்குங்கை முட்டா தென்று*
*வட்டந்திகழ் பாறையின் வைத்து முழங்கை தேய்த்தார்*
*கட்டும்புறந் தோனரம் பென்பு கரைந்து தேய*

*கல்லின் புறந் தேய்த்த முழங்கை கலுழ்ந்து சோரி*
*செல்லும்பரப் பெங்கணு மென்பு திறந்து மூளை*
*புல்லும்படி கண்டுபொ றுத்திலர் தம்பி ரானார்;*
*அல்லின்கணெ ழுந்தது வந்தருள் செய்த வாக்கு*

**- விரி**

**வரலாற்றுக் குறிப்பு :** *வணிகர், பாண்டியநாடு, மதுரை - சந்தனம் தருகிற திருப்பணியில் முட்டுப்பாடு நேரவே முழங்கையை அரைத்தவர்; திருநீறு, உருத்திராக்கம், சடைமுடி ஆகிய மும்மையால் உலகாண்டவர். திருநட்சத்திரம்: ஆடி - கார்த்திகை.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*வழங்குபுகழ் மதுரைநகர் மூர்த்தி யாராம்*
*வணிகர்திரு ஆலவாய் மன்னர் சாத்தத்*
*தழங்குதிர முழங்கைதரத் தேய்த்த ஊறுந்*
*தவிர்ந்துஅமணர் வஞ்சனையும் தவிர மன்னன்*
*இழந்தஉயி ரினனாக ஞாலம் நல்க*
*எழில்வேணி முடியாக இலங்கு வேடம்*
*முழங்குபுகழ் அணியாக விரை நீறாக*
*மும்மையுல காண்டு அருளின் முன்னி னாரே.*


முருக நாயனார் ( வைகாசி - மூலம் )

## 18. முருக நாயனார்

*முருகனுக்கும் (உருத்திரபசுபதிக்கும்) அடியேன்* - தொகை

1110 பதிகந் திகழ்தரு பஞ்சாக் கரம்பயில் நாவினன்சீர்
மதியஞ் சடையார்க் கலர்தொட் டணிபவன் யான்மகிழ்ந்து
துதியங் கழல்சண்பை நாதற்குத் தோழன்வன் றொண்டனம்பொன்
அதிகம் பெறும்புக லூர்முரு கன்னெனும் அந்தணனே — 18 வகை

***குறிப்புரை :*** *பதிகம் - திருமுறைத் திருப்பதிகங்கள். பதிகத்தில் திகழ்தரு பஞ்சாக்கரம் என்க. மலர்தொட்டு - பூக்களை மாலையாகத் தொடுத்து, சண்பைநாதன், திருஞானசம்பந்தர். வன்றொண்டன், சுந்தரமூர்த்திநாயனார், இவர் திருப்புகலூரில் பொன் பெற்ற வரலாற்றைப் பெரியபுராணத்துட் காண்க.*

*அடைமே லலவன் றுயிலுணர வலர்செங் கமலவயற்கயல்கண்*
*மடைமே லுகளுந் திருப்புகலூர் மன்னி வாழுந்தன்மையராய்,*
*விடைமேல் வருவார்க்காளான மெய்ம்மைத்தவத்தாலவர்கற்றைச்*
*சடைமே லணியத் திருப்பள்ளித் தாமம் பறித்துச்சார்த்துவார்,*

***- விரி***

***வரலாற்றுக் குறிப்பு :*** *அந்தணர், சோழநாடு, திருப்புகலூர் - புட்பத் தொண்டு செய்து திருஞானசம்பந்தர் திருமணத்தில் முத்தி பெற்றவர். திருநட்சத்திரம்: வைகாசி - மூலம்*

### திருத்தொண்டர் புராணசாரம்

*மன்னுதிருப் புகலூர்வாழ் முருகனாராம்*
*மறையவர்கோ வர்த்தமா னீச்ச ரத்தார்*
*சென்னியினுக் கழகமரு மலர்கள் கொய்து*
*திருமாலை புகழ்மாலை திகழச் சாத்திக்*
*கன்னிமதிற் கழுமலநா டுடைய நாதன்*
*காதன்மிகு மணங்காணுங் களிப்பினாலே*
*யின்னல்கெட வுடன்சேவித் தருளால் மீளா*
*திலங்கு பெரு மணத்தரனை யெய்தி னாரே*



உருத்திரபசுபதி நாயனார் (புரட்டாசி - அசுவதி)

## 19. உருத்திரபசுபதி நாயனார்

*(முருகனுக்கும்) **உருத்திரபசுபதிக்கும் அடியேன்*** - தொகை

1111 அந்தாழ் புனல்தன்னி லல்லும்பகலும்நின் றாதரத்தால்
உந்தாத அன்பொடு ருத்திரஞ்சொல்லிக் கருத்தமைந்த
பைந்தா ருருத்ர பசுபதி தன்னற் பதிவயற்கே
நந்தார் திருத்தலை யூரென்றுரைப்பரிந் நானிலத்தே **– 19** வகை

***குறிப்புரை :*** *அம் - அழகிய. தாழ்புனல் - ஆழமான நீர். ஆதரம் - விருப்பம். உந்தாத - வெளிப்போக்காத - உருத்திரம் - சீருத்திரம் - இஃது எசுர் வேதத்தின் ஒரு பகுதியாய் உள்ளது. இன்றும் சிவாலயங்களில் சிறப்பாக ஓதப்பட்டு வருவது. வயற்கு - வயல்களில். நந்துஆர் - சங்குகள் நிறைந்த.*

*தெள்ளு தண்புனல் கழுத்தள வாயிடைச் செறிய*
*உள்ளு றப்புக்கு நின்றுகை யுச்சிமேல் குவித்துத்*
*தள்ளு வெண்டிரைக் கங்கைநீர் ததும்பிய சடையார்*
*கொள்ளு மன்பினி லுருத்திரங் குறிப்பொடு பயின்றார்*

***- விரி***

***வரலாற்றுக் குறிப்பு :*** *அந்தணர். பெயர் பசுபதி. உருத்திர செபத்தொண்டை மேற்கொண்டதால் உருத்திர பசுபதி நாயனார் எனப் பெயர் பெற்றார். சோழநாடு, திருத்தலையூர் - அல்லும் பகலும் திருக்குளத்தில் கழுத்தளவில் நின்று ஸ்ரீ ருத்திர மந்திரம் ஜெபித்தவர். திருநட்சத்திரம்: புரட்டாசி - அசுவதி.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*பங்கமில்வண் புகழ்நிலவு தலையூர் வாழும்*
*பசுபதியா ரெனுமறையோர் பணிந்து செந்தே*
*னங்கமல மடுவினிடை யல்லு மெல்லு*
*மகலாதே யாகளமா யமர்ந்து நின்று*
*திங்கள்வளர் சடைமுடியா னடியே போற்றித்*
*திருவெழுத்து முருத்திரமுந் திகழ வோதி*
*மங்கையிட முடையபிரா னருளால் மேலை*
*வானவர்க டொழுமுலகின் மன்னி னாரே.*


திருநாளைப்போவார் நாயனார் (புரட்டாசி - உரோகிணி)

## 20. திருநாளைப்போவார் நாயனார்

***செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்*** *- தொகை*

1112 நாவார் புகழ்த்தில்லை யம்பலத் தானருள் பெற்றுநாளைப்
போவா னவனாம் புறத்திருத் தொண்டன்தன் புன்புலைபோய்
மூவா யிரவர்கை கூப்ப முனியா யவன்பதிதான்
மாவார் பொழில்திக ழாதனூ ரென்பரிம் மண்டலத்தே **– 20** வகை

***குறிப்புரை :*** *புறம்- நான்கு வருணங்கட்கும் புறமான சாதி. அதனால் கோயில்களிலும் புறத்தே நிற்பவர். புன்புலை - கீழான புலைச்சாதியில் பிறந்த உடம்பு. போய் என்பதை, போக எனத் திரிக்க. பதி - ஊர்.*

*திருவுடைய தில்லைவாழ் அந்தணர்கள் கைதொழுதார்*
*பரவரிய தொண்டர்களும் பணிந்துமனங் களிபயின்றார்*
*அருமறைசூழ் திருமன்றில்ஆடுகின்ற கழல்வணங்க*
*வருகின்றார் திருநாளைப் போவாராம் மறைமுனிவர்* ***- விரி***

***வரலாற்றுக் குறிப்பு :*** *தில்லையைக் காண விரும்பித் தீப்புகுந்து முனிவராய் எழுந்து சிற்றம்பலவன் திருமுன்பு மறைந்தவர். நந்தனார் என்னும் இயற்பெயருடையவர். திருநட்சத்திரம் - புரட்டாசி - ரோகிணி. சோழநாட்டின் ஒரு பாங்கரிலுள்ளது மேற்காநாடு. அந்நாட்டில் ஆதனூர் என்னும் ஒரு திருப்பதி உண்டு. அத்திருப்பதியில் ஆதிதிராவிடர் மரபில் தோன்றியவர் நந்தனார் என்பவர்.*

***அன்புத்தொண்டும் நெகிழ்ச்சியும்:*** *நந்தனாருக்கு மானிய நிலங்களிருந்தன. அவைகளின் விளைவு அவர்தம் வாழ்விற்குப் பயன்பட்டு வந்தது. சிவாலயங்களிலுள்ள பேரிகைக்குத் தோலும் வாரும், வீணைக்கும் யாழுக்கும் நரம்பும், சிவார்ச்சனைக்குக் கோரோசனையும் அவரால் கொடுக்கப்பட்டு வந்தன. அவரது சிந்தை சிவன் கழலிலேயே சேர்ந்து நிற்கும். திருக்கோயில்களின் வாயிற்புறத்தே நின்று ஆண்டவனைத் தொழுவது அப்பெரியாரது வழக்கம். தொழுகையில் அவருடைய நெஞ்சங் கசிந்து கசிந்து உருகும். கண்கள் நீர் சொரியும். அன்பால் அவர் மெய்மறந்து ஆடுவார், பாடுவார்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*நன்மைதிகழ் மேற்கானாட் டாத னூர்வாழ்*
*நந்தனார் புறத்தொண்டர் நாளைப் போகப்*
*பொன்மலிதென் புலியூர்க்கென் றுரைப்பார் புன்கூர்ப்*
*பொய்கையமைத் தடலேறு பிரிய நோக்கி*
*வன்மதில்சூழ் தில்லையிறை யருளால் வாய்ந்த*
*வண்டழலி னிடைமூழ்கி மறையோர் போற்ற*
*மின்மலிசெஞ் சடைமுனியாய் எழுந்து நாதன்*
*விளங்குநடந் தொழமன்றுண் மேவி னாரே.*


திருக்குறிப்புத் தொண்ட நாயனார் (சித்திரை - சுவாதி)

## 21. திருகுறிப்புத்தொண்ட நாயனார்

***திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்*** - *தொகை*

1113 மண்டும் புனற்சடை யாந்தமர் தூசெற்றி வாட்டும்வகை
விண்டு மழைமுகில் வீடா தொழியின்யான் வீவனென்னா
முண்டம் படர்பாறை முட்டு மெழிலார் திருக்குறிப்புத்
தொண்டன் குலங்கச்சி யேகா லியர்தங்கள் தொல்குலமே — 21 வகை

***குறிப்புரை :*** *மண்டும் - நிறைந்த. தமர் - அடியார். தூசு - ஆடை. ஏற்றுதல் - அழுக்குப்போகத் துவைத்தல். வாட்டும்வகை - உலர்த்தும்படி. விண்டு - நீங்கி. மழை முகில் விண்டு வீடாது எனின் மாற்றுக. 'விண்டு வீடாது' ஒரு பொருட் பன்மொழி. வீவன் - இறுப்பன். முண்டம் - நெற்றி. படர் - அகன்ற. முட்டும் - மோதிய.*

*கந்தைபுடைத் திடஎற்றுங் கற்பாறை மிசைத்தலையைச்*
*சிந்தவெடுத் தெற்றுவன்என் றணைந்துசெழும் பாறைமிசைத்*
*தந்தலையைப் புடைத்தெற்ற அப்பாறை தன்மருங்கு*
*வந்தெழுந்து பிடித்ததணி வளைத்தழும்பர் மலர்ச்செங்கை*

***- விரி***

***வரலாற்றுக் குறிப்பு :*** *ஏகாலியர். சிவனடியாருக்கு வாக்களித்தபடி துணியைத் தோய்த்து உலர்த்தித் தரமுடியாமற் போனபடியால் தமது தலையைக் கல்லின்மீது மோதிக்கொண்டு அருள் பெற்றவர். திருநட்சத்திரம் - சித்திரை - சுவாதி.*

*தொண்டை நாட்டிலே உமையம்மையார் அறம்வளர்த்த திருப்பதி காஞ்சிமாநகரம். அத்திருப்பதியிலே வண்ணார் குலத்திலே தோன்றிய ஒரு நாயனார் இருந்தார். அவர் அடியவர்களின் திருக்குறிப்பை அறிந்து திருத்தொண்டு செய்தமையால் அவருக்குத் திருக்குறிப்புத்தொண்டர் என்னும் பெயர் வழங்கலாயிற்று. அடியவர்களுக்கு உடைகளை வெளுத்துக் கொடுப்பது அவர்தந் தொண்டு.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*கொந்தலர்பூம் பொழிற்கச்சிநகரே காலிக்*
*குலத்தலைவர் தவர்குறிப்புக் குறித்து ளார்பால்*
*வந்திறைவர் நமக்கின்று தாரீ ராகின்*
*வருந்துமுட லெனவாங்கி மாசு நீத்த*
*கந்தைபுல ராதொழிய மழையு மாலைக்*
*கடும்பொழுதும் வரக்கண்டு கலங்கிக் கன்மேற்*
*சிந்தமுடி புடைப்பளவிற் றிருவே கம்பர்*
*திருக்கைகொடு பிடித்துயர்வான் சேர்த்தி னாரே.*


சண்டேசுவர நாயனார் (தை - உத்திரம்)

## 22. சண்டேச நாயனார்

***மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க***
***வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த***
***அம்மையான் அடிச்சண்டிப்பெருமானுக்கும் அடியேன்*** - *தொகை*

1114 குலமே றியசேய்ஞலூரிற் குரிசில் குரைகடல்சூழ்
தலமே றியவிறற் சண்டிகண் டீர்தந்தை தாளிரண்டும்
வலமே றியமழு வாலெறிந் தீசன் மணிமுடிமேல்
நலமே றியபால் சொரிந்தலர் சூட்டிய நன்னிதியே — 22 வகை

***குறிப்புரை :*** *குலம் ஏறிய - குலத்தால் உயர்ந்த. அந்தணன்ஆகிய குரிசில் என்க. குரிசில் - தலைவன். விறல் - வெற்றி. இஃது இதனால் உண்டாகிய புகழைக் குறித்தது. கண்டீர், முன்னிலையசை. வலம் - வலக்கை. எறிந்தும் என உம்மை விரித்து, எறிந்த பின்னும் என உரைக்க..*

*அண்டர் பிரானும் தொண்டர்தமக் கதிபன் ஆக்கி அனைத்துநாம்*
*உண்ட கலமும் உடுப்பனவும் சூடு வனவும் உனக்காகச்*
*சண்டீ சனுமாம் பதந்தந்தோம்என்றங் கவர்பொற் றடமுடிக்குத்*
*துண்ட மதிசேர் சடைக்கொன்றைமாலை வாங்கிச் சூட்டினார்*
***- விரி***

***வரலாற்றுக் குறிப்பு :*** *அந்தணர், சோழநாடு, திருச்சேய்ஞலூர், அபிடேகப் பாற்குடத்தை இடறிய தந்தையின் காலை வெட்டித் தொண்டர்க்கு நாயகம் பெற்றவர், திருநட்சத்திரம்: தை - உத்திரம்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*வேதமலி சேய்ஞலூர் எச்ச தத்தன்*
*விளங்கியசேய் மறைபயிலும் விசார சன்மர்*
*கோதனமேய்ப் பவன்கொடுமை பொறாது தாமே*
*கொண்டுநிரை மண்ணியிந்தென் கரையின் நீழல்*
*தாதகியின் மணலிங்கத்து ஆன்பால் ஆட்டத்*
*தாதைபொறாது அவையிடறும் தாள்கள் மாளக்*
*காதிமலர்த் தாமம்உயர் நாமும் உண்ட*
*கலம்மகனாம் பதம்அருளாற் கைக்கொண் டாரே.*



## 23. சுந்தரமூர்த்தி நாயனார்

*ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே* - தொகை

1115 நிதியார் துருத்திதென் வேள்விக் குடியாய் நினைமறந்த
மதியேற் கறிகுறி வைத்த புகர்பின்னை மாற்றிடென்று
துதியா வருள்சொன்ன வாறறி வாரிடைப் பெற்றவன்காண்
நதியார் புனல்வயல் நாவலர் கோனென்னும் நற்றவனே – 23 வகை

***குறிப்புரை :*** *துருத்தி, வேள்விக்குடி இவையிரண்டும் சோழ நாட்டு இரண்டு தலங்கள். இவைகளில் துருத்தி, இப்பொழுது குத்தாலம் என வழங்குகின்றது. இதில் உள்ள சிவபெருமான் பெயரே, சொன்னவாறறிவார் என்பது. வேள்விக்குடியாய் - வேள்விக்குடியில் எழுந்தருளியுள்ளவனே. அறிகுறி வைத்த புகர் - அடையாளமாக நீ உண்டாக்கிய உடல்நோய். துதியா - துதித்து அருள் பெற்றவன் என இயைக்க. காண் - முன்னிலையசை. வைத்து என்பது பாடமன்று.*

*நேசம் நிறைந்த உள்ளத்தால் நீலம் நிறைந்த மணிகண்டத்*
*தீசன் அடியார் பெருமையினை எல்லா உயிரும் தொழவெடுத்துத்*
*தேசம் உய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன்*
*வாச மலர்மென் கழல்வணங்க வந்த பிறப்பை வணங்குவாம்*
**- விரி**

***வரலாற்றுக் குறிப்பு :*** *பிறப்பிறப்பில்லாச் சிவபெருமானைப்பற்றி எவரையும் எதையும் தொழாத வியாக்கிர பரத முனிவர் மைந்தரான உபமன்னிய முனிவரால் தொழப்பட்ட பெருமை உடையவர்.*

### நால்வர் நான்மணி மாலையில் சுந்தரர்

*படியிலா நின்பாட்டில் ஆரூர*
*நனிவிருப்பன் பரமன் என்பது*
*அடியனேன் அறிந்தனன் வான்தொழும்*
*ஈசனினைத் தடுத்தாட் கொண்டுமன்றித்*
*தொடியுலா மென்கைமட மாதர்பால்*
*நினக்காகத் தூது சென்றும்*
*மிடியிலா மனைகடொறும் இரந்திட்டும்*
*உழன்றமையால் விளங்குமாறே.*


திருநாவுக்கரசு நாயனார் (சித்திரை - சதயம்)

## 24, 25. திருநாவுக்கரசு நாயனார்

***திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட***
***திருநாவுக் கரையன்தன் அடியார்க்கும் அடியேன்*** - தொகை

1116 நற்றவன் நல்லூர்ச் சிவன்திருப் பாதந்தன் சென்னிவைக்கப்
பெற்றவன் மற்றிப் பிறப்பற வீரட்டர் பெய்கழற்றாள்
உற்றவன் உற்ற விடமடை யாரிட வொள்ளமுதாத்
துற்றவ னாமூரில் நாவுக் கரசெனுந் தூமணியே – 24 வகை

***குறிப்புரை:*** *"ஆமூரில் நாவுக்கரசெனும் தூமணி" என்பதை "நற்றவன்" என்பதன் பின்னர்க் கூட்டி, செய்யுள் பற்றி முறை பிறழ வைக்கப்பட்ட "நல்லூர்ச் சிவன் திருப்பாதம் தன் சென்னி வைக்கப் பெற்றவன்" என்பது "துற்றவன்" என்பதன் பின்னர் வைத்து உரைக்க. நல்லூர், தலம், உற்ற விடம் - சமணர் கருத்தில் பொருந்திய நஞ்சு. அடையார் - பகைவர் - சமணர், "நிறைதல்" எனப் பொருள் தரும் "துறு" என்னும் முதனிலை உண்டலையும் குறிக்குமாதலின் "துற்றவன்" என்பது "உண்டவன்" எனப் பொருள் தந்தது. "அமுதா உண்டவன்" என்றதனால் அவ்விடத்தால் தீங்கின்றியிருந்தமை கூறப்பட்டதாம்,*

1117 மணியினை மாமறைக் காட்டு மருந்தினை வண்மொழியால்
திணியன நீள்கத வந்திறப் பித்தன தெண்கடலில்
பிணியன கல்மிதப் பித்தன சைவப் பெருநெறிக்கே
அணியன நாவுக் கரையர்பி ரான்ற னருந்தமிழே – 25 வகை

***குறிப்புரை :*** *மணி என்றதும் "மருந்து" என்றதும் திருமறைக்காட்டுப் பெருமானை, திறப்பித்தன - திறக்க வைத்தன, பிணி கல் - "பிணிக்கப்பட்ட கல்" எனச் செயப்படு பொருள்மேல் தொக்க வினைத்தொகை, அந்த என்னும் கூட்டுப் பொருளைத் தரும் "அன்ன" என்பது இடைக்குறைத்து நின்றது, "கல்லை" என இரண்டாவது விரிக்க. அணி -அணிகலம், அணியன-அணிபோல்வன, "பலரது உள்ளங்களையும் கவரச் செய்வன" என்றபடி நாயனாரை, "நாவுக்கரையர் பிரான்" எனப் போற்றி வரலாற்றுக் கிடையே அவரது திருப்பதிகங்களை சைவப் பெருநெறிக்கு அணி எனவும் "செயற்கரியவற்றைச் செய்த அருந்தமிழ்" எனவும் எடுத்தோதியருளிய அருமை அறியற்பாலது.*

*தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியும் தாழ்வடமும்*
*நாயகன் சேவடி தைவருஞ்சிந்தையு நைந்துருகிப்*
*பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச் செஞ்சொல்*
*மேயசெவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே,*

*வெள்ளி வெற்பின்மேல் மரகதக் கொடியுடன் விளங்கும்*
*தெள்ளு பேரொளிப் பவளவெற் பெனஇடப் பாகம்*
*கொள்ளும் மாமலை யாளுடன் கூடவீற் றிருந்த*
*வள்ள லாரைமுன் கண்டனர் வாக்கின்மன் னவனார்,* ***- விரி***

***வரலாற்றுக் குறிப்பு :*** *வேளாளர், நடுநாடு, திருவாமூர் - ஐந்தெழுத்தோதிக் கருங்கல்லொடு கடலில் மிதந்து கரையேறிப் பல தேவாரங்கள்பாடி உழவாரப்பணியாம் கைத்தொண்டு செய்து முத்தியடைந்தவர். திருநட்சத்திரம்: சித்திரை - சதயம்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*போற்றுதிரு வாமூரில் வேளாண் தொன்மைப்*
*பொருவில்கொறுக் கையர் அதிபர் புகழ னார்பால்*
*மாற்றரும்அன் பினில்திலக வதியாம் மாது*
*வந்துதித்த பின்புமரு ணீக்கி யாரும்*
*தோற்றிஅமண் சமயமுறு துயரம் நீங்கத்*
*துணைவர்அருள் தரவந்த சூலை நோயால்*
*பாற்றருநீள் இடரெய்திப் பாடலிபுத் திரத்திற்*
*பாழியொழித் தரனதிகைப் பதியில் வந்தார்.*



குலச்சிறை நாயனார் (ஆவணி - அனுசம்)

## 26. குலச்சிறை நாயனார்

***பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்*** - தொகை

1118 அருந்தமி ழாகரன் வாதில் அமணைக் கழுநுதிமேல்
இருந்தமிழ் நாட்டிடை ஏற்றுவித் தோனெழிற் சங்கம்வைத்த
பெருந்தமிழ் மீனவன் தன்னதி காரி பிரசமல்கு
குருந்தவிழ் சாரல் மணமேற் குடிமன் குலச்சிறையே – 26 வகை

***குறிப்புரை:*** *ஆகரம்-இருப்பிடம், தமிழ் ஆகரன்-தமிழுக்கு இருப்பிடமானவர், திருஞான சம்பந்தர், "அவர் செய்த வாதில்" என்க. "வாது" என்றது வாதத்தின் முடிவை. அமண் - சமணக் கூட்டம், நுதி - நுனி, இருந்தமிழ் - பெருமை மிக்க தமிழ், செந்தமிழ். தமிழ் நாட்டிடை ஏற்றுவித்தோன் என்றாராயினும் தமிழ் நாட்டிடையிருந்த அமணை ஏற்று வித்தான் என்றலே கருத்து என்க, ஏற்றுவித்தது - அரசன் ஆணையை ஏவலரைக் கொண்டு நிறைவேற்றியது, பாண்டியன் இந்நாயனார் காலத்துப் பாண்டியன், நெல்வேலி வென்ற நெடுமாறன், கூன் பாண்டியன் என்றும் சொல்லப்படுவான், முன்னோர் சங்கம் வைத்த செயலை அவர் மரபின் வந்த உரிமை பற்றி இவன்மேல் வைத்துக் கூறினார், மதுரைத் தொகை ஆக்கினான் என இவ்வாறே திருஞானசம்பந்தரும் அருளிச்செய்தார், சங்கம் புதிதாக வையாவிடினும் சங்கத்தைப் புரந்த செயல் இவனுக்கும் உண்டு என்க, அதிகாரி என்றது அமைச்சனை, ஒட்டக்கூத்தரது தக்கயாகப்பரணியில் அதிகாரி என்னும் சொல் மட்டுமே காணப்படுகின்றது, மணமேற் குடி - ஊர், மன் - தலைவன், இந்நாயனாரது மரபு அறியப்படவில்லை,*

*புன்ன யத்தரு கந்தர்பொய் நீக்கவும்*
*தென்ன னாடு திருநீறு போற்றவும்*
*மன்னு காழியர் வள்ளலார் பொன்னடி*
*சென்னி சேர்த்தி மகிழ்ந்த சிறப்பினார்.* - விரி

***வரலாற்றுக் குறிப்பு :*** *பாண்டியநாடு, மணமேற்குடி - அரசன் சமணனாய் இருந்தபோதும் தாம் சிவனடியாரை வழிபட்டவர், திருஞானசம்பந்தரை அழைத்து வந்து அரசனையும் நாட்டவரையும் சைவமாக்கியவர் திருநட்சத்திரம் : ஆவணி - அனுஷம்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*கோதில்புகழ் தருமணமேற் குடியார் கோவண்*
*குலச்சிறையார் தென்னர்குல அமைச்சர் குன்றா*
*மாதவர்கள் அடி பரவும் மரபார் பாண்டி*
*மாதேவி யார் அருள்வான் பயிர்க்கு வேலி*
*காதல்மிகு கவுணியர்கோன் வாதில் தோற்ற*
*கையரைவை கைக்கரைசேர் கழுவில் ஏற்றும்*
*நீதியினால் ஆலவாய் நிமலர்ச் சேர்ந்த*
*நின்மலனார் என்மலங்கள் நீக்கி னாரே.*


பெருமிழலைக் குறும்ப நாயனார் ( ஆடி - சித்திரை )

## 27. பெருமிழலைக் குறும்பர்

*பெருமிழலைக் குறும்பர்க்கும் (பேயார்க்கும்) அடியேன்* - தொகை

1119 சிறைநன் புனல்திரு நாவலூ ராளி செழுங்கயிலைக்
கிறைநன் கழல்நாளை எய்தும் இவனருள் போற்றஇன்றே
பிறைநன் முடியன் அடியடை வேனென் றுடல்பிரிந்தான்
நறைநன் மலர்த்தார் மிழலைக் குறும்பன் எனும்நம்பியே – 27 வகை

***குறிப்புரை :*** *நாவலூராளி, சுந்தரமூர்த்தி நாயனார்; அவர் நாளைக் கயிலை செல்லப் போகிறார் என்பதை இவர் தம் யோகக் காட்சியால் அறிந்து முன்னாளே யோகத்தால் உடலை விட்டுப் பிரிந்து கயிலை சேர்ந்தார், பெழமிழலை - ஊர், குறும்பர் - சிற்றரசர். "குறும்பர்" என்பது "சிற்றரசர்" எனப் பொருள் தரும் எனினும், சிற்றரசராய் இருப்போர் தனியொரு மரபினர் அல்லர் என்பதனாற்போலும் இந்நாயனாரும் மரபறியா அடியார்களுள் ஒருவராகச் சொல்லப்பட்டார்.*

*மண்ணினில்திகழும் திருநாவ லூரில் வந்த வன்றொண்டர்*
*நண்ணற் கரிய திருக்கயிலை நாளை எய்த நான்பிரிந்து*
*கண்ணிற் கரிய மணிகழியவாழ்வார் போல வாழேன்என்*
*றெண்ணிச் சிவன்தாள் இன்றேசென் றடைவன் யோகத்*
*தாலென்பார்*
***- விரி***

***வரலாற்றுக் குறிப்பு :*** *பெருமிழலையூரர் - சுந்தரமூர்த்தி சுவாமிகளை வழிபட்டு அவர் கயிலை செல்லுதலறிந்து யோகத்தால் தாமும் கயிலை சென்றவர், திருநட்சத்திரம் : ஆடி - சித்திரை*

### திருத்தொண்டர் புராணசாரம்

*கொண்டல்பனி வளர்சோலை மிழலை நாட்டுக்*
*கோதில்புகழ்ப் பெருமிழலைக் குறும்ப னார்சீர்*
*அண்டர்பிரான் அடியவருக் கடியா ராகும்*
*ஆதரவால் அணுக்கவன் தொண்டர்க் காளாய்*
*மண்தொழும்எண் தருசித்தி வாய்த்து ளார்தாம்*
*வன்தொண்டர் வடகயிலை மருவு நாள்முன்*
*எண்திகழும் மறைமூல நெறியூ டேகி*
*இலங்கொளிசேர் வடகயிலை எய்தி னாரே,*


காரைக்காலம்மையார் ( பங்குனி - சுவாதி )

## 28. காரைக்காலம்மையார்

*(பெருமிழலைக் குறும்பர்க்கும்) பேயார்க்கும் அடியேன்* - தொகை

1120 நம்பன் திருமலை நான்மிதி யேனென்று தாளிரண்டும்
உம்பர் மிசைத்தலை யால்நடந் தேற உமைநகலும்
செம்பொன் னுருவன்என் னம்மை எனப்பெற் றவள் செழுந்தேன்
கொம்பி னுகுகாரைக் காலினில் மேய குலதனமே — 28 வகை

***குறிப்புரை :*** *"செழுந்தேன்" என்பது முதலாகத் தொடங்கியுரைக்க. காரைக்கால் ஊர், குல தனம் - பிறந்த குலத்திற்குச் செல்வம் போன்றவள், நம்பன் - செம்பொன். உருவன் - சிவபெருமான். உம்பர் - ஆகாயம். மிசை, ஏழன் உருபு, மிசையாக என ஆக்கம் வருவிக்க. தலை கீழாக நடந்து வருவதைப் பார்த்து உமாதேவி சிரித்தாள், அம்மை - தாய், தாய்போல அன்பு செலுத்தி உபசரிப்பவள். உபசரித்தல், சங்கம வடிவில். எனப் பெற்றவள் - என்று சொல்லும் பேற்றினைப் பெற்றவள்.*

*இல்லாளன் வைக்க எனத் தம்பக்கல் முன்னிருந்த*
*நல்லநறு மாங்கனிகள் இரண்டினில் ஒன் றைக்கொண்டு*
*வல்விரைந்து வந்தணைந்து படைத்துமன மகிழ்ச்சியினால்*
*அல்லல்தீர்ப் பவர் அடியார் தமையமுது செய்வித்தார்,*

*இறவாத இன்ப அன்புவேண்டிப்பின் வேண்டுகின்றார்*
*பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்*
*மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி*
*அறவா நீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்,*

***- விரி***

**வரலாற்றுக் குறிப்பு :** *வணிகர் குடும்பக் குலக் கொழுந்து, சோழநாடு, காரைக்கால், சிவபெருமானிடம் பூண்ட பத்தியினால் அவரிடமிருந்து மாம்பழம் பெற்றவர், பேய்வடிவம் பெற்றுத் தலையால் நடந்து சென்று கயிலையைத் தொழுதவர், ஆலங்காட்டில் ஆடல் கண்டவர். திருநட்சத்திரம்: பங்குனி - சுவாதி.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*தங்குபுகழ்க் காரைக்கால் வணிகன் மிக்க*
*தனதத்தன் தரும்புனித வதியார் மாவின்*
*செங்கனிகள் திருவருளால் அழைப்பக் கண்டு*
*திகழ்கணவன் அதிசயித்துத் தேசம் நீங்க*
*அங்கவுடல் இழந்துமுடி நடையால் ஏறி*
*அம்மையே எனநாதன் அப்பா என்று*
*பொங்குவட கயிலைபணிந் தாலங் காட்டில்*
*புனிதனடம் அனவரதம் போற்றி னாரே,*


அப்பூதியடிகள் நாயனார் ( தை - சதயம் )

## 29. அப்பூதியடிகள் நாயனார்

***ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்*** - தொகை

1121 தனமா வதுதிரு நாவுக் கரசின் சரண மென்னா
மனமார் புனற்பந்தர் வாழ்த்திவைத் தாங்கவன் வண்தமிழுக்கே
இனமாத் தனது பெயரிடப் பெற்றவன் எங்கள்பிரான்
அனமார் வயல்திங்க ளூரினில் வேதியன் அப்பூதியே **– 29** வகை

***குறிப்புரை :*** *புனற் பந்தர் - தண்ணீர்ப் பந்தல் "வாழ்த்தி" என்பதை "என்னா" என்பதன் பின்னர்க் கூட்டுக. இனம் - அடிமையினம். திங்களூர் - ஊர்ப்பெயர். தனது பெயர் - திருநாவுக்கரசரது பெயர், இடப் பெற்றவன் - இட்ட பேற்றினைப் பெற்றவன்.*

*வடிவுதான் காணா ராயும் மன்னுசீர் வாக்கின் வேந்தர்*
*அடிமையும் தம்பி ரானார் அருளும்கேட் டவர்நா மத்தால்*
*படிதிகழ் மடங்கள் தண்ணீர்ப் பந்தர்கள் முதலா யுள்ள*
*முடிவிலா அறங்கள் செய்து முறைமையால் வாழும் நாளில்*

***- விரி***

***வரலாற்றுக் குறிப்பு :*** *அந்தணர், சோழநாடு, திங்களூர் - திருநாவுக்கரசரைக் குருவாகக்கொண்டு அவர் திருப்பெயரால் தருமங்கள் செய்தவர், பிள்ளை இறந்ததையும் மறைத்துத் திருநாவுக்கரசு சுவாமிகட்கு அமுதளித்தவர், திருநட்சத்திரம் : தை - சதயம்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*அந்தமில்நற் றிங்களூர் வரும்அப் பூதி*
*அருமறையோர் திருநாவுக் கரசின் நாமம்*
*பந்தரிடை எழுதக்கண் டரசும் எய்தப்*
*பணிந்துபரி கலநேடிப் படப்பை சேர்ந்த*
*மைந்தனுயிர் உயர்கதலி இலைமேல் துஞ்சும்*
*வாளரவு கவரஉடன் மறைத்தல் கேட்டுச்*
*சிந்தைமகிழ்ந் துயர்பதிக மருந்தால் தீர்த்துத்*
*திருவமுது செயஅருளைச் சேர்ந்து ளாரே,*


திருநீலநக்க நாயனார் (வைகாசி - மூலம்)

## 30. திருநீலநக்க நாயனார்

*ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற்கு அடியேன்* - தொகை

1122 பூதிப் புயத்தர் புயத்திற் சிலந்தி புகலுமஞ்சி
ஊதித் துமிந்த மனைவியை நீப்பவுப் பாலவெல்லாம்
பேதித் தெழுந்தன காணென்று பிஞ்ஞகன் காட்டுமவன்
நீதித் திகழ்சாத்தை நீலநக் கனெனும் வேதியனே, – 30 வகை

***குறிப்புரை :*** *பூதி- விபூதி. பூதிப்புயத்தர், விபூதியை யணிந்த தோள்களையுடையவர். சிவபெருமான் என்றது சிவலிங்கத்தை. புயம் - தோள், மேல் இடம். உடம்பின்மேல் சிலந்தி விழுந்தால், அது விழுந்த இடத்தில் கொப்புளம் உண்டாகிவிடும் என்பர், அப்படிக் கொப்புளம் உண்டாகா திருக்க உடனே வாய் எச்சிலைத் துமிந்து கையால் தேய்ப்பது வழக்கம், அப்படி மனைவியார் செய்தார். அஃது அநுசிதம் என்று நாயனார் அவரைத் துறந்தார், உப்பால - துமியப்படாத இடங்கள். பேதித்தல் - வேறுபடுதல், பேதித்து என்பதை பேதிக்க எனத் திரிக்க. கொப்புளம் எழுந்தனவற்றைக் காண்க என உணரக் காட்டியது கனவில். சாத்தை - சாத்த மங்கலம் : ஊர்*

*பள்ளி கொள்பொழு தயவந்திப் பரமர்தாம் கனவில்*
*வெள்ள நீர்ச்சடை யொடுநின்று மேனியைக் காட்டி*
*உள்ளம் வைத்தெமை ஊதிமுன் துமிந்தபால் ஒழியக்*
*கொள்ளும் இப்புறஞ் சிலம்பியின் கொப்புள் என்றருள,*

*கண்ட அப்பெருங் கனவினை நனவெனக் கருதிக்*
*கொண்ட அச்சமோ டஞ்சலி குவித்துடன் விழித்துத்*
*தொண்ட னார்தொழு தாடினார் பாடினார் துதித்தார்*
*அண்ட நாயகர் கருணையைப் போற்றிநின் றழுதார்,*

***- விரி***

***வரலாற்றுக் குறிப்பு :*** *அந்தணர், சோழநாடு, சாத்தமங்கை - அன்போடு சிவலிங்கத்தை ஊதித்துமித்தல் அநுசிதம் அன்று எனக் காட்டப்பெற்றவர், பாணர்க்கு வேதிகையில் இடம் தந்தவர், திருஞானசம்பந்தர் திருமணத்தில் முத்தி பெற்றவர். திருநட்சத்திரம் : வைகாசி - மூலம்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*நீதிதரு மறையோர்வாழ் சாத்த மங்கை*
*நீலநக்கர் அயவந்தி நிமலர் மேனி*
*ஊதிவிழுஞ் சிலம்பிகடிந் தவளை நீத்தார்க்*
*குமியாத இடம்நாதன் உறுநோய் காட்டக்*
*காதல்மிகு மனைவியையும் மகிழ்ந்து மேவிக்*
*காழியர்கோன் அமுதுசெயக் களித்து வாழ்ந்து*
*வேதிகையில் பாணனார்க் கிடமும் நல்கி*
*விளங்குபெரு மணத்தரனை மேவி னாரே,*


நமிநந்தியடிகள் நாயனார் (வைகாசி - பூசம்)

## 31. நமிநந்தியடிகள் நாயனார்

*அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்* - *தொகை*

1123 வேத மறிக்கரத் தாரூர் அரற்கு விளக்குநெய்யைத்
தீது செறிஅமண் கையாரட் டாவிடத் தெண்புனலால்
ஏதம் உறுக அருகரென் றன்று விளக்கெரித்தான்
நாதன் எழிலேமப் பேறூர் அதிபன் நமிநந்தியே – 31 வகை

***குறிப்புரை :*** *மறி - மான் கன்று, சிவபெருமானது சாங்க உபாங்கங்களை வேதமாக உபசரித்தல் மரபாதல் பற்றி வேத மறி என்றார், வேதத்தை அரனுக்கு அடையாக்கலும் ஆம், கையார் - வஞ்சகர், உள்ளதை இல்லை எனக் கரந்தவர், அட்டாவிட - வார்க்காமல் மறுக்க, ஏதம் - குற்றம், பாவம், நாதன் நமிநந்தி எம் தலைவனாகிய நமிநந்தி, ஏமப்பேறூர், ஊர்.*

*நீறுபுனைவார் அடியார்க்கு நெடுநாள் நியதி யாகவே*
*வேறுவேறு வேண்டுவன எல்லாம்செய்து மேவுதலால்*
*ஏறு சிறப்பின் மணிப்புற்றில் இருந்தார் தொண்டர்க்காணியெனும்*
*பேறு திருநாவுக்கரசர் விளம்பப் பெற்ற பெருமையினார்*
***- விரி***

**வரலாற்றுக் குறிப்பு :** *அந்தணர், சோழநாடு, ஏமப்பேறூர், தண்ணீரால் விளக்கெரித்தவர், திருவாரூர்ப் பிறந்தாரையெல்லாம் சிவசாரூப்பியராகக் கண்டவர். திருநட்சத்திரம் : வைகாசி - பூசம்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*நண்ணுபுகழ் மறையோர்வாழ் ஏமப் பேறூர்*
*நமிநந்தி யடிகள்திரு விளக்கு நல்க*
*எண்ணெய்அம ணர்கள்விலக்க நீரால் ஆரூர்*
*இலங்கும்அர னெறியாருக் கேற்று நாளில்*
*கண்ணமணர் கெடக்கண்பெற் றடிகள் வாழக்*
*காவலனால் நிபந்தங்கள் கட்டுவித்தே*
*அண்ணலருள் கண்டாரூர் அமர்ந்து தொண்டர்க்*
*காணிஎனும் அரசினருள் அடைந்து ளாரே.*



சுந்தரமூர்த்தி நாயனார் (ஆடி - சுவாதி)

## 32. சுந்தரமூர்த்தி நாயனார்

***ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே*** *- தொகை*

1124 நந்திக்கு நம்பெரு மாற்குநல் லாரூரில் நாயகற்குப்
பந்திப் பரியன செந்தமிழ் பாடிப் படர்புனலில்
சிந்திப் பரியன சேவடி பெற்றவன் சேவடியே
வந்திப் பவன்பெயர் வன்றொண்ட னென்பரிவ் வையகத்தே. **– 32** வகை

***குறிப்புரை :*** *'நந்தி' என்பதும் சிவபெருமானுக்கே பெயர். பந்திப்பரியன - செய்யுளாக யாத்தற்கு அரியன. செந்தமிழ், அதனாலாகிய பாடல்களுக்கு ஆகுபெயர். படர் புனல், காவிரியாற்றில் ஓடிய வெள்ளம். சேவடி, திருஐயாற்றுப் பெருமானது திருவடிகள். அவற்றைப் பெற்றமையாவது, வெள்ளம் இருபாலும் ஒதுங்கி வழிவிடப் பெற்றமை. 'சேவடி பெற்று, அவன் சேவடியே வந்திப்பவன்' என்க.*

*நாட்டார் அறிய முன்னாளில் நன்னாள் உலந்த ஐம்படையினன்*
*பூட்டார் மார்பிற் சிறியமறைப் புதல்வன் தன்னைப் புக்கொளியூர்த்*
*தாள்தா மரைநீர் மடுவின்கண் தனிமா முதலை வாய்நின்றும்*
*மீட்டார் கழல்கள் நினைவாரை மீளா வழியின் மீட்பனவே.*

***- விரி***

### வடலூர் வள்ளலார் அருளிய
### ஆளுடைய நம்பிகள் அருள் மாலையில் சுந்தரர்

*தேன்வடிக்கும் அமுதாம் உன் திருப்பாட்டைத் தினந்தோறும்*
*நான்படிக்கும் போது என்னை நானறியேன் நா ஒன்றோ*
*ஊன்படிக்கும் உளம்படிக்கும் உயிர்படிக்கும் உயிர்க்குயிரும்*
*தான் படிக்கும் அனுபவங்காண் தனிக்கருணைப் பெருந்தகையே.*


திருஞானசம்பந்த நாயனார் (வைகாசி - மூலம்)

## 33, 34. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

*வம்பறா வரிவண்டு மணநாற மலரும்*
*மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணா*
*எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்* - தொகை

1125 வைய மகிழயாம் வாழ அமணர் வலிதொலைய
ஐயன் பிரம புரத்தரற் கம்மென் குதலைச்செவ்வாய்
பைய மிழற்றும் பருவத்துப் பாடப் பருப்பதத்தின்
தையல் அருள்பெற் றனனென்பர் ஞானசம் பந்தனையே, – 33 வகை

1126 பந்தார் விரலியர் வேள்செங்கட் சோழன் முருகனல்ல
சந்தா ரகலத்து நீலநக் கன்பெயர் தான்மொழிந்து
கொந்தார் சடையர் பதிகத்தில் இட்டடி யேன்கொடுத்த
அந்தாதி கொண்ட பிரானருட் காழியர் கொற்றவனே – 34 வகை

***1125. குறிப்புரை:*** *யாம்-சைவர்கள். பிரமபுரம் - சீகாழி. அரற்குப் பாட என இயையும். பாட - பாடும் படி. "அம் வாய், குதலை வாய், செவ்வாய்" எனத் தனித்தனி இயைக்க. அம்-அழகு, பருவம், குழவிப் பருவம். "குழவிப் பருவத்தில் தையல் அருள் பெற்றனன்" என்றதனால், "திருமுலைப் பால் அருளப் பெற்றான்" என்றதாயிற்று.*

***1126. குறிப்புரை:*** *பந்தார் விரலியர் - மகளிர். அவர்கட்கு வேள் (மன்மதன்) போன்றவன் கோச்செங்கட் சோழன், முருகன் - முருக நாயனார், நீல நக்கன் - திருநீல நக்கநாயனார், இவர்கள் பெயர்களை ஞானசம்பந்தர், தமது பதிகத்தில் இட்டுப் பாடியன முறையே, மழையார் மிடறா எனத் தொடங்கும் திருவானைக்காப் பதிகத்திலும், பட்டம் பால் நிற மதியம் எனத் தொடங்கும் திருப்புகலூர் வர்த்தமானீச்சரப் பதிகத்திலும், திருமலர்க் கொன்றை மாலை எனத் தொடங்கும் திருச்சாத்தமங்கை பதிகத்திலும் ஆகும். இவர்களோடு சிறுத்தொண்ட நாயனாரது பெயரை இட்டுப் பாடிய திருப்பதிகம், நறைகொண்ட மலர்தூவி எனவும் பைங்கோட்டு மலர்ப்புன்னை எனவும் தொடங்கும் திருச்செங்காட்டங்குடித் திருப்பதிகங் களாகும். இவைகளில் பின்னர்க்கூறிய பதிகத்தின் எல்லாப் பாடல்களிலும் சிறுத்தொண்டர் பெயர் இடப்பட்டுள்ளது. இதனை இவர் பின்வரும் திருவந்தாதி 72-ஆம் பாட்டில் குறிப்பால் உணர்த்தினார். அடியேன் தொடுத்த அந்தாதி கொண்டவன் என்றதனால் அவ்வந்தாதிக்குப் பின்பே இவ்வந்தாதி பாடப்பட்டது எனக் கருதலாம்.*

*சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்*
*பவமதனை அறமாற்றும் பாங்கினில்ஓங் கியஞானம்*
*உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்*
*தவமுதல்வர் சம்பந்தர் தாம்உணர்ந்தார் அந்நிலையில்,*

*ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை*
*வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்*
*தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்*
*கானத்தின் எழுப்பிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்* - ***விரி***

***வரலாற்றுக் குறிப்பு:*** *அந்தணர், சோழநாடு, சீகாழி - உமாதேவியாரால் ஞானப்பால் ஊட்டப் பெற்றவர், தேவாரம் பாடி எலும்பைப் பெண்ணாக்குதல் முதலிய பல அற்புதங்கள் செய்து தமது திருமணத்துக்கு வந்தவர்கள் அனைவருக்கும் முத்தியளித்தவர், திருநட்சத்திரம் : வைகாசி - மூலம்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*காழிநகர்ச் சிவபாத விருதயர் தந்த*
*கவுணியர்கோன் அழுதுமையாள் சுருதி யூட்டும்*
*ஏழிசையின் அமுதுண்டு தாளம் வாங்கி*
*இலங்கியநித் திலச்சிவிகை இசைய ஏறி*
*வாழும்முய லகனகற்றிப் பந்தர் ஏய்ந்து*
*வளர்கிழிபெற் றரவின்விடம் மருகல் தீர்த்து*
*வீழிநகர்க் காசெய்தி மறைக்கதவம் பிணித்து*
*மீனவன்மே னியின்வெப்பு விடுவித் தாரே,*
*ஆரெரியிட் டெடுத்தஏ டவைமுன் னேற்றி*
*ஆற்றிலிடும் ஏடெதிர்போய் அணைய ஏற்றி*
*ஓரமணர் ஒழியாமே கழுவி லேற்றி*
*ஓதுதிருப் பதிகத்தால் ஓடம் ஏற்றிக்*
*காருதவும் இடிபுத்தன் தலையில் ஏற்றிக்*
*காயாத பனையின்மீது கனிகள் ஏற்றி*
*ஈரமிலா அங்கம்உயிர் எய்த ஏற்றி*
*இலங்குபெரு மணத்தானை எய்தி னாரே.*


ஏயர்கோன் கலிக்காம நாயனார் (ஆனி - ரேவதி)

## 35. ஏயர் கோன்கலிக்காம நாயனார்

***ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்*** - *தொகை*

1127 கொற்றத் திறலெந்தை தந்தைதன் தந்தைஎங் கூட்டமெல்லாம்
தெற்றச் சடையாய் நினதடி யேந்திகழ் வன்தொண்டனே
மற்றிப் பிணிதவிர்ப் பானென் றுடைவா ளுருவிஅந்நோய்
செற்றுத் தவிர்கலிக் காமன் குடிஏயர் சீர்க்குடியே. **– 35** வகை

***குறிப்புரை :*** *தெற்றம் - தெற்றுதல், பின்னுதல். கூட்டம் - கூட்டத்தினர், ஆகுபெயர் நினது அடியேம் என உயர்திணைக்கண் அது உருபு வந்தது பிற்கால வழக்கு. வன்றொண்டன் - வன்மை பேசி எதிர்வழக்கிட்டு ஆட்பட்டவன். ஏகாரம் வினா. மற்று, அசை. அந்நோய், சூலை நோய்.*

*நம்பியா ரூரர் நெஞ்சில் நடுக்கம்ஒன் றின்றி நின்று*
*தம்பிரா னாரைத் தூது தையல்பால் விட்டார் என்னும்*
*இம்பரின் மிக்க வார்த்தை ஏயர்கோ னார்தாம் கேட்டு*
*வெம்பினார் அதிச யித்தார் வெருவினார் விளம்ப லுற்றார்.*

***- விரி***

***வரலாற்றுக் குறிப்பு :*** *வேளாளர், சோழநாடு, திருப்பெருமங்கலம் - சிவபெருமானைத் தூதாக விடுத்த வன்றொண்டரை இகழ்ந்து பின்பு திருவருள் விளையாட்டால் அவருடைய நண்பரானவர். திருநட்சத்திரம் : ஆனி - ரேவதி. சோழ மன்னனின் சேனைத் தலைவர்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*ஏதமில்வே ளாளர்பெரு மங்க லத்துள்*
*ஏயர்கோன் கலிக்காமர் இறையை நேரே*
*தூதுகொளு மவனணுகில் என்னாம் என்னுந்*
*துணிவினர்பால் இறைவன்அருஞ் சூலை ஏவி*
*வேதனைவன் தொண்டன்வரின் நீங்கும் என்ன*
*வெகுண்டுடல்வாள் கொடுதுறந்து மேய நாவால்*
*போதகமும் உடல்இகழ எழுந்து தாழ்ந்து*
*போற்றியது விலக்கிஅருள் பொருந்தி னாரே.*


திருமூல நாயனார் (ஐப்பசி - அசுவதி)

## 36. திருமூல நாயனார்

***நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்*** - தொகை

1128 குடிமன்னு சாத்தனூர்க் கோக்குலம் மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன் தன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி யேபர விட்டெனுச்சி
அடிமன்ன வைத்த பிரான்மூல னாகின்ற அங்கணனே. **– 36 வகை**

***குறிப்புரை :*** *சாத்தனூர், திருவாவடுதுறை அருகில் உள்ள ஓர் ஊர், கோக்குலம் - பசுக்கூட்டம். குரும்பை - உடம்பு. படி - அமைப்பு வகை. "படி" இரண்டில் முன்னத்தில் "படியால்" என உருபு விரிக்க, பரவுதல் - துதித்தல் "பரவிட்டு" என்பதில் "இட்டு" என்பது அசை, அம்கணன் - அழகிய கண்களை யுடையவன், கண்ணுக்கு அழகு கருணை.*

*முன்னியப் பொருள்மாலைத் தமிழ்மூவா யிரம்சாத்தி*
*மன்னியமூ வாயிரத்தாண் டிப்புவிமேல் மகிழ்ந்திருந்து*
*சென்னிமதி யணிந்தார்தம் திருவருளால் திருக்கயிலை*
*தன்னிலணைந் தொருகாலும் பிரியாமைத் தாளடைந்தார்.*

***- விரி***

**வரலாற்றுக் குறிப்பு :** *இடையர், சோழநாடு, சாத்தனூர்- மூலன் உடலில் தாம் புகுந்து மூவாயிரம் ஆண்டிருந்து திருமந்திரம் அருளிச்செய்தவர், திருநட்சத்திரம் : ஐப்பசி - சுவாதி.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*கயிலாயத் தொருசித்தர் பொதியில் சேர்வார்*
*காவிரிசூழ் சாத்தனூர் கருதும் மூலன்*
*பயிலாநோ யுடன்வீயத் துயர நீடும்*
*பசுக்களைக்கண் டவனுடலிற் பாய்ந்து போத*
*அயலாகப் பண்டையுடல் அருளான் மேவி*
*ஆவடுதண் டுறைஆண்டுக் கொருபா வாகக்*
*குயிலாரும் அரசடியில் இருந்து கூறிக்*
*கோதிலா வடகயிலை குறுகி னாரே.*


தண்டியடிகள் நாயனார் (பங்குனி - சதயம்)

## 37. தண்டியடிகள் நாயனார்

*நாட்டமிகு தண்டிக்கும் (மூர்க்கற்கும்) அடியேன்* - தொகை

1129 கண்ணார் மணியொன்று மின்றிக் கயிறு பிடித்தரற்குத்
தண்ணார் புனல்தடந் தொட்டலுந் தன்னை நகும்அமணர்
கண்ணாங் கிழப்ப அமணர் கலக்கங்கண் டம்மலர்க்கண்
விண்ணா யகனிடைப் பெற்றவன் ஆரூர் விறற்றண்டியே. – 37 வகை

***குறிப்புரை :*** *"ஒன்றும்" என்னும் உம்மை இழிவு சிறப்பு. "தொடலும்" என்பது விரித்தல் பெற்றது, தொடுதல் - தோண்டுதல், இந்நாயனாரது மரபும் அறியப்படவில்லை.*

*கண்ணின் மணிகள் அவையின்றிக் கயிறு பிடித்துக் குளம்தொட்ட*
*எண்ணில் பெருமைத் திருத்தொண்டர் பாதம் இறைஞ்சி இடர்நீங்கி*
*விண்ணில் வாழ்வார் தாம்வேண்டப் புரங்கள் வெகுண்டார் வேற்காட்டூர்*
*உண்ணி லாவும் புகழ்த்தொண்டர் மூர்க்கர் செய்கை யுரைக்கின்றாம்.*

***- விரி***

***வரலாற்றுக் குறிப்பு :*** *சோழநாடு, திருவாரூர் - பிறவிக் குருடராயிருந்தும் திருக்குளப் பணிசெய்து குருடு நீங்கிச் சமணரை வென்று வீடுபேறடைந்தவர். திருநட்சத்திரம் : பங்குனி - சதயம் அகக்கண்ணினால் ஆண்டவனை வழிபட்டவர், திருவாரூர்க் கோயில் வலம்வருதல், ஐந்தெழுத்தோதல் அவர்தம் திருத்தொண்டாகும்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*திருவாரூர் வருந்தண்டி யடிகள் காட்சி*
*சேராதார் குளந்தொட்டற் கமணர் சீறிக்*
*குருடாநீ முன்செவிடுங் கூடிற் றென்று*
*குறித்தறியைப் பறித்தெறியக் கொதித்துத் தங்கண்*
*அருளாலே விழித்தெவரும் அந்த ராக*
*அமணர்கலக் கம்பலகண் டவர்கள் பாழிப்*
*பருவான கற்பறித்தா விக்கரையுங் கட்டிப்*
*பரனருளால் அமருலகம் பற்றி னாரே.*


மூர்க்க நாயனார் (கார்த்திகை - மூலம்)

## 38. மூர்க்க நாயனார்

*(நாட்டமிகு தண்டிக்கும்) மூர்க்கற்கும் அடியேன்* - தொகை

1130 தண்டலை சூழ்திரு வேற்காட் டூர்மன்னன் தகுகவற்றால்
கொண்டவல் லாயம்வன் சூதரை வென்றுமுன் கொண்டபொருள்
முண்டநன் னீற்றன் அடியவர்க் கீபவன் மூர்க்கனென்பர்
நண்டலை நீரொண் குடந்தையின் மேவுநற் சூதனையே. – 38 வகை

***குறிப்புரை :*** *திருவேற்காடு, தொண்டைநாட்டுத் தலம். கவறு - சூதாடு கருவி. வல் ஆயம் - வலிய தொகை; பந்தயக் கணக்கு. நண்டு அலை நீர் - நண்டுகள் உலாவுகின்ற நீர். குடந்தை, இப்பொழுது ''கும்பகோணம்'' என வழங்குகின்றது, இந்நாயனார் இறுதியில் அங்கு சென்று தங்கினார்.*

*சூதினில்வென் றெய்துபொருள் துரிசற்ற நல்லுணர்வில்*
*தீதகல அமுதாக்கு வார்கொள்ளத் தாம்தீண்டார்*
*காதலுடன் அடியார்கள் அமுதுசெயக் கடைப்பந்தி*
*ஏதமிலா வகைதாமும் அமுதுசெய்தங் கிருக்குநாள்,*

*நாதன்றன் அடியார்க்கு நல்லடிசில் நாடோறும்*
*ஆதரவி னாலமுது செய்வித்தங் கருளாலே*
*ஏதங்கள் போயகல இவ்வுலகை விட்டதற்பின்*
*பூதங்கள் இசைபாட ஆடுவார் புரம்புக்கார்*

***- விரி***

***வரலாற்றுக் குறிப்பு :*** *வேளாளர், தொண்டைநாடு, திருவேற்காடு. சூதாட்டத்தால் கிடைக்கும் இலாபம்கொண்டு சிவனடியார்க்கு அமுதீந்து வழிபட்டவர். திருநட்சத்திரம் : கார்த்திகை - மூலம், அடியவரை அமுது செய்வித்த பின்னர் உண்பது அவரது நியதி, அடியவர் விரும்பும் பொருளைக் கொடுப்பதும் அவர்தம் வழக்கம்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*தொண்டைவள நாட்டுவளர் வேற்காட் டூர்வாழ்*
*தொல்லுழவர் நற்சூதர் சூது வென்று*
*கொண்டபொருள் கொண்டன்பர்க் கமுத ளிக்குங்*
*கொள்கையினார் திருக்குடந்தை குறுகி யுள்ளார்,*
*விண்டிசைவு குழறுமொழி வீணர் மாள*
*வெகுண்டிடலான் மூர்க்கரென விளம்பு நாமம்*
*எண்டிசையும் மிகவுடையார் அண்டர் போற்றும்*
*ஏழுலக முடனாளும் இயல்பி னாரே.*


சோமாசிமாற நாயனார் (வைகாசி - ஆயில்யம்)

## 39. சோமாசிமாற நாயனார்

*அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்* - *தொகை*

1131 சூதப் பொழிலம்பர் அந்தணன் சோமாசி மாறனென்பான்
வேதப் பொருளஞ் செழுத்தும் விளம்பியல் லால்மொழியான்;
நீதிப் பரன்மன்னு நித்த நியமன் பரவை யென்னும்
மாதுக்குக் காந்தன் வன்தொண்டன் தனக்கு மகிழ்துணையே. – 39 வகை

**குறிப்புரை :** *சூதம் - மாமரம், அம்பர், அம்பர் மாகாளம், சோழநாட்டுத் தலம் "மாறன்" என்பது இயற்பெயர். சோமாசி என்பது சிறப்புப் பெயர். சோம யாஜி என்பது சோமாசி எனத் திரிந்தது. இப்பெயரே "இவர் வைதிக அந்தணர் என்பதைக் காட்டும், "வேதப் பொருளை அஞ்செழுத்தாய மந்திரத்தை விளம்பியல்லால் விளம்பான்" என்க. இதனால் இவர் வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது - நாதன் நாமம் நமச்சி வாயவே என்னும் துணிவினராய் இருந்தமை விளங்கும். "பரன்பால்" என ஏழாவது விரிக்க. நித்த நியமம், நித்தியாக்கினி யோம்புதல். அதனை "பரன்பால் மன்னு நியமம்" என்றதனால் சிவாக்கினியாக வளர்த்தமை அறியப்படும். "காந்தனாகிய வன்றொண்டன்" என மேற்கூறிய கொள்கையும் ஒழுக்கமும் உடையவராய் இருந்தமையால் சுந்தர மூர்த்தி நாயனாரைத் தமக்கு ஆசிரியராகக் கொண்டு ஒழுகுகின்றார் என்க. இவரது வரலாறு வேறு புராணங்களில் சில பொருள்கள் கூடுதலாகச் சொல்லப்படுகின்றது.*

*எத்தன்மைய ராயினு மீசனுக் கன்பர் என்றால்*
*அத்தன்மையர்தாம் நமை ஆள்பவர் என்று கொள்வார்*
*சித்தம் தெளியச் சிவன் அஞ் செழுத்தோது வாய்மை*
*நித்தம் நியம மெனப் போற்று நெறியின் நின்றார்,* - *விரி*

**வரலாற்றுக் குறிப்பு :** *அந்தணர், சோழநாடு, திருஅம்பர், வேத வேள்வி செய்தவர், சுந்தரமூர்த்தி சுவாமிகளை வழிபட்டவர். அடியவர்க்கு அமுதூட்டுவார், ஐந்தெழுத்து ஓதுவார், திருநட்சத்திரம் : வைகாசி - ஆயில்யம்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*அம்பர்நகர் அந்தணர்சோ மாசி மாறர்*
*அன்பர்களாம் யாவர்க்கும் அமுத ளிப்பார்*
*உம்பர்நிகழ் வகையாகம் பலவுஞ் செய்யும்*
*உண்மையினார் ஐந்தெழுத்தும் ஓவா நாவார்*
*நம்பர்திகழ் திருவாரூர் நயந்து போற்றும்*
*நாவலர்கோன் அடிபரவும் நன்மை யாலே*
*இம்பர்தொழ உம்பர்பணிந் தேத்த மேலை*
*ஏழுலகு முடனாளும் இயல்பி னாரே.*



சுந்தரமூர்த்தி நாயனார் (ஆடி - சுவாதி)

## 40. சுந்தரமூர்த்தி நாயனார்

***ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே*** - *தொகை*

1132 துணையு மளவுமில் லாதவன் தன்னரு ளேதுணையாக்
கணையுங் கதிர்நெடு வேலுங் கறுத்த கயலிணையும்
பிணையும் நிகர்த்தகண் சங்கிலி பேரமைத் தோளிரண்டும்
அணையும் மவன்திரு வாரூரனாகின்ற அற்புதனே. – 40 வகை

***குறிப்புரை :*** *துணை - ஒப்பு. பிணை - பெண் மான் என்றது அதன் பார்வையை. சங்கிலி - சங்கிலி நாச்சியார். அமைத்தோள் - மூங்கில் போலும் தோள்.*

*பணையும் தடமும் புடைசூழும் ஒற்றி யூரிற் பாகத்தோர்*
*துணையுந் தாமும் பிரியாதார் தோழத் தம்பி ரானாரை*
*இணையுங் கொங்கைச் சங்கிலியார் எழின்மென் பணைத்தோ*
*ளெய்துவிக்க*
*அணையு மொருவர் சரணமே அரண மாக அடைந்தோமே*
***- விரி***

### வள்ளலார் அருளிய
### ஆளுடைய நம்பிகள் அருள் மாலையில் சுந்தரர்

*ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய*
*தோழனுமாய் என்றுமுன் நீ சொன்ன பெருஞ் சொற்பொருளை*
*ஆழநினைத் திடில் அடியேன் அருங்கரணம் கரைந்துகரைந்து*
*ஊழியல் இன்புறுவதுகாண் உயர்கருணைப் பெருந்தகையே.*


சாக்கிய நாயனார் (மார்கழி - பூராடம்)

## 41. சாக்கிய நாயனார்

***வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே***
***மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கும் அடியேன்*** - *தொகை*

1133 தகடன ஆடையன் சாக்கியன் மாக்கற் றடவரையின்
மகடனந் தாக்கக் குழைந்ததிண் தோளர்வண் கம்பர்செம்பொன்
திகழ்தரு மேனியிற் செங்க லெறிந்து சிவபுரத்துப்
புகழ்தரப் புக்கவன் ஊர்சங்க மங்கை புவனியிலே. **– 41** வகை

***குறிப்புரை :*** *சாக்கியன் - பௌத்த மத வேடத்தை மாற்றிக் கொள்ளாதவன். அவ்வேடத்தையுடையவர்கள் மருதம் துவர் தோய்ந்த ஆடையை அணிவர் ஆதலாலும், அந்த ஆடை கெட்டியாய்த் துவளாது நிற்கும் ஆதலாலும் "தகடு அன்ன ஆடையன்" என்றார். மாக்கல் - பெருங்கல். பெருங் கல்லாகிய வரை - இமய மலை. "தென்குமரி வடபெருங்கல்" என்றார் சங்கப் புலவரும் கம்பர் - திருவேகம்பப் பெருமான், புவனி - பூமி.*

*எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்*
*மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருளென்றே*
*துன்னியவே டம்தன்னைத் துறவாதே தூயசிவம்*
*தன்னைமிகும் அன்பினால் மறவாமை தலைநிற்பார்*

***- விரி***

***வரலாற்றுக் குறிப்பு :*** *வேளாளர், திருச்சங்கமங்கை - மறவாது நாடோறும் சிவலிங்கத்தின்மீது கல்லெறிந்து வழிபட்டவர், திருநட்சத்திரம் : - மார்கழி - பூராடம்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*சங்கமங்கை வரும்வேளாண் தலைவர் காஞ்சிச்*
*சாக்கியரோ டியைந்தவர்தந் தவறுஞ் சைவத்*
*துங்கமலி பொருளும் உணர்ந் தந்த வேடந்*
*துறவாதே சிவலிங்கத் தொழுவோர் கண்டோர்*
*அங்கல்மலர் திருமேனி அழுந்தச் சாத்தி*
*அமருநாள் மறந்தொருநாள் அருந்தா தோடிச்*
*செங்கலெறிந் திடும்அளவில் மகிழ்ந்த நாதன்*
*திருவருளால் அமருலகஞ் சேர்ந்து ளாரே.* *- விரி*



சிறப்புலி நாயனார் (கார்த்திகை - பூராடம்)

## 42. சிறப்புலி நாயனார்

*சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்* - தொகை

1134 புவனியில் பூதியுஞ் சாதன மும்பொலி வார்ந்துவந்த
தவநிய மற்குச் சிறப்புச்செய் தத்துவ காரணனாம்
அவனியிற் கீர்த்தித் தென்னாக்கூர் அதிபன் அருமறையோன்
சிவனிய மந்தலை நின்றதொல் சீர்நஞ் சிறப்புலியே. – 42 வகை

**குறிப்புரை :** *பூதி - விபூதி; திருநீறு. சாதனம் - உருத்திராக்கம், இது சைவ மரபுப் பெயர். "ஆர்ந்து" என்பதை ஆர எனத் திரிக்க. தவ நியமம் - தவமாகிய, தப்பாக் கடமை. இஃது இங்கு சைவாசாரத்தின்மேல் நின்றது. சிறப்பு, மேல்நிலையில் வைத்து வழிபடுதல், தத்துவம் - மெய்ம்மை; அஃதாவது, உளமார நேர்ந்து செய்தல், காரணன் - செய்பவன்; கருத்தா. தலை நிற்றல் - பற்றி நிற்றல், "சிறப்புலி" என்பது பெயர்.*

*அஞ்செழுத் தோதி அங்கி வேட்டுநல் வேள்வி யெல்லாம்
நஞ்சணி கண்டர் பாதம் நண்ணிடச் செய்து ஞாலத்து
எஞ்சலில் அடியார்க் கென்றும் இடையறா அன்பால் வள்ளல்
தஞ்செயல் வாய்ப்ப ஈசர் தாள்நிழல் தங்கினாரே*

**- விரி**

**வரலாற்றுக் குறிப்பு :** *அந்தணர், சோழ மண்டலத்திலே, திருவாக்கூரிலே வேதியர் குலத்திலே தோன்றியவர், அடியவர்க்கு அமுதூட்டுவதும், பொருள் உதவுவதும் அவர்தம் திருத்தொண்டு, ஐந்தெழுத்து ஓதுவதும், யாகஞ் செய்வதும் அவர்தம் வழக்கம், இவ்வாறு சிவபணி செய்து, சிறப்புலி நாயனார் சிவபெருமான் திருவடி சேர்ந்தார். திருநட்சத்திரம் : கார்த்திகை - பூராடம்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*திருவாக்கூர் அருமறையோர் உலகம் ஏத்துஞ்
சிறப்புலியார் மறப்புலியார் உரிமேற் செங்கண்
அரவார்த்தார் வரும்ஏற்றார்க் கன்ப ரானார்க்
கமுதளிப்பார் ஒளிவெண்ணீ றணிந்த மார்பர்
பெருவாக்கால் மறைபரவி யாகம் போற்றும்
பெற்றியினார் ஐந்தெழுத்தும் பிறழா தோதிக்
கருவாக்கா இறைவன்தா ளிணைகள் சேர்ந்த
கருத்தினார் எனையாவுந் திருத்தி னாரே.*


சிறுத்தொண்ட நாயனார் ( சித்திரை - பரணி )

## 43. சிறுத்தொண்ட நாயனார்

*செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டற் கடியேன்* - தொகை

1135 புலியின் அதளுடைப் புண்ணியற் கின்னமு தாத்தனதோர்
ஒலியின் சதங்கைக் குதலைப் புதல்வன் உடல் துணித்துக்
கலியின் வலிகெடுத் தோங்கும் புகழ்ச்சிறுத் தொண்டன்கண்டீர்
மலியும் பொழிலொண் செங்காட்டங் குடியவர் மன்னவனே. – 43 வகை

***குறிப்புரை :*** *கலி, பிள்ளைக்கலி. அதைத் தொலைத்தமை, கறியாகச் சமைக்கப்பட்ட மகன் திருவருளால் மீண்டும் முன்போல உயிர்பெற்று எழுந்து வரப் பெற்றமை. கண்டீர், முன்னிலையசை. “தனது புதல்வன்” என்பதற்கு மேல் நினது அடியேம் என்றதற்கு உரைத்ததை உரைக்க.*

*இனிய மழலைக் கிங்கிணிக்கால் இரண்டு மடியின் புடையிடுக்கிக்*
*கனிவாய் மைந்தன் கையிரண்டும் கையால் பிடிக்கக்காதலனும்*
*நனிநீ டுவகை யுறுகின்றார் என்று மகிழ்ந்து நகைசெய்யத்*
*தனிமா மகனைத் தாதையார் கருவி கொண்டு தலையரிவார்*
***- விரி***

***வரலாற்றுக் குறிப்பு :*** *மாமாத்திரப் பிராமணர், சோழநாடு, திருச்செங்காட்டங் குடி, பரஞ்சோதியார் என்ற இயற்பெயரினர். வாதாபிப்போரில் வென்றவர். சிவனடியார்க்குத் தமது ஒரே பிள்ளையைக் கறியாகச் சமைத்து அமுதளித்தவர். திருநட்சத்திரம் : சித்திரை - பரணி.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*பல்குமருத் துவர்அதிபர் செங்காட்டங் குடிவாழ்*
*படைத்தலைவர் அமுதளிக்கும் பரஞ்சோதி யார்மெய்ச்*
*செல்வமிகு சிறுத்தொண்டர் காழி நாடன்*
*திருவருள்சேர்ந் தவர்வளருஞ் சீராளன் தன்னை*
*நல்குதிரு வெண்காட்டு நங்கைசமைத் திடப்பின்*
*நன்மதிச்சந் தனத்தாதி தலைக்கறியிட் டுதவப்*
*புல்கவரும் வயிரவர்தாம் மகிழ்ந்துமக வருளப்*
*போற்றியவர் சிவனருளே பொருந்தி னாரே.*


கழறிற்றறிவார் நாயனார் (ஆடி - சுவாதி) (சேரமான் பெருமாள் நாயனார்)

## 44, 45. சேரமான் பெருமாள் நாயனார்

***கார்கொண்ட கொடைக் கழறிற் றறிவார்க்கும் அடியேன்*** - தொகை

1136 மன்னர் பிரானெதிர் வண்ணா னுடலுவர் ஊறிநீறார்
தன்னர் பிரான்தமர் போல வருதலுந் தான்வணங்க
என்னர் பிரான்அடி வண்ணான் எனஅடிச் சேரனென்னும்
தென்னர் பிரான்கழ றிற்றறி வானெனுஞ் சேரலனே. – 44 வகை

1137 சேரற்குத் தென்னா வலர்பெரு மாற்குச் சிவனளித்த
வீரக் கடகரி முன்புதன் பந்தி இவுளிவைத்த
வீரற்கு வென்றிக் கருப்புவில் வீரனை வெற்றிகொண்ட
சூரற் கெனதுள்ளம் நன்றுசெய் தாயின்று தொண்டுபட்டே. – 45 வகை

***1136. குறிப்புரை :*** *"மன்னர்பிரான், தென்னர்பிரான், சேரலன்", என்பன ஒரு பொருள்மேல் வந்த பல பெயர்கள். உவர் - உவர் மண், ஊறி - ஊறியதனால். நீறு - திருநீறு. தன்னர்பிரான் தமர் போல - தம்மைப் போல்பவர்களுக்குத் தலைவனாகிய சிவபெருமானுக்குத் தொண்டராயினார்போல. என்னர்பிரான் - என்போன்ற குடி மக்கட்குத் தலைவரே. அண்மை விளி அடி வண்ணான் அடிச்சேரன் என்னும் பயனிலைகட்கு யான் என்னும் எழுவாய் தனித்தனி வருவிக்க. தென்னர் என்பது தமிழர் எனப் பொதுப் பொருள் தந்தது சொல்வாரது குறிப்பினால் சேரநாட்டுத் தமிழரைக் குறித்தது. கழறிற்று அறிவான் - எந்த உயிரும் தன்தன் மொழியில் கூறுவதை அறிய வல்லவன்.*

***1137. குறிப்புரை :*** *"எனது உள்ளம்" என்பது விளி; அதனை முதற்கண் வைத்து உரைக்க. "சேரற்கு, வீரற்கு, சூரற்கு" என்பன ஒரு பொருள்மேல் வந்த பல பெயர்கள், தென்னாவலர் பெருமான், தென்னாட்டில் உள்ள திருநாவலூரில் உள்ளவர்க்குத் தலைவர், சுந்தர மூர்த்தி நாயனார். கட கரி - மத யானை; இது வெள்ளை யானை, பந்தி, குதிரைப் பந்தி, இவுளி - குதிரை, "வைத்த" என்றது. "ஒட்டிய" என்றபடி, கருப்பு வில் வீரன், மன்மதன் அவனை வெற்றி கொண்மையாவது, தமக்கு உரிமைத் தேவியரான பலருள் ஒருவரையும் நினையாது ஒரு கணத்திலே துறந்து கயிலை சென்றமை, சூரன் - ஆண்மையுடையவன். "ஏனையோரை வெல்லும் ஆண்மைகள் எல்லாவற்றினும் மேலான ஆண்மை மன்மதனை வெல்லும் ஆண்மையே" என்பதாம். "சூரற்கு இன்று தொண்டுபட்டு நன்று செய்தாய்" என்க*

*சேரர் பெருமான் தொழக்கண்டு சிந்தை கலங்கி முன்வணங்கி*
*யாரென் றடியே னைக்கொண்ட தடியேன் அடிவண்ணான் என்னச்*
*சேரர் பிரானும் அடிச்சேர னடியேன் என்று திருநீற்றின்*
*வார வேடம் நினைப்பித்தீர்வருந்தா தேகும் எனமொழிந்தார்.* - **விரி**

**வரலாற்றுக் குறிப்பு:** *அரசர், மலைநாடு, கொடுங்கோளூர். நடராசப் பெருமானால் வழக்கமாகக் கேட்கச்செய்யும் சிலம்பொலியைக் காலந் தாழ்க்கச்செய்து, சுந்தரரை தோழராக்கப்பெற்றவர். சிவபெருமானுடைய திருமுகப்பாசுரம் பெற்றவர். கயிலை சென்று ஞானவுலாப் பாடியவர். கழறிற்றறிவார் என்னும் திருநாமத்தை உடையவர். திருநட்சத்திரம் : ஆடி - சுவாதி.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*காவலர்ம கோதையார் கொடுங்கோ ளூர்க்கோக்*
*கழறியவை அறிந்தகோச் சிலம்போசைக் கருத்தார்*
*நாவலர்கோன் நண்பர்அடிச் சேரன் என்றே*
*நவின்றுவரும் வண்ணானை நயந்த கோநற்*
*பாவலர்கோப் பாணபத் திரனால் வாய்ந்த*
*பரமர்திரு முகம்வாங்கிப் பணிகோ வெற்பின்*
*மேவியகோ ஆணைக்குக் குதிரை வைத்த*
*வீரர்கோ எனையாளுஞ் சேரர் கோவே.*


கணநாத நாயனார் (பங்குனி - திருவாதிரை)

## 46. கணநாத நாயனார்

***கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்*** *- தொகை*

1138 தொண்டரை யாக்கி அவரவர்க் கேற்ற தொழில்கள்செய்வித்
தண்டர்தங் கோனக் கணத்துக்கு நாயகம் பெற்றவன்காண்
கொண்டல்கொண் டேறிய மின்னுக்குக் கோல மடல்கடொறும்
கண்டல்வெண் சோறளிக் குங்கடற் காழிக் கணநாதனே. – 46 வகை

*1138. **குறிப்புரை :** தொண்டரை ஆக்குதலாவது, பிற வழிகளில் முயல்பவர்களை சிவனது தொண்டு முயற்சியில் திருப்பிவிடுதல். அம் முயற்சிகளுள் அவரவருக்கு ஏற்புடைய பணி இது இது எனத் தெரிந்து அப்பணியில் அவர்களை ஈடுபடுத்தியவர் இந்நாயனார் என்க. அப்பணிகளுள், திருமுறைகளை ஏட்டில் எழுதுதல் ஒரு சிறந்த திருப்பணி யாகும். திருமுறை என்பது பழங்காலத்தில் இறைவணக்கப் பாடல்கள் வரையப்பட்ட ஏடுகளுக்கு வழங்கிய பெயர். அண்டர் - தேவர். கோணம், வரையறுக்கப்பட்ட இடம். கணம் - கூட்டம். இது சிவ கணத்தையேயன்றிப் பதினெண் கணங்களையும் குறித்தது. கணத்துக்கு நாயகம் பெற்றது பின்னர் என்க. காண், முன்னிலையசை. கண்டல் - தாழம் பூ, சோறு - சோற்றி இஃது உணவு என வேறொரு பொருளையும் நயம்படக் குறித்தது.*

*ஆய அன்பர்தாம் அணிமதில் சண்பையின் அமர்பெருந் திருத்தோணி*
*நாய னார்க்குநற் றிருப்பணி யாயின நாளும்அன் பொடுசெய்து*
*மேய வத்திருத் தொண்டினில் விளங்குவார் விரும்பிவந் தணைவார்க்குத்*
*தூய கைத்திருத் தொண்டினில் அவர்தமைத் துறைதொறும் பயில்விப்பார்*

*நல்ல நந்தன வனப்பணி செய்பவர் நறுந்துணர் மலர்கொய்வோர்*
*பல்ப ணித்தொடை புனைபவர் கொணர்திரு மஞ்சனப் பணிக்குள்ளோர்*
*அல்லும் நண்பகலும் திரு வலகிட்டுத் திருமெழுக் கமைப்போர்கள்*
*எல்லை யில்விளக் கெரிப்பவர் திருமுறை யெழுதுவோர் வாசிப்போர்*

**- விரி**

**வரலாற்றுக் குறிப்பு :** *அந்தணர், சோழநாடு, சீகாழி - திருஞான சம்பந்தரை வழிபட்டுச் சரியைத் தொண்டர்க்குப் பயிற்சி தந்தவர். திருநட்சத்திரம் : பங்குனி - திருவாதிரை.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*கந்தமலி வயற்காழி மறையோ ரேத்துங்*
*கணநாதர் திருத்தோணிக் கடவு ளார்க்கு*
*நந்தவனம் பலஅமைத்து மலருங் கொய்து*
*நற்றாமஞ் சொற்றாமம் நயந்து சாத்தி*
*வந்தவரைத் தொண்டராக்கிப் பணிகள் பூட்டி*
*வாதுசெய்த வாரணத்தை மகிழ்ந்து வாழ்த்திப்*
*புந்திமகிழ்ந் தரனருளால் கயிலை மேவிப்*
*பொருவில்கணத் தவர்காவல் பொருந்தி னாரே.*


கூற்றுவ நாயனார் (ஆடி - திருவாதிரை)

## 47. கூற்றுவ நாயனார்

***ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்*** - தொகை

1139 நாதன் திருவடி யேமுடி யாகக் கவித்துநல்ல
போதங் கருத்திற் பொறித்தமை யாலது கைகொடுப்ப
ஓதந் தழுவிய ஞாலமெல் லாம்ஒரு கோலின்வைத்தான்
கோதை நெடுவேற் களப்பாள னாகிய கூற்றுவனே. **– 47 வகை**

***குறிப்புரை :*** *நாதன் திருவடியே முடியாக - வேறு முடி புனையாமல் தில்லைப் பெருமான் திருவடியே முடியாக. போதம் - ஞானம், பொறித்தல் - பதித்தல். அது - அத்திருவடி. கைகொடுத்தல் - உற்றுழி உதவுதல், ஓதம் - அலை, கடல் அலை, கோதை - மாலை, இதனை வேலுக்கும், நாயனாருக்கும் கொள்க.*

*அற்றை நாளில் இரவின்கண் அடியேன் தனக்கு முடியாகப்*
*பெற்ற பேறு மலர்ப்பாதம் பெறவே வேண்டும் எனப்பரவும்*
*பற்று விடாது துயில்வோர்க்குக் கனவில் பாத மலரளிக்க*
*உற்ற அருளால் அவைதாங்கி உலக மெல்லாம் தனிப்புரந்தார்*
***- விரி***

***வரலாற்றுக் குறிப்பு :*** *குறுநில மன்னர், களந்தை. தில்லைவாழந்தணர் தமக்கு முடிசூட்ட மறுக்கவே, தில்லை அம்பலவன் திருவடிகளையே முடியாகச் சூட்டப்பெற்றவர், திருநட்சத்திரம் : ஆடி - திருவாதிரை.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*குன்றாத புகழாளர் களந்தை வேந்தர்*
*கூற்றுவனார் மாற்றலர்மண் கொண்டு சூடப்*
*பொன்தாழு முடிவேண்டப் புலியூர் வாழும்*
*பூசுரர்கள் கொடாதகலப் புனிதன் ஈந்த*
*மன்றாடுந் திருவடியே முடியாச் சூடி*
*மாநிலங்காத் திறைவனுறை மாடக் கோயில்*
*சென்றாசை யுடன்வணங்கிப் பணிகள் செய்து*
*திருவருளால் அமருலகஞ் சேர்ந்து ளாரே.*



சுந்தரமூர்த்தி நாயனார் ( ஆடி - சுவாதி)

## 48.சுந்தரமூர்த்தி நாயனார்

*ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே* - தொகை

1140 கூற்றுக் கெவனோ புகல்திரு வாரூரன் பொன்முடிமேல்
ஏற்றுத் தொடையலு மின்னடைக் காயு மிடுதருமக்
கோற்றொத்து கூனனுங் கூன்போய்க் குருடனுங் கண்பெற்றமை
சாற்றித் திரியும் பழமொழி யாமித் தரணியிலே. – 48 வகை

***குறிப்புரை :*** *புகல் - நம்பால் வருதல். எவன் - எக் காரணம் பற்றி உண்டாகும்? 'உண்டாகாது' என்பதாம். 'கூற்றுக்கு புகல் எவன்' என மாற்றி, இறுதியில் கூட்டியுரைக்க. ஒகாரம் அசை. திருஆரூரன் - சுந்தர மூர்த்தி நாயனார். பிற்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் இரட்டையரைப் போல அக்காலத்தில், நடக்க மாட்டாத கூனன் ஒருவனைக் குருடன் ஒருவன் சுமந்து செல்லக் கூனன் பூக்களைப் பறித்து மாலையாகத் தொடுத்தும், வெற்றிலைப் பாக்குத் தேடிக் கொணர்ந்தும் நாள்தோறும் சுந்தரருக்குக் கொடுத்து வந்தமையால் அவர் பரவையாரது ஊடலை இறைவன் தூது சென்று தீர்த்தபின் இல்லத்தில் புக்கபொழுது அவ் இருவருடைய கூனையும், குருட்டையும் நீக்கி நல்லுடல் பெறச் செய்தமை இப்பாட்டில் குறிக்கப்பட்டது. இதனைச் சேக்கிழாரும் கூற்றுவ நாயனார் புராணத்து இறுதிப்பாட்டில் கூறியருளினார். அடைக்காய் - வெற்றிலைப்பாக்கு. கோல் - நெறி. தொத்துதல் - பற்றி நிற்றல். 'தருமக் கோலில் தொத்து கூனனும், குருடனும்' என்க. 'போய்' என்னும் எச்சம் எண்ணின்கண் வந்தது. 'திரியும்' என்னும் பெயரெச்சம், "பழமொழி" என்னும் பிற பெயர் கொண்டது. 'குற்றே வலுள் ஒன்றிரண்டைச் செய்த கூனனும், குருடனும் நீக்கலாகாத கூனும், குருடும் நீங்கி நலம் பெற்றார்கள் என்றால் அவ் ஆரூரரையே தலைவராகக் கொண்டு அவர்க்கு முழுதும் ஆட்பட்ட நம்பால் கூற்றுவன் வாராது நீங்குதல் அரிதன்று' என்பதாம்.*

*தேனுங் குழலும் பிழைத்ததிரு மொழியாள் புலவி தீர்க்கமதி*
*தானும் பணியும் பகைதீர்க்குஞ் சடையார் தூது தருந்திருநாட்*
*கூனுங் குருடுந் தீர்த்தேவல் கொள்வார் குலவு மலர்ப்பாதம்*
*யானும் பரவித் தீர்க்கின்றே னேழு பிறப்பின் முடங்குகூன்.* **- விரி**

### வள்ளலார் அருளிய ஆளுடைய நம்பிகள் அருள்மாலையில் சுந்தரர்

*போதமுண்ட பிள்ளையென்பு பொருகண் மாது செய்ததோ*
*காதல்கொண்டு சொல்லின்மன்னர் கல்மிதப்ப உய்த்ததோ*
*வாய்திறந்து முதலைகக்க மகனை நீ ரழைத்ததோ*
*யாதுநம்பி அரிதுநன்று எனக்கியம்ப வேண்டுமே.*


பொய்யடிமையில்லாத புலவர்கள் (சித்திரை - முதல் நாள்)

## 49. பொய்யடிமையில்லாத புலவர்

*பொய்யடிமை யில்லாத புலவர்க்கும் அடியேன்* - தொகை

1141 தரணியிற் பொய்ம்மை இலாத்தமிழ்ச் சங்க மதிற்கபிலர்
பரணர்நக் கீரர் முதல்நாற்பத் தொன்பது பல்புலவோர்
அருள்நமக் கீயுந் திருவால வாய்அரன் சேவடிக்கே
பொருளமைத் தின்பக் கவிபல பாடும் புலவர்களே. – 49 வகை

**குறிப்புரை :** *பொய்ம்மை இலாத் தமிழ்ச் சங்கம் - உலகியலை நோக்காத தமிழ்ச் சங்கம், இது சைவத் தமிழ்ச் சங்கம். "தலை, இடை, கடை" என்னும் மூன்று தமிழ்ச் சங்கங்களும் பெரும்பான்மையும் அறம், பொருள், இன்பங்களையே நெறிப்படுத்தினவாக, இச்சங்கம் வீடு ஒன்றனையே நோக்கி அமைந்தமையால், பொய்ம்மையில்லாத் தமிழ்ச் சங்கம் என்றார். இது திருவாதவூரடிகளை அமைச்சராகக் கொண்டு விளங்கிய, "பெரிய அன்பின் வரகுண தேவன்" எனப்பட்ட பழைய வரகுண பாண்டியனுக்குப் பின் வந்த பாண்டியன் காலம் முதலாகத் தொடங்கி நடைபெற்றது, எனவே "இதில் இருந்த கபிலர், பரணர், நக்கீரர் முதலிய புலவர்கள் பெயரால் ஒன்றுபட்டுக் காணப்பட்ட போதிலும் பழைய உலகியற் சங்கத்தில் இருந்த கபிலர், பரணர், நக்கீரர் முதலியோரின் வேறுபட்டோர்" என்பது உணரற் பாலது. இவர்களும் முன்னோரைப் போற்றும் வகையில் அவர்களது பெயரைப் பூண்டு விளங்கினர், நாற்பத் தொன்பது புலவோர், மற்றும் பல்புலவோர் எனத் தனித்தனி இயைக்க. நாற்பத்தொன்பதின்மர் சிறப்புடையோர் என்க. "நாற்பத் தொன்பதின்மர்" என்பதும் ஒரு பழமை பற்றிக் குறிப்பிடப்பட்ட எண்ணாகும், அரன் சேவடிக்கே பாடும் புலவர்கள் என்றதனால், இவர்கள் மக்களைப் பாடாத நெறிமை யுடையவராதல் விளங்கும், இவர்கள் பாடிய பாடல்கள் 11-ஆம் திருமுறையாகக் கோக்கப்பட்டன.*

*பொய்யடிமையில்லாத புலவர், ''செய்யுளின் சொற்றெளிவும், பல நூலாராய்ச்சியும், அவைகளால் பெறும் மெய்யுணர்ச்சியின் பயனும் சிவனடிக்கு அன்பு செய்தலேயாகும்" என்னும் உண்மையை உணர்ந்தவர், அவ்வழி நின்றொழுகி ஆண்டவன் திருவடி சேர்ந்தவர்.*

*செய்யுள் திகழ் சொற்றெளிவும் செவ்வியநூல் பலநோக்கும்*
*மெய்யுணர்வின் பயன்இதுவே எனத்துணிந்து விளங்கி யொளிர்*
*மையணியும் கண்டத்தார் மலரடிக்கே ஆளானார்*
*பொய்யடிமை இல்லாத புலவரெனப் புகழ்மிக்கார்.* **- விரி**

**வரலாற்றுக் குறிப்பு :** *தொகையடியார் நூல்களைக் கற்றலின் பயன் மையணியும் கண்டத்தார் மலரடிக்கு ஆளாதல் என்பதை அறிபவர்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*பொய்யறியாக் கபிலரொடு பரண ராதிப்*
*புலவோர்பொற் பார்கலைகள் பொருந்த ஓதிச்*
*செய்யுளிடை வளர்ஆசு மதுர நல்ல*
*சித்திரம்வித் தாரமெனத் தெரிக்குஞ் செம்மை*
*மெய்யுடைய தொடைகளெல்லாம் மன்றுள் ஆடல்*
*மேவியகோன் இருதாளில் விரவச் சாத்திக்*
*கையுடைஅஞ் சலியினராய் அருளால் மேலைக்*
*கருதரிய அமருலகங் கைக்கொண் டாரே.*



புகழ்ச்சோழ நாயனார் ( ஆடி - கார்த்திகை )

## 50. புகழ்ச்சோழ நாயனார்

*பொழிற்கரு வூர்த்துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்* - தொகை

1142 புலமன் னியமன்னைச் சிங்கள நாடு பொடிபடுத்த
குலமன் னியபுகழ்க் கோகன நாதன் குலமுதலோன்
நலமன் னியபுகழ்ச் சோழ னதென்பர் நகுசுடர்வாள்
வலமன் னியஎறி பத்தனுக் கீந்ததொர் வண்புகழே. – 50 வகை

***குறிப்புரை :*** *புலம் மன்னிய மன் - ஞானம் நிலைபெறப் பெற்ற தலைவன், கோகன நாதன் குலமுதலோன் - சூரிய குலத்தின் (சோழர் மரபின்) மூதாதை இவையிரண்டும் "புகழ்ச் சோழன்" எனப்பட்ட அவரையே குறித்தன. ஐ - அழகு. சிங்கள நாட்டைப் பொடிபடுத்த கோகன நாதன் குலம் என்க. கரிகாலன் முதலாக அவ்வப்பொழுது வந்த சோழர்கள் சிங்கள நாட்டின்மேற் படைகளை ஏவிப் பலமுறை வென்றார்கள் ஆதலின் அவ்வெற்றியை ஒருவனுக்கே உரித்தாக்கிக் கூறாது, குலம் முழுவதற்குமாக ஆக்கிக் கூறினார். குலம் மன்னிய புகழ்க் குலம் - தொன்றுதொட்டு வழி வழியாக நிலைபெற்று வரும் புகழையுடைய குலம்.*

*தார்தாங்கிக் கடன்முடித்த சடைதாங்கும் திருமுடியார்*
*நீர்தாங்கும் சடைப்பெருமா னெறிதாங்கண் டவரானார்*
*சீர்தாங்கும் இவர்வேணிச் சிரந்தாங்கி வரக்கண்டும்*
*பார்தாங்க இருந்தேனோ பழிதாங்கு வேனென்றார்.* - விரி

***வரலாற்றுக் குறிப்பு :*** *அரசர், சோழநாடு, உறையூர் - பகைவனது அறுபட்ட தலையிற் சிவச் சின்னமாகிய சடைகண்டு அஞ்சி உயிர் விட்டவர், திருநட்சத்திரம் : ஆடி - கார்த்திகை.*

*புகழ்ச்சோழ நாயனார் சோழ நாட்டை ஆண்ட மன்னருள் ஒருவர், உறையூரிலே தங்கி ஆட்சி புரிந்தவர். சைவந் தழைக்க முயன்றவர். அவர் திருக்கோயில்களில் பூசனை வழாது நடத்துவிப்பார். திருத்தொண்டரின் குறிப்பறிந்து அவரவர் விரும்புமாறு உதவுவார். இம்முறையில் அவரால் திருநீற்றுநெறி ஓம்பப்பட்டு வந்தது.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*பொழில்மருவுங் கருவூர்வாழ் புகழார் சோழர்*
*போதகம்போல் என்னுயிரும் போக்கும் என்றே*
*அழல்அவிர்வாள் கொடுத்தபிரான் அதிக மான்மேல்*
*அடர்ந்தபெரும் படைஏவ அவர்கொண் டேய்ந்த*
*தழல்விழிகொள் தலைகாண்பார் கண்ட தோர்புன்*
*சடைத்தலையை முடித்தலையால் தாழ்ந்து வாங்கிக்*
*கழல்பரவி அதுசிரத்தின் ஏந்தி வாய்ந்த*
*கனல்மூழ்கி இறைவனடி கைக்கொண் டாரே.*


நரசிங்க முனையரைய நாயனார் (புரட்டாசி - சதயம்)

## 51. நரசிங்க முனையரைய நாயனார்

*மெய்யடியான் நரசிங்க முனையரையற் கடியேன்* - தொகை

1143 புகழும் படிஎம் பரமே தவர்க்குநல் பொன்னிடுவோன்
இகழும் படியோர் தவன்மட வார்புனை கோலமெங்கும்
நிகழும் படிகண் டவனுக் கிரட்டிப்பொன் னிட்டவன்நீள்
திகழும் முடிநர சிங்கமுனையர சன்திறமே. – 51 வகை

***குறிப்புரை :*** *எம் பரமே - எம் அளவினதோ, ஏகாரம் வினா. இத்தொடரை இறுதியிற் கூட்டியுரைக்க. தவர் - சிவனடியார்கள், அவர்கட்கு இந்நாயனார் திருவாதிரைத் திருநாளன்று திருவமுது படைத்து, ஒவ்வொருவர்க்கு ஒவ்வொரு நூறு பொன் நன்கொடையாக அளித்து வந்தார். மடவார் புனை கோலம் - மகளிர் தன்னை விரும்பும்படி புனைந்து கொண்ட தூர்த்த வேடம் "மடவார்க்கு" என நான்காம் உருபு விரிக்க. இவ்வேடத்திற்கு இடையே அவன் தானும் பொன் பெற வேண்டி திருநீறு கண்டிகைகளையும் அணிந்துகொண்டு அடியார்களோடு சேர்ந்து வந்தான். அவனைப் பிறர் எல்லாரும் இகழ்ந்த போதிலும் இந்நாயனார் அவனுக்கு இருநூறு பொன்னை நன்கொடையாக அளித்தார். அதற்குக் காரணம், "அவனையிகழ்ந்தால் திருநீறு உருத்திராக்கங்களை நாம் போற்றாதவர் ஆவோம்" எனக் கருதியதேயாம்.*

*சீலமில ரேயெனினும் திருநீறு சேர்ந்தாரை*
*ஞாலமிகழ்ந் தருநரகம் நண்ணாம லெண்ணுவார்*
*பாலணைந்தார் தமக்களித்த படியிரட்டிப் பொன்கொடுத்து*
*மேலவரைத் தொழுதினிய மொழிவிளம்பி விடைகொடுத்தார்.* - விரி

***வரலாற்றுக் குறிப்பு :*** *குறுநில மன்னர், நடுநாடு. சுந்தரமூர்த்தி சுவாமிகளை வளர்த்தவர், சிவவேடம் பூண்ட காமக்குறி தெரியவந்த தூர்த்தரையும் வழிபட்டவர், திருநட்சத்திரம் : புரட்டாசி - சதயம்.*

*நரசிங்கமுனையரைய நாயனார் என்பவர் திருமுனைப்பாடி நாட்டை ஆண்ட மன்னருள் ஒருவர். அவர், பகையரசரை வென்று, நன்னெறி வளர்த்து வந்தார், திருநீறே அவர்க்கு உரிய செல்வம். சிவனடியே அவர்தம் சார்பு, திருக்கோயிற் பூசைகள் அவரால் குறைவற நடத்தப்பட்டு வந்தன.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*நாடுபுகழ் முனைப்பாடி நாடு மேய*
*நரசிங்க முனையர்புவி நயந்து மன்றுள்*
*ஆடுமவர் ஆதிரைநாள் அடியார்க் கம்பொன்*
*அமுதளிப்பார் ஒளிவெண்ணீ றணிந்து தூர்த்த*
*வேடமுடை யவர்க்கிரட்டிச் செம்பொன் ஈந்து*
*விடுத்தழகார் ஆலயங்கள் விளங்கச் செய்து*
*தோடலர்தா ருடையபிரான் அருளை ஆளத்*
*தோன்றினார் எனையருளின் ஊன்றி னாரே.*


அதிபத்த நாயனார் ( ஆவணி - ஆயில்யம்)

## 52. அதிபத்த நாயனார்

*விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தற் கடியேன்* - தொகை

1144 திறமமர் மீன்படுக் கும்பொழு தாங்கொரு மீன்சிவற்கென்
றுறவமர் மாகடற் கேவிடு வோனொரு நாட்கனக
நிறமமர் மீன்பட நின்மலற் கென்றுவிட் டோன்கமலம்
புறமமர் நாகை அதிபத்த னாகிய பொய்யிலியே. – 52 வகை

***குறிப்புரை :*** *கடலில் வலையை வீசி மீன் பிடிக்கும் பொழுது மீன் ஒன்றே ஒன்று தனியாக வலையில் அகப்பட்டுக் கிடைக்குமாயினும் அந்த மீனை 'இந்த மீன் சிவனுக்கு உரிய மீன்' என்று அதனை மீண்டும் கடலிலே விடுபவர் இந் நாயனார். இவருக்குச் சோதனையாகப் பல நாட்களில் வலையில் ஒவ்வொரு மீனே அகப்பட்டு வந்தது. அதைக் கடலிலே விட்டமையால் உணவின்றிக் குடும்பத்துடன் மெலியும் நாளில் ஒரு நாள் தனி ஒரு மீன் பொன்னும், இரத்தினமுமே உருவாகி, உலகம் வில் பெறும் அளவின்தாய் அகப்பட அதனையும் கடலிலே விடுத்தார். உடனே பெருமான் காட்சி தந்து அழைத்துச் செல்ல முத்தி பெற்றார். இந் நாயனார் பத்தருட் சிறந்த அதிபத்தர் எனப் பெயர் பெற்றமை உணரற்பாற்று. அமர் - அந்த மீன் வாழ்கின்ற புறம் - புறத்துச் சூழ்ந்த பொய்கைகள்; ஆகுபெயர். நாகை - நாகப் பட்டினம்.*

*முட்டில் மீன்கொலைத் தொழில்வளத் தவர்வலை முகந்து*
*பட்ட மீன்களில் ஒருதலை மீன்படுந் தோறும்*
*நட்ட மாடிய நம்பருக் கெனநளிர் முந்நீர்*
*விட்டு வந்தனர் விடாதஅன் புடனென்றும் விருப்பால்* **- விரி**

**வரலாற்றுக் குறிப்பு :** *நுளையர் (மீன்பிடிப்பவர்), சோழநாடு; நாகைப் பட்டினம். நவரத்தினம் இழைத்த பொன்மீனைத் தாம் வைத்துக்கொள்ளாமல் சிவார்ப்பணம் செய்தவர், திருநட்சத்திரம் : ஆவணி - ஆயில்யம். பரதவர்க்குத் தலைவர், சிவபத்தியில் சிறந்தவர். வலைப்படும் மீன்களில் ஒரு தலைமீனைச் சிவபெருமானுக்கென்று கடலிலே விடுவது அவரது வழக்கம். வலையில் ஒரே மீன்படினும் அதைச் சிவபெருமானுக் கென்றே அவர் கடலில் விடுவார்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*அலையாருங் கடல்நாகை நகருள் வாழும்*
*அதிபத்தர் பரதவர்கள் அதிபர் வேலை*
*வலைவாரி வருமீனில் தலைமீன் ஈசன்*
*வார்கழற்கே என்றுவிடும் மரபார் பன்னாள்*
*தலையான தொருமீனே சார நாளுந்*
*தந்தொழிலால் விடுத்துமிடி சாரச் செம்பொன்*
*நிலையாரும் மணிநயந்த மீனொன் றெய்த*
*நீத்தருளால் இறைவனடி நேர்ந்து ளாரே.*



கலிக்கம்ப நாயனார் (தை - ரேவதி)

## 53. கலிக்கம்ப நாயனார்

*கைதடிந்த விரிசிலையான் கலிக்கம்பன் (கலியன்)* - தொகை

1145 பொய்யைக் கடிந்துநம் புண்ணியர்க் காட்பட்டுத் தன்னடியான்
சைவத் திருவுரு வாய்வரத் தானவன் தாள்கழுவ
வையத் தவர்முன்பு வெள்கிநீர் வாரா விடமனைவி
கையைத் தடிந்தவன் பெண்ணா கடத்துக் கலிக்கம்பனே. **– 53 வகை**

***குறிப்புரை :*** *தன் அடியான் - தனக்கு அடிமையாய்த் தனக்குப் பணி செய்து இருந்தவன். சைவம் - சிவ வேடம். "கடிந்து ஆட்பட்டு கழுவ, நீர் வாரா மனைவி கையைத் தடிந்தவன் கலிக்கம்பன்" என இயைத்து முடிக்க.*

*வெறித்தண் கொன்றை முடியார்தம் அடியார் இவர்முன் மேவுநிலை*
*குறித்து வெள்கி நீர்வாரா தொழிந்தாள் என்று மனங்கொண்டு*
*மறித்து நோக்கார் வடிவாளை வாங்கிக் கரகம் வாங்கிக்கை*
*தறித்துக் கரக நீரெடுத்துத் தாமே அவர்தாள் விளக்கினார்.*

***- விரி***

***வரலாற்றுக் குறிப்பு :*** வணிகர், நடுநாடு, பெண்ணாகடம் - தமது பழைய வேலையாள் சிவனடியாராக வந்தபோதும் தாம் அவரை வழிபட்டு, வழிபடாத தம் மனைவி கையை வெட்டியவர், திருநட்சத்திரம் : தை - ரேவதி

### திருத்தொண்டர் புராணசாரம்

*கடவுளருட் கண்ணார்கள் பயிலுந் தொல்லைக்*
*கடந்தைநகர் வணிகர்கலிக் கம்பர் அன்பர்க்*
*கடிமையுற அமுதளிப்பார் அடியான் நீங்கி*
*அருளுருவாய் அன்பருடன் அணைய ஏத்தி*
*இடையிலவர் அடியணையும் விளக்கா நிற்ப*
*இகழ்மனைவி கரகமலி இரண்டு கையும்*
*படியில்விழ எறிந்தவள்செய் பணியுந் தாமே*
*பரிந்துபுரிந் தரனருளே பற்றி னாரே.*


கலிய நாயனார் (ஆடி - கேட்டை)

## 54. கலிய நாயனார்

***கைதடிந்த வரிசிலையான் (கலிக்கம்பன்) கலியன்*** *- தொகை*

1146 கம்பக் கரிக்கும் சிலந்திக்கும் நல்கிய கண்ணுதலோன்
உம்பர்க்கு நாதற் கொளிவிளக் கேற்றற் குடலிலனாய்க்
கும்பத் தயிலம்விற் றுஞ்செக் குழன்றுங்கொள் கூலியினால்
நம்பற் கெரித்த கலியொற்றி மாநகர்ச் சக்கரியே. **– 54 வகை**

***குறிப்புரை :*** *கம்பக் கரி - எப்பொழுதும் அசைந்து கொண்டேயிருக்கும் யானை. சிவபெருமான் யானைக்கும், சிலந்திக்கும் அருள் புரிந்தது திருவானைக்காத் தலத்தில் 'கண்ணுதலோன் ஆகிய நாதற்கு' என்க. உடல் - பொன்; காசு. தயிலம் - எண்ணெய். சக்கிரி - செக்கான், செக்காடும் தொழிலை உடையவன், சக்கிரம் - செக்கு.*

*திருவிளக்குத் திரியிட்டங் ககல்பரப்பிச் செயல்நிரம்ப*
*ஒருவியஎண் ணெய்க்கீடா உடல்உதிரம் கொடுநிறைக்கக்*
*கருவியினால் மிடறரிய அக்கையைக் கண்ணுதலார்*
*பெருகுதிருக் கருணையுடன் நேர்வந்து பிடித்தருளி,*

*மற்றவர்தம் முன்னாக மழவிடைமேல் எழுந்தருள*
*உற்றவூ றதுநீங்கி ஒளிவிளங்க உச்சியின்மேல்*
*பற்றியஅஞ் சலியினராய் நின்றவரைப் பரமர்தாம்*
*பொற்புடைய சிவபுரியில் பொலிந்திருக்க அருள்புரிந்தார்.*

***- விரி***

***வரலாற்றுக் குறிப்பு :*** *செக்கார், தொண்டைநாடு, திருவொற்றியூர். திருவிளக்குக்கு எண்ணெய் இன்மையால் தமது இரத்தங் கொண்டு எரிக்க முயன்றவர். திருநட்சத்திரம் : ஆடி - கேட்டை.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*தடமதில்சூ ழொற்றியூ ரதனில் வாழுஞ்*
*சக்கரப்பா டியர்குலமெய்த் தவமா யுள்ளார்*
*படர்புகழார் கலியனார் நலியுங் கூற்றைப்*
*பாய்ந்தவர்க்கு விளக்கெரிக்கும் பரிவால் மற்றோர்*
*உடலிலராய்ச் செக்குழல்வார்க் கதுவும் நேரா*
*துயர்மனைவி யைக்கொள்வார் உளரும் இன்றி*
*மிடறுதிரம் அகல்நிறைய அரிய நாதன்*
*வியன்கைகொடு பிடிப்பஅருள் மேவி னாரே.*



சத்தி நாயனார் (ஐப்பசி - பூசம்)

## 55. சத்தி நாயனார்

***கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்*** *- தொகை*

1147 கிரிவில் லவர்தம் அடியாரைத் தன்முன்பு கீழ்மைசொன்ன
திருவில் லவரைஅந் நாவரி வோன்திருந் தாரைவெல்லும்
வரிவில் லவன்வயற் செங்கழு நீரின் மருவுதென்றல்
தெருவில் விரைகம ழுந்தென் வரிஞ்சைத் திகழ்சத்தியே. **– 55** வகை

***குறிப்புரை :*** *கிரி வில்லவர் - மகாமேரு மலையாகிய வில்லை உடையவர்; சிவபெருமான் கீழ்மை சொல்லுதல் - இழித்துரைத்தல். திரு இல்லவர் - நல் ஊழ் இல்லாதவர், பாவிகள் வரி வில்லவர் - வரிந்து கட்டப்பட்ட வில்லை ஏந்தியவர். விரை - நறுமணம், வரிஞ்சை - வரிஞ்சையூர்.*

*அத்த ராகிய அங்கணர் அன்பரை*
*இத் தலத்தில் இகழ்ந்தியம் பும்உரை*
*வைத்த நாவை வலித்தரி சத்தியால்*
*சத்தி யார்எனும் நாமம் தரித்துளார்.* ***- விரி***

***வரலாற்றுக் குறிப்பு :*** *சோழ நாட்டிலே வரிஞ்சையூரிலே வேளாளர் குலத்திலே தோன்றியவர் சத்தி நாயனார். அவர் சிவனடியாரை இகழ்வோருடைய நாவினைத் தண்டாயத்தினால் வலிப்பார். கத்தியினால் அறுப்பார். இச்சத்தி வாய்ந்தமையால் அவர் சத்தி நாயனார் எனப்பட்டார். அவர் இச்செயலையே பெருந் தொண்டாகக் கொண்டு வாழ்ந்து சிவபெருமான் திருவடி நீழலையடைந்தார். திருநட்சத்திரம் : ஐப்பசி - -பூசம்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*விரிதருகா விரிநாட்டு வரிஞ்சை யூர்வாழ்*
*வேளாளர் சத்தியார் விமலர் பாதத்*
*துரியவர்கள் அடிபரவும் ஒருமை யார்நாள்*
*ஒவாமே ஐந்தெழுத்தும் உரைக்கு நீரார்*
*இருளின்மிட றுடையபிரான் அடியார் தம்மை*
*இகழ்வார்நாத் தண்டாயத் திடுக்கி வாங்கி*
*அரியுமது திருத்தொழிலா உடையார் மன்றுள்*
*ஆடியசே வடிநீழல் அடைந்து ளாரே.*


ஐயடிகள் காடவர்கோன் நாயனார் (புரட்டாசி - உத்திராடம்)

## 56. ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

***ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்*** - தொகை

1148 சத்தித் தடக்கைக் குமரன்நற் றாதைதன் தானமெல்லாம்
முத்திப் பதம்ஒரோர் வெண்பா மொழிந்து முடியரசாம்
அத்திக்கு மும்மைநன் றாலவரற் காளையம் ஏற்றலென்னும்
பத்திக் கடல்ஐ யடிகளா கின்றநம் பல்லவனே. **– 56 வகை**

***குறிப்புரை :*** *சத்தித் தடக்கைக் குமரன் - முருகக் கடவுள். அவனுக்குத் தாதை சிவபெருமான். தானம் - தலங்கள். தானம் எல்லாம் சென்று, என ஒரு சொல் வருவிக்க. முத்திப் பதம் - மோட்சமாகிய அந்த ஒரு பதவியின் பெருமையைப் பற்றியே. முடி அரசு ஆம் அத்தில் - முடிபுனைந்து ஆள்கின்ற அரசர் ஆகின்ற அதைவிட. அரற்கு ஆள் ஆய் ஐயம் ஏற்றல் மும்மை நன்று என்னும் - சிவபெருமானுக்கு ஆளாகிப் பிச்சை ஏற்று உண்டல் மும்மடங்கு நன்றாகும் என்று அருளிச்செய்த. தனி வெண்பாக்கள் கிடைத்த அளவில் சேத்திரத் திருவெண்பா எனப் பதினொன்றாம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன. பல்லவர்கள் தமிழ் நாட்டிற்குப் புதியரானமை பற்றி அவர்களைச் சேக்கிழார் புராணம் குறுநில மன்னர் என்றது.*

*பெருத்தெழுகா தலில்வணங்கிப் பெரும்பற்றத் தண்புலியூர்த்*
*திருச்சிற்றம் பலத்தாடல் புரிந்தருளும் செய்யசடை*
*நிருத்தனார் திருக்கூத்து நேர்ந்திறைஞ்சி நெடுந்தகையார்*
*விருப்பினுடன் செந்தமிழின் வெண்பாமென் மலர்புனைந்தார்.*

***- விரி***

***வரலாற்றுக் குறிப்பு :*** *ஐயடிகள் காடவர்கோன் நாயனார், காஞ்சிபுரத்திலே பல்லவர் குலத்திலே தோன்றியவர். எல்லா உயிர்களும் இன்பம் நுகர்தல் வேண்டும் என்னும் பெருங் கொள்கையுடையவர். அக் கொள்கையின் பொருட்டு அவர் பல நாடுகளைத் தம்வயப்படுத்தினார்.*

*ஐயடிகளின் ஆட்சியில் சைவந் தழைத்தது, கலைகள் பெருகின. நாளடைவில் அடிகளுக்கு அரசாட்சியில் வெறுப்புண்டாயிற்று. அதனால் அவர், தம் புதல்வனுக்கு முடிசூட்டிச் சிதம்பரம் முதலிய திருப்பதிகளுக்குச் சென்று ஆண்டவனை வழிபட விரும்பினார். விரும்பியவாறே செய்து பல திருப்பதிகளுக்குச் சென்றார். அடிகள் ஒவ்வொரு திருப்பதிக்கும் ஒவ்வொரு வெண்பாப் பாடினார். இவ்வாறு சிவப்பணி செய்து சிவலோகஞ் சேர்ந்தார். திருநட்சத்திரம் : புரட்டாசி - உத்திராடம்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*வையநிகழ் பல்லவர்தங் குலத்து வந்த*
*மாமணிமா நிலமுழுதும் மகிழ்ந்து காக்கும்*
*ஐயடிகள் காடவர்கோன் அருளால் நூல்கள்*
*அறிந்தரசு புரிந்திடுதல் அமையு மென்றே*
*பொய்யனைய உடல்வாழ்வு கழியு மாறு*
*பொருந்தியிடும் புகழ்வெண்பாப் புலியூர் மேவும்*
*செய்யதிரு வடிமுதலாப் பதிகள் தோறுஞ்*
*செப்பினார் இருவினைகள் தப்பி னாரே.*



## 57. சுந்தரமூர்த்தி நாயனார்

*ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே* - தொகை

**1149** பல்லவை செங்கதி ரோனைப் பறித்தவன் பாதம்புகழ்
சொல்லவன் தென்புக லூரரன் பால்துய்ய செம்பொன்கொள்ள
வல்லவன் நாட்டியத் தான்குடி மாணிக்க வண்ணனுக்கு
நல்லவன் தன்பதி நாவலூ ராகின்ற நன்னகரே. – **57** வகை

***குறிப்புரை :*** *'தக்கன் வேள்வியில் சூரியன் பல் உதிர்க்கப்பட்டான்' என்பது புராணம். செங்கதிரோன் - சூரியன். வீரபத்திரர் செயல் இங்குச் சிவன் செயலாகக் கூறப்பட்டது. சொல்லவன் - சொற்களையுடையவன். நாட்டியத்தான்குடி கோட்புலி நாயனாரது ஊர். மாணிக்க வண்ணன் என்றது இங்குள்ள சிவபெருமானையே. திருவாரூர் மாவட்டத்தில் அமைந்துள்ள இக்கல்காரக் கோயிலைத் திருப்பணி செய்து குடமுழுக்கு நிறைவேற்றும் பேற்றைப் பதிப்பாசிரியர் பெற்றார்.*

*உளத்திலொரு துளக்கம் இலோம் உலகுய்ய இருண்ட திருக்*
*களத்து முது குன்றர்தரு கனகம் ஆற்றினிலிட்டு*
*வளத்தின் மலிந்தேழ் உலகும் வணங்குபெருந் திருவாரூர்க்*
*குளத்தில்எடுத் தார்வினையின் குழிவாய்நின்று எனயெடுத்தார்.*

**- *விரி***

#### வள்ளலார் அருளிய ஆளுடைய நம்பிகள் அருள் மாலையில் சுந்தரர்

*மதியணிசெஞ் சடைக்கனியை மன்றுள் நடம்புரி மருந்தைத்*
*துதியணிசெஞ் சுவைப் பொருளில் சொல்மாலை தொடுத்தருளி*
*விதியணி மாமறை நெறியும் மெய்ந்நிலை ஆகம நெறியும்*
*வதியணிந்து விளங்க வைத்த வன்தொண்டப் பெருந்தகையே.*


கணம்புல்ல நாயனார் (கார்த்திகை - கிருத்திகை)

## 58. கணம்புல்ல நாயனார்

***கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த***
***கணம்புல்ல நம்பிக்கும் (காரிக்கும்) அடியேன்*** - *தொகை*

1150 நன்னக ராய இருக்குவே ளூர்தனில் நல்குரவாய்ப்
பொன்னக ராயநற் றில்லை புகுந்து புலீச்சரத்து
மன்னவ ராய அரற்குநற் புல்லால் விளக்கெரித்தான்
கன்னவில் தோளெந்தை தந்தை பிரானெங் கணம்புல்லனே. **– 58** வகை

***குறிப்புரை :*** *நற்புல் - "கணம்புல்" என்னும் ஒருவகைப் புல். கல் நவில் - கல்போலும் தோள். இந்நாயனார் மரபு அறியப்படவில்லை. "எந்தை தந்தை பிரான்" என்றது எம் குடி முழுதையும் ஆட்கொண்டவன் என்றபடி.*

*முன்புதிரு விளக்கெரிக்கும் முறையாமம் குறையாமல்*
*மென்புல்லும் விளக்கெரிக்கப் போதாமை மெய்யான*
*அன்புபுரி வார்அடுத்த விளக்குத்தந் திருமுடியை*
*என்புருக மடுத்தெரித்தார் இருவினையின் தொடக்கெரித்தார்.*

- ***விரி***

***வரலாற்றுக் குறிப்பு :*** *சோழநாடு. இருக்கு வேளூர் - புல்விற்று, நெய்கொண்டு திருவிளக்கெரித்தவர், நெய்யின்மையால் தம் தலைமயிரையே எரித்தவர். திருநட்சத்திரம் : கார்த்திகை - கார்த்திகை.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*இலகுவட வெள்ளாற்றுத் தென்பால் வாழும்*
*இருக்குவே ளூர்அதிபர் எழிலார் சென்னிக்*
*கலைநிலவார் அடிபரவுங் கணம்புல்லர் தில்லைக்*
*கருதுபுலீச் சரத்தரற்குக் காதல் தீபம்*
*நிலைதரத்தாம் இடமிடியால் ஒருநாள் புல்லால்*
*நீடுவிளக் கிடஅதுவும் நேரா தாகத்*
*தலைமயிரின் எரிகொளுவும் அளவில் நாதன்*
*தாவாத வாழ்வருளுந் தன்மை யாரே.*



காரி நாயனார் (மாசி - பூராடம்)

## 59. காரி நாயனார்

***கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண்டிருந்த***
***(கணம்புல்ல நம்பிக்கும்) காரிக்கும் அடியேன்*** - *தொகை*

1151 புல்லன வாகா வகையுல கத்துப் புணர்ந்தனவும்
சொல்லின வுந்நய மாக்கிச் சுடர்பொற் குவடுதனி
வில்லனை வாழ்த்தி விளங்குங் கயிலைபுக் கானென்பரால்
கல்லன மாமதில் சூழ்கட வூரினில் காரியையே. **– 59 வகை**

***குறிப்புரை :*** *"உலகத்துப் புணர்ந்தனவும் புல்லன ஆகா வகை ஆக்கி" என இயைக்க. உலகத்துப் புணர்ந்தன, பொருளிலக்கணத்தில் சொல்லப்பட்ட "முதற்பொருள், கருப் பொருள், உரிப்பொருள்" என்னும் மூவகைப் பொருள்கள். வெளிக்கு அவைகளைப் பாடுவது போலத் தோன்றும்படி பாடல்களைப் பாடி அவற்றினுள்ளே சிவனது பெருமை உள்ளுறையாக அமையச் செய்தவர் இந்நாயனார், அதனால் "உலகத்துப் புணர்ந்தனவும் புல்லன ஆகா வகை நயமாக்கி" என்றார். "சொல்லின உள் நயமாக்கி" எனப் பாடம் ஓதுதல் சிறக்கும். புல்லன - கீழான தன்மையை உடையன. அவை உலக நிகழ்ச்சிகள். இவ்வாறான பாடல்களால் மூவேந்தர்களைப் பாடி மகிழ்வித்து, அவர் தந்த பரிசுப் பொருளைக் கொண்டு சிவத்தொண்டும், சிவனடியார் தொண்டும் செய்தவர் இந் நாயனார். இவரது மரபும் அறியப்படவில்லை. இவர் சங்கப் புலவராகிய காரிகிழாராயின் வேளாண் மரபினராவர்.*

*மறையாளர் திருக்கடவூர் வந்துதித்து வண்டமிழின்*
*துறையான பயன்தெரிந்து சொல்விளங்கிப் பொருள்மறையக்*
*குறையாத தமிழ்க்கோவை தம்பெயரால் குலவும்வகை*
*முறையாலே தொகுத்தமைத்து மூவேந்தர் பாற்பயில்வார்.* **- விரி**

***வரலாற்றுக் குறிப்பு :*** *காரி நாயனார் திருக்கடவூரிலே பிறந்தவர். தமிழ் மொழியிலே பெரும்புலமை வாய்ந்தவர். திருக்கயிலையை மறவாதவர். கோவை பாடுவது அவர்தம் வழக்கம். அதன்கண் சொல் விளங்கும். பொருள் நிறைந்திருக்கும்.*

### கோவை பாடித் தொண்டு செய்தல்

*காரியார், சேர சோழ பாண்டியர்களிடம் செல்வார். தம் பாக்கட்கு பொருள் விரிப்பார். அவர்கள் மகிழ்வெய்திப் பொருள் கொடுப்பார்கள் அப்பொருளைக் கொண்டு காரியார் திருக்கோயில்கள் கட்டுவிப்பார். சிவனடியார்களுக்கு உதவுவார். இவ்வாறு காரி நாயனார் தொண்டு செய்து உலக மெல்லாந் தம் புகழை நிறுத்தித் திருக்கயிலை சேர்ந்தார். திருநட்சத்திரம் : மாசி, பூராடம்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*திருக்கடவூர் வரும்உரவோர் காரி யாராம்*
*திகழ்தொண்டர் வண்தமிழ்நூல் திருந்த ஓதி*
*விருப்பொடுதம் பெயராற்பா விளம்பி மும்மை*
*வேந்தரையும் முறைமுறையே மேவி அங்கண்*
*உரைத்த உரை நயமாக்கி அவர்பால் ஏய்ந்த*
*ஒண்பொருளால் ஆலயங்கள் ஓங்கச் செய்து*
*தரைக்கும்அருந் தவர்க்கேவல் தகமுன் போற்றுந்*
*தன்மையால் அருள்சேர்ந்த நன்மை யாரே.*


நின்ற சீர்நெடுமாற நாயனார் (ஐப்பசி - பரணி)

## 60. நெடுமாற நாயனார்

*நிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற*
*நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்* - தொகை

1152 கார்த்தண் முகிற்கைக் கடற்கா ழியர்பெரு மாற்கெதிராய்
ஆர்த்த அமணர் அழிந்தது கண்டுமற் றாங்கவரைக்
கூர்த்த கழுவின் நுதிவைத்த பஞ்சவன் என்றுரைக்கும்
வார்த்தை அதுபண்டு நெல்வேலி யில்வென்ற மாறனுக்கே. – 60 வகை

***குறிப்புரை :*** *கை - பக்கங்கள். "முகிற் கை" என்பது கடலுக்கு அடை. காழியர் பெருமான் - திருஞானசம்பந்தர். அழிந்தது - தோற்றது, பஞ்சவன் - பாண்டியன், வார்த்தை புகழ், அது பகுதிப் பொருள் விகுதி. "மாறனுக்கு உரியது" என இவற்றில் ஒருசொல் வருவித்து முடிக்க. இவ்வாறு உரையாது "வார்த்தை யதுவுண்டு" எனப் பாடம் ஓதலும் ஆம். பகைவரை வென்ற எனவும் ஒரு சொல் வருவிக்க.*

*அந்நாளில் ஆளுடைய பிள்ளையார் அருளாலே*
*தென்னாடு சிவம்பெருகச் செங்கோல்உய்த் தறம்அளித்துச்*
*சொன்னாம நெறிபோற்றிச் சுரர்நகர்க்கோன் தனைக்கொண்ட*
*பொன்னாரம் அணிமார்பிற் புரவலனார் பொலிகின்றார்.*

***- விரி***

***வரலாற்றுக் குறிப்பு :*** *அரசர், பாண்டியநாடு, மதுரை மங்கையர்க் கரசியாரின் கணவர். முதலில் சமணஞ் சார்ந்தவர். திருஞான சம்பந்தர் தந்த திருநீற்றால் சுரம் நீங்கி அவர் திருவாக்கால் கூன் நிமிரப்பெற்றுச் சைவரானவர். திருநட்சத்திரம் : ஐப்பசி - பரணி.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*கன்னல்மலி நெல்வேலிக் கவினார் மாறர்*
*கவுணியர்கோன் அமணருறு கலக்க மெல்லாம்*
*பொன்னெயில்சூழ் சிரபுரக்கோன் அணைய மாற்றிப்*
*புனிதமிகு நீறணிந்து போற்றி செய்து*
*மன்னுபுகழ் மங்கையருக் கரசி யாராம்*
*மலர்மாது மணிமார்பின் மகிழ்ந்து மாற்றார்*
*வெந்நிடுதல் கண்டரசு புரிந்து காழி*
*வேந்தரருள் சேர்ந்த பெரு விறலி னாரே.*


வாயிலார் நாயனார் (மார்கழி - ரேவதி)

## 61. வாயிலார் நாயனார்

***துறைக்கொண்ட செம்பவளம் இருள கற்றும்சோதித்***
***தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்*** - *தொகை*

1153 மாறா அருளரன் தன்னை மனஆ லயத்திருத்தி
ஆறா அறிவாம் ஒளிவிளக் கேற்றி அகமலராம்
வீறா மலரளித் தன்பெனும் மெய்யமிர் தங்கொடுத்தான்
வீறார் மயிலையுள் வாயிலான் என்று விளம்புவரே. **– 61** வகை

***குறிப்புரை :*** *ஆறா விளக்கு - என இயையும். ஆறா விளக்கு - அணையா விளக்கு. ஆக மலர்வு - நெஞ்சில் எழுகின்ற சிவ நினைவுகள். அமிர்தம் - நிவேதனம்.*

*மறவாமை யான் அமைத்த மனக்கோயில் உள்ளிருத்தி*
*உறவாதி தனையுணரும் ஒளி விளக்குச் சுடரேற்றி*
*இறவாத ஆனந்தம் எனுந்திருமஞ் சனம்ஆட்டி*
*அறவாணர்க் கன்பென்னும் அமுதமைத்தர்ச் சனைசெய்வார்.*

***- விரி***

***வரலாற்றுக் குறிப்பு :*** *வேளாளர், தொண்டைநாடு, மயிலாப்பூர் - மானசீகமான ஞானபூசை செய்தவர். திருநட்சத்திரம் : மார்கழி - ரேவதி, உள்ளத்தைச் சிவத்துக்குரிய கோயிலாக்கினார். அக்கோயிலில் அறிவு விளக்கேற்றி, ஆனந்த நீராட்டி, அன்பாகிய அமுதை நிவேதிப்பது அவர்தந் திருத்தொண்டு. இவ்வாறு ஞானபூசை செய்து வாயிலார் சிவமானார்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*ஞாயிலார் மதிற்றொண்டை நாட்டு மேன்மை*
*நண்ணுமயி லாபுரியின் வேளாண் தொன்மை*
*வாயிலார் மலைவில்லான் அடியே போற்றி*
*மறவாமை தலைநின்ற மனமே செம்பொற்*
*கோயிலா உயர்ஞானம் விளக்கா நீராக்*
*குலவியஆ னந்தம்அன்பே அமுதாக் கொண்டு*
*தாயிலான் இருசரணம் நிகழ ஏத்தும்*
*தன்மையார் அருள்சேர்ந்த நன்மை யாரே.*


முனையடுவார் நாயனார் (பங்குனி - பூசம்)

## 62. முனையாடுவர் நாயனார்

*அறைக்கொண்ட வேல்நம்பிமுனையடுவாற்கடியேன்* - *தொகை*

1154 என்று விளம்புவர் நீடு ரதிபன் முனையடுவோன்
என்றும் அமருள் அழிந்தவர்க் காக்கூலி ஏற்றெறிந்து
வென்ற பெருஞ்செல்வ மெல்லாங் கனகநல் மேருவென்னும்
குன்று வளைத்த சிலையான் தமர்க்குக் கொடுத்தனனே. – 62 வகை

***குறிப்புரை :*** *"என்று விளம்புவர்" என்பதை இறுதியிற் கூட்டியுரைக்க, அழிந்தவர் - தோற்றவர். எறிந்து - கூலி கொடுத்தவரை எதிர்த்து நின்றோரைத் தாக்கி. பெருஞ்செல்வம் - படைக்கூலியாகப் பெற்றதனால் வந்த பெருஞ்செல்வம். சிலை - வில். தமர் - அடியார்.*

*இன்ன வகையால் பெற்றநிதி எல்லாம்ஈசன் அடியார்க்கு*
*சொன்ன சொன்ன படிநிரம்பக் கொடுத்துத் தூயபோனகமும்*
*கன்னல் நறுநெய் கறிதயிர்பால் கனியுள் ளுறுத்த கலந்தளித்து*
*மன்னும் அன்பின் நெறிபிறழா வழித்தொண் டாற்றி வைகினார்.*
***- விரி***

***வரலாற்றுக் குறிப்பு :*** *வேளாளர், சோழநாடு, திருநீடூர். கூலிக்குப் போர் செய்து அக்கூலிகொண்டு சிவனடியாரை வழிபட்டவர். திருநட்சத்திரம் : பங்குனி - பூரம். அவர் போர்முனையில் நின்று மாற்றாரைச் சாய்ப்பதில் வல்லவர், அதனால் அவருக்கு முனையடுவார் என்ற பெயர் வழங்கலாயிற்று. பகைவரால் தோல்வியுறுவோர் முனையடுவாரிடம் வருவர், வந்து அவர்தந் துணையை நாடுவர், நாயனார் அவர் பொருட்டுப் போர் புரிந்து வெற்றி பெறுவார், அவ்வெற்றியால் கிடைக்கும் பொருளைக் கொண்டு சிவனடியார்களுக்கு அமுதூட்டுவார், அவர்கள் விரும்புமாறு உதவுவார், முனையடுவார் பன்னெடுநாள் இத்தகைத் தொண்டு செய்து சிவனடி சேர்ந்தார்.*

### திருத்தொண்டர் புராணசாரம்

*பொன்னிவளந் தருநாட்டுப் புகழு நீடூர்ப்*
*பொருவில்திரு மலிவேளாண் தொன்மை மிக்கார்*
*முன்னியவர் முனையடுவார் இகலார் போரின்*
*முரணழிவார் தமக்காக மொழிந்த கூலி*
*மன்னுநிதி கொண்டுசயங் கொடுத்து வந்த*
*வளர்பொருளால் இறைவனடி வழுவா அன்பர்க்*
*கன்னமவர் நசையின்மிக மிசைய நல்கும்*
*அன்பர்துன்ப மவையாவும் அகன்று ளாரே.*



## 63. சுந்தரமூர்த்தி நாயனார்

***ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே*** *- தொகை*

1155 கொடுத்தான் முதலைகொள் பிள்ளைக் குயிரன்று புக்கொளியூர்த்
தொடுத்தான் மதுர கவியவி நாசியை வேடர்சுற்றம்
படுத்தான் திருமுரு கன்பூண் டியினில் பராபரத்தேன்
மடுத்தா னவனென்பர் வன்றொண்ட னாகின்ற மாதவனே. **– 63 வகை**

***குறிப்புரை :*** *அன்று புக்கொளியூரில், முதலை கொள் பிள்ளைக்கு உயிர் கொடுத்தான் என்றும், 'அவிநாசியை மதுர கவி தொடுத்தான்' என்றும், 'திருமுருகன் பூண்டியினில் வேடர் சுற்றம் படுத்தான்' என்றும் கூட்டுக. மதுரம் - இனிமை. 'கவியால் தொடுத்தான்' என உருபு விரிக்க. தொடுத்தான் - தொடுத்துப் பாடினான். புக்கொளியூர், ஊர்ப் பெயர். அவிநாசி, அவ்வூரில் எழுந்தருளியுள்ள இறைவன் பெயர். அவிநாசி - விநாசம் (அழிவு) இல்லாதவன். படுத்தான் - வென்றான். பராபரம் - மேலனவும், கீழனவும் ஆகிய அனைத்துப் பொருள்களுமாய் உள்ள பொருள்; பரம்பொருள். இஃது ஆகுபெயராய், அதன்பால் உள்ள இன்பத்தைக் குறித்தது. மடுத்தான் - உண்டான்.*

*செறிவுண் டென்று திருத்தொண்டிற் சிந்தை செல்லும் பயனுக்கும்*
*குறியுண் டொன்று ஆகிலுங்குறைவொன் றில்லோம் நிறையுங் கருணையினால்*
*வெறியுண் சோலைத் திருமுருகன் பூண்டி வேடர் வழிபறிக்கப்*
*பறியுண் டவரெம் பழவினைவேர் பறிப்பா ரென்னும் பற்றாலே.*

***- விரி***

### வள்ளலார் அருளிய ஆளுடைய நம்பிகள் அருள் மாலையில் சுந்தரர்

*வேதமுதற் கலைகளெலாம் விரைந்து விரைந்து அனந்தமுறை*
*ஓத அவைக்கு அணுத்துணையும் உணர்வரிதாம் எம்பெருமான்*
*பாதமலர் நினது திருப் பணி முடிமேற் படப்புரிந்த*
*மாதவம் யாது உரைத்தருளாய் வன்தொண்டப் பெருந்தகையே.*


கழற்சிங்க நாயனார் ( வைகாசி - பரணி )